2-806

T.N.L.A. Debates

OFFICIAL REPORT

VOL: LXVII NO: 2

APRIL 25th 1984

C

D
V211,31 N84
N84.67.2
136265

2515 / அ.அ) 85
2806

வெளியீடு 26-2-85]

[Issued 26-2-85

தமிழ்நாடு ... இணையர் ... வரலாற்று ஆராய்ச்சி ...

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

புதன்கிழமை, ஏப்ரல் 25, 1984 - தொகுதி LXVII எண் 2
Wednesday the 25th April 1984 - Volume LXVII No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
Legislative Assembly Secretariat, Fort St. George.
Madras - 600 009

விலை: ரூ. 3-50 காசுகள்]

[Price Rs. 3-50 paise

136265

# உள்ளடக்கம்.

25—4—1984


| | பக்கங்க்ள் |
|---|---|
| 1. வினாக்கள்—விடைகள்: | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. | 311—341 |
| 2. தகவல் கோரல்: | |
| (அ) பத்தாம் வகுப்பு விஞ்ஞான வினாத்தாள் தெலுங்கு மொழிபெயர்ப்பு .. | 341—342 |
| (ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை. | 342 |
| (இ) தொட்டியம் தொகுதி உறுப்பினர் கடத்தப்பட்டதாகக் கூறப்படுவது .. | 342 |
| (ஈ) சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியிலுள்ள மருத்துவமனை .. .. | 343 |
| (உ) பனியன் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் .. .. | 343—344 |
| (ஊ) வாடிப்பட்டி உயர்நிலைப்பள்ளி மாண வர்கள் போராட்டம் .. .. | 344 |
| 3. கவன ஈர்ப்பு: | |
| (அ) மேட்டுப்பாளையம் அரசினர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளிக்கான பொறியியல் கட்டிடம் கட்டுதல் .. .. | 344—346 |
| (ஆ) வேதாரண்யம் வட்டத்திலுள்ள சில ஆறுகளின் மதகுகளைப் பழுதுபார்த்தல். | 347—349 |
| 4. அறிக்கை அளித்தல்: | |
| சட்ட விதிகள் ஆய்வுக் குழு .. .. | 349 |
| 5, அரசினர் சட்ட முன்வடிவு: | |
| நகர்ப்புற நில (உச்சவரம்பு முறைப்படுத்துதல்) திருத்த செல்திறன் சட்ட முன்வடிவு, 1984 .. .. .. | 349—350 |
| 6. வரவு-செலவுத் திட்டம் 1984-85 வாக்கெடுப்பு (தொடர்ச்சி) | |
| (அ) கோரிக்கை எண் 5—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம் .. .. | |


128/57

| | பக்கங்கள் |
|---|---|
| (ஆ) கோரிக்கை எண் 6-பத்திரப்பதிவு. | |
| (இ) கோரிக்கை எண் 10-பால் வழங்கு திட்டங்கள் .. .. | 350—400 |
| மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி | 352,386—400 |
| திரு என். வி. என். சோமு | 352—357 |
| திரு த. மாரிமுத்து | 358—360 |
| திரு ஜே. ஹேமச்சந்திரன் | 350—351 |
| திரு கு. அ. செங்கோட்டையன் | 366—371 |
| திரு சோ. அழகர்சாமி | 371—376 |
| திரு கே. ஆர். கணபதி | 377—379 |
| திரு எல். இளையபெருமாள் | 379—386 |
| (ஈ) கோரிக்கை எண் 48-கிராமத் தொழில்கள்— .. .. | |
| (உ) கோரிக்கை எண் 56—கிராமத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு .. | 400—454 |
| மாண்புமிகு திரு இரா. அருணாசலம் | 400,401, 437—453 |
| திரு பாபு ஜனார்த்தனன் | 401—407 |
| திரு மா. சின்னராசு | 407—413 |
| திரு டி. மணி | 413—417 |
| திரு கே. உச்சி | 417—421 |
| திரு எம். ஆறுமுகம் | 421—426 |
| திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் | 426—430 |
| திரு என். எஸ். வி. சித்தன் | 431—437 |
| 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 454—455 |


# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1984 ஏப்ரல் 25, புதன்கிழமை

சித்திரை 13, ரக்தாக்ஷி—திருவள்ளுவர் ஆண்டு 2015.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:**

*''படியுடையார் பற்றமைந்தக் கண்ணும் மடியுடையார் மாண்பயன் எய்தல் அரிது''.*

நாட்டை ஆளும் தலைவருடைய உறவு தானே வந்து சேர்ந்தாலும், சோம்பல் உடையவர் தாம் மேற்கொண்ட தொழிலில் சிறந்த பயனை அடைய முடியாது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**அரசு ஊழியர்களாக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள்**

***639 வினா எண் 7755.—திரு. ரா. உமாநாத்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக்கிய பிறகு அவர்கள் யாருடைய மேற்பார்வையில் இருக்கிறார்கள்?

(ஆ) அவர்களை மாற்றம் செய்யும் அதிகாரம் யாருக்கு உள்ளது?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக்கிய பிறகு அவர்கள் உதவிக் கல்வி அலுவலர்களின் மேற்பார்வையில் இருக்கிறார்கள்.

(ஆ) அவர்களை மாற்றம் செய்யும் அதிகாரம் அந்தந்த மாவட்டக் கல்வி அலுவலரிடம் உள்ளது.

**திரு. மா. சின்னராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த ஆசிரியர்கள் அரசுத் துறை ஆசிரியர்களாக மாற்றப்பட்ட பின்னால் ஊராட்சி ஒன்றியத்தினுடைய ஆணையாளர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லையென்ற ஒரு நிலை இன்று

ஏற்படுத்தப் பட்டுள்ளது. ஆகவே, தொடர்ந்து ஆணையாளர்கள் அங்கேயே இருக்கிற காரணத்தால் பள்ளிகளில் ஆசிரியர்களின் எண்ணிக்கையும் அதிகமாக இருக்கிற காரணத்தால் ஆணையாளர்களுக்குக் கண்காணிக்கிற பொறுப்பு தொடர்ந்து இருக்கும் என்ற வகையில் அரசு உத்தரவு எதுவும் வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களிடமிருந்த அந்தப் பொறுப்பைத்தான் இப்பொழுது ஆசிரியர் சங்கங்களுடைய வேண்டுகோளின்படி அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் செய்து வந்த பொறுப்பை இப்பொழுது உதவிக் கல்வி அலுவலர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதற்கு மேலாக இன்னொருவரையும் கண்காணிக்கின்ற பொறுப்பிலே நாம் விடுவதற்கு வேண்டிய அவசியம் இல்லை.

திரு .வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர் ஒரே இடத்தில் 5 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றக் கூடாது, அங்கிருந்து மாற்றப்பட வேண்டுமென்று சமீபத்திலே போடப் பட்டிருக்கிற அரசாணை அரசு ஊழியர்களாக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கும் அமுல்படுத்தப் படுகிறதா என்ற விவரங்களை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஆசிரியர்களுக்கு இந்த 5 ஆண்டுகள் அல்லது 3 ஆண்டுகள் என்று வரம்பு வைத்து மாற்றுகிற ஒரு பழக்கம் தேவையில்லை என்றுதான் நாம் கருதி, கடந்த பல ஆண்டுக்காலமாக அப்படி ஒரு முறையைக் கடைபிடிக்காமல் இருந்து வருகிறோம். கூடுமான வரைக்கும் பொது மாறுதலைத் தவிர்த்து வருகிறோம். இப்பொழுது செய்யப் படுகிற பொது மாறுதல்கள் கூட, அவர்கள் கேட்டுக்கொண்ட அந்த அடிப்படையில்தான் சிலபேரை நாம் மாற்றிக் கொண் டிருக்கிறோம். ஆகவே, மற்ற அரசு ஊழியர்களைப்போல் இவர்களுக்கும் 5 ஆண்டுகள், 3 ஆண்டுகள் என்ற ஒரு நடை முறை இருக்கிறது என்றாலும் நாம் கூடுமானவரைக்கும் அதிக அளவில், அவர்களுக்குத் துன்பத்தையோ அல்லது கஷ்டத்தையோ தர விரும்பவில்லை.

அது மட்டுமல்ல, அவரவர்கள் ஊருக்குப் பக்கத்திலேயே ஆசிரியர்களை நியமிப்பது நல்லது என்ற கருத்துப்படியும் பல தடவை அவர்களது வேண்டுகோளின்படி அங்கே நியமித்திருக் கிறோம். ஆசிரியர்கள் அந்தந்தப் பகுதியிலே தங்களுக்குத் தெரிந்தவர்களுடைய குழந்தைகளுக்கு நல்ல முறையிலே சொல்லித் தரவேண்டுமென்ற எண்ணத்தோடு அவர்கள் தங்களது பணியை ஆற்றினால் இப்படிப்பட்ட கேள்விகளுக்குக் கூட இடம்



இருக்காது. ஆகவே, ஆசிரியர்கள் அந்த நிலைமையை உணர்ந்து தங்களது பணியை ஆற்ற வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு என்.பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியக்கூடிய ஆசிரியர்களைக் கண்காணிக்கக்கூடிய பொறுப்பு இன்றையதினம் உதவிக் கல்வி அலுவலர் அவர்களிடத்திலே விடப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றைய தினம் பள்ளிகளிலே சரியாகப் பாடங்கள் நடத்தாமல் பல ஆசிரியர்கள் தங்கள் இஷ்டத்திற்கு உதவிக் கல்வி அலுவலருடைய துணையோடு இன்றைக்கு நடந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மீண்டும் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களுடைய நிர்வாகப் பொறுப்பில் இந்த ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களைக் கொண்டுவருவதற்கு அரசு முயற்சிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கண்காணிப்பது என்பது எந்தக் காலத்திலேயும் ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கு நாம் தரவில்லை. இதற்காக டெபுடி இன்ஸ்பெக்டர் என்ற ஒரு அதிகாரியை வைத்து, ஆசிரியர்கள் சொல்லித் தருவதைப் பொறுத்தமட்டில், அந்த ஒரு கடமையை அவர்கள் செய்கின்ற வகையிலேதான் நாம் வைத்துக்கொண்டிருந்தோம். அவர்கள் தான் இன்றைக்கும் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

நிர்வாகப் பொறுப்பைத்தான் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் வைத்திருந்தார்கள். அதாவது மேனேஜரியல் டியூட்டி; அதாவது தனிப்பட்ட பள்ளிகளில் எப்படி மேனேஜர்கள் இருக்கிறார்களோ அப்படி ஊராட்சி ஒன்றிய பள்ளிகளுடைய மேனேஜர்களாக ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் இருந்தார்கள். இப்போது நாம் ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக மாற்றி விட்டதால் ஆணையருக்குப் பதிலாக உதவிக் கல்வி அலுவலர்களைப் போட்டிருக்கிறோம். உதவிக் கல்வி அலுவலர்கள் இப்போது அவர்களுடைய பொறுப்பை நிறைவேற்றுவதில் பல புகார்கள் வந்திருக்கிற காரணத்தால்—மாறுதல் செய்வதிலும், நியமனம் செய்வதிலும் பல புகார்கள் வந்திருக்கிற காரணத்தால் நாம் அதைக் கொஞ்சம் சீர்திருத்தி அமைத்து அந்த மாறுதல்கள் அல்லது நியமனங்கள் போன்றவற்றை எல்லாம் மாவட்டக் கல்வி அலுவலர் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைத்து. மாவட்டக் கல்வி அலுவலர் தலைவராகவும், உதவிக் கல்வி அலுவலர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட கமிட்டி ஆண்டிற்கு ஒருமுறை கூடி மாறுதல்கள் கோரிக்கைகளை பரிசிலித்து முடிவு செய்வதற்குப் பதிலாக முதன்மைக் கல்வி அலுவலரை, ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் நியமனம் மற்றும்

மாறுதல் கமிட்டித் தலைவராகவும், சம்பந்தப்பட்ட கல்வி மாவட்டத்தில் மாவட்டக் கல்வி அலுவலரை உறுப்பினராகவும் கொண்ட இரண்டு நபர் கமிட்டி அமைக்க இந்த அரசு இப்போது முடிவு செய்திருக்கிறது. ஆகவே உதவிக் கல்வி அலுவலர்கள் துணையோடு ஆசிரியர்கள் தங்களுடைய பணிகளைச் செய்யாமல் இருந்தாலும், இந்த மாறுதல்களின் காரணமாக அது நீக்கப் படும் என்று கருதுகிறேன். ஆகவே புதியதாக வந்திருக்கிற இந்த அமைப்பை நாம் கவனித்து குறைபாடுகளைக் கவனிக்க முயற்சி எடுப்பது தான் நல்லதே தவிர பழையபடி ஊராட்சி ஒன்றிய ஆணையாளரிடம் இந்தப் பொறுப்பை தருவோமே யானால் அப்போது சொல்லப்பட்ட புகார்களுக்கு அளவே கிடையாது. இன்னும் சொல்லப்போனால் ஊராட்சி ஒன்றிய வேலைகளுக்கு, ஊராட்சி ஒன்றிய ஆணையர்களின் பணிகளுக்குத் தான் ஆசிரியர்கள் பயந்து நடந்து வந்தார்கள் என்கிற காரணத்தை வைத்துத்தான் அனைத்து ஆசிரியர்கள் சங்கங் களும் கேட்டுக்கொண்டதற்கிணங்கத்தான் இப்போது இந்த மாறுதலைச் செய்திருக்கிறோம். ஆகவே இந்தச் சங்கங் களுடைய கோரிக்கைகளை ஏற்று நடத்திக்கொண்டிருக்கிற போது அதற்கு மாறான நிலைமைகளைப் பற்றி நாம் விவாதிப் பதைவிட அல்லது பேசுவதைவிட, இதை நாம் நல்ல முறை யிலே நடத்துவதற்கு முயற்சி மேற்கொள்ளவேண்டும்.

கோவில்பட்டி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கான கூடுத கட்டிடம் கட்டும் திட்டம்.

640 *(வினா எண் 19600)—திரு சோ. அழகர்சாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவிகளுக்குப் போதுமான கட்டிட வசதி இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், கட்டிடம் கட்ட அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்: (அ) இது குறித்த கோரிக்கை எதுவும் அரசிடம் பெறப்படவில்லை.

(ஆ) இருப்பினும், 1983-84-ம் ஆண்டில் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வழங்கவிருக்கும் நன்கொடைத் தொகையில் இருந்து இப்பள்ளிக்கு ரூ. 1.20 லட்சம் செலவில் இரு வகுப் பறைகள் கட்டுவதற்கு பள்ளிக் கல்வி இயக்குநரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.





திரு சோ. அழகர்சாமி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர் களே, கோவில்பட்டி பெண்கள் உயர்நிலைப்பள்ளி என்பது ஏறக் குறைய 3,000 மாணவியர்கள் பயிலக்கூடிய பள்ளியாக இருக்கிறது. பல வகுப்புகள் வெயில் நேரமாக இருந்தாலும் மர நிழல்களிலும், வெளியே இருக்கிற வராந்தாக்களிலும் நடந்து கொண்டிருக்கின்றன. வகுப்பறைகள் கட்டித்தர வேண்டுமென்று தலைமையாசிரியர் மூலமாக இயக்குநர் அலுவலகத்திற்குத் தகவல் அனுப்பப்பட்டதாகச் சொன்னார்கள். நானும் இது சம்பந்தமாகச் சொல்லி இருக்கிறேன். ஆகவே, பெண் குழந்தைகளாக இருக்கிற காரணத்தால், போதிய வகுப் பறைகள் இல்லாமல் அவர்கள் பயிலக்கூடிய ஒரு இடைஞ்சல் ஏற்பட்டிருக்கிற நிலைமையை உத்தேசித்து போதிய வகுப்பறை களைக் கட்டிக் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அங்கே 6 முதல் 12 வகுப்புகள் 35 பிரிவு களில், 1,496 மாணவியர்கள் படித்து வருகிறார்கள் என்றும், அந்தப் பள்ளிக்கென்று 2½ ஏக்கர் நிலம் உள்ளது என்றும் விவரத்தை என்னிடத்திலே சொல்லி இருக்கிறார்கள். இன்றைக்கு இரண்டு வகுப்புகள் கொண்ட கட்டிடம் கட்டு வதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னொரு பெண்கள் பள்ளி அங்கே வேறு இடத்தில் ஏற்படுத்துவதற்கான முயற்சியை அங்கே இருக்கிற பொது மக்களோடு கலந்து செய்யலாமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு சோ. அழகர்சாமி: மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, இன்னொரு பள்ளி என்பது அது அரசாங்கத்தின் மூலம் ஏற்படுத்துகிற பள்ளியா அல்லது தனியார் பள்ளியா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: துணைத்தலைவர் அவர்களே, நாம் இப்போது பள்ளி ஏற்படுத்த எந்த முடிவும் செய்யவில்லை. ஒரு யோசனையைத் தான் சொன்னேன்.

திரு. சோ. அழகர்சாமி: துணைத் தலைவர் அவர்களே, இப்போது அந்தப் பள்ளிக்குப் போதுமான நிலம் 2½ ஏக்கர் அளவிற்கு இருக்கிறது. இப்போது ஒரு லட்சம் ரூபாய் ஒதுக்கி இருப்பதாகவும் சொன்னார்கள். அந்தக் கட்டிடத்தின் வேலைகள் எப்போது துவங்கப்படும்? மேலும் காலதாமதம் ஆகாமல் சீக்கிரமாக இதைத் துவங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: துணைத் தலைவர் அவர்களே, கல்வித் துறையைப் பொறுத்தமட்டில் அதற்குப் பணம் ஒதுக்கி விட்டோம். சீக்கிரமாக அது நடத்தப்பட வேண்டும் என்பதற்கான முயற்சியை கல்வித் துறை நிச்சயமாக எடுக்கும். இடம் போதுமானதாக இல்லை. $2\frac{1}{2}$ ஏக்கர் என்பது மிகக்குறைவான இடம்.

(முற்பகல் 9–10)

## ELIGIBILITY FOR PROMOTION UNDER G.O.M.No.1297, DATED 21-7-1979.

641—(*Q. No. 21565 (THIRU T. VENKATA REDDY) Will the Hon. the Minister for Education be pleased to state.—

(a) whether it is a fact that as per G.O.No.1297, dated 21-7-1979 only Tamil Pulavars are eligible for promotions and minority language Pulavars or Pandits are denied such promotion;

(b) if so, the action taken by the Government to protect them?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (ஆ) தமிழ்ப் புலவர் தகுதியுடையவர்களை நடுநிலைப்பள்ளிகளில் தலைமையாசிரியராக நியமனம் செய்வதற்கு அரசாணை நிலை எண். 1297, கல்வித்துறை, நாள். 21-7-79ல் வகை செய்யப்பட்டுள்ளது அனைத்துப் பள்ளிகளிலும் தமிழ் மொழியே பயிற்சி மொழியாகவும் தொடர்பு மொழியாகவும், மற்றும் நிர்வாக மொழியாகவும் உள்ளதால் பிற மொழி பண்டிதர்களையும் நடுநிலைப் பள்ளி தலைமையாசிரியர்களாக நியமனம் செய்ய இயலாது. எனினும் சிறுபான்மையினர் மொழியினை மட்டும் பயிற்சி மொழியாகக் கொண்ட நடுநிலைப் பள்ளிகளில் பிறமொழி பண்டிதர்களைத் தலைமையாசிரியர்களாக நியமனம் செய்வது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறது.

THIRU T. VENKATA REDDY Mr. Deputy Speaker, Sir G.O, has been issued in 1979 for the Tamil Pandits being appoinated as Headmasters At the same time, the minority languages Pandits who are teaching Telugu, Kannada, Urudu and Malayalam are also eligible for such promotions. I want to know why such a delay is occurring in issuing orders with regard to Minority Languages Pandits.

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தமிழ் ஆசிரியர்களை தலைமை ஆசிரியர்களாக நாம் போடுவதற்குக் காரணம் நாம் தமிழை ஆட்சி மொழியாக, தொடர்பு மொழியாக, வட்டார மொழியாக



வைத்திருப்பதால்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த நிலையிலே மற்ற மொழி பண்டிதர்களை அவ்வாறு நியமிக்க நாம் நடவடிக்கை எடுக்கவில்லை. ஆனால் இப்போது அந்த சிறுபான்மை மொழியினர் பேசும் இடங்களிலே பயிற்று மொழியாக இருக்கும் பள்ளிகளிலே அத்தகைய பண்டிதர்களைத் தலைமையாசிரியர்களாகப் போடுவதற்கு நாம் பரிசீலனை செய்து வருகிறோம்.

THIRU T. VENKATA REDDY ; The Hon. Minister has beeu telling that it will be examined. A long delay has occurred from 1979. May I, fequest the Hon. Minister for Education to give a definite date from which the Minority Languages Pandits are going to be appointed. May I know when it will be done?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, எடுத்துத் தரப்பட்டு இருக்கும் விவரத்தில் பரிசீலித்துக் கொண்டு இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, அதை வேகமாகப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்க முடியுமே தவிர, இந்த விவரங்களிலே முடிவாக எதுவும் தெரிவிக்காத நிலையில் நானும் அதைத் தெரிவிக்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு எல். இளையபெருமாள்: துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, மற்ற மொழியினருக்கும் நம்முடைய மாநிலத்தில் முக்கியத்துவம் கொடுக்கிறோம், சிறுபான்மை மொழியினருக்கும் சலுகைகளைக் கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் பிற மொழி புத்தகங்கள், குறிப்பாக, தெலுங்குப் புத்தகங்கள், புலவர் கோர்ஸ் ஸுக்கோ, அல்லது மற்ற வகுப்புகளுக்கோ கிடைக்கவில்லை என்று சொல்லப்படுகிறதே, அப்படிப்பட்ட புத்தகங்களை கிடைக்கச் செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்: துணைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட ஒரு புகார் இதுவரையில் என்னிடத்தில் வரவில்லை. ஏதாவது குறிப்பிட்ட புகார் இருந்தால் எழுதி அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறேன்.

## கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கும்பொறுப்பை மீண்டும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கும் திட்டம்

642—(*வினா எண். 10990) திரு. வேடசந்தூர் வி. பாலசுப்பிரமணியன்:—மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கும் பொறுப்பை மீண்டும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உண்டா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: ஊரகக் குடிநீர்த் திட்டங்கள் தமிழ்நாடு, குடிநீர் வடிகால் வாரியத்தால் செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் இயங்கும் கையிறைப்பான்களைப் பராமரிக்கும் பொறுப்பு 23-7-81 முதல் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 1982ம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் மின்இறைப்பான்களைப் பராமரிக்கும் பொறுப்பும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கிராமங்களுக்குக் குடிநீர் வழக்கும் அடிப்படைத் தேவையான பணிகள் முழுவதும் குடிநீர் வடிகால் வாரியத்திலிருந்து உள்ளாட்சித் துறைக்கு மாற்றுவதற்கு இன்றைக்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? மேலும் இதற்கு மானியம் உள்ளாட்சித் துறையிலிருந்து வழங்கப்படாத சூழ்நிலையில், பஞ்சாயத்து யூனியன் நிதியில் இருந்தே அதைப் பராமரிக்கும் சூழ்நிலை இருக்கிறது. ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு 50 கை பம்புகளே இருந்து வந்த நிலை போய், இன்றைக்கு 200 முதல் 250 கை பம்புகள் வரை சில இடங்களில் 300 கை பம்புகள் வரை இருக்கின்றன. ஒரு பஞ்சாயத்து யூனியனில் தற்போது ஒரு பிட்டர் தான் இருந்து வருவதால், அந்த பம்புகள் அனைத்தையும் அவரே பார்த்து சரி செய்வது என்பது முடியாத காரியமாக இருக்கிறது. ஆகவே, குறைந்த பட்சம் ஒரு பிட்டருக்கு 50 கை பம்புகள் என்று நிர்ணயித்து, மேலும் பிட்டர்களை நியமிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவர் அவர்களே, குடிநீர் வழங்குவது என்பது ஊராட்சி ஒன்றியங்கள், உள்ளாட்சி மன்றங்கள் ஆகியவற்றின் சமுதாயப் பொறுப்பு. அந்த அடிப்படையிலே தான் அந்தக் காரியங்கள் செய்யப்பட்டு வருகின்றன. ஆனாலும் குடிநீர் வடிகால் வாரியம் தனியாக இருப்பதால், அது இன்னொரு அமைச்சரின் பொறுப்பில் இருக்கிறது. ஆகவே அதை ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் ஏற்கனவே அந்தக் கோரிக்கை வைக்கப்பட்டு இருக்கிறது. அது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

குறிப்பாக, கையிறைப்பான்களைப் பொறுத்தவரையில், தமிழகம் முழுவதும் வறட்சிப் பணி காரணமாக ஆயிரக்கணக்கான இடங்களில் நாம் கையிறைப்பான்களைப் போட்டு இருக்கிறோம். தமிழகத்தில் உள்ள 378 யூனியன்களில் 366 இடங்களில் பிட்டர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். ஒரு பிட்டர் எவ்வளவு கையிறைப்பான்களைப் பராமரிக்க முடியுமோ அந்த அளவிற்கு இல்லாமல், அவர்களுடைய வேலை பளு அதிகமாக இருப்பதால், அதிகமான பிட்டர்களை நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கை அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. ஆகவே, சீக்கிரமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு வேடந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: துணைத் தலைவர் அவர்களே, 15, 20 ஆண்டுகளுக்கு முன்பு இந்த குழாய்களைப் பராமரிக்கும் பணி நெடுஞ்சாலைத் துறையிடம் இருந்தபோது ஒவ்வொரு கோட்டப் பொறியாளர் அதிகாரத்தின் கீழும் இரண்டு பிட்டர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் எல்லாம் இப்போதும் அங்கே தான் இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்த பிட்டர்களை உள்ளாட்சித் துறைக்கு கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவரவர்களே, பழையன கழிதலும் புதுயன புகுதலும், என்ற புதிய மரபை இப்போது செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஆகவே, 15, 20 ஆண்டுகளுக்கு முன்னால் நடந்ததை மீண்டும் கொண்டுவரத் தேவையில்லை. நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தவரையில் மெக்கானிக்கல் பிட்டர்கள் அங்கே பணியாற்றிக் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. அப்படி யாராவது இருந்தால் அவர்களை எல்லாம் ஊராட்சி ஒன்றியத்தில் சேர்த்துக் கொள்ள சீக்கிரம் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு, உ. சுப்பிரமணியன்: துணைத் தலைவரவர்களே, இந்தக் கேள்வி கிராமங்களுக்கு குடிநீர் வழங்கும் பொறுப்பை மீண்டும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கும் திட்டம் பற்றியது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது ரிப்பேர் செய்வது பற்றிச் சொன்னார்கள். குடிநீர் வடிகால் வாரியத்தைப் பற்றி பல நேரங்களில் மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே குறிப்பிடும்போது, எந்த அளவுக்கு சீர்கேடுகள் நடக்கின்றன என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிந்திருக்கும் என்று கருதுகிறேன். படிப்படியாக பல அதிகாரங்கள் ஒன்றியங்களிலிருந்து எடுக்கப்பட்டிருக்கிற நேரத்தில் இந்த ஒரு நல்ல பொறுப்பையாவது ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கொடுக்க வேண்டும். எந்த எந்த ஊர்களுக்குத் தேவை என்று அறியாமலேயே பல ஊர்களில் தேவையில்லாவிட்டாலும் 2, 3 பம்புகளைப் போடுகிறார்கள். தேவை இருக்கிற இடங்களில் போடுவதில்லை. இப்படித்தான் குடிநீர் வடிகால் வாரியத்தின் செயல்முறை இருக்கிறது. ஆகவே ஊராட்சிகளுக்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் மீண்டும் இந்தப் பொறுப்பை ஒப்படைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.ப. குழந்தைவேலு: துணைத் தலைவரவர்களே, இது அடிப்படையான கொள்கை என்பது மறுக்க முடியாத ஒன்று அதே நேரத்தில் ஊராட்சி ஒன்றிய அதிகாரங்களில் பல இப்போது எடுக்கப்பட்டிருக்கின்றன. விவசாயம், கல்வி போன்றவை எடுக்கப்பட்டிருக்கின்றன. குடிநீர் வழங்குவது தற்போது

குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் செய்யப்படுகிறது. ஆகவே அதிகாரங்கள் அதிகப்படியாக வேண்டும் என்ற முறையில் இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறோம். ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கிற அலுவலர்கள் இப்போதும் பல்வேறு பணிகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள், மேலும் பலவேறு பணிகள் ஊராட்சி ஒன்றியங்களில் முன்பு இருந்ததைக் காட்டிலும் இப்போது பன்மடங்கு நடந்து கொண்டிருக்கின்றன. அந்தப் பணிகளைச் செய்ய நேரம் போதவில்லை என்பது ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கிற அலுவலர்களின் கோரிக்கையாக இருக்கிறது, இதை எல்லாம் கவனத்தில் கொண்டுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கூட, உடனடியாக இந்தக் குடிநீர் பிரச்சனையை உள்ளாட்சி மன்றங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று நாம் கேட்டிருக்கிறோம்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : துணைத் தலைவரவர்களே, கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கும் பொறுப்பை குடிநீர் வடிகால் வாரியத்திலிருந்து ஒன்றியங்களுக்கு மாற்றுவது பற்றிச் சொன்னார்கள். 4, 5 இலட்சம் ரூபாய் செலவில் திட்டங்களை முடித்து, பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கிறார்கள். அதிலே ஒரு சிக்கல் இருக்கிற்து. அந்தச் சிக்கல் என்னவென்றால் ஒப்படைக்கப்பட்ட பிறகு அதைப் பராமரிக்கின்ற செலவை பஞ்சாயத்துக்களால் தாங்க முடியவில்லை. ஆகவே, வீட்டு சர்வீஸ் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். வீட்டு இணைப்புக் கொடுக்கும் வாய்ப்பு இருந்தால் இந்தச் செலவை ஓரளவுக்கு ஈடுகட்ட முடியும். அப்படிக் கேட்கும்போது கிராம நலத்திட்டத்தின் அடிப்படையில் கொடுக்கப்பட்டிருக்கிறது, ஆகவே வீட்டு இணைப்புக் கொடுக்கக்கூடாது என்று சொல்கிறார்கள். இதை அரசாங்கம் பரிசீலனை செய்து, இந்த கிராமக் குடிநீர் திட்டத்தின் கீழ் ஊராட்சி ஒன்றியங்கள் வீட்டு இணைப்புகள் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவரவர்களே முழுமையாக ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக குடிநீர் வழங்கப்படும்போது தான் இவைகளை எல்லாம் பரிசீலிக்க முடியும். ஏனென்றால் இப்போது குடிநீர் வடிகால் வாரியம் இந்தப் பணியைச் செய்துகொண்டிருக்கிறது. அப்படி இருக்கும்போது இது முழுமையாக ஒரு கொள்கை அளவில் எடுக்கப்பட வேண்டிய முடிவாக இருக்கிறது. ஆகவே, அரசு இதைப்பரிசீலனை செய்யும்.

திரு. ரா. கு. பெருமாள் : துணைத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் பொறுத்தவரையில், குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செய்கின்ற பணிகள் முடிக்கப்பட்டு, ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒப்படைக்கும்போது ஏற்கனவே வருகின்ற தண்ணீர் நின்றுவிடுகிறது.



ஊராட்சி ஒன்றிய ஆணையாளரிடம் நிதி இல்லாத காரணத்தால் அவைகளைச் சரிவர செய்யமுடியவில்லை. இந்த வேலைகளைச் சரியான முறையில் செய்வதற்கு இப்போது ஊராட்சி ஒன்றிய ஆணையாளரிடத்திலே இதற்காக தனி நிதி ஒதுக்கீடு செய்யப்படுமானால், இந்தத்திட்டத்தினை நல்ல முறையில் செய்வதற்கு வாய்ப்பாக அமையும். எனவே இதை உடனடியாக அரசு செய்ய முன்வருமா?

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது கூட, ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து அதிகபட்சமாக ரூ. 500 வரையில், அவர்களே செக் போட்டு, பணத்தை எடுத்துக்கொள்வதற்காக அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அது போதவில்லை என்று சொன்னாலும், பொது நிதியிலே பணம் இல்லை என்ற நிலை ஏற்பட்டாலும், அதை உடனடியாக அரசு பரிசீலனை செய்யவேண்டிய நிலை இருக்கிறது. எந்தெந்த ஊராட்சி ஒன்றியங்களில் பணம் பற்றாக்குறையாக இருக்கிறதோ அங்கே 'வேஸ் அண்டு மீன்ஸ்'—வழிவகைகள், முன்பணங்கள் என்ற முறையில் அரசாங்கத்திற்கு எழுதினால் நாங்கள் பணம் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம், குடிநீர் சப்ளை செய்யும் பொறுப்பை குடிநீர் வடிகால் வாரியம் ஏற்றுள்ளது. இதனால் இன்றைக்கு 600-க்கு மேற்பட்ட பேரூராட்சிகளில் கூட பாதுகாக்கப்பட்ட குடிநீர் இல்லாத நிலை இருக்கிறது. ஊராட்சியும் ஒன்றியம் என்று சொன்னால், மக்களோடு தொடர்புடைய அலுவலகமாக இருக்கிறது. ஆனால் இந்தக் குடிநீர் வாரியம் மக்களோடு தொடர்பு கொள்வதற்கு சிரமங்கள் இருப்பதால், குடிநீர் சப்ளை செய்யக்கூடிய முழு பொறுப்பையும் ஊராட்சி ஒன்றியமே ஏற்றுக் கொண்டால் நல்லது. அதற்கான ஏற்பாட்டை மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த ஆண்டே செய்வார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 620க்கு மேற்பட்ட பேரூராட்சிகள் இருந்தாலும், எல்லா பேரூராட்சிகளிலும் குடிநீர் தட்டுப்பாடு இல்லை. ஆகவே சில குறிப்பிட்ட பேரூராட்சிகளில் மட்டும் தான் இந்தத் தட்டுப்பாடு இருந்து வருகிறது. அதற்காகத் தான் இன்றைக்கு தன்னிறைவுத் திட்டம் என்ற திட்டத்தை விரிவாக்கம் செய்து, இந்த ஆண்டு 275 பேரூராட்சிகள் எடுக்கப்பட்டன.. இதற்காக சுமார் ரூ. 8 கோடி இந்த ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டு இருக்கிறது. நான்கூட மான்யக் கோரிக்கையில் பேசும்போது ரூ. 5 கோடி என்றுதான் சொன்னேன். ஆனால்

[1984 ஏப்ரல் 25

மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதற்காக ரூ. 8 கோடி ஒதுக்கலாம் என்ற கருத்தினைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே ரூ. 8 கோடியையும் 275 பேரூராட்சிகளுக்காக நாம் இந்த ஆண்டு செலவழிக்க இருக்கிறோம். அதிலேகூட, முதல்ாவது பிரச்சினையாக தண்ணீர் பிரச்சினையைக் உடனடியாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். ஆகவே இந்தப் பிரச்சினையைக் குறித்து உடனடியாக அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. குறிப்பாக கொள்கை முடிவு பற்றி ஏற்கனவே சொன்னேன். அது அரசினுடைய பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே; இந்தக் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் இந்த நீரை ஊராட்சி ஒன்றியங்களுக்கு மாற்றுவதற்கு அரசு பரிசீலனை செய்துகொண்டிருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதற்கிடையில் கையிழுப்பான் சம்பந்தமாக, மின் இழுப்பில் பழுது ஏற்பட்டால், உடனுக்குடன் பழுது பார்க்கவேண்டுமென்ற ஏற்பாட்டைச் செய்யவேண்டும். தற்போது மின் இணைப்புகளில் பழுது பார்க்கவேண்டுமென்றால், கோட்டாட்சித் தலைவரின் அனுமதி பெறவேண்டுமென்று சொல்கிறார்கள். அதை மாற்றி ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கே அந்தப் பொறுப்பைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட அளவிலே இரண்டு குழுக்கள் நியமிக்கப்பட்டன. ஒன்று மாவட்ட ஆட்சித் தலைவருடைய தலைமையிலும், இன்னொன்று கோட்ட வளர்ச்சி அதிகாரி தலைமையிலும் இப்படி இரண்டு குழுக்கள் நியமிக்கப்பட்டு, அவர்கள் அதை செயல்படுத்தி வருகிறார்கள். ஆனால் வட்டார வளர்ச்சி அளவிற்குப் போகவேண்டுமென்றால், அதையும் கூட அரசு பரிசீலனை செய்யும்.

திரு பாபு ஜனார்த்தனன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் குடிநீர்த் வாரியமும், ஊராட்சிகளும், இன்னும் பல்வேறு அதிகாரிகளும் இந்தக் குடிநீர்த் திட்டத்தைப் பார்க்கிறார்கள். ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள கை பம்புகளைப் பார்ப்பதற்கு ஃபிட்டர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். வறட்சி நேரத்திலே அந்த ஓவர்ஹெட் டேங்கிலிருந்து டிஸ்கனெக்ட் செய்யப்பட்டிருந்தது. எனவே மக்கள் தண்ணீரை சேந்தி எடுத்தார்கள். இப்போது தண்ணீர் வருகின்ற நேரத்தில் அவைகளுக்கு கனெக்ஷன் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஊராட்சி ஒன்றியங்கள் கோட்ட வளர்ச்சி அதிகாரிகளுக்கு மேல் முறையீடு செய்து இருப்பதால் மாவட்ட அளவிலும், சென்னையிலும் மனு செய்கிறார்கள். ஆகவே கொள்கை அளவில் முடிவெடுத்து, அந்த ஓவர்ஹெட்



1984 ஏப்ரல் 25]

டேங்கிற்கு இணைப்புகளை உடனடியாகக் கொடுத்தால்; கிராமங்களுக்கு நல்ல முறையில் தண்ணீர் கிடைக்கும். எனவே இதை ஊராட்சி ஒன்றியங்கள் நிர்வகிப்பதற்கு அரசு முடிவு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இவைகளையெல்லாம் பரிசீலனை செய்வதற்காக நாம் ஏற்கனவே இருக்கக் கூடிய அதிகாரிகளையெல்லாம் கேட்டுக்கொண்டிருக்கிறோம்அவர்கள் முடிவு எடுத்ததற்குப்பின்னால் அரசாங்கத்திற்கு பரிசீலனைக்கு அனுப்ப இருக்கிறார்கள், ஆகவே விரைவாக நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவர் அவர்களே, குடிநீர் வழங்குவதற்கு குடிநீர் வடிகால் வாரியம் இதற்கு முன்பு பொறுப்பேற்றிருந்ததை இப்போது ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைத்திருக்கிறோம். அதேபோன்று முன்பு மாநகராட்சியிடம் தான், அவர்கள் கையில்தான் குடிநீர் வழங்குவது, சாக்கடை அடைப்புகளை எடுப்பது போன்றவைகள் இருந்தன. ஆனால் இப்போது ஊராட்சி ஒன்றியங்களிடம் இந்தப் பொறுப்புகளை ஒப்படைத்ததைப் போல் மாநகராட்சிகளிடமும் அந்தப் பொறுப்பை ஒப்படைக்க முதலமைச்சர் அவர்களுடன் அமைச்சர் அவர்கள் கலந்து ஆலோசித்து தக்க ஏற்பாடுகளைச் செய்வார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இது ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்த கேள்வி. ஆகவே தனியாக கேள்வி போட்டால் விவரமாக பதிலைச் சொல்கிறேன்.

திரு. க. இரா. சின்னராசு: தலைவர் அவர்களே, ஜி. எல்.ஆர். ஒன்றியத்தின் மூலமாகவும் ஓ. எச். டி. குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாகவும் ஒரே கிராமத்தில் இரண்டு பேர்களும் குடிநீர் வழங்குவதற்கு ஓவர்ஹெட் டாங்க்ஸ் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதை மாற்றி குடிநீர் வாரியம் அந்தப் பணியை எடுத்துக் கொண்டால் அதை ஒன்றியம் விட்டு விட்டு வேறு கிராமத்திற்கு குடிநீர் வசதி செய்து கொடுக்கலாம் அல்லவா? இரண்டு பேர்களும் ஒரே கிராமத்தில் இரண்டு குடிநீர் தொட்டிகள் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்: இதுபோன்ற தகவல் அரசுக்கு வந்திருக்கிறதா அப்படியிருந்தால் அதை மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, ஜி. எல். ஆர். அல்லது ஓ. எச். டி. என்ற இரண்டும் ஒரே ஊரில் இருப்பதாக தகவல் இல்லை. அப்படியிருந்தால் அந்த மக்களுக்கு உண்மையில் அவர்கள் தேவைக்கேற்ப குடிநீர்

வழங்குகிற சூழ்நிலை உருவாக்கப்படும். அப்படி இருப்பது கூட நல்லதுதான். ஆனால் அப்படி இல்லை. ஜி. எல். ஆர். பொறுத்தவரையில் க்ரவுண்ட் லெவல் ரிசர்வாயர் என்ற முறையில் அதுவும்கூட இன்று ஒன்றியப் பொது நிதியிலிருந்து நாம் கொடுக்கிறோம். ஆனால் 'ட்வாட் போர்ட்' எடுத்துக் கொண்டு செயல்படுத்த விரும்பினால் அவர்களுக்கு கொடுத்து விடுகிறோம். ஆகவே இப்படிப்பட்ட நிலை இல்லை. அப்படி இருந்தால் தயவு செய்து என் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சின்ன நெகமம் பாலம் மற்றும் திருப்பூர் ரோட்டிலுள்ள பாலம் ஆகியவைகளைப் பழுதுபார்க்கும் திட்டம்

643—(*வினா எண். 18520) திரு. கா. வே. கந்தசாமி:—மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிணத்துக்கடவுத் தொகுதி, சின்ன நெமகம் பாலம் மற்றும் திருப்பூர் ரோட்டில் உள்ள பாலம் ஆகியவைகள் பழுதடைந்து, போக்குவரத்து இடைஞ்சலாக இருப்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது எவ்வளவு ரூபாய் மதிப்பீட்டில் பழுதுபார்க்கப்படும்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு; (அ) ஆம்.
(ஆ) வினாவில் குறிப்பிட்டுள்ள பணிகள் (1) பெரியபட்டி-நெகமம் சாலையில் கி. மீ. 19/6ல் பாலம் கட்டுதல் மற்றும் (2) திருப்பூர் சாலை எனப்படும் பொள்ளாச்சி-பல்லடம் சாலையில் கி. மீ. 14/8ல் உள்ள பாலத்தை பழுதுப் பார்த்தல் ஆகும். பெரியபட்டி நெகமம் சாலையில் பாலம் கட்டும் பணிக்கு 1983-84 ஆம் ஆண்டிற்கான இரண்டாம பாகப்பணியில் இதர மாவட்ட சாலைகளின் கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு ரூ. 3. 50 லட்சத்துக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ரூ. 5. 00 லட்சத்துக்கு 27–11-83ம் நாளன்று ஒப்பந்தக்காரரிடம் பணி ஒப்படைக்கப்பட்டது. இப்பாலம் அமைப்பதற்கு மாற்று வழிப் பாதை அமைத்தல் மற்றும் தற்போதுள்ள பாலத்தை தகர்த்தல் ஆகிய வேலைகள் நடைபெற்று வருகின்றன. இவ்வேலைகள் முடிந்த பின்னர் இப்பணி துவங்கப்படும்.

பொள்ளாச்சி பல்லடம் சாலையில் உள்ள பாலம் பழுது பார்க்கப்பட்டு, வேலை முடிவடைந்துவிட்டது.





நங்கவரம் மற்றும் நச்சலூர் செல்லும் சாலையில் பேரூர் அருகிலுள்ள பாலத்தைப் புதுப்பித்துக் கட்டும் திட்டம்

644—(*வினா எண். 19601) திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சியிலிருந்து உறையூர்:—குழுமணி வழியாக நங்கவரம், மற்றும் நச்சலூர் செல்லும் சாலையில் பேரூர் அருகிலுள்ள பாலத்தைப் புதுப்பித்துக்கட்டும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) இப்பணி 1983-84-ம் ஆண்டு பாகம் 2 திட்டத்தில் ரூ. 12 இலட்சம் செலவில் செய்ய அங்கீகரிக்கப்பட்டுள்ளது. விரிவான மதிப்பீடுகளை ஆய்வு செய்து இந்த ஆண்டு இந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்படும்.

புஞ்சை புளியம்பட்டியை நகராட்சியாக்கும் திட்டம்

645— (*வினா எண். 22958) திரு. ஜி. கே. சுப்பிரமணியன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம், புஞ்சை புளியம்பட்டி எப்போது நகராட்சியாக மாற்றப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு . பெரியார் மாவட்டத்திலுள்ள புஞ்சை புளியம்பட்டி பேரூராட்சியை நகராட்சியாக மாற்றியமைப்பதற்கான செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஆர். ரங்கசாமி : தலைவர் அவர்களே, புஞ்சை புளியம்பட்டி பேரூராட்சியுடன் எந்தெந்த ஊராட்சிகள் இணைக்கப் பட்டு நகராட்சியாக மாற்றப்படுகிறது என்பதைத் தெரிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே புஞ்சை புளியம்பட்டி பேரூராட்சி மற்றும் இராமேஸ்வரம் போளூர், வந்தவாசி, பெருந்துறை, கருமாண்டி செல்லிபாளையம் ஆகிய இதர பேரூராட்சிகளையும் நகராட்சிகளாக மாற்றுவதற்கான கோரிக்கையை அரசு பரிசீலனை செய்து வருகிறது. புஞ்சை புளியம்பட்டி பேரூராட்சி இருக்கக் கூடிய நிலையில் அது நகராட்சியாகக் கூடிய நிலை இருப்பதால் வேறு ஊர்கள் சேர்க்கப்பட வேண்டும் என்ற நிலை இல்லையென்று நான் நினைக்கிறேன். அப்படிச் சேர்க்க வேண்டுமென்றிருந்தாலும் அது பரிசீலிக்கப்படும்.

திரு. கு. அ. செங்கோட்டையன் : தலைவர் அவர்களே, புஞ்சை புளியம்பட்டியோடு பெருந்துறையையும் நகராட்சியாக்குவதற்கு குறிப்பு இருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல் பெருந்துறையையும் விரைவில் நகராட்சியாக்க வேண்டும் என்று முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் திரு. பொன்னுசாமி அவர்களும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும் வலியுறுத்தியிருக்கிறார்கள். அதை எந்த ஆண்டு நகராட்சியாக மாற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்? அதை எந்த ஆண்டு எடுக்க இருக்கிறது?

(முற்பகல் 9-30)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டில் அது எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரூராட்சிகளை நகராட்சிகளாக மாற்றும் போது என்னென்ன நார்ம்ஸ் அடிப்படையில் மாற்றப்படுகிறது? அங்குள்ள மக்கள் தொகையின் அடிப்படையில் மாற்றப்படுகிறதா அல்லது வருமானம் அடிப்படையில் மாற்றப்படுகிறதா? எந்த அடிப்படையில் அப்-கிரேடு செய்யப்படுகின்றது என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மக்கள் தொகை, வருமானம் ஆகிய இரண்டின் அடிப்படைகளிலே ஒரு பேரூராட்சியை நகராட்சியாக மாற்றுவதும், நகராட்சியை மாநகராட்சியாக மாற்றுவதும் செய்யப்படுகிறது. ஆகவே, இந்தப்பேரூராட்சியைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ 10,386 மக்கள் தொகை இருப்பதாக கணக்கு கொடுக்கப்பட்டுள்ளது. வருமானம் ஏறத்தாழ 8,73,000 ரூபாய் வருகிறது என்று குறிப்புகள் சொல்லுகின்றன. 5 இலட்சத்திற்கு மேல் வருமானம் இருந்தால், அவைகளை நகராட்சியாக மாற்றக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதேபோல், 20,000-க்கு குறையாமல் ஜனத்தொகை இருந்தால், நகராட்சியாக மாற்றலாம்,

New Railway lines recommended by he State Government

646—*Q. No.18481. THIRU P. VENKATASUBRAMANIAN: Will the Hon. the Minister for Transport be pleased to state:

(a) whether the State Governmenr have recommended any new Railway lines to Central Government dering 1982 83; and



(b) whether the Central Government have accepted any of the recommendations?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) ஆம்.

(ஆ) இல்லை.

647— (*வினா எண். 19925) திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழக அரசு பரிந்துரை செய்து 1983 ஏப்ரல் முடிய மத்திய அரசு அனுமதி அளிக்காமல் இருக்கும் இரயில்பாதைத் திட்டங்கள் எத்தனை?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பதிமூன்று.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே எத்தனை இடங்கள் இதுபோன்று தேர்வு செய்யப்பட்டு, மாநில அரசு மைய அரசுக்கு பரிந்துரை செய்திருக்கிறது? அதற்காக எவ்வளவு தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டாவது கேள்விக்கு விடையளித்த 13 திட்டங்களே இதற்குப் பதிலாக இருக்கும்.

திரு. ஆர். ரங்கசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம்—சாம்ராஜ்நகர் வரை சத்தியமங்கலம் வழியாக ஒரு இரயில் பாதை அமைப்பதற்கு ஆய்வு நடந்து முடிந்திருக்கிறது. இந்தத் திட்டம் என்ன நிலையில் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1982—83-ல் நாம் பரிந்துரை செய்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த நில ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அதுதான் பதிலாக இங்கே இருக்கிறது. 1984 மார்ச்சிலே அந்த சர்வே முடிந்து, அந்த அறிக்கையைக் கொடுப்பார்கள் என்ற உத்திரவாதத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் 13 திட்டங்களைச் சொன்னார்கள். அந்த 18 திட்டங்கள் எவை எவை என்பதையும், மத்திய அரசு எந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. முத்துசாமி: தலைவர் அவர்களே, 13 திட்டங்கள் மத்திய அரசுக்கு மாநில அரசால் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் மத்திய சர்க்கார் எந்தத் திட்டத்தையும் எடுத்துக்கொள்ளவில்லை, எல்லாத் திட்டங்களையும் படிப்ப தென்றால், கொஞ்ச நேரமாகும். இருந்தாலும் படித்துவிடுகிறேன்.

(1) திண்டுக்கல்லில் இருந்தோ அல்லது கோடைக்கானல் சாலையில் இருந்தோ கம்பத்திற்கு ஒரு புதிய இரயில் பாதை அமைத்தல்,

(2) திருவண்ணாமலை, செங்கம், கிருட்டிணகிரி, ஓசூர் வழியாக பாண்டிச்சேரி மற்றும் பெங்களூருக்கு இடையே ஒரு புதிய இருப்புப் பாதையை அமைத்தல்.

(3) மதுரை மாவட்டம் பழனியிலிருந்து கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் வரை இரயில் பாதை அமைத்தல்.

(4) ஆவடியிலிருந்து பூவிருந்தவல்லி வழியாக காஞ்சிபுரத்திற்கு ஒரு அகல இருப்புப் பாதை அமைத்தல்.

(5) சென்னை-விழுப்புரம்-சிதம்பரம்-தஞ்சாவூர்-திருச்சி-மதுரை-இராமேஸ்வரம் இடையே உள்ள மீட்டர் கேஜ் இருப்புப் பாதையினை அகல இருப்புப் பாதையாக மாற்றுதல்.

(6) விழுப்புரத்திற்கும் திருச்சிக்கும் இடையே உள்ள இருப்புப் பாதையை மின்னகப்படுத்துதல்,

(7) சென்னை கடற்கரை-தாம்பரம் வரையிலான மீட்டர் கேஜ் இருப்புப் பாதையை அகல இருப்புப் பாதையாக மாற்றுதல்.

(8) சேலத்திலிருந்து கரூருக்கு ஈரோடை தொடாமல் நாமக்கல் வழியாக ஒரு இருப்புப் பாதையும், இரண்டாவதாக சேலத்திலிருந்து திருச்சிக்கு நாமக்கல், முசிரி வழியாக ஒரு இருப்புப் பாதையும் அமைத்தல்.

(9) சத்தியமங்கலம் வழியாக மேட்டுப்பாளையத்திலிருந்து கர்நாடக மாநிலம் சாம்ராஜ்நகர் வரை புதிய இரயில் பாதை அமைத்தல்.

(10) தர்மபுரி, மொரப்பூர், ஹரூர், தீர்த்தமலை, சாத்தனூர் வழியாக ஹோசுனேகல் மற்றும் திருவண்ணாமலை இடையே ஒரு கதிய இரயில் பாதை அமைத்தல்.

(11) இராமநாதபுரம் அல்லது உத்திரகோசமங்கையிலிருந்து வாலிநோக்கம் வரை புதிய இரயில் பாதை அமைத்தல்.

(12) இணைப்புப் பெட்டி தொழிற்சாலைக்கும் (இன்டக்ரல் கோச் பாக்டரி) பெரம்பூருக்கும் இடையே உள்ள இரயில் பாதையை மின்னகப்படுத்துதல்.



(13) மீனம்பாக்கம் இரயில்வே நிலையத்திலிருந்து மீனம்பாக்கம் விமானதளம் வரையில் ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு மின்சார இருப்புப் பாதை அமைத்து மீனம்பாக்கம் விமான தளத்தில் ஒரு இரயில்வே முடிவிடம் (டெர்மினல்) அமைத்தல்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த தூத்துக்குடியிலிருந்து திண்டுக்கல்லுக்கும், திண்டுகல்லிலிருந்து கரூரையும் இணைக்கக்கூடிய அகல இரயில் பாதை திட்டம் கிடப்பிலே போடப்பட்டிருப்பதாகப் பேசப்படுகிறது. எனவே மத்திய அரசாங்கத்தை மீண்டும் வலியுறுத்தி இந்த அகல ரயில் பாதைத்திட்டத்தை துரிதப்படுத்த மாநில அரசு நடவடிக்கை ஏதாவது எடுத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. கு. முத்துசாமி: துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைப் பற்றி இதிலே வரவில்லை. இதற்கு தனிக் கேள்வி போடவேண்டும். இருந்தாலும், 1981-82 ஆம் ஆண்டு, 2 கோடி ரூபாயை இதற்காக ஒதுக்கினார்கள், 1982-83-ல் 70 லட்ச ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். இதற்காக 502 ஏக்கர் நிலம் கையகப்படுத்தும் முயற்சிகள் இப்போது நடந்து கொண்டிருக்கின்றது. தற்போது வேலைகள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. இதை கிடப்பிலே போடவேண்டும் என்ற நிலைமையில்லை. ஆனால் கொஞ்சம் காலம் தாழ்த்துவார்கள் என்ற எண்ணம் இருக்கிறது. அதையும் கூட துரிதப்படுத்த வேண்டும் என்று தமிழக அரசு கேட்டுக்கொண்டு இருக்கிறது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: துணைத் தலைவர் அவர்களே, சென்னை, பூந்தமல்லி, காஞ்சிபுரம் வழியாக செல்லக்கூடிய வழித்தடங்களைக் குறித்து அமைச்சர் அவர்கள் பரிந்துரை செய்திருக்கின்ற அந்த பரிந்துரையின் மீது மேல் நடவடிக்கை எடுக்க தமிழக அரசு என்ன என்ன காரியங்கள் ஆற்றியிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. முத்துசாமி: துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு ஆற்றக் கூடிய ஒரே ஒரு காரியம், இங்கேயிருந்து மத்திய அரசுக்கு கடிதம் எழுதியோ, அல்லது நேரிலே சென்றோ, அவர்களை வற்புறுத்திக்கொண்டிருக்கலாம். அவர்கள் இதை எடுப்பதற்கான ஒப்புதலை தந்துவிட்டார்கள் என்றால், நம்முடைய அதிகாரிகளை வைத்து, நில ஆர்ஜித வேலைகளிலே, நில ஆர்ஜிதம் செய்யக்கூடிய காரியங்களிலே நாம் ஈடுபட்டு அவைகளைச் செய்து கொடுக்க முடியும். எனவே அவர்கள் அனுமதிக்கின்ற வரையில் இந்த வேலையைத்தான் நம்மால் செய்ய முடியும்.

திரு. மி. வின்சென்ட்: துணைத் தலைவர் அவர்களே, Kanniyakumari to Kashmir India is one என்ற ஸ்லோகனை எழுப்பி தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்தி வருகிறோம். கன்னியாகுமரியிலிருந்து சென்னைக்கு அகல ரயில்பாதை அமைத்தால்தான்

காஷ்மீர் போவதைப் பற்றி பேசமுடியும், என்பதை வலியுறுத்தி கன்னியாகுமரியிலிருந்து சென்னைக்கு அகல ரயில் பாதை அமைத்து, தேசிய ஒருமைப்பாட்டைக் காக்க மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: துணைத் தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிதாக ஒரு நல்ல யோசனையைச் சொல்லுகிறார்கள். அதற்காகவாவது மத்திய அரசு மயங்குகிறதா என்று பார்ப்போம்.

திரு. ரா. கு. பெருமாள்: துணைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரத்திலிருந்து விளாத்திக்குளம், தூத்துக்குடி வழியாக கன்னியாகுமரிக்கு ரயில் பாதை அமைப்பதற்கு 5, 6 ஆண்டுக் காலத்திற்கு முன்பாகவே சர்வே செய்யப்பட்டது. அது தற்போது எந்த நிலையில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: துணைத் தலைவர் அவர்களே, இங்கே நாம் பரிந்துரை செய்த அந்த 13-லே மத்திய அரசாங்கத்திற்கு இருக்கின்ற நிதிநிலைமையின் காரணமாக எதுவும் தற்போது எடுத்துக் கொள்ள முடியவில்லை என்று சொல்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சர்வே செய்யப்பட்டதாகச் சொல்கிறார்கள். அந்தக் குறிப்பு என்னிடம் இல்லை. சர்வே செய்யப்பட்டது என்றால், அது சர்வே செய்த நிலையிலேதான் இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

திரு. பெ சு. திருவேங்கடம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலையிலிருந்து பெங்களூருக்கும் அல்லது திருவண்ணாமலையிலிருந்து சாத்தனூர் டாமுக்கும் ஏற்பட இருக்கின்ற இரண்டு மார்க்கத்தைப்பற்றி படித்தார்கள். இப்போது திருவண்ணாமலையிலிருந்து பெங்களூருக்கோ அல்லது பெங்களூரிலிருந்து திருவண்ணாமலை செல்வதற்கோ அரசு சிபாரிசுசெய்துள்ளதா? ஏன் என்றால், நாங்கள் எல்லாம் சென்னைக்கு வரவேண்டும் என்று சொன்னால், விழுப்புரம் போய் வரவேண்டியிருக்கிறது. அல்லது காட்பாடிக்கு போய் அங்கிருந்து மாறித்தான் வர வேண்டியிருக்கிறது. எனவே சென்னையிலிருந்து திருவண்ணாமலை வழியாக பெங்களூர் வருகின்ற மாதிரி ரயில் பாதை வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் நீண்டகாலமாக கோரிக்கை வைத்து வருகிறார்கள். எனவே விரைவாக மத்திய அரசு அனுமதி அளிப்பதற்கு இந்தத்திட்டத்திற்கு முன்னுரிமை தந்து மாநில அரசு சிபாரிசு செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலையிலேயிருந்து, செங்கம், கிருஷ்ணகிரி ஹோசூர் வழியாக, பாண்டிச்சேரி, மற்றும் பெங்களூருக்கு இடையிலே—பாண்டிச்சேரி-பெங்களூருக்கு இடையிலே வருகிறபோது—உங்களுடைய ஊர் அந்த வழியிலே வருகிறது. எனவே அங்கிருந்து தனியாக கேட்பது என்பது முறையாக இருக்காது. பாண்டிச்சேரிக்கும்பெங்களூருக்கும் இடையிலே வருகின்ற காரணத்தால், திருவண்ணாமலை இடையிலேமாட்டிக்கொள்கிறது



## சுந்தரராஜபுரத்தில் அரிசன மாணவர் விடுதி கட்டும் திட்டம்

648—(*வினா எண். 17555)—திரு. க. பாரமலை: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், ராஜபாளையம் வட்டம் சுந்தரராஜபுரத்தில் அரிசன மாணவர்களுக்கான விடுதி (ஹாஸ்டல்) ஒன்று ஆரம்பிக்கவேண்டும் என்று அரசுக்குக் கோரிக்கை ஏதும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், ராஜபாளையம் வட்டம், சுந்தரராஜபுரத்தில் அரிசன மாணவர்களுக்காக விடுதி ஆரம்பிப்பது பற்றி கோரிக்கை எதுவும் அரசுக்கு வரவில்லை. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநருக்கு விசைத்தறி தொழிலாளர் சங்கத்தினரிடமிருந்து கோரிக்கை வரப்பெற்றுள்ளது. அதனையொட்டி 1984-85 ஆம் ஆண்டில் இரண்டாம் பகுதி திட்டத்தின் கீழ் துவக்கப்படுவதற்காக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் அரசுக்கு அனுப்பியுள்ள விடுதிகள் பட்டியலில் இராமநாதபுரம் மாவட்டம், ராஜபாளையம் வட்டம் சுந்தரராஜபுரம் மாணவர் விடுதியும் ஒன்றாகும்.

(முற்பகல் 9-40)

திரு. க. பாரமலை: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த சுந்தரராஜபுரத்தில் அரிசன நலத்துறையால் மாணவர்கள் விடுதிகள் ஆரம்பிப்பதற்கு பரிந்துரை எதுவும் வரவில்லை என்று சொன்னார்கள். நானே அரசாங்கத்திற்கு கடிதம் எழுதியிருக்கிறேன். இரண்டாம் பகுதியிலே 84-85-லே சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு பரிந்துரை வந்திருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். நான் தெரிந்துக் கொள்ள விரும்புவது, அங்கே இந்த ஆண்டே மாணவர் விடுதியை ஆரம்பிப்பதற்கு முயற்சி செய்யப்படுமா? ஏனென்றால் அது பெரிய கிராமம். ஹைஸ்கூல் இருக்கிறது. ஏறத்தாழ 2 ஆயிரம் அரிசன வீடுகள் இருக்கின்றன. ஆகவே பள்ளியில் மாணவர்களைச் சேர்க்கின்ற எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும் அதை நல்லமுறையில் நடத்துவதற்கும், இந்த ஆண்டே அங்கே விடுதியை திறப்பதற்கும் அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கக் கூடிய கருத்தின் அடிப்படையில், அந்த சுந்தரராஜபுரத்தில் வருகிற ஆண்டிலேயே அந்த மாணவர்கள் விடுதி துவக்கப்படும்.

[1984 ஏப்ரல் 25

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட பழங்குடியினர் இயக்குநரால் எத்தனை விடுதிகள் கட்டுவதற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது? அதில் இந்த ஆண்டு எத்தனை விடுதிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாணவர் இல்லங்களை பொறுத்த அளவில் மொத்தமாக மாணவர்களுக்கும் மாணவியர்களுக்குமாகச் சேர்த்து 14 இடங்களை இரண்டாம் பகுதி திட்டத்தின் கீழே சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று இயக்குநரிடத்திலேயிருந்து பரிந்துரை அரசுக்கு வந்திருக்கிறது, அவற்றை எல்லாம் ஆராய்ந்து பார்த்தும் அதேநேரத்தில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்கிற கருத்துக்களின் அடிப்படையில், அவர்களின் தொகுதியிலே இருக்கக் கூடிய தேவைகளையும் கருத்திலே கொண்டு, அந்தப் பரிந்துரைகளையும் மேற்கொண்டு அரசு 26 விடுதிகளைத் துவக்க இருக்கிறது. அரசுக்கு இயக்குநரால் அனுப்பப்பட்டிருக்க கூடிய அந்த பட்டியலோடு, மாண்புமிகு உறுப்பினர்கள், அவரவர்கள் தொகுதியிலே சொல்லியிருக்கக்கூடிய அந்தப் பிரச்சனைகளையும் கருத்திலே கொண்டு, அவைகளும் அதிலே சேர்த்துக் கொள்ளப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது வருங்காலத்தில் 84–85ல் இந்த இல்லங்கள் அமைக்கப்படும் என்று சொன்னார்கள் குறிப்பாக கல்லூரி மாணவர்கள் என்ற வகையில் 100க்கும் மேற் பட்டவர்கள், இருக்கும்போது ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு ஹாஸ்டல் என்ற வகையில் வருங்காலத்தில் ஒரு திட்டம் வைத்து நிறைவேற்ற அமைச்சர் முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, குறிப்பாக கல்லூரி விடுதிகளை அதிகமாக அமைக்க வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்கிறேன். அந்த வகையிலே தான் இந்த ஆண்டைப் பொறுத்தவரையில் புதியதாக திறக்க இருக்கிற 26 விடுதிகளில் 12 கல்லூரி விடுதிகளை அதிலும் பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதற்காக 12 விடுதிகள் கல்லூரிகளிலே படிக்கின்ற பெண்களுக்காக திறக்கப்படயிருக்கின்றன. அதேமாதிரி கல்லூரியிலே பயிலுகிற மாணவர்களுக்கும் விடுதியில்லாத நிலைமை இருப்பது அரசினுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. அதை ஏற்றுக் கொண்டு வருகிற ஆண்டிலே, கல்லூரி மாணவர்களுக்கு விடுதிகளைத் திறக்க முன் உரிமையை அரசு கொடுத்து நடவடிக்கை எடுக்கும்.

திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆதிதிராவிடர் நலத்துறையால் நடத்தப்படுகிற மேல்நிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் இருக்கக்கூடிய இடங்



1984 ஏப்ரல் 25]

களிலேயே விடுதிகள் இருக்க வேண்டியது மிதமிக அவசியம். ஆகவே கோரிக்கைகள் இல்லாவிட்டாலும் கூட, ஆதித்திராவிட நலத்துறையின் மூலமாக நடத்தப்படுகிற பள்ளிக்கூடங்கள் இருக்கக்கூடிய இடங்களில் உடனடியாக முன்னுரிமை கொடுத்து அந்த விடுதிகளை திறப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, விடுதிகளைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு ஆண்டும் இருக்கக்கூடிய நிதிநிலைமையையும் கவனத்திலே கொண்டுதான் திறந்துக் கொண்டிக்கின்றோம், மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொன்னதைப் போல ஆதித்திராவிட நலத்துறை மூலமாக நடத்தப் படுகிற உயர்நிலைப் பள்ளிகளும், மேல்நிலைப் பள்ளிகளும் இருக்கக் கூடிய இடத்தில் விடுதிகள் அமைக்கப்பட வேண்டும் என்பது நியாயமான கோரிக்கை. பல இடங்களில் அப்படி இருக்கிறது, ஒரு சில இடங்களில் இல்லை என்ற நிலைமை இருக்கிறது. அதை ஏற்றுக் கொள்கிறேன். அந்த இடங்களுக்கு முன் உரிமை அளிப்பதற்கு முயற்சி எடுக்கலாம்.

திரு. ரா. கு. பெருமாள்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, மாணவர் மாணவியர்களுக்காக 25 விடுதிகள் அமைக்கப்படும் என்று சொன்னார்கள், அவை எந்தெந்த மாவட்டங்களில் எந்தெந்த இடத்தில் அமைக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அரசுக்கு இயக்குநரிடத்திலிருந்து சில பரிந்துரைகள் வந்திருக்கின்றன. அவற்றையெல்லாம் இங்கே படிக்க முடியாது, அதையும் தவிர சட்டமன்ற உறுப்பினர் சொல்கிற நியாயமான பிரச்சினைகளையும் அவர்களுடைய தொகுதிகளிலே உள்ள பிரச்சினைகளையும் கவனத்தில்கொண்டு இடங்கள் தேர்வு செய்கிறோம். ஆகவே என்ன என்ன இடங்கள் என்று தற்போது சொல்வதற்கு இல்லை.

### மரக்காணம் ஒன்றியம் ஐக்காம்பேட்டை கிராம அரிசன காலனிக்கு மயானப்பாதை அமைக்கும் திட்டம்.

649—(*வினா எண்—17736) திரு. கே. எம். தங்கமணி: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம், மரக்காணம் ஒன்றியம், ஐக்காம் பேட்டை கிராம அரிசன காலனிக்கு மயானப்பாதை வசதி அமைத்துத்தர தன்னிறைவுத் திட்டத்தில அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[1984 ஏப்ரல் 25

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) மரக்காணம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஜக்காம்பேட்டை கிராம ஆதி திராவிடர் பகுதி திண்டிவனம் டவுனிலிருந்து 3 கிலோ மீட்டருக்கும் அப்பால் உள்ளது. ஜக்காம்பேட்டை காலனியில் ஏற்கனவே நல்ல மயானப்பாதை உள்ளது. எனவே புதிதாக மயானப்பாதை அமைப்பதற்கு முன்மொழிவு எதுவும் இல்லை. தன்னிறைவுத் திட்டத்தில் இம்மாயானத்திற்கு பாதை வசதி எதுவும் எடுத்துச் செய்யப்படவில்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

திரு. கே. எம். தங்கமணி: துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே இருக்கிற ஜக்காம்பேட்டை கிராமத்திலே இருக்கிற அரிசன காலனிக்கு தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக மயானப் பாதை அமைக்கிற திட்டம் எதுவும் இல்லை என்று அமைச்சர் அவர்கள் இங்கே அறிவித் தார்கள். அதோடு அவர்கள் இப்போது பாதையும் இருக்கிறது என்று சொன்னார்கள். கடந்தமுறை நான் சுற்றுப்பயணம் செய்கிறபோது அந்தக் கிராமத்திற்குப் போனபோது அங்கே சரியான பாதை இல்லை என்று கிராமத்திலே உள்ள மக்கள் என்னிடத்திலே சொன்னார்கள் என்பதை நினைவுபடுத்த கடமைப்பட்டிருக்கிறேன். எனவே நல்ல பாதை அமைத்துதர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: துணைத் தலைவர் அவர்களே, இயக்குநரிடத்திலிருந்து நமக்கு வந்திருக்கிற பதில் அடிப்படையில் அந்தக் கருத்தை இங்கே சொல்லியிருக்கிறோம். அதுவும் தென்னாற்காடு மாவட்டத்திலே ஆதிதிராவிடர் அலுவலர் அனுப்பியிருக்கிற அறிக்கை அடிப்படையில் பதில் தரப்பட்டிருக் கிறது. ஆனால் அங்கே பாதை சரியாக இல்லை என்று சொல்லி இருக்கிறார்கள். அதை மீண்டும்கவனித்து பாதை சரியில்லாமல் இருக்குமானால் அதற்குரிய நடவடிக்கையை அரசு எடுக்கும்.

திரு. ஆர். தவசி: துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய கோரிக்கை பரமக்குடியிலே அரிசன மாணவர்கள் எல்லாம் கட்டுவதற்கு நீண்டகாலமாக எஸ்டிமேட் போட்டு........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது வேறு கேள்வி.

இராசிபுரம் வட்டத்திலுள்ள மங்களபுரம் இராமத்தில் வசிக்கும் ஆதிதிராவிட மக்களுக்கு வழங்கப்பட்ட வீட்டுமனைப் பட்டாக்கள்.

650— (*வினா எண் 18752) திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

இராசிபுரம் வட்டத்திலுள்ள மங்களபுரம் கிராமத்தில் வசிக்கும் ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா கொடுத்த இடத்தில் அரிசன வீட்டுவசதி வாரியத்தின் மூலம் இலவச வீடுகட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?



1984 ஏப்ரல் 25]

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : இராசிபுரம் வட்டத்தி லுள்ள மங்களாபுரம் கிராமத்தில் வசிக்கும் ஆதிதிராவிடர் களுக்கு வீட்டுமனைப்பட்டா கொடுத்த இடத்தில் ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் வளர்ச்சிக்கழகம் மூலம் வீடுகள் கட்டுவது பற்றிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. சி. சிவப்பிரகாசம்: துணைத் தலைவர் அவர்களே, நாமகிரிப்பேட்டை ஒன்றியத்திலுள்ள மங்களாபுரம் கிராமத்தில் 61 ஆதிதிராவிடர் மக்களுக்கு வீட்டுமனைகள் கொடுத்து 4,5 ஆண்டுக்காலமாகிறது. ஆகவே அந்த மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய விரைவாக இந்த ஆண்டு அந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்ள அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : துணைத் தலைவர் அவர்களே, 1977-78 ஆம் ஆண்டிலே 61 வீட்டுமனைப் பட்டாக்களும் 1979-80-ல் 26 வீட்டுமனைப் பட்டாக்களும் ஆகமொத்தத்திலே 87 வீடுகள் கட்ட வழங்கப்பட்டன. ஆகமொத்தத்திலே 87 வீடுகள் கட்ட வேண்டியுள்ளது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரை செய்திருக்கிறார். அந்த அடிப்படையில் வருகிற ஆண்டிலே அரசு அதைப் பரிசீலனை செய்யும்.

பாபநாசம் அருகேயுள்ள கோரையாற்றில் அணை கட்டும் திட்டம்

651 —(*வினா எண் 22328) திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதி பாபநாசம் பக்கமுள்ள கோரையாற்றில் அணை கட்ட அரசு அண்மைக் காலத்தில் ஆய்வுப்பணி ஏதேனும் நடத்தியதா?

(ஆ) ஆம் எனில், இதுபற்றிய விபரம் என்ன?

(இ) மொத்த மதிப்பீடு என்ன?

(ஈ) எவ்வளவு நிலங்கள் பலனடையும்?

மாண்புமிகு திரு. யா. சை. மு. ஆசுப்: (அ) ஆம்.

(ஆ) இத்திட்டத்திற்கு மொத்தம் 750 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்படவேண்டும். அதில் 175 ஏக்கர் நிலங்கள் முண்டான்துறை காட்டு விலங்குகள் புகலிடத்தில் உள்ளது. முண்டான்துறை புகலிடத்தில் முதனிலை ஆய்வுகள் நடந்தால் அது புகலிடத்தின் சூழ்நிலையை பாதிக்கும் என்று தெரிவித்து வனத்துறை ஆய்வுகள் நடத்த அனுமதி தரவில்லை.

(இ) தோராய மதிப்பீடு—ரூ. 811 லட்சங்கள்.

[1984 ஏப்ரல் 25

(ஈ) தோராயமாக மொத்தம் 8301.40 ஏக்கர் நிலங்கள் பயனடையும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைப் பொறுத்தமட்டில் பழைய பாசனத் துறை அமைச்சர் இருக்கிறபோது ஏற்கெனவே இது வந்தபோது முதல் ஆய்வையே முடிந்த ஆய்வாக எடுத்துக் கொண்டு சீக்கிரமாக வேலை ஆரம்பிக்கப்படும் என்று வாக்குறுதி கொடுத்தார்கள். அந்தப் பக்கத்திலே டாம் கட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே புலியை, சிங்கவால் குரங்கைக் காட்டி மத்திய அரசாங்கம் தடுப்பதை சுட்டிக்காட்டி அதற்கு அறிவுரை கூறி அவர்களுக்கு எழுதி சீக்கிரமாக அனுமதி வழங்கும்படி கேட்க விசேஷ முயற்சி எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினைபற்றி முன்னாலே இருந்த பாசனத் துறை அமைச்சர் என்ன முடிவு எடுத்தார் என்ற குறிப்பு இப்போது என்னிடத்தில் இல்லை. இருந்தாலும் வனத் துறையைப் பொறுத்தமட்டிலும் வன விலங்குகள் புகலிடம் இருக்கக்கூடிய இடங்களில் ஆய்வுப்பணிகளை மேற்கொள்கிற சூழ்நிலையில் மத்திய அரசு விரிவான திட்டமான விளக்கமான விதிமுறைகளை வகுத்து இருக்கிறது. அந்த விதிமுறைகளுக்கு உள்பட்டு எந்த மாநிலமும் செயல்படவேண்டிய அளவுக்கு இன்றைய சூழ்நிலைகள் இருக்கின்றன. அந்த வகையில் முண்டந்துறை புகலிடத்தில் இருக்கக்கூடிய வனவிலங்குகளை ஆய்வுப் பணிகள் பாதிக்கும் என்று சொல்கிற நிலையில் ஆய்வு மறுக்கப்படுமானால் எப்படி அந்தப் பணிகளை மேற்கொள்வது என்பதை மாண்புமிகு உறுப்பினர் புரிந்துகொள்வார்கள் என்று கருதுகிறேன். என்றாலும் அனுமதி வாங்குவதற்காக உரிய கோரிக்கை மத்திய அரசுக்கு அனுப்பப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்

(முற்பகல் 9–50)

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முண்டான்துறையில் புலி சரணாலயம் இருப்பது உண்மை தான். ஆனால் இந்த இடம் முண்டான்துறைக்கு வெகு தொலைவில் இருக்கிறது. முண்டான் துறையைத் தாண்டி சிறிய அணை இப்போது கட்டிக்கொண்டு இருக்கிறோம். அங்கே வேலையும் நடந்துகொண்டு இருக்கிறது. அந்த வேலையின் காரணமாக அங்குள்ள புலிகள் வேறு எங்கும் ஓடவில்லை. அங்கேயேதான் இருக்கிறது. ஆகவே புலியைக் காட்டி மத்திய அரசு மறுக்கிற முயற்சியில் ஈடுபட்டால் இந்த விவரங்களை எடுத்துக் கூறி இன்னும் சொல்லப்போனால் விசேஷமான சிறப்பு நடவடிக்கை எடுத்து இந்தத் திட்டத்தை அமுல் நடத்துவதற்கு ஒரு விசேஷ முயற்சியை எடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.



1984 ஏப்ரல் 25]

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் முன்பு சொன்னதுபோது புலியைக் காட்டி திட்டங்களை நிறுத்தக்கூடிய எண்ணத்தில் இந்த துறையும் இல்லை, இந்த அரசும் இல்லை. ஆகவே இங்கே முண்டான்துறை புகலிடத்திற்கு 175 ஏக்கர் நிலங்கள் உள்ளன. இத் திட்டத்திற்கு மொத்தம் 750 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்படவேண்டும். அதில் 175 ஏக்கர் நிலங்கள் முண்டான்துறை காகை விலங்குகள் புகலிடத்தில் உள்ளது என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஆகவே புகலிடத்திற்கு இடத்தை கையகப்படுத்துகிற நேரத்தில் இந்திய அரசின் அனுமதியைப் பெற்று ஆகவேண்டும். வனத்துறையின் அனுமதியை பெற்று ஆக வேண்டும். அனுமதி பெற உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பல்லிக்கூட்டம் அணைக் கட்டுத் திட்டம்

652—(*வினா எண் 22451) திரு. ஜே. ஹேமச்சந்திரன் மற்றும் திரு டி. மணி: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1978-ல் ஆய்வுப்பணி ஆரம்பித்த பல்லிக்கூட்டம் அணைக்கட்டு வேலை எப்போது ஆரம்பிக்கப்படும்?

(ஆ) வேலை ஆரம்பிப்பதில் காலதாமதத்திற்கு காரணம் என்ன?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: (அ) & (ஆ): விரிவான ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. அந்த திட்ட அறிக்கை கிடைக்கப் பெற்ற பின், அரசின் பரிசீலனைக்கு அனுப்பப் படும். அரசின் முடிவுக்குப் பிறகு வேலை துவக்கப்படும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு நடந்து வருகிறது. ஆய்வு முடிந்த பிறகு அரசுக்கு அறிக்கை வரும், அதற்கு பிறகு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் 1978 ஆம் ஆண்டிலேயே ஆய்வு நடத்தப்பட்டு அது சம்பந்தமாக இன்வெஸ்டிகேஷன் ரிப்போர்ட் அரசுக்கு போய் அந்த ரிப்போர்ட் மேல் அரசு என்ன நடவடிக்கை எடுத்தது அல்லது 1978-ல் ஆய்வுகள் நடத்தப்பட்ட பிறகு அந்த ரிப்போர்ட் அரசுக்கு வரவில்லையா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1978 ஆம் ஆண்டு அதற்குரிய ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது என்று சொல்வது உண்மை தான். ஆனால் ஆரம்பத்தில் இலாப்பிலிச முறையில்

உள்ள முல்லை ஆற்றில இந்த நீர்த்தேக்கம் கட்ட முதல் நிலை ஆய்வு நடத்தப்பட்டது. தொழில் நுட்பம் மற்றும் பொருளாதார அடிப்படையை கருத்தில் கொண்டு மேற்படி நீர்த் தேக்கத்தில் இன்றைக்கு தளத்தை மாற்றுவதற்கு உரிய அறிவுரை வழங்கப் பட்டு இருக்கிறது. ஆகவே தளத்தை கண்டு பிடிப்பதில் கால தாமதம் ஏற்பட்டது. அதற்கு பிறகுதான் விளவங்கோடு தாலுக்காவில் பல்லிக்கூட்டத்தின் அருகில் முல்லை ஆற்றின் குறுக்கே நீர்த் தேக்கம் ஏற்படுத்துவது பற்றி அந்த அடிப்படையில் இப்போது விரிவான ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மழை காலங்களில் அதிகமான தண்ணீர் முல்லை ஆற்றில் வந்து அந்த தண்ணீர் பெருகுவதன் காரண மாக அங்கே இருக்கக்கூடிய பல ஏக்கர் நிலங்கள் அழிவுக்கு ஆளாக்கப்படுகிறது. அதே நேரத்தில் அந்த மழை காலத்தில் வரக்கூடிய தண்ணீரை அங்கே தேக்கி நிறுத்துவதற்கு வசதி இல்லை. அதன் காரணமாக மற்ற நேரங்களில் பாசனத்திற்கு தேவையான தண்ணீர் கிடைக்காத ஒரு நிலை ஏற்படுகிறது. அந்த பாகோடு கிராமத்திலேயும் அதேபோன்று ஆறுமனை கிராமத்திலும் உள்ள பல ஏக்கர் நிலங்கள் இன்றைக்கு விவசாயத்திற்கு தகுந்த அளவுக்கு வசதி இல்லாமல் கஷ்டப் படக்கூடிய நிலை இருக்கிறது. இது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தெரியுமா? ஆகவே இந்த நிலையை கணக்கில் எடுத்துக்கொண்டு இந்தத் திட்டத்தை விரைவில் நடைமுறைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்தவொரு திட்டத்தையும் மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லுகின்ற நேரத்தில் அந்தத் திட்டத்திற்கு முக்கியத்துவம் இல்லாமல் இங்கே எடுத்துச் சொல்வது கிடை யாது. குமரி மாவட்டத்தில் அவர்களால் சொல்லப்படும் பல்லிக்கூட்டம் திட்டத்தைப் பொறுத்தவரையில், அது முக்கியத்துவம் அற்ற திட்டம் என்று அரசு கருதவில்லை. ஆனால் எந்தவொரு திட்டமும், அது முக்கியமான திட்டமாக இருந்தாலும் சரி, அல்லது முக்கியத்துவமற்ற திட்டமாக இருந் தாலும் அந்தத் திட்டத்திற்குரிய ஆய்வுப்பணிகளைச் செய் யாமல், எந்தப் பணிகளையும் மேற்கொள்ள முடியாது. ஆகவே, அந்த வகையில் இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. நீரியல் ஆய்வுப் பணிகளும், பவுண்டேஷன்—அடித்தளம் எங்கே அமைப்பது என்பதற்கான ஆய்வுப் பணிகளும் நடந்துகொண்டு வருகின்றன, ஆகவே, பணிகளில் முன்னேற்றம் இருப்பதால், ஆய்வுகள் உரிய வகைகளில் நடைபெறும். விரைவில் விவரமான அறிக்கை கிடைக்கும் என்று நம்புகிறேன்.





திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பாசனத் துறை அமைச்சரவர்கள் விரிவான சில தகவல்களை இங்கே தந்திருக்கிறார்கள். 1981-82 ஆம் ஆண்டிலே இதேமாதிரி, இந்த மாமன்றத்தி லேயே ஒரு குறுகிய கால வினாவிற்கு மாண்புமிகு அமைச்ச ர்வர்கள் தகவல் தருகின்ற நேரத்தில், அத்தகைய ஆய்வுப் பணிகள் முடிந்ததும் எடுத்துக்கொள்ளப்படும் என்று அறிவித்திருந்தார்கள். சமீபத்தில், திருச்சியில் உள்ள இன்வெஸ்டி கேஷன் அதிகாரிகள், இதில் தகராறு இருப்பதாகச் சொல்லி அந்த வேலைக்குச் சில இடையூறுகளை ஏற்படுத்தினார்கள். மீண்டும் எங்களுடைய கோரிக்கையின் அடிப்படையில், முக்கிய மான அதிகாரிகள் சென்று பார்த்திருக்கிறார்கள்; நான்கூடச் சென்று அந்த இடத்தைப் பார்த்திருக்கிறேன். அங்கே தேவை யான தண்ணீர் கிடைக்கிறது; போதுமான இடம் இருக்கிறது. ஆகவே, முதல் கட்டமாக அந்த ரிப்போர்ட் கிடைத்தவுடன், அதற்கென நிதி ஆதாரத்தை ஒதுக்கி, ஆய்வு முடிந்தவுடன் உடனடியாக இந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு வழிவகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நீரியல் ஆய்வுப் பணிகளைப் பொறுத்தவரையிலே அது குறிப்பிட்ட ஒரு காலகட்டத்திற்கு மேற்கொள்ளப்படவேண்டும். அந்த முறையில் தான் இப்பொழுது ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. புள்ளி இயல் ஆய்வுப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப் பிட்ட காலகட்டத்திற்கு ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும் நிலையில்தான், இந்தத் திட்டங்கள் மேற்கொள்ளப் படவேண்டும். எனவே, இப்பொழுதே அதற்குரிய டோக்கன் கிராண்ட் என்ற நிதியை ஒதுக்கீடு செய்யும் தேவை இருப்ப தாக இந்த அரசு கருதவில்லை.

திரு. டி. மணி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இன்னொரு தகவலைச் சொல்லி யிருக்கிறார்கள். நான் என்ன கேட்க விரும்புகிறேன் என்றால், ஏற்கனவே போதுமான தண்ணீர் இருக்கிறது. இப்பொழுதுகூட கடந்த இரண்டு வாரங்களுக்கு முன் பெய்த கடுமையான மழையின் காரணமாகப் பார்த்தால்கூட, ஒரு வாரத்தில் பெய்த மழையினாலேயே அந்த நீர்த்தேக்கத்திற்குத் தேவையான தண்ணீர் உள்ளது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால், அங்கே இரண்டு விதமான பர்பஸ்கள் நிறைவேறும். ஒன்று, தண்ணீர் இல்லாத பகுதிகளுக்குத் தண்ணீர் கிடைக்கும்; இன்னொன்று, மழைக் காலங்களில் மூன்று கிராமங்களில் உள்ள 500-க்கும் அதிகமான ஏக்கர் நிலங்கள் வெள்ளத்தின் காரணமாகச் சேதம் அடைவதைத் தவிர்க்க முடியும். இந்த முக்கியமான காரணங்களின் அடிப்படையில் அது இருப்பதால் முதல் கட்டமாகக் கொடுக்கப்படும் ரிப்போர்ட்டின் அடிப் படையில் இந்தத் திட்டத்தை இந்த ஆண்டிலேயே மேற் கொள்ளும் வகையிலே நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்று மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையிலேயும், அது வெள்ளத் தடுப்புக்கு உரிய திட்டமாகவும், அதே நேரத்தில், பாசன வசதி தரக்கூடிய திட்டமாகவும் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வதை நானும் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், எந்தவொரு திட்டமாக இருந்தாலும் உரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படாமல் எந்தவிதமான பணிகளையும் மேற்கொள்ள முடியாது, குறிப்பாக, பாசனத் துறையைப் பொறுத்தவரையிலேயும், ஆகவே அப்படிப்பட்ட ஆய்வுகள் முடிந்தவுடன், விரைவுபடுத்தி, எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக அந்தத் திட்டத்தை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளில் அரசு ஈடுபடும் என்பதை மட்டும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

### தடப்பள்ளி வாய்க்கால் சீரமைப்புப் பணி.

653— (*வினா எண். 22656 —திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம் பவானிசாகர் அணையிலிருந்து தடப்பள்ளி வாய்க்கால் சீரமைக்கும் பணி அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் பணி எப்போது துவங்கும்?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: (அ) ஆம்.

(ஆ) இத்திட்டம் குறித்து அரசு எடுக்கும் முடிவிற்குப் பிறகு வேலைகள் துவங்கப்படும்.

திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் ஆய்வு செய்வதாகச் சொன்னார்கள். ஏறக்குறைய, கடைகோடியிலே, 5,000 ஏக்கர்களுக்கு மேற்பட்ட நிலங்களில் உள்ள விவசாயிகள் தண்ணீர்ப் பற்றாக்குறையால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதைக் கருத்திலே கொண்டு, அந்தப் பகுதி விவசாயிகளின் நலன்களில் அரசு அக்கறை எடுத்துக் கொண்டு, அங்கே இருப்பவர்களுக்கு நன்மை செய்யும் பொருட்டு, உடனடியாக அந்த வாய்க்காலைச் சீரமைக்க மதிப்பீடு தயாரிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. அது எப்போது துவங்கப்பட இருக்கிறது என்பதை மட்டும் அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்குரிய மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு 242 இலட்சம் ரூபாயில் ஒரு விரிவான திட்ட அறிக்கையைத் தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அவர்கள் அரசுக்கு அனுப்பி இருக்கிறார்கள் அதனை அரசு இப்போது உள்ள விலைவாசிப்படி மாற்றியமைக்க உரிய அறிவுரைகளைத் தலைமைப் பொறியாளருக்குச் சொல்லியிருக்கிறது. அந்த விவரங்கள் வந்ததற்குப் பிறகு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(முற்பகல் 10—00)

திரு. கு. அ செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தடப்பள்ளி வாய்க்காலின் கடைகோடியிலுள்ள அனந்தசாகர் அணைக்குக் கீழே பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களைப் பாசனம் செய்கின்ற விவசாயிகள் இருக்கிறார்கள். அவர்கள் பயன் அடைந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் இப்போது இந்த அணைக்குக்கூட தண்ணீர் வருவதில்லை. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைக் கருத்தில் கொண்டு விரைவிலே ஆய்வு செய்து 1984—85 ஆம் ஆண்டாவது இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்ள முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் முன்பே சொன்னது போல் திட்டத்தின் ஆய்வுப் பணிகள் எல்லாம் முடிந்துவிட்டன. தலைமைப் பொறியாளர் விவரமான அறிக்கையையும், அதற்குரிய திட்ட மதிப்பீட்டையும் அனுப்பி இருக்கிறார்கள். அதில்தான் உரிய மாற்றங்களைச் செய்ய வேண்டும் என்று அரசு கோரி இருக்கின்றது. எனவே விரைவில் அந்தப் பணி முடிவடையும் என்று நம்புகிறேன். அந்தப் புதிய திட்ட மதிப்பீடு வந்ததற்குப் பிறகு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு —ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

### 2. தகவல் கோரல்.

(அ) பத்தாம் வகுப்பு விஞ்ஞான வினாத்தாள் தெலுங்குமொழி பெயர்ப்பு.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அண்மையில் நடைபெற்ற 10—வது வகுப்புத் தேர்வுகளில் தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்டவர்களின் விஞ்ஞான கேள்வித் தாள் சரியாக மொழிபெயர்க்கப் படாத காரணத்தால் அந்த தெலுங்கைத் தாய்மொழியாகக்

கொண்டு விஞ்ஞானப் பாடம் எழுதுகின்ற மாணவர்கள் அதற்குச் சரியாக பதிலளிக்க முடியாமல் போன காரணத்தால் அவர்கள் வெளியேறிவிட்டார்கள் என்ற செய்தி வந்திருக்கின்றது. தவறாக அவ்வாறு மொழி பெயர்க்கப்பட்டதன் காரணத்தால் மாணவர்களில் பலர் விடையளிக்காமல் வெளியேறிவிட்டதாகச் செய்தி வந்திருக்கின்றதே, இதைப் பற்றி அரசுக்குத் தகவல் வந்திருக்கினறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுக்கு இப்படிப்பட்ட தகவல் எதுவும் வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்தான் பத்திரிகையில் இருந்து ஒரு செய்தியைப் படித்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படி மாணவர்கள் பாதிக்கப்படக் கூடிய நிலைமை ஏற்பட்டிருந்தால் அதற்குரிய நடவடிக்கையை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை.

திரு என். வி. என். சோமு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு முன்தினம், அதாவது 23 ஆம் தேதி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. புருஷோத்தமன் அவர்கள் வீட்டுவசதி வாரிய மானியத்தின் மீது பேசும்போது உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பை......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். அது ஆய்வில் இருக்கின்றது. நாளைக்கு எடுத்துக் கொள்ளப்படும். எனவே இப்போது அதை விளக்க வேண்டியதில்லை....—(குறுக்கீடு)....அது ஆய்வில் இருக்கின்றது. எனவே நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம்.

(இ) தொட்டியம் தொகுதி உறுப்பினர் கடத்தப்பட்டதாகக் கூறப்படுவது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் தொட்டியம் சட்டமன்ற உறுப்பினர் திரு. பெரியசாமி அவர்கள் ராஜினாமா கொண்டுவந்தபோது அவரைப் பலவந்தமாகத் தூக்கிக்கொண்டு போய் இங்கே இருந்து கடத்தியிருக்கிறார்களே. அதைப்பற்றிய தகவல் வந்திருக்கின்றதா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அந்தமாதிரி தகவல்கள் எல்லாம் எனக்கு வராது. அமருங்கள்.



(ஈ) சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியிலுள்ள மருத்துவமனை

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஏதாவது உடம்புக்கு அசௌகரியம் ஏற்பட்டால் சிகிச்சை பெறுகின்ற வகையில் சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் மருத்துவமனை இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. ஆனால் அது சம்பந்தமாக அங்கே சென்றால் ஒன்று மருந்து இல்லை; அல்லது உடம்பிலே காய்ச்சல் இருக்கின்றதா என்று பார்ப்பதற்குக் கூட தெர்மாமீட்டர் இல்லை என்றெல்லாம் சொன்னார்கள். இதை என்னிடத்திலேயே சொல்லி இருக்கிறார்கள்.

நேற்றிரவு மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பையா அவர்களுக்கு திடீரென்று உடம்புக்கு அசௌகரியம் ஏற்பட்டு அவரை அழைத்துக் கொண்டு மருத்துவமனைக்குப் போனால் அது மூடி இருந்தது. கதவைத் தட்டிய பிறகு ஒருவர் வந்தார். வந்தவர், டாக்டர் இல்லை என்று சொல்லிவிட்டார். 3 ஷிஃப்டாகப் போட்டு 8 மணி நேரத்திற்கு ஒரு டாக்டர் இருக்க வேண்டும் என்று இருந்தும்கூட அங்கே டாக்டர் இல்லை. அதற்குப் பிறகு அங்கிருந்து வேறு மருத்துமனைக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்றால் அந்த நேரத்தில் ஆட்டோவும் கிடைக்கவில்லை. எப்படியோ ஒருவாறு கஷ்டப்பட்டு ஜி.எச்-க்கு 3 மணிக்குப் போய் சிகிச்சை செய்தோம்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே.....(குறுக்கீடு).....இதை முக்கியமானதாகக் கருதுவதால்தான் நான் சொல்கிறேன, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களிடத்திலே உங்களுடைய சார்பாக நான் இதுபற்றிப் பேசி 3 ஷிஃப்டுகளிலும் அங்கே டாக்டர் வருகின்ற வகையில் நான் பார்த்துக் கொள்கிறேன்....(குறுக்கீடு)....ஏன் இல்லை என்பதையும் விசாரிப்போம்.

திரு. சோ. அழகர்சாமி: . இருப்பதாக ரெக்கார்ட் செய்து விட்டுப் போய்விடுகிறார்களா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அப்படி இருந்தால் அதையும் பார்ப்போம்.

(உ) பனியன் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் திருப்பூர் பகுதியில் சுமாா் ,500 க்கு மேற்பட்டிருக்கக் கூடிய பனியன் தொழிலாளர்க கடந்த 1 மாத காலமாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். சம்பளம், பஞ்சப்படி போன்ற காரியங்களுக்காக அங்கே போராட்டம் நடைபெற்று வருகின்றது. பலமுறை பேச்சுவார்த்தை நடத்தியும்முடிவு பெறவில்லை, நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானமும் கவனஈர்ப்புத் தீர்மானமும்........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: முறையாக வரவேண்டிய நேரத்திலே, எடுக்க வேண்டிய முறையிலே எடுத்துக் கொள்ளலாம்.

(ஊ) வாடிப்பட்டி உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் போராட்டம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் நான் ஊருக்குச் சென்றிருந்தபொழுது அங்கே மதுரை மாவட்டம், வாடிப்பட்டி உயர்நிலைப்பள்ளியிலே படிக்கக்கூடிய மாணவர்கள் 120 பேர்கள் ஒரு தொடர் உண்ணாவிரதம் இருந்தார்கள். ஏன் என்று கேட்ட பொழுது பள்ளியிலே பரீட்சை 10 மணிக்கு என்றால், 10·15–க்குத்தான் அனுப்பினார்கள். பிறகு 1 மணிக்கு பரீட்சை முடிந்து வெளியே போகலாம் என்ற நிலைமையிருக்கும் பொழுது, 12.30 மணிக்கு வந்து எங்களை இம்சைபடுத்தி பரீட்சைத்தாளை வாங்கிக் கொண்டார்கள். எனவே, இதை உடனடியாகக் கவனிக்காவிட்டால் நாங்கள் சாகும்வரை உண்ணாவிரதம் இருப்போம் என்று அவர்கள் சொல்கிறார்களே; இந்த விஷயம் அமைச்சருடைய கவனத்திற்கு வந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வரவில்லை போல் இருக்கிறது.

## 3. கவன ஈர்ப்பு

### (அ) மேட்டுப்பாளையம் அரசினர் ஆண்கள் உயர்நிலைப்பள்ளிக்கான பொறியியல் கட்டிடம் கட்டுதல்

திரு. ரா. பெரியசாமி: துணைத் தலைவர் அவர்களே, ''தொட்டியம் தொகுதி மேட்டுப்பாளையம் அரசு ஆண்கள் உயர் நிலைப்பள்ளியில் அறிவியல் கூடம் கட்டுவதற்காக எழுப்பப்பெற்ற சுவர் பாழடைந்த நிலையில் உள்ளது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி மாவட்டம், தொட்டியம் தொகுதி, மேட்டுப்பாளையம் அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்குப் பொறியியல் கட்டிடம் கட்டும் பணி 1962-63–ல் திருச்சிராப்பள்ளி நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணித்துறை கோட்டப் பொறியாளரிடம் ஒப்படைக்கப்பட்டது. அக்கட்டிடமானது 6 அடி உயரம் (Lintel level) வரை கட்டப்பட்டு முடிவுறாத நிலையில் நிறுத்தப்பட்டது. இக்கட்டிடத்தைக் கட்டுவதற்கு ஒப்படைக்கப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் கட்டிடத்தை கட்டி முடிக்க தீவிரமாக முயற்சி எடுக்காததால் கட்டுமான



பணி நிறுத்தப்பட்டுவிட்டது. பாதியிலேயே நின்றுபோன சிதிலமடைந்த நிலையிலிருந்த அக்கட்டிடத்தை விரைவில் கட்டிமுடித்து அப்பள்ளிக்குப் பயன்படுத்தும் நோக்குடன், 1980–81 ம் ஆண்டில் கட்டிடப் பொருள் விலைப்பட்டியல்படி ரூ. 98,000 செலவினத்திற்கு அரசாணை நிலை எண் 1456 க.அ.தொ. நாள்: 8–7–82 மற்றும் அரசு கடித எண் 70657/எல்2/ 82–1 க.அ. தொ, நாள்: 27-1–83–ல் ஒப்புதல் அளித்து இப்பணி நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறையிடம் ஒப்படைக்கப்பட்டது.

கட்டிடத்திற்குத் தேவையான பொருள்களின் விலை மற்றும் கட்டிடத் தொழிலாளர்களின் கூலிச் செலவு ஆகியவை அதிகமாகிவிட்டதால் ஒப்பளிக்கப்பட்ட ரூ. 98,000–ல் தற்போது கட்டிடம் கட்ட இயலவில்லை. எனவே 1983–84 ம் ஆண்டின் விலைவாசி விகிதப் பட்டியலின்படி (கட்டிடத்தை அடித்தளம் முதற்கொண்டு புதுப்பணியாகத் தொடங்கும் பொருட்டு) ரூ. 1.80 இலட்சத்திற்கான மதிப்பீடு ஒன்று நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணித் துறையில் தயாரிக்கப்பட்டு நிர்வாக ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. இந்த மதிப்பீடு மீது நடவடிக்கை எடுத்து கட்டிடப் பணியை மீண்டும் துவக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(முற்பகல் 10-10)

திரு. ரா. பெரியசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே என்னுடைய தொட்டியம் தொகுதியில் உள்ள மேட்டுப்பாளையத்திலே 1962–63–ல் கட்டிடம் கட்டும் பணி ஒப்படைக்கப்பட்டது. இதை அமைச்சரே சொல்கிறார். அப்பொழுது எந்த அரசாங்கம் இருந்தது? காங்கிரஸ் அரசாங்கம் இருந்தது. அது எஸ்டிமேட் போட்டு எடுத்துக்கொள்ள தீர்மானித்து பணி ஒப்படைக்கப்பட்டது. அதற்குப் பின்னால் திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் வந்தது. அவர்கள் பேஸ் மட்டம் வரைக்கும் போட்டார்கள், 6 வருஷங்கள் ஆயிற்று. அதற்குப் பிறகு அப்படியே நின்றுவிட்டது அந்த அரசாங்கம் எஸ்டிமேட் போட்டது. பேஸ்மென்ட் வைத்து ஆறு அடி சுவர்களைக் கட்டினார்கள். அது அப்படியே நின்றுவிட்டது. காங்கிரஸ் அரசாங்கம், தி.மு.க. அரசாங்கம் போய் இப்போது அண்ணா தி.மு.க. அரசு வந்திருக்கிறது. 1981–82–ல் இதே பொருள் குறித்து ஒரு கவனஈர்ப்புத் தீர்மானம் கொடுத்தேன். இதுநாள் வரையில் கட்டிடம் கட்டவில்லை. உலகப் பிரசித்திப் பெற்ற தாஜ்மகால் கட்டிடத்தையே 24 வருடங்களில் கட்டி முடித்து இருக்கிறார்கள். இந்தக் கட்டிடம் தாஜ்மகால் கட்டிடமா? இதைக் கட்டுவதற்கு இத்தனை ஆண்டுகள் ஆகுமா? இது நியாயம்தானா? பலதடவை சொல்லி, எஸ்டிமேட் என்றும் போடுகிறார்கள். கட்டிடம் கட்டுவதற்கு பி.டபிள்யூ.டி.–யிடம் கொடுத்திருக்கிறேன். ஹைவேஸ் டிபார்ட்மெண்டில் கொடுத்து இருக்கிறேன் என்று சொல்கிறார்கள். அந்தப் பள்ளிக்கூடத்தின் நிலைமை என்னவென்றால் நான்கு பக்கமும் 5 அடி சுவர் [illegible] இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வியாகக் கேட்க வேண்டும்.

திரு. ரா. பெரியசாமி: அண்ணா தி.மு.க. அரசு பல கட்டிடங்களைக் கட்டி இருக்கிறார்கள். இந்தக்கட்டிடத்தைஉடனடியாகக் கட்டி முடிப்பதற்கு இந்த ஆண்டிலே அமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பல இடங்களில் எத்தனையோ கட்டிடங்களைக் கட்டிக்கொண்டுதான் வருகிறோம். மேட்டுப்பாளையத்திலே மட்டும் தாமதம் ஏன் ஏற்படுகிறது என்பது தெரியவில்லை. அது பாதியில் நின்றுவிட்டதால் தான் இவ்வளவு கோளாறும் வந்திருக்கிறது. 1962—63-ல் அதற்கு ஒப்புதல் பெற்று ஆரம்பித்தவர்கள் ஒரு ஆண்டிலே முடித்து இருப்பார்களானால் இது 20 ஆண்டு பிரச்னையாக மாறி இருக்க நியாயம் இல்லை. அப்போது ஏற்பட்ட தவறு வளர்ந்துவிட்ட காரணத்தால் நிவர்த்தி செய்வதற்கு மேலும் காலதாமதம் ஆகிக்கொண்டிருக்கிறது. இப்போது நாம் முயற்சி மேற்கொண்டிருக்கிறோம். பணம் அதிகமாக வருகிற காரணத்தாலே மதிப்பீடு ஒழுங்காக தயாரித்து நாம் ஒப்புதல் பெற்று செய்யவேண்டியவர்களாக இருக்கிறோம். இல்லையென்றால் அது முக்கால்வாசி கட்டிடத்திலே மறுபடியும் நிற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடும். ஆகவே ஒப்புதல் கிடைத்தவுடன் உடனடியாக அந்தக் கட்டிடப் பணிகளை முடிப்பதற்கு வேண்டிய முயற்சிகளை மேற்கொள்வோம்.

திரு. ரா. பெரியசாமி: துணைத் தலைவர் அவர்களே, அங்கே நான்கு பக்கம் சுவர் கட்டப்பட்டு ஒரு பக்கம் இப்போது இடிந்து விட்டது. பள்ளிக்கூட பிள்ளைகள் அந்த மறைவிலேதான் சிறுநீர் கழிக்கிறார்கள். அது எப்போது இடியுமோ தெரியாது. ஆகவே அமைச்சர் அவர்கள் நான்கு பக்கங்களிலும் இடித்துவிட்டு புதியதாக பேஸ்மென்ட் கட்ட வேண்டும். அதில் தனிக் கவனம் செலுத்தி இந்த நிதியாண்டில் அந்தக் கட்டிடத்தைக் கட்டி முடிக்க ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணைத் தலைவர் அவர்களே, இங்கே எனக்குத் தரப்பட்டிருக்கிற விவரத்தின்படி அந்தக் கட்டிடத்தைப் பொறுத்த வரையில் மதிப்பீடு தயாரிக்கப் பட்டு, ஒப்புதல் பெற்று கட்டி முடிக்கப்படும் என்று சொல்கிறேன். வேறு ஏதாவது நான்கு சுவர் கட்டி ஒரு பக்கம் இடித்து அங்கே மாணவர்கள் வேறு ஏதாவது செய்கிறார்கள் என்றால் அந்த விவரம் என்னிடத்தில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



## (ஆ) வேதாரண்யம் வட்டத்திலுள்ள சில ஆறுகளின் மதகுகளைப் பழுதுபார்த்தல்.

திரு. எம். எஸ். மாணிக்கம்: துணைத் தலைவர் அவர்களே, "வேதாரண்யம் வட்டம் மானங்கொண்டான், முள்ளியாறு, அடப்பாறு ஆகிய ஆறுகளில் கடல் நீர் புகுவதைத்தடுக்கஅங்குள்ள மதகுகளைப் பழுதுபார்த்து மண் அணைகள் கட்டப்பட வேண்டியது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை

காவிரி டெல்டாவின் வெண்ணாறு உபபடுகையில் மானங்கொண்டான், முள்ளியாறு, அடப்பாறு ஆகிய மூன்று ஆறுகள் உள்ளன. இவற்றில் வடிகால் வாய்க்கால் ஆக (Drainage Carrier) மானங்கொண்டானாறும். பாசன வாய்க்கால்களாகவும் வடிகால்களாகவும் முள்ளியாறு மற்றும் அடப்பாறு ஆறுகளும் செயல்படுகின்றன. இந்த ஆறுகளில் கடைமடைப்பகுதியில் ரெகுலேட்டர்கள் கீழ்க்கண்டவாறு அமைக்கப்பட்டுள்ளன. அவற்றின் விவரம் பின்வருமாறு:—

| ஆற்றின் பெயர் | கடைமடை ரெகுலேட்டர் கட்டப்பட்டுள்ள இடம். |
|---|---|
| 1. மானங்கொண்டான் | மைல் 12/0 |
| 2. முள்ளியாறு | மைல் 101/3—150 |
| 3. அடப்பாறு | மைல் 97/0 |

(2) அவ்வப்போது மராமத்துப்பணிகள் மேலேகண்டுள்ளகடைமடைப்பகுதியிலுள்ள ரெகுலேட்டர்களுக்கு செய்யப்படுவதுடன், தகுந்த முறையில் பராமரிக்கப்பட்டும் வருகின்றன. நிதிநிலையின் இருப்பைப்பயன்படுத்தி, அவ்வப்போது ஆற்றின் கரைகளும் பலப்படுத்தப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகின்றன. பாசன வசதி அளிக்கவும், சாதாரண வெள்ளத்தினை தாங்கும் வகையிலும் இந்த ஆற்றின் கரைகள் இருக்க வேண்டிய தரத்தில் உள்ளன.

(3) ஆனால் 1983 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் கடலில் குறைந்த காற்றழுத்த மண்டலம் ஏற்பட்டு அருகிலுள்ள கரையைக் கடக்கும்போது ஏற்பட்ட மிக பலத்த காற்றுடன்கூடிய மழையாலும் உயரமான அலைகளாலும் ஆற்றின் கரைகளும், ரெகுலேட்டர்களும் பலத்த சேதத்துக்கு உள்ளாகி, கடல்நீர் நிலங்களுக்குள் உட்புகுந்தது.

(4) உடைப்பு ஏற்பட்டு, அரிக்கப்பட்ட கரைகளைப் பலப்படுத்துவதற்கும், சேதமடைந்த ஷட்டர்களை பழுது பார்க்கவும் தக்க நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்படுள்ளன. இவை யாவும் நடப்பு நீர் அடைப்புக் காலத்திலேயே முடிக்கப்பட்டு, கடைமடை ரெகுலேட்டர் மற்றும் ஆற்றின் கரைகள் பழைய சரியான நிலைக்கு கொண்டு வரப்படும். தஞ்சாவூரை தலைமையிடமாகக் கொண்டு வெள்ள நிவாரணப் பணிகளுக்கு என்று தனியாக நியமிக்கப்பட்டுள்ள தலைமைப் பொறியாளர் (வெள்ளம்) அவர்களின் ஆலோசனையின்படி வெண்ணாறு கோட்டத்தாலும் சிறப்பு வெள்ளக் கோட்டத்தாலும், இப்பணிகள் நிறைவேற்றப் பட்டு வருகின்றன.

திரு எம். எஸ். மாணிக்கம்: துணைத்தலைவர் அவர்களே, இந்த மூன்று ஆறுகளும் வெள்ளக்காலங்களில் அதிகமாக நீர் செல்கிற ஆறுகளாகும். அதிலே மானங்கொண்டான் ஆற்றிலே இருக்கிற மதகு 2, 3 ஆண்டுகளாக பழுதுப்பட்டிருக்கிறதால மேலே தூக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. கடந்த வெள்ளத்தின்போது தண்ணீர் அதிகமாக வந்ததால் பொதுமக்கள் கரையை உடைத்து தண்ணீர் மதகின் வழியாகச் செல்லாமல் கிராமத்தின் உள்ளே செல்கிற நிலைமை ஏற்பட்டது.

அதைப்போலவே, முள்ளியாற்றில் 101-வது மைலில் உள்ள ரெகுலேட்டருக்கு மேலே 6 கிலோ மீட்டர் அந்த ஆறு வழியாகச் சென்றால் அங்கே கடல் தண்ணீர் வந்து கலந்து விடுகிற சூழ்நிலை இருக்கிறது. இந்த இடத்தில்தான் கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்னாள் ஒரு மண் அணையைக் கட்டி வந்தார்கள். ஆனால் அப்போது இருந்த நிர்வாகப் பொறியாளருக்கும், ஒப்பந்தக்காரருக்கும் இடையே ஏற்பட்ட ஒரு பிரச்னை காரணமாக அந்த அணை கட்ட வேண்டியதில்லை என்று முடிவு எடுத்து, அதன் காரணமாக அந்த விவசாயிகள் பாதிக்கப்பட்டு, ஆரம்பிக்கப்பட்டஅந்தப் பணி பாதியிலேயே நிற்கும் நிலைமையில் இந்த ஆண்டு அதிகமான வெள்ளம் வந்து உடைப்பு ஏற்பட்ட காரணத்தால், இன்றைக்கேகூட அங்கே கடல் தண்ணீர் புகுந்து இருக்கக்கூடும், அல்லது இன்னும் இரண்டு மூன்று நாட்களில் அந்த நிலைமை ஏற்படக்கூடும் என்ற ஒரு நிலைமை இருப்பதால், அந்தப் பகுதியில் உள்ள கிட்டத்தட்ட 6000–7000 ஏக்கர் நிலங்களில் அந்தத் தண்ணீர் புகுந்து விடும் அபாயம் இருப்பதால், அந்தப் பகுதியில் உடனடியாக ஒரு மண் அணைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்பதற்கான வகையில் அமைச்சர் அவர்கள் முயற்சிகளை மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: துணைத் தலைவர் அவர்களே, முள்ளியாற்றில் அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்குமானால் குறிப்பாக, இதற்கு முன்பாக பொதுப்பணித்துறையினால அங்கே ஒரு மண் அணை கட்டும் பணி துவக்கப்பட்டு அங்கேயிருந்த நிர்வாகப் பொறியாளருக்கும், ஒப்பந்தக்காரருக்கும் ஏற்பட்ட பிரச்னையின் காரணமாக அந்தப் பணி மேற்கொள்ளப்படாமல் நின்றிருக்குமானால், நிச்சயமாக, அந்தப் பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட ந்த அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



திரு. எம். எஸ். மாணிக்கம்: துணைத் தலைவர் அவர்களே, அதைப்போலவே, அடைப்பாற்றிலே இருக்கும் மதகு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே பழுது பார்க்கப்பட்டது என்ற காரணத்தால், இப்போது பழுது பார்க்கப்படவில்லை. கடந்த ஆண்டு வெள்ளம் வந்ததால், உடைப்பு ஏற்பட்டு, கடல் தண்ணீர் புகுந்து அந்தச் சாகுபடி நிலங்களில் பாய்ந்து விட்டது. அதிலேயும் ஒரு நன்மை ஏற்பட்டது. அந்த மக்கள் இறால் மீன்களைப் பிடித்துச் சாப்பிடும் நன்மை ஏற்பட்டது. ஆகவே, அந்த மதகை ரிப்பேர் செய்வதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: துணைத் தலைவர் அவர்களே, அடைப்பாற்றிலே உள்ள உடைப்பைப் பற்றி சொன்னார்கள். கடந்த ஆண்டு எதிர்பாராத அளவிற்கு பெருமழையால் பெருவெள்ளம் ஏற்பட்டு, பல்வேறு இடங்களில் உடைப்புகள் ஏற்பட்டு விட்டன. அந்த உடைப்புகளை எல்லாம் பழுது பார்ப்பதற்கு உரிய நடவடிக்கைகளை ஏற்கனவே அரசு மேற்கொண்டு இருக்கிறது. இன்னும் இருக்கக்கூடிய உடைப்புகளையும், வேறு பணிகளையும், சேதம் அடைந்த ஷட்டர்களையும் பழுது பார்க்கும் பணிகள் தொடர்ந்து எடுத்துக்கொள்ளப்படும்.

## 4. அறிக்கை அளித்தல்.

### சட்டவிதிகள் ஆய்வுக்குழு.

THIRU S. MUTHUKRISHNAN: Mr. Deputy Speaker Sir, on behalf of the Chairman of the Delegated Legislation Committee, I present the Fifth Report (Seventh Assembly) of the above Committee, to this House.

## 5. அரசினர் சட்ட முன்வடிவுகள்

### நகர்ப்புற நில (உச்சவரம்பு முறைப்படுத்துதல்) திருத்த செல்திறன் சட்ட முன்வடிவு, 1984.

மாண்புமிகு திரு. எஸ் டி. சோமசுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு முறைப்படுத்துதல்) திருத்த செல்திறன் சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

(முற்பகல் 10-20)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பற்றிருக்கிறது

6. வரவு-செலவுத் திட்டம் 1984-85 வாக்கெடுப்பு—(தொடர்ச்சி).

(அ) கோரிக்கை எண் 5 முத்திரைத் தாள்கள்—நிர்வாகம்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

“மானியக் கோரிக்கை எண் 5-முத்திரைத் தாள்கள்-நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 98,81,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.”

THIRU N. S. V. CHITHAN: Sir, to discuss policy, I move “that the allotment of Rs. 98, 81,000/ under Demand No. 5—Stamps—Administration be reduced by Rs. 100”

திரு. பெ. சு. திருவேங்கடம்: துணைத் தலைவரவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“மானியக் கோரிக்கை எண் 5-முத்திரைத்தாள்கள்-நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.98,81,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.”

(ஆ) கோரிக்கை எண் 6—பத்திரப் பதிவு.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

“மானியக் கோரிக்கை எண் 6-பத்திரப் பதிவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 5,31,40,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.”:

THIRU N. S. V. CHITHAN: Sir, to discuss the need to supply zerox copies of documents by the Registration offices and also to instal zerox copying machines in Registration Offices situated at all major cities and towns, I move “that the allotment of Rs. 5,31,40,000/ under Demand No. 6 Registration be reduced by Rs. 100/-”



திரு. பெ. சு. திருவேங்கடம்: துணைத் தலைவரவர்களே, வடாற்காடு கலசபாக்கம் தொகுதியில் உள்ள கடலாடி, மங்கலம் ஆகிய சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு நிரந்தர கட்டிடம் கட்ட கோரி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“மானியக் கோரிக்கை எண் 6—பத்திரப் பதிவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,31,40,000—ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.”

(இ) கோரிக்கை எண் 10—பால் வழங்கு திட்டங்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

“மானியக் கோரிக்கை எண் 10—பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,28,10,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.”

THIRU N. S. V. CHITHAN: Sir, to discuss the need to organise the sale of milk of lesser quantity to consumers in mobile vehicles, like tempos and cycle rickshaws and organise street vending of milk,—I move

“that the allotment of Rs. 1,28,10,000/- under Demand No. 10 Milk Supply Schemes be reduced by Rs. 100/.”

திரு. ஜெ. சொக்கலிங்கம்: துணைத் தலைவரவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தில் குறிப்பாக திருப்போரூர் தொகுதியில் உள்ள கூட்டுறவுப் பால் வழங்கும் சங்கங்களுக்குக் கூடுதலாக மானியத் தொகை வழங்குவது குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“மானியக் கோரிக்கை எண் 10—பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 1,28,10,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்.”

திரு. என். பழனிவேல்: துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள எல்லா குடும்ப கார்டுகளுக்கும் பால் வழங்க வேண்டிய முறையில் பால் உற்பத்தியைப் பெருக்க வேண்டியது குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“மானியக் கோரிக்கை எண் 10—பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,28,10,000—ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த மூன்று மானியக் கோரிக்கைகளையும் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் **மன்றத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை நான் பேரியதாக ஏற்றுக்கொண்டு, அவைக் குறிப்பில் ஏற்றிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைக் கூறிய பிறகு, அதற்கேற்ப இறுதியில் என்னுடைய பதிலை நான் தெரிவிக்கிறேன்.

இப்போது ஒரு திருத்தத்தை மட்டும் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த பத்திரப் பதிவுத் துறை மானியக் கோரிக்கை சம்பந்தப்பட்ட குறிப்பில் ''சீட்டு நிதியில் சேருபவர்களின் நலனைப் பாதுகாக்கும் பொருட்டு சட்டப்படியான விதித் துறைகளுடன் கூடிய 1982 ஆம் ஆண்டு மத்தியச் சீட்டு நிதிகள் சட்டத்தை மத்திய அரசு விரைவில் செயலுக்குக் கொண்டுவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது'' என்று இருக்கிறது. இந்தச் சட்டம் தமிழ் புத்தாண்டு முதல், அதாவது 1984 ஆம் ஆண்டு ஏப்ரல் 13-லிருந்து செயலுக்கு வந்ததாக குறிப்பிலே ஏற்றிக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். வி. என். சோமு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''உழவன் உள்ளத்திலே புயல் இருக்குமானால் வயல் வளம் காண முடியாது', என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறினார்கள். இன்றைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பால்வளத் துறையில் செய்திருக்கிற சில சாதனைகளை கொள்கைக் குறிப்பிலே குறிப்பிட்டிருக்கிறார்கள், பாராட்டுகிறோம்.

ஏறத்தாழ 1,500 தொழிலாளர்கள்—பால்வள நிறுவனத்தில் பணியாற்றியவர்கள்—வேலை இல்லாமல் 3, 4 ஆண்டுகளாக அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதுபற்றி இந்த மாமன்றத்திலே நானும் எங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்களும் பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். இங்கே இருக்கிற பல்வேறு கட்சித் தலைவர்கள் 1,500 தொழிலாளர்கள் வேலையில்லாமல் அவதிப்படுவதை எடுத்துச் சொல்லியும் அரசாங்கம் அதை நிறைவேற்றவில்லை.

இன்னும் சொல்லப்போனால் அந்தத் தொழிலாளர்கள் எல்லாம் நீதிமன்றத்திற்குச் சென்று, உயர்நீதிமன்றத்திலே நீதிபதி வெங்கடசாமி அவர்கள், அவர்களுடைய பிரச்சனையைத் தொழில் கோர்ட்டுக்கு விடவேண்டும் என்று சொன்ன பிறகும் இந்த அரசு அதற்கு மேல்முறையீடு என்ற முறையில் அப்பீல் செய்கிறது என்றால் இது தொழிலாளர் அரசு என்று சொல்வதில் என்ன பொருள் இருக்க முடியும்? அந்தத் தொழிலாளர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று, நீதிமன்றத்திலே போராடி, வாதாடி, ஒரு சாதகமான முடிவைப் பெற்றிருக்கிறார்கள். தொழிலாளர் அரசு என்று சொல்லுகின்ற இந்த

**455—486 ஆம் பக்கங்களில் இணைப்பு I, II, III ஆக அச்சிடப் பெற்றுள்ளன



அரசு அந்த 1,500 தொழிலாளர்களுக்கும் சாதகமான ஒரு தீர்ப்பை நீதிமன்றம் வழங்கிய பின்னாலும் அதை ஏற்றுக் கொள்ளாமல் அந்தத் தொழிலாளர்களுக்கு எதிராக அப்பீல் செய்கிறது, தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்கிறது என்றால் இது நியாயம்தானா என்று கேட்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அந்தப் பிரச்சினை நீதிமன்றத் தீர்ப்பிலே இருக்கின்ற காரணத்தினால், அதிலே நான் அதிகமாக உள்ளே நுழைய விரும்பவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இப்பொழுதாவது அவர்கள் மீது கருணை வைத்து அந்த 1,500 தொழிலாளர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் வேண்டிவிரும்பிக் கேட்டுக் கொள்ள விழைகிறேன்.

அதேபோல் வளத் துறையிலே வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி சரியான முறையில் இல்லை. எப்போதோ கட்டப்பட்ட 200 வீடுகளை வைத்துக்கொண்டே அந்தத் தொழிலாளர்கள் வசித்துக் கொண்டு வருகிறார்கள். அம்பத்தூரில் இறந்ததாகச் சொல்கிறார்கள்; அயனாவரத்தில் இறந்ததாகச் சொல்கிறார்கள். தினசரி பத்திரிகைகளைப் பார்த்தால், எங்கெங்கோ புதியதாக பால் கிடங்குகள் திறக்கப் படுகின்றன, என்ற செய்திகள் வருகின்றன; ஆனால், அந்தத் தொழிலாளர்களின் வீட்டுவசதியையோ, மற்ற பிரச்சினைகளையோ சரியாக கவனிக்கவில்லை என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல் பால் விநியோகத்திலே இன்னும் சரியான முறையில் நடைபெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். சென்னை நகரத்திலே எந்தப் பகுதியிலும் குறித்த காலத்திலே, பால் வழங்கும் திட்டத்தை அமல்படுத்தி, பால் கிடைக்கும் நிலைமை இல்லை என்பதை குறிப்பிட விரும்புகிறேன். அங்கே ஏறத்தாழ ஓடுகின்ற லாரிகள் எல்லாம் பழுதடைந்து, கண்டம் செய்யப்படவேண்டிய லாரிகளாக இருக்கின்றன. ஒவ்வொரு லாரிக்கும் தினசரி ரூ. 250 வாடகை கொடுக்கிறார்கள். ரூ. 250-ஐ கொட்டி அழுதுவிட்டு, சரியான லாரிகள் இல்லாமல், பிரேக் டவுன் என்று பாதி வழியில் நின்று விடுகின்றன. காலி பாத்திரங்களை எல்லாம் எடுத்துச் செல்வதற்கு வந்த லாரிகள் எல்லாம் ஓடினால் நிற்காது, நின்றால் ஓடாது என்று சொல்லக்கூடிய அளவிற்கு தேர்தல் காலத்துக் கார்களைப் போல் இருக்கின்றன. ஆயிரக்கணக்கான ரூபாய்களை நாம் தினசரிக் கொட்டிக் கொடுத்து, சரியாக குறித்த காலத்தில், காலையில் இத்தனை மணிக்கு பால் வழங்கப்படுகிறது என்று சொல்வதற்கு முடியாத நிலை இன்றைக்கு இருப்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மாதவரம் பால் பண்ணையில் அந்த பாலித்தின்பைகளில் பால் நிரப்பப்படும்போது, அங்கே சரியான தொழில் நுணுக்கம் வாய்ந்த ஆட்கள் இல்லாத காரணத்தினால்,பால் கீழே சிந்தி, தினசரி 5,000 லிட்டர் பால் வீணாகப் போய் கொண்டிருக்கிறது. அங்கே தொழில் நுணுக்கம் தெரிந்த ஆட்கள் நிரப்பப்பட்டிருந்தால், இந்த விரயம்—பா சிந்துவது நிறுத்தப்பட்டிருக்கும். போதுமான சம்பளம், போதுமான அலவன்ஸ் அவர்களுக்குத் தராமல், கேஷுவல் லேபர் என்று சொல்லக்கூடிய தற்காலிகத் தொழிலாளர்களை அங்கே வைத்துக் கொண்டு நிரப்புவதால்—ஏற்கனவே நன்றாக வேலை செய்தவர்கள் எல்லாம் இன்றைக்கு வீதிக்கு வந்த காரணத்தினால்— தினசரி 5,000 லிட்டர் பால் வீணாகப்போகிறது. இதை மாண்புமிகு அமைச்சரவர்கள் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி வீணாகின்ற பாலை பொதுமக்களுக்குக் கிடைக்கச் செய்யவேண்டும். என்பதை அமைச்சர் அவர்கள்ன் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்று விரும்புகிறேன்.

பத்திரத் துறையைப் பொறுத்தவரையில், சொத்துக்களை பதிவு செய்கின்ற பதிவாளர்களுக்கு வழங்கப்படுகின்ற கெய்டுலைன்ஸ் சரியாக இல்லை. அண்ணா சாலையில் பிரதான வீதியில் இருக்கிற ஒரு சொத்து ரூ. 10 இலட்சம் போகிறது என்றால், அதற்குப் பக்கத்தில் இருக்கிற வீதியிலுள்ள சொத்து அவ்வளவு மதிப்பிற்குப் போகாது. அண்ணா நகரில் ரூ. 1 இலட்சம் போகிறது என்றால், திருமங்கலத்தில் சொத்து அவ்வளவு மதிப்பிற்குப் போகாது. ஏரியா, ஏரியாவாக, பகுதி, பகுதியாக பார்க்கின்ற காரணத்தால், பணக்காரர்கள் எவ்வளவு கொடுக்கிறார்களோ, அதே தொகையை ஏழைகளும் கட்டவேண்டிய ஒரு கஷ்டம் இருக்கிறது. இதை அமைச்சரவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-30)

அதேபோல் சொத்தின் மதிப்பை பதிவு செய்கின்ற நேரத்தில் வருமான வரி விலக்கு சான்றிதழ் வாங்க வேண்டுமென்று குறைந்த பட்சம் ரூ. 50000-க்குக் குறைவாக இருந்தால் தான் அந்தச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. இன்றைய தினம் 13 சதவீதம் ப்ளஸ் 1 சதவீதம் என்று 14 சதவீதமாக உயர்த்தியிருக்கிறது.சொத்து மதிப்பு ஏராளமாக ஏறியிருக்கிறது.வருமான வரி அதிகாரிகள் வருமான வரி வரம்பை அதிகமாக உயர்த்தி இருக்கின்ற நேரத்தில், ரூ. 50,000 உச்சவரம்பு, பல ஆண்டுகளுக்கு முன்பு வைக்கப்பட்ட உச்சவரம்பு. அதைக் குறைந்தபட்சம் 1 லட்சமாக உயர்த்தினால்தான் இன்றைக்கு சாதாரணமாக கோட்டூர்புரமாக இருந்தாலும், அம்பத்தூராக இருந்தாலும், ஆவடியாக இருந்தாலும் அல்லது இந்த பக்கம் உள்ள மாதவரமாக இருந்தாலும் அல்லது திருவான்மியூராக இருந்தாலும், எல்லாப் பகுதியிலும் குறைந்த பட்சம் 50 ஆயிரம் ரூபாய்க்கு குறைந்து விட்டு மனைகளே இல்லை



என்று சொல்லக் கூடிய சூழ்நிலையில், வீட்டுமனைகளின் மதிப்பீடுகள் எல்லாம் ஏறிவிட்ட நிலையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த50 ஆயிரம் ரூபாய் என்று இருக்கக்கூடிய உச்ச வரம்பை, வருமான வரிச் சான்றிதழ் , பெறுவதற்கான உச்ச வரம்பை, 1 லட்சமாக உயர்த்துவதற்கு மத்திய அரசாங்கத்திற்கு பரிந்துரை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கனவே ஈ.எஸ்.ஐ. ஆயிரம் ரூபாயாக இருப்பதை அதிகமாக்க வேண்டும். அதேபோல் கிராஜுவிட்டி, ஆயிரம் ரூபாய் உச்ச வரம்பு என்று இருப்பதை அதிகமாக்கவேண்டும் என்று அந்தந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் மத்திய அரசாங்கத்திடம் வற்புறுத்திவருவதைப் போல, நம்முடைய அமைச்சர் அவர்கள் இந்தத் தொகையையும் 50 ஆயிரம் என்ற உச்சவரம்பை உயர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான பிரச்சனை, அமைச்சர் அவர்களுடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. சீட்டுக் கம்பெனிகள் மோசடிகள் செய்வதைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அன்றாடம் இதைப்பற்றி நாம் பத்திரிகையிலே பார்த்து வருகிறோம். 1 மாத காலத்திற்கு முன்னாலே கூட பல சீட்டுக் கம்பெனிகளில் மோசடிகள் நடந்திருப்பதைப் பற்றி எல்லாம் நாம் பத்திரிக்கையிலே படித்தோம். ஆனால் ஏழை மக்கள், ஏதோ தாங்கள் சேமிக்கின்ற காசை அந்தச் சீட்டுக் கம்பெனிகளிலே போட்டு, அதன் மூலம் ஏதாவது ஆதாயம் பெறலாம் என்றும், சில பேர்கள் அந்தச் சீட்டுக் கம்பெனிகளிலே கடன் வாங்கி மாதா மாதம் அவைகளைச் செலுத்தக்கூடிய நிலைமைகள் எல்லாம் இருக்கின்றன. இப்படி இருக்கக்கூடிய நிலைமையில் பல சீட்டுக் கம்பெனிகள் மோசம் செய்கின்றன. இதற்கு சரியான சட்ட நடவடிக்கை இல்லை. அரசுக் கொள்கை விளக்கக் குறிப்பைப் பார்த்தால், 1982-83 ஆம் ஆண்டில் 335 சீட்டுக் கம்பெனிகள் முறையாக இயங்கவில்லை என்று கண்டுபிடிக்கப்பட்டன என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் நடவடிக்கை எடுக்கப்பட்ட கம்பெனிகள் எத்தனை? வெறும் 17,335 கம்பெனிகள் முறையாக இயங்கவில்லை என்று சொல்லிவிட்டு, வெறும் 71 கம்பெனிகள் மீது மட்டும் நடவடிக்கை என்றால், மீதியுள்ள கம்பெனிகள் மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள் என்பது தெரியவில்லை 1982-ஆம் ஆண்டு நடைபெற்று, இப்போது 2 ஆண்டுக்காலம் முடிந்திருக்கிறது. ஏறக்குறைய 200-க்கும் மேற்பட்ட கம்பெனிகள் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. முறையாக இயங்காத கம்பெனிகளை தண்டிக்கவில்லையென்றால், ஏமாற்றுகிறவர்களை எப்படிச் சட்டம் தண்டிக்கும். ஏமாற்றுகிறவர்கள் ஏமாற்றிக்கொண்டேதான் இருப்பார்கள். இந்த இலாகாவை வைத்து இருக்கக்கூடிய நம்முடைய அமைச்சர் அவர்கள், இதிலே துரிதகால நடவடிக்கை எடுத்து, ஏமாற்று

கிறவர்களை, They should be brought to book என்று சொல்வது போல். அவர்களைச் சட்டத்தின் கடுமையான பிடிக்குள் கொண்டு வந்தால்தான் பொதுமக்களுக்குப் பாதுகாப்பு இருக்கும் என்பதை நான் இங்கே தெரிவிக்க விழைகிறேன்.

அதே போல் இந்தசிட்டுக் கம்பெனிகளிலே வேறு வகையிலே நடந்த குற்றங்களின் எண்ணிக்கை, 1,908. ஆனால் தண்டிக்கப் பட்டவர்கள் எவ்வளவு பேர்கள் என்றால், வெறும் 96 பேர்கள். நீங்கள் கொடுத்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே இது இருக்கிறது. 1,908 தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கின்றன. ஆனால் தண்டிக்கப்பட்டவர்கள் வெறும் 96 பேர்கள் என்றால் மீதி இருக்கக்கூடிய 1800-க்கும் மேற்பட்டவர்கள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை. அவர்கள் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிவிட்டார்களா, அல்லது சட்டத்தின் சந்துபொந்துகளிலே ஒளிந்து கொண்டார்களா, அல்லது வழக்கு நீதி மன்றத்திலே தேங்கிக்கிடக்கின்றதா என்பன போன்ற விவரங்கள் எல்லாம் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே இல்லை. எனவே அமைச்சர் அவர்கள் இதற்கு எல்லாம் விளக்கம் அளிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் சொல்லப் போனால், அதிலே வசூலிக்கப்பட்ட அபராதத் தொகை எவ்வளவு என்றால், கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை 1,908. ஆனால் The total fine Collected was Rs, 4,805. வெறும் 4,805 ரூபாய்தான் மொத்தத்திலே அபராதமாக, இந்தச் சீட்டுக்கம்பெனிகளிலேயிருந்து பெறப் பட்டது என்றால், கோடிக்கணக்கான லட்சக்கணக்கான பணம் மோசடி செய்யப்பட்ட சூழ்நிலையில் வெறும் 4,805 ரூபாய்தான் அபராதத் தொகை என்றால், நீங்கள் இதை தயவுசெய்து உணர்ந்து பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் நாம் பேசுகிறோம். நம்முடைய அரசாங்கம் அண்ணா தி.மு.க. அரசாங்கம் தாழ்த்தப்பட்டவர்களுக்கு பதவி உயர்வு தருகிறது. அதிலும் தாய்க் குலத்திற்கு பதவி உயர்வு தருகிறது என்றெல்லாம் பேசுகிறார்கள். ஒரு மாவட்ட பதிவாளர் பதவி உயர்வில், 3 பேர்களுக்கு ஒரு காலத்திலே ஒரு உத்தரவு போடப்பட்டது. அந்த மூன்று பேரில் பிற்படுத்தப் பட்ட வகுப்பைச் சேர்ந்த துரைராஜ் என்பவருக்கு பதவி உயர்வு கொடுக்கப்படாமல் மறுக்கப்பட்டது. தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த ஒரு பெண். அனுசுயா, சார் பதிவாளராக கொடுக்கப்பட்ட பதவி உயர்வு பிடுங்கப்பட்டு இருக்கிறது. ஆனால் முற்பட்ட வகுப்பைச் சார்ந்த ராசகோபால் என்பவருக்கு பதவி உயர்வு கொடுக்கப்பட்டுள்ளது. 3 பேர்களுக்கு ஒரே நேரத்தில் பதவி உயர்வு தரப்பட்டுள்ளது. ராஜகோபால் முற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர், அனுசுயா தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த பெண். துரைராஜ் என்பவர் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர். இந்த இரண்டு பேர்களுக்கும் கொடுக் கப்பட்ட பதவி உயர்வு ரத்து செய்யப்பட்டு, ராஜகோபால்



என்பவருக்கு மட்டும் இப்போது பதவி உயர்வு தரப்பட்டு இருக்கிறது. தகுதியின் அடிப்படையிலே கொடுக்கப்பட்ட அந்த பதவி உயர்வுரத்து செய்யப்பட்டு இருப்பதற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன். ஒன்றைக் குறிப்பிட விரும்பு கிறேன். முன்னாள் பதிவுத்துறைத் தலைவராக இருந்த திரு. எம். ஏ. ஷெரீப் அவர்கள், அந்த ராஜகோபாலைப்பற்றி என்ன கருத்து தெரிவித்திருக்கிறார் என்றால், In fact, he is still the lowest in the Department அந்த ராஜகோபால் என்பவர் He is still the lowest in the Department என்ற வகையில் அந்தப் பதவிக்கே எந்தவிதமான அநுபவமும், எந்தவிதமான திறமையும் ஆற்றலும், பைல்களைப் பார்த்து பழக்கம் இல்லாத ஒரு ஆள் என்று சொல்லக்கூடிய அந்த ராஜகோபாலுக்கு பதவி உயர்வு அளிக்கப்பட்டிருக்கிறது. ஒன்றை மட்டும் இதில் தெரிவிக்க விரும்புகிறேன். அந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் கே. ஏ. கே. அவர்கள் வெளிநாட்டுக்கு சென்றிருந்தார். அப்போது அந்தப் பதவியை பொறுப்பு வகித்திருந்த வேறு ஒரு அமைச்சர் வெகு அவசர அவசரமாக, அந்தப்பதவி உயர்வு அளித்திருக்கிறார் என்று சொல்லுகிறார்கள்.

அப்படி பதவி உயர்வு பெற்ற அந்த ராஜகோபால் ஆந்திர மாநிலத்தினுடைய முதலமைச்சருடைய தனி செயலாளருக்கு [illegible] என்று சொல்கிறார்கள். அதைப்பற்றி [illegible] எல்லாம் நான் போக விரும்பவில்லை. அதேபோல [illegible] பதிவுத் துறையிலே நீதிமன்றங்களிலே இன்றைக்கு [illegible] மக்கள் பத்திரங்களை ஸ்டாம்புகளை வாங்கும்போது, [illegible] அளவுக்கு சிரமத்தோடு அவர்கள் கடும் வெய்யிலிலும், [illegible] காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை கவனிக்க வேண்டும். இதை சென்ற ஆண்டு பேசும்போது கூடச் சொன்னேன். தங்கசாலைக்குப் பக்கத்திலே ஆயிரக்கணக்கான ரூபாய்களை ஒரு சாதாரண ஆள் எடுத்துச் செல்லுகின்ற சூழ்நிலை இருக்கிறது. போலீஸ் பாதுகாப்பு இல்லாத மிக மோசமான சூழ்நிலையில் இருக்கக்கூடிய அந்த இடத்தில் பணத் திற்கு பாதுகாப்பு இல்லை. நீதிமன்றத்திலே சில நாட்களாக ஸ்டாம்புகளே கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது. ஆனால் அமைச்சர் அவர்கள் தங்களுடைய கொள்கைவிளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டிருக்கிறார், என்னவென்று?

இப்போது பணம் கட்டினால் கூட நீதிமன்றங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒருசூழ்நிலையை உருவாக்கியிருக்கிறோம் என்று சொல்கிறார். அந்த அடிப்படையில் இந்தத் துறையில் இருக்கக் கூடிய பத்திரப் பதிவாளர்களுடைய பதவி உயர்வும், அதேபோல முத்திரைத் தாளில் இருக்கக்கூடிய விற்பனையாளருடைய குறை களையும் தீர்க்க வேண்டும். தொடர்ந்து பல்லாண்டுகளாக, 4 ஆண்டுக்காலமாக, முத்திரைத்தாள்கள் விற்பவர்களின் குறை களை எடுத்துச் சொல்லியும், அந்தக் குறைகள் பல்லாண்டுக் காலமாக தீர்க்கப்படாத சூழ்நிலையில் இருக்கிறது என்பதை சொல்லி அமர்கிறேன், வணக்கம்.

திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நடந்து கொண்டிருக்கிற மானியக் கோரிக்கையின் மீது இங்கே கலந்து கொள்கிற வாய்ப்பினை நல்கியதற்காக தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மன்றத்திலே எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தக் கோரிக்கையை வரவேற்றுப் பாராட்டினார்கள். அவர்களுடைய உரையோடு என்னுடைய கருத்தினையும் இணைத்துப் பேசுவதிலே நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கேசில குறைகளை எடுத்துச் சொன்னார்கள். அந்தக் குறைகள், பணியாளர்களுக்கு பதவி உயர்வு கொடுக்கப்பட்டதைச் சொன்னார்கள். சில பணியாளர்களுக்கு பதவி உயர்வு குறைவாக இருப்பதையும் சொன்னார்கள். எல்லாக் காலத்திலும் எல்லாத் துறையிலும் உள்ள ஒரு சாதாரண குறைபாடுகள் தாம் இந்தக் குறைபாடுகள். இந்தக் குறைபாடுகள் காலம் முழுக்க எல்லா டிபார்ட்மெண்ட்டிலும் இருப்பது வழக்கமாகவும் வாடிக்கையாகவும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர்கள் பால்வளத் துறையிலே பாலிதீன் பேப்பரிலே கொடுக்கின்ற பாலில், ஒரு நாளைக்கு 5 ஆயிரம் லிட்டர் அளவுக்கு வீணாவதாகச் சொன்னார்கள். நான் கடந்த வாரத்திலே சென்று அந்தப் பால்பண்ணையை முழுவதுமாக ஒரு நாள் முழுக்க இருந்து பார்வையிட்டேன். அப்போது அங்கே அந்தப் பாலதீன் பையிலே பாலை நிரப்புகிற பணியை நல்ல முறையிலே சிறப்பாக செய்து வருகிறார்கள் என்பதைப் பார்த்தேன். அந்தப் பாலிதீன் பையிலே போடுகிறவகையில் 1 லட்சம் லிட்டர் பாலை அப்படி தயார் செய்கிறபோது நம்முடைய வீட்டிலேயே அரை லிட்டர், ஒரு லிட்டர் பாலை தயாரிக்கின்றபோது, ஆங்காங்கே கொஞ்சம் சிந்துவது வழக்கம். ஆகவே லட்சக் கணக்கில் பாலை தயாரிக்கின்றபோது 50 லிட்டர் 100 லிட்டர் விரயமாவது சாதாரணமான காரியம். ஆனால் அதை அவர், எதிர்க்கட்சி வரிசையில் இருப்பதனால் மிகைப்படுத்திச் சொல்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, இந்த பால்வள மானியத்திலே தொடர்ந்து பேசுவதிலே பெருமை கொள்கிறேன்.

நகரத்து மக்களை காலையிலே துயில் எழச் செய்வது ஆவின் பால். மாலையிலே அவர்கள் பணிகளை முடித்து படுத்து உறங்கச் செல்லும்போது பருகுவது ஆவின் பால். இப்படி அன்றாட வாழ்வில் விழியப்படையச் செய்வதும், உறங்கச் செய்வதும் ஆவின் பாலே. இவ்வாறு மனித வாழ்வின் ஆரம்பத்தில் தாய்ப்பாலோடு ஆவின் பாலும் கலந்து உடலுக்கும் உயிருக்கும் அற்புத உணவாக பயன்பட்டு, தாயோடு தாயாக இருந்து உணவு அளிப்பது ஆவின் பாலே. இப்படி குழந்தைப் பருவத்திலும் பால் குடிக்கிறோம், உடலைவிட்டு உயிர் பிரிகின்ற போதும் பால் கொடுக்கிறோம். உடல் அடக்கத்திற்கும் அதாவது சவ அடக்கத்தின் போதும் பாலை தெளிக்கிறோம். பிறப்பு முதல் இறப்பு வரை மக்களுக்கு உடலுக்கும் உயிருக்கும் தெம்பு சேர்க்கின்ற உணவாக, மருந்தாக இருக்கின்ற பல வகையில் பயன்படுகின்ற வகையில் பரிணமிக்கச் செய்கின்ற பாலை விட



வேறு சிறந்த உணவு இல்லை, என்பதனால் பாலை நல்ல முறையில் உற்பத்தி செய்து, நல்ல முறையில் பாதுகாத்து, நல்ல முறையில் மக்களுக்கு விநியோகம் செய்வதில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு சிறப்பாக செயல்பட்டு வருகிறது என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

(முற்பகல் 10–40)

சவ அடக்கத்தின்போது மட்டும் பாலைத் தெளிப்பதைச் சடங்காகத் தெரிந்திருந்த கிராம மக்கள் வாழ்விலே பாலின் பெருமையை அறியச்செய்து விவசாயத்திற்கு அடுத்தபடியாக உள்ள முக்கியமான தொழில், பால் தொழில் என்பதை அறியச் செய்து பால் உற்பத்தியாளர் சங்கங்களை அமைத்து இந்தியாவிலேயே சமுதாய நலத் திட்டங்களை நிறைவேற்றுவதில் எப்படி மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு முன்னோடியாக விளங்குகிறதோ அதைப்போலவே பால் வளத்திற்கென்று தனித் துறை நிறுவி, தனி அமைச்சரை நியமித்து பால் உற்பத்தியாளர்களுக்கும் பால் நுகர்வோர்களுக்கும் அவர்களுடைய நலன் கருதி செயல்பட்டு வருவது மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு ஆகும். வேளாண்மைத் துறையிலே பசுமைப் புரட்சி செய்து உணவு உற்பத்தியைப் பெருக்கியதுபோல் மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு பால் உற்பத்தியிலே வெண்மைப் புரட்சி செய்து இந்தியாவிலேயே இரண்டாவது இடத்தை தமிழகம் பெற்றிருக்கிறது என்பதைப் பெருமையோடு நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். பால்வளத் துறையினை நல்ல முறையில் நிர்வகித்து மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசுக்குப் புகழும் பெருமையும் சேர்க்கின்ற வகையிலே இந்தத் துறையினை நல்ல முறையிலே செவ்வனே நிர்வகித்து வருகிற பால்வளத் துறை அமைச்சர் அவர்களை நான் பெரிதும் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். பால் சேமிப்புக் குழு, நடமாடும் கால்நடை மருந்தகம், பால்பண்ணை நிலையங்கள் நிறுவுதல், குளிரூட்டும் நிலையங்கள் நிறுவுதல் போன்ற நல்ல திட்டங்களை அமைத்து நகர்ப்புற மக்களும் கிராமப்புற மக்களும் பயனுறும் வண்ணம் பாடுபடும் இந்த அரசு பாராட்டுக்குரியதாகும்.

மிகவும் பின்தங்கிய மாவட்டமான புதுக்கோட்டையில் நாளொன்றுக்கு 10 ஆயிரம் லிட்டர் பாலை கையாளும் திறனுடைய 18.26 லட்சம் ரூபாயிலே குளிரூட்டும் நிலையத்தை அமைப்பதற்குப் பாடுபட்ட இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அமைச்சரவையில் பொறுப்பேற்று இருக்கிற பால்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கு அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராமங்களில் அமைக்கப்படும் பால்பண்ணை உறுப்பினர்களுக்குத் தரமான மாடுகள் கிடைப்பதற்கும் பண்ணை மாடுகளுக்கு எளிய முறையில் தீவனங்கள் கிடைப்பதற்கும் வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். புதுக்கோட்டை மாவட்டம். மிகவும் வறட்சி நிறைந்த மாவட்டம். அந்த மாவட்டத்திலே உற்பத்தியாளர்கள் சங்கங்கள் அமைப்பதில் சில சிரமங்கள் இருப்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். புதுக்கோட்டை போன்ற வறட்சி நிறைந்த பகுதிகளில் விவசாயிகளிடத்திலே அதிகமான பசுமாடுகளோ எருமை மாடுகளோ கிடையாது. ஆனால் பால் உற்பத்தியாளர் சங்கங்கள் அமைக்கப்படுகிறபோது 3 மாதங்களுக்கு முன்பு, தினம் 100 லிட்டர் வீதம் பால் கொடுத்தால்தான் பதிவு செய்யமுடியும் அந்த சங்கத்தை என்றஒரு விதி இருப்பதாகத் தெரிகிறது. அந்த விதி இருப்பதால் அங்கே பால் உற்பத்தியாளர்கள் சங்கம் அமைப்பதற்கு மிக சிரமமாக இருக்கிறது. பால் நிறைய இருக்கிற இடங்களிலே அந்த விதி பொருத்தமாக இருக்கும். ஆனால் புதுக்கோட்டை போன்ற வறட்சி நிறைந்த பகுதிகளில் அது ஒத்துவராது என்பதால் தயவு செய்து அந்த விதியைத் தளர்த்தி உற்பத்தியாளர்கள் சங்கங்கள் அமைக்கப்பட்டு இயங்குவதற்கான வழிவகைகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பால்வளத் துறை மூலமாக வறட்சிக்கு இலக்காகும் பகுதிக்கு இத்திட்டத்தை விரிவுபடுத்துவதை பெரிதும் வரவேற்கிறேன். 1984-85 ஆம் ஆண்டிலே பால் கூட்டுறவு சங்கங்களில் இருக்கும் ஆதிதிராவிட உறுப்பினர்களுக்கு 30 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்திருப்பதையும் கிறித்துவ ஆதிதிராவிட மக்களுக்கு தனி நிதி ஒதுக்கீடு செய்திருப்பதையும் நான் வரவேற்கிறேன். ஒதுக்கப்பட்டுள்ள தொகை மிகவும் குறைவாக இருப்பதால் தாய் உள்ளம் கொண்டவர்கள் இந்த மன்றத்திலே டாக்டர் அம்பேத்கார் படத்தினை நிறுவியவர்கள், அம்பேத்கார் பெயரில் ஒரு மாவட்டமே எற்படுத்த உள்ள இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் பால்வளத் துறைக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து கறவை மாடுகள் அந்த மக்களுக்கு அளிக்கக்கூடிய முறையிலே வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு மானியக் கோரிக்கைகளை சிறப்பான முறையிலே தயாரித்த பால்வளத் துறை அமைச்சர் அவர்களைப் பாராட்டி பத்திரப்பதிவுத் துறையிலே மலைப் பகுதியிலே சப்ரிஜிஸ்திரார் அலுவலகத்திலே ரிஜிஸ்தர் செய்யப்படும் நிலங்களுக்கும் மற்றும் மலைவாழ் மக்கள் விவசாய நிலங்களுக்கும், 2,3 சென்ட் உள்ளதால் அந்த நிலத்திற்கு சதுர அடி மதிப்பீடு செய்வதை மாற்றியமைத்து பலனுள்ள வகையிலே பதிவு செய்யக்கூடிய முறையிலே செய்யவேண்டுமென்று கேட்டு மானியக்கோரிகையை வரவேற்று முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.

*திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்று பதிவுத்துறையைப் பொறுத்தவரைக்கும் பெரும்பாலான சார் பதிவாளர்கள் அலுவலகம் தனியார் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. 586 சார் பதிவாளர்கள்



அலுவலகங்களில் 266 அலுவலகங்கள் தனியார் கட்டிடங்களில் இயங்கி வருவதாக தெரிகிறது. இவைகளை படிப்படியாக அரசு கட்டிடங்களுக்கு கொண்டு வருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். ஒரு வருவாய் பிரிக்காவுக்கு ஒரு சார் பதிவாளர் அலுவலகம் தரவேண்டும் என்று அரசு அறிவித்து இருந்தும் இன்னும் 540 அலுவலகங்களுக்கு சாத்திய கூறுகள் இருந்தும் 4 புதிய சார் பதிவாளர்கள் அலுவலகம் மட்டும் திறப்பதற்கு அரசு ஒப்புதல் அளிக்கப்பட்டு இருப்பது வருந்தத்தக்கது. கடந்த ஆண்டு அறிவ்த்த போதே இந்த ஆண்டு புதிய அலுவலகங்கள் திறப்பதற்கு அரசு போதிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சொன்னோம்; கொள்கைக் குறிப்பைப் பார்த்தால் பெரிய பதிவு மாவட்டங்களை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு இருந்தும் ஒரு மாவட்டம் கூட இந்த ஆண்டு திறக்கப்படவில்லை. துறையின் வருமானம் நடப்பு ஆண்டில் 91 கோடி ரூபாய்க்கு உயர்ந்த நிலை இருந்தாலும் பதிவுத் துறை அலுவலகங்களில் பொது மச்கள் உட்காரக் கூட நாற்காலி வசதி செய்து தரவில்லை. அந்த அலுவலகங்களில் பணி ரிகின்ற பணியாளர்களுக்கு நாற்காலி, மேசை போன்ற வசதிகளை செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று பதிவுக்கு போதுமான தாள்கள் இன்றைக்கு வழங்கப்படவில்லை. பெரிய அலுவலகங்களை இரண்டாக பிரிக்கும்போது ஆவணங்கள் பதிவு இல்லாத இடங்களில் அலுவலகம் திறப்பதைத் தவிர்க்கவேண்டும். சார் பதிவாளர் அலுவலகங்களில் பார்வையாளர் புத்தகம் என்று அரசு அலுவலகங்களில் இல்லாத ஒன்று இந்த பதிவு அலுவலகங்களில் மட்டும் ஏன் பராமரிக்கப்படுகிறது. பணியாளர்கள் இல்லாத அலுவலகங்களில் கூடுதல் பணியாளர்களை நியமனம் செய்யவேண்டும். பதிவுத் துறையில் தற்காலிக பிரிவு எழுத்தர்கள் என்ற பதவியை ஒழிக்கப்பட்டது வரவேற்கக் கூடியது. ஆனால் அலுவலகங்களில் உள்ள வேலை அளவுகளை அனுசரித்து வேலைவாய்ப்புக்கு வழி வகைகளை செய்யும் பொருட்டு மீண்டும் பிரிவு எழுத்தர்களை நியமிக்க அரசு உத்திரவிட வேண்டும். தற்போது பிரிவு எழுத்தர்களில் இளநிலை 2 பதவி உயர்வு தகுதி பெற்ற அனைவருக்கும் அந்த பதவி உயர்வை அவர்களுக்கு அளிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேநேரத்தில் 103 தற்காலிக பிரிவு எழுத்தர்கள் இளநிலை 2 பதவி உயர்வு பெற குறைந்தபட்ச கல்வி தகுதி இல்லாததால் அவர்களுக்கு பொருத்தமான வகையில் விதிகளை தளர்த்தி ஒட்டுமொத்தமாக இளநிலை 2 பதவி உயர்வு அளிக்க வேண்டும் என்று அரசை கேட்டுக்கொள்கிறேன். 20 ஆண்டுகளுக்கு மேலாக தற்காலிக பிரிவு எழுத்தர் வேலையில் 100-க்கும் மேற்பட்டவர்கள் பணியாற்றுகிறார்கள் என்பதை அரசின் மேலான கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

கேரள மாநிலத்தில் முத்திரைக் கட்டணம் குறைவாக உள்ள காரணத்தினால் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த சொத்துக்கள் அனைத்தும் கேரள மாநிலத்தில் பதிவு செய்யப்படுவதால் நமது அரசுக்கு வரவேண்டிய வருமானம் ஏறத்தாழ

ஆண்டுக்கு ரூபாய் 10 லட்சம் இழப்பு ஏற்படுவதாக சொல்லப்படுகிறது. இது பல ஆண்டுகளாக இந்த அவையில் எடுத்துச் சொல்லப்பட்டும் அதற்கு தகுந்த வகையில் நமது அரசு இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். பதிவுத் துறை தலைமை அலுவலகங்களில் தற்போது எல்லா மாவட்டங்களில் வேலை பளு அதிகரித்து இருப்பதால் கூடுதல் அமைச்சு பணியாளர்களை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பதிவுத் துறையில் லஞ்ச ஒழிப்பு குழு என்று ஒன்று அமைக்கப்பட்டிருப்பது சரியல்ல. அது நல்ல முறையில் இன்று பணியாற்றாத ஒரு நிலை ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே அது என்ன என்ன முறையில் அந்த லஞ்ச ஒழிப்புகுழு ரெவ்யூ செய்யவேண்டுமோ அந்த முறையில் ரெயூவ் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். இப்படிப்பட்ட பல்வேறு கோரிக்கைகளை இன்று அந்த சார் பதிவாளர் அலுவலகங்களைப் பொறுத்தவரை இருந்து வருகிற்து. இந்தக் கோரிக்கைகளை அனுதாபத்தோடு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் ஒரு முக்கியமான விஷயம் பொதுமக்கள் தொடர்பு அதிகாரிகளை இந்த அலுவலகங்களில் இந்த துறையில் நியமிக்க வேண்டும். மேம்படுத்தப்பட்ட நகரங்களில் உள்ள சார் பதிவாளர்களை மாவட்ட பதிவாளர்கள் அந்தஸ்த்துக்கு உயர்த்தப்பட்டால் மத்திய சென்னையில் உள்ள 1 ஆம் நம்பர் சார் பதிவாளர் அலுவலகம், திருச்சிராப்பள்ளி, உரையூர், சேலம் மற்றும் திருநெல்வேலியில் உள்ள சார் பதிவாளர்களை மாவட்ட பதிவாளர்கள் அந்தஸ்த்துக்கு உயர்த்தவேண்டும் என்று அரசை வற்புறுத்துகிறேன்.

மைய சீட்டு நிதி சட்டம் தற்போது அமுல் நடத்தப்பட்டு இருப்பதால் அதை போதிய முறையில் செயல்படுத்தி போதிய பணியாளர்களை நியமிக்குமாறு அரசைக் கேட்டுக்கொள்கிறேன். தடுப்புச் சட்டம் நல்ல முறையில் செயல்பட ஆய்வாளர் தரப்பில் 4 துணை பதிவுத் துறை அலுவலகங்களுக்கு ஒரு ஆய்வாளரை நியமித்து செம்மைப்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

பிறப்பு, இறப்பு சட்டத்தை உரிய வடிவில் அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாலை அதிகமாக உற்பத்தி செய்வது கிராமங்கள் என்று கொள்கைக் குறிப்பிலே கூறப்படுகிறது. ஆனால், கிராமங்களைப் அபாறுத்தவரையில், அநேகமாக முழுக்க முழுக்க அதன் பயன் அந்த மக்களுக்குக் கிடைக்காத ஒரு நிலை இன்றைக்கு நீடித்து வருகிறது. ஆகவேதான், எங்கள் கட்சியின் சார்பில் கொடுக்கப் பட்டிருக்கும் வெட்டுத் தீர்மானத்தில் வலியுறுத்தியிருப்பதைப் போல, ஒவ்வொரு குடும்பக் கார்டுக்கும் அல்லது ஒவ்வொரு



வீட்டிலேயுள்ள குடும்பதாரர்களுக்குப்பால் கிடைக்கும் முறையிலே பாலின் உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூடியவரையில் ஒவ்வொரு ரெவின்யூ கிராமத்திலேயும் ஒரு சொசைட்டி என்ற முறையிலே சொசைட்டிகளை ஏற்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நல்ல தரமான பசுக்களை உற்பத்தி செய்து, அவைகள் நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வளர்க்கப்பட்டால்தான் அதிகமான பாலை உற்பத்தி செய்ய முடியும். அந்த முறையிலே உள்ள நடவடிக்கைகள் இன்றைக்கு மிகவும் கம்மியாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, நல்ல Breed Cows வளர்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை இந்தத் துறை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பசுக்களை விநியோகம் செய்வதிலேகூட, வங்கிகளிலேயிருந்து கிடைக்க வேண்டிய கடன்கள் காலாகாலத்தில் கிடைக்காத சூழ்நிலை இன்றைக்குக் கிராமங்களிலே ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆகவே, அதை முறைப்படுத்துகின்ற நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமங்களிலே அனிமல் ஹஸ்பென்டரி நடத்துகின்ற ஆஸ்பத்திரிகள் அல்லது டிஸ்பென்சரிகள் கூட இல்லாத நிலைமை இருக்கிறது. ஆகவே, மலைப் பகுதிகளிலே உள்ள இந்த மாடுகள் அல்லது பசுக்கள் இறந்துவிட்டால் அந்தக் கடனைப் பெற்றிருப்பவர்களைப் பொறுத்தவரையில், அதிலேயிருந்து அவர்களுக்கு நிதியுதவி கிடைக்க வேண்டுமென்றால் அல்லது அந்தக் கடனைக் கட்டாமல் இருக்க வேண்டுமென்றால் அனிமல் ஹஸ்பென்டரியின் டாக்டர் சர்ட்டிபிகேட் வேண்டுமென்று கேட்கிறார்கள். ஆனால் அவ்வாறு கொடுக்க முடியாத நிலையில் மலைப் பகுதிகளில் இருப்பவர்களுக்கு, மற்ற நிலைமைகளை வைத்துக்கொண்டு உதவி அளிக்க நடவடிக்கைககளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஹில் ஏரியா டெவலப்மெண்ட் ப்ரோகிராம் என்று ஏற்படுத்தியிருப்பதாகக் கொள்கைக் குறிப்பிலே இருக்கிறது. இந்த நேரத்தில் நான் ஒன்றை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் நல்ல மலைப் பகுதி இருக்கிறது என்பது மில்க் கமிஷனர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அந்தப் பகுதியில் ஹில் ஏரியா டெவலப்மெண்ட் ப்ரோகிராமின் கீழ் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதியிலே உள்ள மலைவாழ் மக்களுக்குப் பயன்படும் முறையில் பேச்சிப் பாறை அல்லது அருகிலுள்ள ஒரு இடத்தில் இந்தத் திட்டத்தை அமல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அதிகமான பாலை உற்பத்தி செய்து, அந்த மாவட்டத்திலே யிருந்து வெளியே எடுத்துச் செல்லுகின்ற நிலைமை ஏற்பட்டி ருக்கிறது, ஆகவே, மில்க் பவுடர்தொழிற்சாலை ஏற்படுத்து வதற்கான வாய்ப்பு இருக்கிறது. அங்கே பால்பொடி தய ரிக்கின்ற முறையில் ஒரு தொழிற்சாலையை அமைப்பதற் கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

ஆதிதிராவிட மக்களைப் பொறுத்தவரையில் இன்றைக்கு இந்த டெய்ரி டெவலப்மெண்டினால் போதுமான அளவிற்கு அவர்கள் பலன்களை அனுபவிக்க முடியாமல் இருக்கிறது. எனவே, அதற்குத் தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள குழித்துறையில் பால் கூலிங் பிளான்ட் ஒன்றை ஏற்படுத்துவதற்காகக் கட்டிடங்கள் கட்டப்பட்டன; அதற்காக வாங்கப்பட்ட மெஷின் சேலத்திலே உள்ள யாரோ ஒருவருக்குக் கொடுக்கப்பட்டு விட்டதாகத் தெரிகிறது. சமீபத்தில் இந்த அவையில் ஒரு கேள்விக்கான பதிலில், குழித்துறையில் அப்படிப்பட்ட ஒரு கூலிங் பிளாண்ட் ஏற்படுத்துவதற்கான திட்டம் இல்லை என்ற கருத்து சொல்லப் பட்டிருக்கிறது. அப்படியானால், மாண்புமிகு அமைச்சர் திரு. பொன்னையன் அவர்கள் இந்தத் துறைக்குப் பொறுப்பு வகித்த நேரத்தில், அங்கே ஏன் இப்படிப்பட்ட ஒரு கட்டிடம் கட்டு வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

கட்டிடம் கட்டப்பட்டிருக்கின்றது. அந்தக் கட்டடம் கட்டப்பட்டதற்குப் பிறகு அப்படி ஒரு திட்டம் இல்லை என்று ஒரு மு வுக்கு இந்தத் துறை அல்லது இந்த அரசு எப்படி வந்தது என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆகவே அந்த இடத்தில் குழித்துறையில் அமைக்கப்பட்டிருக்கக் கூடிய அந்தக் கட்டிடத்தில் கூலிங் ப்ளாண்ட் ஏற்படுத்தக்கூடிய நடவடிக்கையை எடுக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் வலியுறுத்திக்கொள்கிறேன்.

அதேபோன்று இன்னொரு முக்கியமான விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். பாலில் கலப்படம் இருப்பதாக பல புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தில் டிஸ்ட்ரிக்ட் மில்க் கோவாப்பரேட்டிவ் யூனியனால் வழங்கப்படும் பாலில் கலப்படம் இருப்பதாக நாகர்கோவில் ஹெல்த் ஆஃபீஸர் நாகர்கோவிலில் வழக்குகளைப் பதிவு செய்து இன்றைக்கும் நீதிமன்றத்திலே அந்த வழக்குகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இன்றைக்குப் பால் வளத்தைப் பெருக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கின்ற இந்தச் சமயத்தில் இப்படிப்பட்ட வழக்குகள் வருவதற்குரிய நிலைமை



ஏற்படுவது என்பது சரியல்ல. இதைப்பற்றி நிச்சயமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் முன்பே கொண்டு வந்திருக்கிறேன். எனவே இப்படிப்பட்ட பிரச்சினை களைத் தவிர்த்துத் தரமான பால் வினியோகம் செய்யப்படக் கூடிய முறையிலே துறை நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். அதே நேரத்தில் நான் இன்னொரு கருத்தினையும் வலியுறுத்து கிறேன். இந்தத் துறையினைப் பொறுத்தவரையில் இந்தத் துறையிலே வேலை செய்பவர்களும் துறையின் அபிவிருத்திக்கு ஒரு முக்கியமான கருவியாவார்கள் என்பதை நம்மால் மறந்து விட முடியாது. எனவே ஊழியர்களைப் பொறுத்தவரையில் அவர்களுடைய நலனைப் பாதுகாக்கக்கூடிய முறையில் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாயவரம் பால்பண்ணையில் ஏற்கெனவே 1,800 தொழி லாளர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டு இன்று வரை அவர்கள் வேலையில் அமர்த்தப்படவில்லை. இந்த நிலைமை தொடர்ந்து இருந்து வருகின்றது. அதேபோன்று கிராமக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையில் வேலை செய்யக் கூடியவர் களுக்குப் போதுமான அளவுக்குச் சம்பளம் வழங்கப்படவில்லை. மற்றக் கூட்டுறவு ஒன்றியங்களில் வேலை செய்பவர்களுக்கு எப்படிப்பட்ட ஊதியம் கொடுக்கப்படுகின்றதோ அதேமாதிரி ஊதியம் இவர்களுக்கும் கொடுக்கப்படவேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு ஒன்றியத்திலே அப்பாயின்ட் மென்டைப் பொறுத்தவரையில் எம்ப்ளாய்மென்ட் எக்சேஞ்சைக் கூட ரெஃபர் பண்ணாமல் கோவாப்பரேட்டிவ் ட்ரெயினிங் இல்லாதவர்கள் எல்லாம் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அதேபோன்று நிர்வாகக்குழு அமைக்கப்பட்ட பின் பணியாளர் களை அந்தக் குழுதான் நியமனம் செய்யவேண்டும் என்று துணை விதி இருந்தும் அந்த முறையில் பணியாளர்கள் நியமிக்கப்படாமல் அங்கே இருக்கக்கூடிய மேனேஜிங் டிரக்டார் தானே நியமனம் செய்து கொண்டிருக்கிறார். எனவே தமிழ்நாடு அரசு பணியாளர் இட ஒதுக்கீட்டு ஆணை உதாசீனப்படுத்தப் பட்டு நியமனங்கள் செய்யப்பட்டிருப்பதால் தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க முடியாத ஒரு நிலை இன்றைக்கு அங்கே ஏற்பட்டு இருக்கின்றது. மேலும் அங்கே 5 வருடத்திற்கு மேலாக வேலை செய்யக் கூடியவர்கள் கூட இன்றுவரையில் நிரந்தரமாக்கப்படாத நிலைமை இருக்கின்றது. அவர்களை நிரந்தரப்படுத்துவதற்குள்ள நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்றை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். குமரி மாவட்டம் தென்தாமரைக்குளம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் டி.ஒய்.டீ. 226. அதன் சங்கத்தலைவர் திரு. எஸ். எஸ். ரெங்கநாதகேசவன். அவர் கிராமக் கூட்டுறவுச் சங்கம் ஒய். 298-ல் உறுப்பினர்.

உறுப்பினர் எண். 782. கடன் எண். 340 பி.எஃப்.எல். 19-10-81-ல் ரூ. 3,500 கடன் வாங்கி இருக்கிறார். அவர் அந்தக் கடனைக் கட்டாததன் காரணத்தால் ஈ.பி. நடவடிக்கை எடுக்கப்பட்டு 16.11.83-ல் டிகிரி ஆகி இருக்கின்றது. எனவே 1961-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சட்டம் செக்ஷன் 28-ன்படி எந்தக் கூட்டுறவுச் சங்கத்திலும் தலைவராக இருக்கின்ற தகுதி அவருக்கு இல்லை. எனவே டிஸ்குவாலிஃபைட் என்ற அளவிலே அவர் இருக்கிறார் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் அரசுக்கு அவர் வேண்டியவர் என்பதால் அந்த நபர் மேல் நடவடிக்கை எடுக்கப்படாமல் மீண்டும் அவரே தொடர்ந்து தலைவராக இருப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

இங்கே இன்னொரு விஷயத்தையும் நான் சொல்ல விரும்புகிறேன். வீகல் எய்ட் கேஸைப் பொறுத்தவரையில் ஸ்டாம்ப் டியூட்டியிலிருந்து எக்ஸம்பஷன் பண்ணவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கர்நாடக மாநிலத்தில் அவ்வாறு ரெஃபர் பண்ணியிருக்கக்கூடிய கேஸ்களைப் பொறுத்தவரையில் ஸ்டாம்ப் டியூட்டியிலே இருந்து எக்ஸம்ஷன் கொடுக்கப்பட்டிருக்கின்றது. எனவே அப்படிப்பட்ட நடவடிக்கையை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-00)

திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பால் வழங்கு திட்டங்கள், முத்திரைத் தாள்கள்-நிர்வாகம், பத்திரப் பதிவு ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது ஓரிரு கருத்துக்களை வழங்குகின்றவாய்ப்பினை உருவாக்கித் தந்தமைக்கு முதலிலே எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாட்டிலே பசுமைப் புரட்சி உருவாக்கி வேளாண்மையை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிற விவசாயிகள் தங்களுடைய உணவு உற்பத்தியைப் பெருக்குகின்ற வகையில் அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிற நேரத்தில் நாட்டிலே வெண்மைப் புரட்சி உருவாக்க வேண்டுமென்ற அக்கறையோடு மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் ஆட்சி, மாண்புமிகு அமைச்சருடைய கருணையால் பல்வேறு திட்டங்களைக் கிராமங்களில் இருக்கிற நலிந்து கிடக்கிற, ஏழை, எளிய மக்களுக்காக உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். எனக்கு முன்னாலே அருமை சகோதரர் திரு. சோமு பேசுகின்ற பொழுது ஒரு கருத்தை இங்கே குறிப்பிட்டார்கள். மாதவரத்திலே பாலித்தீன் பேப்பரிலே பாக் செய்யப்படுகிற அந்தப் பாலில் அதிகமாகச் சேதம் ஏற்படுகிறது என்ற குறிப்பைச் சொன்னார்கள். பாலித்தீன் பேப்பரிலே அங்கே பேக் செய்கிற பொழுது, மொத்தப் பாலினுடைய அளவிலே ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேலே வீணாகாத அளவுக்கு அங்கே



சேமிக்கப்படுகிறது. அங்கே 5,000 லிட்டருக்கு மேலே சேதம் ஏற்படுவதாகக் குறிப்பிட்டார்கள். தவறானக் கணக்கை அவர்கள் தந்திருக்கிறார்கள் என்பதை முதலிலே குறிப்பிட விரும்புகிறேன்.

நம்முடைய ஆவினைப் பொறுத்தவரைக்கும் சென்னை போன்ற பல்வேறு நகரங்களிலே வாழ்ந்து கொண்டிருக்கிற மக்கள் தங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ஆங்காங்கே சுத்தமான பாலைத் தரவேண்டுமென்ற நோக்கத்தோடு, அரசு தானே இயங்கும் பால் நிலையங்களை ஆங்காங்கே உருவாக்கி இருக்கிறது. சுத்தமான பாலை மக்கள் பெற வேண்டுமென்ற நோக்கத்தோடு நம்முடைய சென்னை நகரத்திலே மட்டும் 24 இடங்களிலே இன்றையதினம் உருவாக்கப்பட்டிருக்கிறது. மேலும் அமைச்சர் அவர்கள் நேற்று பேசுகிறபொழுது பல்வேறு இடங்களிலே உருவாக்க அரசு நடவடிக்கை எடுத்திருப்பதாகக் குறிப்பிட்டுக் காட்டினார்கள். ஒரு தானே இயங்கும் பால் நிலையத்தை உருவாக்கவேண்டுமென்றால், அதற்கு ஏறத்தாழ ரூ. 1½ இலட்சம் செலவிட வேண்டியிருக்கிறது. சென்னை நகரத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிற மக்கள் சில காலகட்டங்களிலே தண்ணீர் பற்றாக்குறை இருக்கிறது என்று இருந்த நேரத்திலே கூட ஆவினுடைய பால் பற்றாக்குறை இல்லை, காசைப் போட்டால் கிடைக்கும் என்ற நிலைமையை மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு உருவாக்கி இருக்கிறது.

அது மட்டுமல்ல, ஆவினைப் பொறுத்த அளவிலே மாவட்டங்களிலே இருக்கிற பால் உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு பால் அதிகமாகக் கிடைக்கின்ற கால கட்டங்களில் [redacted] ஆங்காங்கே பால் தொழிற்சாலைகள் உருவாக்கப்பட்டு, பவுடர், பட்டர், நெய் போன்ற பல்வேறு பொருள்கள் மாவட்டங்களிலே இருக்கிற பால்வள ஒன்றியங்களுக்குக் கிடைக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு அரசு மிகவும் நல்ல முறையிலே செயலாற்றிக் கொண்டிருக்கிறது. விலைவாசிகள் ஓரளவுக்கு ஏற்றத்திலே இருக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, மாவட்டத்திலே இருக்கிற அத்தனை ஒன்றியங்களையும் இணைப்பதன் மூலமாக நல்ல இலாபத்தை ஈட்டுகின்ற அளவுக்கு ஒன்றியம் இன்றையதினம் உருவாகிக் கொண்டிருக்கிறது.

அதே போல் குறிப்பாக எடுத்துக் கொண்டால் இதற்கு முன்னாலே, 30, 35 ஆண்டுக்காலம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தவர்கள் வேளாண்மையை நம்பிக் கொண்டிருந்த விவசாயிகள் இயற்கை பொய்த்து விட்டால் அவர்களுக்கு மாற்றுத் தொழில் எது இருக்கிறது என்று கூட அறியாமலிருக்கும் நிலையில் வைத்திருந்தார்கள். அந்நிலையை மாற்றி புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில், இன்றையதினம் வேளாண்மையை நம்பிக் கொண்டிருக்கிற விவசாயிகளுக்கு ஒரு

குலத் தொழிலாக, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை
உயர்த்துவதற்கு, இயற்கை பொய்த்து விட்டால் கூட
தங்களுடைய குடும்பத்தை நடத்திச் செல்வதற்கு பால்வள
ஒன்றியங்களை ஒவ்வொரு மாவட்டத்திலும் உருவாக்கி, கிராமங்
களிலே இருக்கிற மக்களுடைய வயிற்றிலே பாலை ஊற்றுகிற
நிலைமையை புரட்சித் தலைவர் ஆட்சி உருவாக்கித்தந்திருக்
கிறது. குறிப்பாக நம்முடைய பால்வளத் துறை அமைச்சர்
அவர்கள் பால் வளத் துறையில் பல்வேறு மாற்றங்களை
இன்றைய தினம் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். நான்
குறிப்பாக, சொல்கிறேன், இந்திய துணைக் கண்டத்திலே,
ஆனந்தைத்தான் நாம் அத்தனை பேரும் மாதிரியாகக்
குறிப்பிட்டுக் காட்டிக் கொண்டிருக்கிறோம். 35 ஆண்டுக்
காலங்களாக ஆனந்திலே என்ன மாற்றங்களைத் தந்திருக்
கிறார்களோ, என்ன மாற்றத்தை அந்தப் பகுதிலே வாழ்கின்ற
மக்கள் அடைந்திருக்கிறார்களோ, அத்தகைய மாற்றத்தை
7 ஆண்டுக் காலத்திலே, புரட்சித் தலைவர் அரசு தமிழகத்திலே
ஏற்படுத்தி, மக்கள் அந்தப் பயனை அடைந்து வருகிறார்கள்
என்பதை நாள் குறிப்பிட விரும்புகிறேன்.

அதே போல, பால் வளத் துறையில் கிராமத்திலே
இருக்கிறவர்கள் தங்களுடைய கிராமத்திலே பால் வளச்
சங்கங்களை உருவாக்கி, கொள்வதன் வாயிலாக,
கிராமங்களிலே இருக்கிறவர்களோடு தொடர்பு
கொள்வதோடு மட்டுமல்லாமல், அவர்களுடைய பால்
கொழுப்புச்சத்திற்கு நியாயமான விலை கிடைப்பதோடு,
நிர்வாகத்திலே இருக்கின்றவர்களோ, மற்றவர்களோ பாலினு
டைய கொழுப்புச் சத்தைப் பார்க்க வேண்டுமென்று சொன்னால்
கூட மில்க்கோடெஸ்ட் கருவின் மூலமாக, கிராமங்களிலே,
சங்கங்களிலே, இருக்கிறவர்கள், தாங்களே அறிந்துகொள்ள
முடியும். அக்கருவி, ரூ. 24,000 மதிப்புள்ளதாகும். அது
மூன்றில் ஒரு பங்கு மானியத்திலே சங்கங்களுக்கு வழங்கப்பட்டி
ருக்கிறது. அங்கே இருக்கிறவர்கள் தங்களுடைய பாலின்
கொழுப்புச் சத்தை பார்க்க வேண்டுமென்றால் ஒரே நிமிடத்தில்
அந்த இடத்தில் பார்க்கலாம் என்ற நிலையை புரட்சித்தலைவர்
அவர்கள் ஆட்சியில் இன்றையதினம் ஏற்படுத்திக் கொடுத்திருக்
கிறார்கள்.

கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்க கிராமங்களில்
இருக்கிறவர்கள் 5 மைல், 6 மைல் என்று செல்லவேண்டிய
நிலையை மாற்றி இன்றைக்கு கிராமங்களுக்கு மருத்துவர்கள்
சென்று கால்நடைகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கும், நல்ல
இனவிருத்திக் கன்றுகளை உருவாக்கவேண்டுமென்ற நோக்கத்
தோடு உறைவிந்து நிலையங்களை ஆங்காங்கு ஏற்படுத்துவதற்கு
அங்கே இருக்கிற பணியாளர்கள் பயிற்சி பெற்று கறவை
மாடுகளுக்கு ஊசிகள் போடுவதற்குமான முறைகள் புரட்சித்
தலைவர் அவர்கள் ஆட்சியில் உருவாக்கப்பட்டிருக்கின்றன.



மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையில்
மாவட்டங்களில் இருக்கிற ஒன்றியங்கள் நல்லமுறையில் இயங்க
வேண்டும்; தொலை தூரங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறவர்
களுக்கும் அவர்களுடைய பாலுக்கு நியாயமான விலை கிடைக்க
வேண்டும்; என்கிற நோக்கத்தோடு பணியாற்றிக் கொண்டிருக்
கிறார்கள். இதற்கு முன்னாலே இருந்த அரசாங்கம் இதைப்
பற்றி எண்ணிப்பார்த்து இருக்கிறதா என்றால் கிடையாது.
இதற்கு முன்னாலே இருந்தவர்கள் விவசாயிகளுக்காக பல்வேறு
திட்டங்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம் என்று
சொன்னார்களே தவிர, விவசாயிகளுடைய அடிப்படையான
தேவைகளைப் பூர்த்தி செய்கிற திட்டங்களை நிறைவேற்றி
னார்களா என்றால் கிடையாது. ஆனால் மாண்புமிகு
புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு, கிராமங்களிலும்,
மலைப்பகுதிகளிலும் வாழ்ந்துக் கொண்டிருக்கிற விவசாயிகள்
பாலுக்கு நியாயமான விலை கிடைக்கவேண்டுமென்ற நோக்கத்
தோடு பல்வேறு திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது
பல இடங்களிலிருந்து பால் கொண்டு வருகிறபோது 4 மணி
நேரத்தில் பால் கொண்டு வந்து பக்குவப்படுத்தினால் தான்
பால் கெடாமல் இருக்கும். இதற்காக ஆங்காங்கு 100 கிலோமீட்டர்
அளவில் இருக்கிற மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்கிற
வகையில் குளிரூட்டும் நிலையங்களை இந்த அரசு ஏற்படுத்திக்
கொண்டிருக்கிறது.

பெரியார் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அங்கே
இருக்கிறவர்களுக்காக 450 சங்கங்கள் உருவாக்கப்பட்டிருக்
கின்றன. ஒரு நாளைக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் லிட்டர்
பாலை அங்கே பக்குவப்படுத்துவதற்காக ஒரு தொழிற்சாலை
கட்டியது போதாது என்பதற்காக மேலும் 1 லட்சத்து 50
ஆயிரம் லிட்டர் பாலை பக்குவப்படுத்துவதற்காக, இரண்டாவது
திட்டமாக அங்கே ஏறத்தாழ 3 கோடியே 40 லட்சம் ரூபாய்
செலவில் புதியதாக தொழிற்சாலை அமைக்க அரசு இன்றைய
தினம் அனுமதி அளித்து இருக்கிறது.

அடுத்து கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்க, உடனடியாக
மருத்துவ வசதிகளைக் கொடுக்க காவல்துறையில் இருப்பதைப்
போல வையர்லெஸ் கருவிகளை எமர்ஜென்சி வெகிக்கிள் என்று
சொல்லப்படுகிற அந்த வாகனங்களுக்கு பொருத்தவேண்டுமென்
பதற்காக நம்முடைய அரசு, பெரியார் மாவட்டத்திலே அதை
நிறைவேற்றுவதற்கு மத்திய அரசிற்கு சிபார்சு செய்திருக்கிறது.
இப்படிப்பட்ட பல்வேறு திட்டங்களை நம்முடைய அரசு செய்து
கொண்டிருக்கிறது.

கன்று வளர்ச்சித் திட்டம் என்ற திட்டத்தின் அடிப்படையில்
இந்த அரசு ஒரு திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது.
கிராமங்களில் வாழ்கிறவர்கள் சாதாரண கறவை மாடுகளை
தான் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். 2 லிட்டர், 3 லிட்ட
ருக்கு மேலே கறக்கிற மாடுகள் அவர்களிடத்தில் இல்லை

என்பதற்காக நல்ல இன கன்றுகளை விருத்தி செய்யவேண்டுமென்ற நோக்கத்தோடு, அந்த விவசாயிகளின் தேவைகளை பூர்த்தி செய்கிற வகையில் அவர்களுக்கு 1,000 ரூபாய் மானியத்தைத் தந்து, கால்நடைச் செல்வங்களை இலவசமாக தருகிற முறையில் புரட்சித் தலைவர் ஆட்சி இன்றையதினம் செய்துகொண்டிருக்கிறது.

இந்த ஆட்சியைப் பொறுத்தவரையில், மலையில் வாழ்ந்து கொண்டிருக்கிற மக்களாக இருந்தாலும், வாகன வசதி இல்லையென்று சொன்னாலும் அங்கேயிருந்து பாலை வாங்கலாம்; அந்த விவசாயிகளுக்கு நியாயமான விலை கொடுக்கலாம் என்ற முறையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சி செய்துக்கொண்டிருக்கிறது. கால்நடைகளுக்கு மருத்துவச் சிகிச்சை அளிக்க அரசு பல்வேறு திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. நம்முடைய பால் வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் இந்தத் துறையில் தனி அக்கறை செலுத்தி பால்வளச் சங்கங்களில் இருக்கிறவர்கள் பயன்பெறுகிற வகையில் பால்வள ஒன்றியங்களை நல்லமுறையில் அமைத்து அவை செம்மையாக செயல்பட நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால் தனியார் பால் ஊற்றினால் அந்த இலாபம் ஒருவருக்கும் மட்டும் தான் கிடைக்கிறது. ஆனால் இப்போது சங்கங்களில் அங்கத்தினர்களாக இருக்கிறவர்களுக்கு வருகிற இலாபத்தை போனசாக வழங்குகிற ஒரு முறை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் உருவாக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முன்னாலே எத்தனையோ அரசாங்கங்கள் இருந்தன. காங்கிரஸ் ஆட்சி இருந்தது; திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தது. அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது விவசாயிகளுக்குப் பால் அதிகமாக வருகிற காலங்களில் எத்தனை இடையூறுகள் ஏற்பட்டது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

(முற்பகல் 11-10)

ஆனால் இந்த ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பின்னாலே தான், 10 நாட்களுக்கு மேல் மதுரையில் இருக்கும் தொழிற்சாலையில் பழுது ஏற்பட்டபோது கூடநம்முடைய நிர்வாக இயக்குனர் அவர்கள் அங்கே வரும் பாலை எல்லாம் கெடாமல் பாதுகாக்கும் வண்ணம், 4 மணி நேரத்திற்குள் பெரியார் மாவட்டம், சேலம் மாவட்டம் ஆகிய தொழிற்சாலைகளுக்கு அவற்றை எடுத்து வந்து, கெடாமல் வைத்திருந்து மக்களுக்குப் பயன்படும் வகையில் கொடுத்தார்கள் என்பதற்காக இந்த நேரத்தில் நான் என் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பத்திரப் பதிவுத் துறையைப் பற்றி பல்வேறு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னாலே தான் பல்வேறு சார் பதிவாளர் அலுவலகங்கள்



மாவட்ட பதிவாளர் அலுவலகங்கள் பல்வேறு இடங்களில் உருவாக்கப்பட்டு இருக்கிறது. அதன் காரணமாக, கிராமப்புறத்தில் இருக்கிற மக்கள் 5 மைல் தூரத்திற்குள்ளேயே சென்று தங்களுடைய பத்திரங்களைப் பதிவுசெய்துகொள்கிற நிலைமையை உருவாக்கியிருக்கிறோம். இதற்கு முன்னால் நான் பார்த்து இருக்கிறேன், 10—15 மைல் தூரம் சென்றுதான் கிராம மக்கள் தங்களுடைய பத்திரங்களைப் பதிவுசெய்துகொள்ளும் நிலைமை இருந்தது, அதிகமான பத்திரங்களைப் பதிவு செய்ய வசதி செய்து கொடுக்கும்பொருட்டு, பல்வேறு மாவட்ட பதிவாளர் அலுவலகங்களும் தொடங்கப்பட்டு இருக்கின்றன. அந்த வகையில் இந்த அமைச்சர் பொறுப்பு ஏற்றுக் கொண்டதற்குப் பின்னாலே இந்தத் துறை சிறப்பான வகையில் சீரிய முறையில் பணியாற்றி வருகிறது என்பதற்காக என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு இந்த அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளின் பலனாக பத்திரப் பதிவுத் துறையின் மூலம் மட்டும் இந்த அரசுக்கு 100 கோடி ரூபாய் அளவிற்கு வருமானம் வரும் சூழ்நிலை இருக்கிறது. இந்தத் துறையில் நம்முடைய அமைச்சர் அவர்கள் உருவாக்கியுள்ள திட்டங்களின் பலனாக கிராம மக்கள் எளிதான முறையில் தங்கள் பத்திரங்களைப் பதிவு செய்து கொள்கின்றனர். அந்த கிராம மக்களின் வாழ்வில் அக்கறை கொண்டு இந்த ஆட்சி செயலாற்றிக் கொண்டிருக்கிற காரணத்தால், அதற்காக என்னுடைய நன்றியை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், அரசுக்கும் தெரிவித்து, என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. சோ. அழகர்சாமி. மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அவை முன் வைக்கப்பட்டுள்ள முத்திரைத்தாள்கள் நிர்வாகம், பத்திரப் பதிவு' பால் வழங்குத் திட்டங்கள் குறித்த மானியக் கோரிக்கைகள் மீது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்தப் பால்வளத் துறை சம்பந்தமாக பார்க்கிறபோது, நம்முடைய தமிழகத்திலே உற்பத்தியாகும் மொத்தப் பாலின் அளவு 8 லட்சம் லிட்டர் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. இன்றைக்கு நம்முடைய தமிழகத்திலே உள்ள மக்கள் சராசரியாக ஒரு நபருக்கு 100 எம். எல். சாப்பிடுகிறார்கள் என்று வைத்துக் கொண்டாலும் கூட நம்முடைய தேவை 40 லட்சம் லிட்டர் என்ற அளவிற்கு இருக்கும். ஆகவே, இந்தப் பால் உற்பத்தியைப் பெருக்க வேண்டிய முக்கியமான கடமை நமக்கு இருக்கிறது என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வார்கள் என்று நான் நினைக்கிறேன்.

இந்தப் பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கு பல விதமான திட்டங்கள் தீட்டப்பட்டு இருப்பதாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. இன்றைக்கு நம்முடைய தமிழகத்திலே இருக்கும் மொத்த பால் விநியோக சங்கங்களை, பால் உற்பத்தியாளர்

கூட்டுறவுச் சங்கங்களாக மாற்றப்பட்டு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஏறத்தாழ 4,882 ஆரம்ப பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இன்றைக்கு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இன்றைக்கு பல இடங்களில் துவங்கப்பட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் ஓராண்டு அல்லது இரண்டாண்டுக்குள்ளேயே மூடுவிழா செய்யவேண்டிய நிலைமையேற்படுகிறது என்பதை நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

இதற்கு முக்கிய காரணம், கறவை மாடுகள் வாங்க நாம் விவசாயிகளுக்கு மானியம் கொடுக்கிறோம். ஆனால் அவர்கள் உற்பத்தி செய்கிற பாலை நாம் எடுத்துக்கொள்கிறபோது அவர்களுக்குக் கட்டுப்படியாகும் விலை கொடுக்கப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. அதை மாற்றி அமைக்க அரசு ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதற்கு ஏதாவது ஒரு மாற்று ஏற்பாடு அரசு செய்யவேண்டும் என்பதை வலியுறுத்திச்சொல்லிக்கொள்கிறேன். இன்றைக்கு நாம் கொள்முதல் செய்கிற பால் 4.5 சதவீதம் கொழுப்புச் சத்தை வைத்துக்கொண்டு மீதியை நாம் எடுத்து பின்னால் 4 ரூபாய் அல்லது 4 ரூபாய் 30 பைசா என்ற அளவுக்கு விற்கிறோம். ஆனால் கொள்முதல் செய்கிறபோது பல இடங்களில் கிராமச் சங்கங்களில் சொல்கிறார்கள், அவர்களுக்கு, உற்பத்தியாளர்களுக்கு கொடுக்கும் விலை 2 ரூ. அல்லது 2 ரூபாய் 50 பைசா தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, அது கட்டுப்படியாகவில்லை. அதன் காரணமாகத்தான் அவர்கள் மானியத் தொகை போக மீதம் கடன்பெற்ற தொகையைத் திருப்பிக் கட்டமுடியாமல் இருக்கிறார்கள். அதனால் ஒரு முறை ஒருவன் கறவை மாடு வாங்கி விட்டான் என்று சொன்னால் அவன் இரண்டாவது கறவை மாடு வாங்குவதைப் பற்றி சிந்திக்கவே முடியாது. அந்த அளவிற்கு அவர்களுடைய நிலைமை இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதிலே தீவிர கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நான் இங்கே ஒரு நேரத்தில் கேள்வி கேட்டபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். தமிழ்நாட்டில் பால் உற்பத்தி அதிகமாக இருக்கிறது. உற்பத்தியாகும் பாலை முழுவதும் நம்மால் கொள்முதல் செய்ய முடியவில்லை என்று சொன்னார்கள். நான் நம்முடைய அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன், பல இடங்களில் பால் கிடைக்கவில்லை என்ற நிலை இன்னும் இருக்கிறது. அந்த நிலையை அரசு உணரவேண்டும். ஆகவே, பால் உற்பத்தியை அதிகரிக்கவேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு பல இடங்களில் பால் உற்பத்தியாளர்களுடைய மாவட்ட யூனியன்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இன்றைக்குக் கூட அவைகளுக்கு பால் உற்பத்தியாளர்களைக் கொண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு நிர்வாகப் போர்டு



இல்லை. பல இடங்களில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களே மாவட்ட யூனியன்களில் நிர்வாகஸ்தர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். நெல்லை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் அந்த மாதிரி இல்லை. ஏனென்றால் போட்டி வந்ததோ, என்னவோ தெரியவில்லை. அதிகாரிகளை மட்டும் தான் போர்டாக அமைத்து அந்த யூனியன் இயங்கிக் கொண்டிருக்கிறது.

கூட்டுறவு பால் யூனியன்களில் தனி அதிகாரிகள் நியமனம் என்று சொல்கிறபோதும் ஆங்காங்கே சில தவறுகள் நடைபெறுகின்றன, சலுகைகள் கிடைப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது, ஆகவே, அந்த நிர்வாக அமைப்புகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகளை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புதிதாக ஒரு சங்கம் ஆரம்பிக்க வேண்டுமென்றால் அதற்கு அங்கே இருக்கிற பதிவாளர் டி. ஆர். பதிவாளர் என்று சொல்கிறார்கள்—100 லிட்டர் பாலை உற்பத்திச் செய்து கொடுத்தால் பதிவு செய்யப்படும் என்று சொல்கிறார். திருச்சி மாவட்டத்தில் 50 லிட்டர் பால் உற்பத்திச் செய்து தருகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள், பதிவு செய்யப்படவில்லை. 100 லிட்டர் பால் கொடுத்தால்தான் சங்கம் ரெஜிஸ்டர் செய்யப்படும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். முதலிலே ஒரு சங்கம் பதிவு செய்யப்பட்டால்தான், வங்கிகள் மூலமாக இதர வழிகளில் கிடைக்கவேண்டிய கடன், மானியம் போன்ற சலுகைகள் கிடைக்கும். சங்கம் அமைக்கப்பட்டு, ரெஜிஸ்டர் செய்யப்பட்டு, அதற்குப் பின்னால் சங்கத்திலிருந்து சிபாரிசு செய்தால்தான் லோன் வாங்க முடியும். மானியம்கிடைக்கும் கறவை மாடுகள் வாங்க முடியும். பால் சப்ளை செய்யமுடியும். ஆகவே, முதலில் சங்கத்தை ரெஜிஸ்டர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 100 லிட்டர் பால் கொடுத்தால்தான் பதிவு செய்யப்படும் என்று சொல்லுகிற நடைமுறை சரியில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பால் குளிரூட்டும் நிலையங்கள் பல இடங்களில் செயல்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் பல இடங்களில் ஆரம்பிக்கப்போவதாகச் சொல்கிறார்கள். குறைந்தபட்சம் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு குளிரூட்டு நிலையமானது இருக்கவேண்டும். ஏனென்றால் அதிக தூரத்திற்குப் பாலை எடுத்துச்செல்லும்போது கெட்டுவிடக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. அப்படி பால் கெட்டுவிடும்போது அதிக நஷ்டம் ஏற்படுகிறது. ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு குளிரூட்டும் நிலையம் இருந்தால் அங்கேயே பாலைப் பதப்படுத்தி, அனுப்புவதற்கு வசதியாக இருக்கும். அப்படிச் செய்யும்போது பால் கெடாத நிலையும் ஏற்படும். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கெனவே கோவில்பட்டி வட்டாரத்தில் எட்டையபுரம் பகுதியில் பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் அதிகமாக இருக்கின்றன. அங்கே உற்பத்தியாகின்ற பால் மதுரைக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. அங்கே ஒரு குளிரூட்டும் நிலையம் அமைக்க வேண்டும்; அதற்கு வேண்டிய இடம் இருக்கிறது, பிற வசதிகள் இருக்கின்றன. இதுபற்றி ஏற்கெனவே பலமுறை சொல்லியிருக்கிறேன். அமைச்சர் அவர்கள் ஆய்வில் இருக்கிறது என்று சொன்னார்கள். உடனடியாக அங்கே குளிரூட்டும் நிலையம் அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஒரு முக்கியமான பிரச்சனை. சென்னை பால் வள நிறுவனத்தில் வேலை செய்துவந்த 1,500 தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டு, 4, 5 ஆண்டுகள் ஆகிவிட்டன. அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து எங்களிடம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். நாங்களும் தொடர்ந்து இந்த சட்ட மன்றத்தில் அவர்களுடைய பிரச்சனையை எடுத்துச்சொல்லிக் கொண்டிருக்கிறோம். இன்னும் அது முடிந்தபாடில்லை. அந்தத் தொழிலாளர்கள் உயர்நீதி மன்றத்திற்குச் சென்று சாதகமான தீர்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். தொழில் கோர்ட்டுக்கு அவர்களுடைய பிரச்சனையை விடவேண்டுமென்று கோர்ட்டில் சொல்லியிருக்கிறார்கள். அரசாங்கம் இதில் பிடிவாதம் காட்டாமல் அவர்களுக்கு உடனடியாக வேலை கொடுக்க வேண்டும். 4, 5 ஆண்டுகளாக அந்தத் தொழிலாளர்கள் குடும்பம் நடுத்தெருவில் நிற்கிறது. பட்டினியும் பசியுமாக இருக்கிறார்கள். இதை ஒரு கௌரவப் பிரச்சனையாகப் பார்க்காமல் அவர்களுக்கு உடனடியாக மீண்டும் வேலை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்தத் தொழிலாளர்சள் வழக்கு மன்றத்திலே தங்களுக்கு சாதகமாகப் பெற்ற தீர்ப்பை எதிர்த்து அரசாங்கம் அப்பீல் செய்யப்போவதாகச் சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட எண்ணம் இருந்தால் அது தவறான போக்கு. அவர்களுடைய குடும்பங்கள் படும் கஷ்டநிலையை எண்ணிப்பார்த்து, நீதி மன்றம் கொடுத்த தீர்ப்பையும் ஏற்று, அவர்களுடைய குடும்பங்களைப் பாதுகாக்கின்ற முறையில் சரியான நடவடிக்கை எடுப்பதுதான் பொருத்தமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு கறவை மாடுகள் வாங்குவதற்கு ஆதிதிராவிட மக்களுக்கு மானியம் கொடுக்கப்படுகிறது. மற்றவர்களுக்கு ⅓ பகுதி மானியமாகக் கொடுக்கப்படுகிறது. ஆனால் இந்த மானியத்தை வாங்குவதில் பல சிரமங்கள் இருக்கின்றன. அதை வாங்குவதற்குள் ஒரு தொகை செலவிட வேண்டிய துர்பாக்கியமான நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. அதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



கறவை மாடுகள் வாங்க பல வங்கிகள் கடன் வழங்க முன்வர மறுக்கிறார்கள். கூட்டுறவுச் சங்கம் எவ்வளவு காரண்டி கொடுத்தாலும் கூட வங்கிகள் கடன் கொடுக்க மறுக்கிறார்கள். அதனால் அரசாங்கம் அளிக்கின்ற சலுகையைப் பெறமுடியாத கஷ்டம் இருக்கிறது. இந்தக் கஷ்டத்தைப் போக்கி, சுலபமாகக் கடன் பெற வழிவகை செய்ய வேண்டும்.

அது மட்டுமல்ல. பல இடங்களில் மாவட்ட யூனியன்கள் இருந்தாலும் அவைகளுக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக போர்டு, நிர்வாக அமைப்பு இல்லை. அதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலில் இதுபற்றி விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்:

பத்திரப்பதிவு சம்பந்தமாகச் சொல்ல வேண்டுமென்றால் ஏற்கென்வே பல இடங்களில் குறிப்பாக நகர்ப்புறங்களில் ரேட் அதிகமாக உயர்ந்துவிட்டது என்று சொல்கிறார்கள். உண்மையான விலைக்கு முத்திரைத்தாள்களை வாங்கியிருந்தாலும் மதிப்பீடு அதிகமாகிவிட்டது, ரேட் அதிகமாகிவிட்டது என்று சொல்லி அந்தப் பத்திரங்களை அவர்களுக்குக் கொடுக்காமல் இருக்கிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. கோவில்பட்டியைப் பொறுத்தவரையில் இது சம்பந்தமாக நூற்றுக்கணக்கான புகார்கள் எனக்கு வந்திருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் புகார் அனுப்பியிருக்கிறார்கள். திடீரென்று மதிப்பு ஏறிவிட்டது என்றால் சாதாரண மக்களுக்கு எப்படித் தெரியும். குறிப்பாக நகரத்தில் ஒரு விலை இருக்கும். நகரை விட்டு கொஞ்சம் தள்ளியிருக்கிற நிலத்திற்கு அதைவிட விலை குறைவாகத்தான் இருக்கும். அதற்கும் நகரத்திற்குள் இருக்கிற அதே ரேட் என்று சொல்லி பத்திரம் பதிவு செய்யப்படாமல், உரியவர்களுக்குப் பத்திரங்கள் கொடுக்கப்படாத நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. அதைப் பரிசீலனை செய்து, உரியவர்களுக்கு பத்திரங்களைக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11–20)

அரசாங்கம் ஒரு பிர்க்காவிற்கு ஒரு சார் பதிவாளர் அலுவலகம் ஆரம்பிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் சொல்லியிருந்தும் கூட, இன்னும் பல இடங்களில் இந்த அமைப்பு அமைக்கப்படாமல் இருக்கிறது.

திருச்சி மாவட்டம் குளித்தலை தாலுக்காவில், தோகைமலை பிர்க்காவில் ஒரு சார் பதிவாளர் அலுவலகம் வேண்டுமென்று அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சொல்லி வருகிறார்கள். ஆனால் அது இன்னும் அமைக்கப்படவில்லை.

அதே மாதிரி மாவட்டப் பதிவாளர் அலுவலகம் ஒன்று கோயில்பட்டியில் அமைக்கப்படவேண்டும். நெல்லைக்குச் செல்லவேண்டுமென்றால் 40 மைல் தூரம் இருக்கிறது. இந்த வட்டாரத்தில் சார் பதிவானர் அலுவலகங்கள் அதிகமாக இருக்கின்றன. மாவட்ட பதிவு அலுவலகம் ஒன்று அமைக்கப் படவேண்டுமென்று ஏற்கனவே கோரிக்கைகள் வந்துள்ளன. அவைகள் சரியான முறையில் பரிசீலனை செய்யப்பட்டு, அதை அமைப்பதற்கு வேண்டிய எல்லாத் தகுதிகளும் இருப்பதால், அது சம்பந்தமான ஏற்பாட்டை சீக்கிரமாகச் செய்து, கோயில் பட்டியில் மாவட்ட பதிவாளர் அலுவலகம் ஒன்றை துவங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், எல்லா வகையிலும் பால் ஒரு ஆரோக்கியமான உணவு மட்டுமல்லாமல், தேவை யானதும்கூட. இந்தப் பால் உற்பத்தியில் இன்றையதினம் பிரதான தடங்கலாக இருப்பது கொள்முதல் செய்வதிலும், அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற விலையிலும் அதிகமான முறைகேடுகள் நடப்பதாகச் சொல்லப்படுகிறது.

இன்றைக்கு கொள்முதல் செய்யப்படுகின்ற காலத்தில், ஒரு விலை நிர்ணயம் செய்வதற்கு ஒரு ரேட்டை போடுகிறார்கள். ஃபிளாட் ரேட்டைப் போடுகின்ற காரணத்தால், கொள்முதல் செய்கின்ற பாலை அவர்கள் இஷ்டம் போல், எந்த மாதிரி போடுகிறார்கள், எப்படி விலை நிர்ணயம் செய்கிறார்கள் என்பது பாலைக் கொடுக்கின்ற அந்த சங்கங்களுக்குத் தெரிவதில்லை. அடுத்த ஆண்டு 500 சங்கங்கள் துவங்கப்படுவதாகச் சொல் கிறார்கள். ஏற்கனவே இருக்கின்ற 4,882 சங்கங்களில் எத்தனை சங்கங்கள் முறையாகச் செயல்படுகின்றன, எத்தனை சங்கங்கள் நின்றுவிட்டன என்ற கணக்கு எங்கேயும் குறிப்பிடப்படவில்லை. துவங்கப்பட்ட ஓராண்டு, இரண்டு ஆண்டு காலத்திற்குள் செயல் படாமல் பல சங்கங்கள் நின்றுவிட்டன. இதற்குப் பிரதான காரணம், அவர்களுக்கு நியாயமாகக் கொடுக்கப்படவேண்டிய விலையைக் கொடுப்பது கிடையாது. அந்தந்த வட்டாரத்திலுள்ள கூட்டுறவு ரிஜிஸ்ட்ரார் அலுவலகங்கள், அந்தச் சங்கங்கள் சரியான முறையில் செயல்படுவதற்கான உதவிகளையும், என்னென்ன செய்யவேண்டுமென்பதைப்பற்றியும், அவர்களுக்குத் தேவையான யோசனைகளையும் வழங்குவது மட்டுமல்லாமல், அத்துடன் அந்த சங்கங்களை மூடுகின்ற காரணங்களை அறிந்து, இனிமேலாவது இருக்கின்ற சங்கங்களை மூடாமல்—புதிய சங்கங்கள் துவங்கப்படுவது ஒரு பக்கம் இருக்கட்டும்—ஏற்கனவே உள்ள சங்கங்கள் மூடப்படாமல் இருப்பதற்கான வழிவகைகளை ஆராயவேண்டும். ஏன் அவைகளைச் சிறப்பான முறையிந் நடத்த முடியவில்லை என்பதற்கான காரணங்களை ஆராய்ந்ல் பார்த்து, அவைகள் எல்லாம் சரியான முறையில் தொடர்து நடைபெறுவதற்கும், மேலும் உற்பத்தியைப் பெருக்குவதற்கும் நான் சொன்ன ஆலோசனைகளை ஏற்று. அதற்கான ஏற்பாடு களை அமைச்சரவர்கள் செய்யவேண்டுமென்று கேட்டு உரையை முடிக்கின்றேன்.



திரு. கே. ஆர். கணபதி. மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மான்யக் கோரிக்கையை வரவேற்று, பேசுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பசுமைப் புரட்சிக்கு அடுத்து, வெண்மைப் புரட்சியில் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில், இந்தியாவில் தமிழகம் முதலாவது இடத்தைப் பெற்றிருக்கிறது என்றால், பால் வளத்துறை அமைச்சர் அவர்களையே அந்தப் புகழ் சாரும் என்று சொல்லி, பாராட்டக் கடமைப்பட்டிருக் கிறேன். எதிர்க்கட்சியினரும் இதைப் பாராட்டுவார்கள், ஒப்புக் கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

பாலை அதிக விலையில் கொள்முதல் செய்து மலிவு விலையில் பொதுமக்களுக்கு வினியோகிப்பதில் இந்த அரசு அக்கறையுடன் இருக்கிறது என்பது யாவரும் அறிந்த உண்மை யாகும்.

பாலின் தரத்தைச் சொல்லவேண்டுமென்றால், முன்பெல்லாம் காபி குடித்தவர்கள் கூட, இப்போது ஆவின் பாலைக் குடிப் பதற்கு ஆரம்பித்திருக்கிறார்கள் என்று சொன்னால், அது மிகையாகாது.

பால் வளத்துறையின் மூலமாக கிராமப்புறங்களில் உள்ள பிற்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்களுக்கும், ஆதிதிராவிட மக்களுக்கும், பெண்களுக்கும், நலிந்த பிரிவினருக்கும் இவ்வளவு வருவாய்க்கு உத்தரவாதம் அளித்திருப்பதை யாரும் பாராட்டாமல் இருக்கமுடியாது.

சேத்தியாத் தோப்பில் பால் குளிரூட்டும் ஆலை ஒன்றை ஏற்படுத்துவது குறித்து நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக் கிறேன்.

ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் கடன் அதிகமாக கொடுக்கிறார்கள். அந்தக் கடனை இந்த வங்கிகள் மனமுவந்து கொடுப்பது, இந்த கறவை மாடுகள் வாங்குவதற்குத்தான். இது பால் வளத் துறைக்கு நற்சான்று அடையாளமாக விளங்குகிறது.

கறவை மாடுகளை வாங்குவதற்கு கடனாகப் பணம் கொடுக்கப்படும்போது, நல்ல தரமான கறவை மாடுகள் கிடைப்பதற்கு, பால் வளத்துறையும், கால்நடைத் துறையும் தொடர்பு கொண்டு ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஒரு மாவட்டம் அல்லது இரண்டு மாவட்டங்களில் ஒரு கறவை மாட்டுச் சந்தை, நல்லமுறையில், பால் வளத் துறையும், கால்நடைத்துறையும் 3 மாதங்களுக்கு ஒரு முறை சந்தை

நடத்தி, பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் அங்கத்தினர்கள் நேரடியாகச் சென்று மாடுகளை வாங்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாடுகள் வாங்கித் தருகிறேன் என்றும், குறைந்தவிலையிலே மாடுகளை வாங்கிக் கொடுக்கிறேன் என்றும் சொல்லி, கிராமத்திலே உள்ளஏழைகளை இந்த இடைத்தரகர்கள் ஏமாற்றிக்கொண்டு வருகிறார்கள். அவர்களை கடுமையான சட்டத்தின் மூலம் சிறையில் தள்ள ஏற்பாடு செய்யவேண்டும்.

கிராமத்திலே பால் வளத்துறையின் மூலமாக விற்கும் பாலுக்குப் போட்டியாக, தண்ணீர் ஊற்றி, பாலைக் குறைந்த விலையில் விற்க, பால் வளத்துறைக்குப் போட்டியாக, சோதனை ஏற்படுத்தி வருவதைத் தடுக்க கிராமப்புறங்களிலே கலப்பட பால் பரிசோதனை செய்யும் சட்டத்தை விஸ்தரிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கறவை மாடுகளுக்கு கொடுக்கக்கூடிய தடன் பணமும், சலுகைத் தொகையும் அவர்களுக்கு சரியான முறையில் கொடுக்கவும், மாட்டை வாங்கிய பிறகு, ஆர். டி. ஓ அல்லது பி. டி. ஓ. போன்றவர்கள் வருமானத்திற்குச் சான்றிதழ் கொடுத்தபிறகு, வங்கியிலிருந்து பணத்தை ரிலிஸ் செய்தால், நாம் கொடுக்கக்கூடிய பணம் விரயம் ஆகாமல் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆவின் பாலின் துறைகள் சென்னையிலே இருப்பதைப் போன்று, மிக முக்கியமான சுற்றுலாத் தளங்கள், யாத்திரிகத் தளங்கள் இருக்கின்ற இடங்களுக்கும் அதை விஸ்தரிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

எம். எல். ஏக்கள் வேறு பல மாநிலங்களுக்கு பார்வையிடச் செல்வது வழக்கம். அதுபோல் பால் உற்பத்தியாளர் சங்கத் தலைவர்கள் குஜராத் போன்ற மாநிலங்களுக்குச் சென்று நேரடியாக பால் வளர்ச்சிப் பெருக்க முறைகளைப் பார்க்க அனுமதிக்கப்பட்டதற்கு நான் பால்வளத்துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கறவை மாடுகளை, குறிப்பாக, செயற்கை முறையில் கருவுற்ற எருமைக்கன்றுகள் அதிகமான அளவில் இருக்கின்ற காரணத்தால், அதற்கு என்று ஆராய்ச்சி செய்து, அந்தக் கன்றுகள் இறக்காமல் இருப்பதற்கும், தொற்று நோய் பரவாமல் இருக்கவும் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

புவிச்சத்திரத்தில் உள்ள சப் ரிஜிஸ்திரார் அலுவலகத்தை புவனகிரி ரிஜிஸ்தார் அலுவலக எல்லைக்குள் மாற்ற, ஐ. ஜி ஆப். ரிஜிஸ்ட்ரேசன் அவர்கள் இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதேபோல் சேத்தியாத்தோப்புக்கு, அந்தத் தொகுதியினுடைய



சட்டமன்ற உறுப்பினர் அருமை நண்பர் வி. வி. சுவாமிநாதன் அவர்கள் இடத்தை இனாமாகக் கொடுத்திருந்தும், இன்று வரையில் அங்கே அலுவலகக் கட்டிடம் கட்டாததை தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதேபோல் சிதம்பரம் தொகுதியில் ஒரத்தூர் கிராமத்திலே சார் பதிவாளர் அலுவலகத்திற்கு நிரந்தரமாகக் கட்டிடம் கட்டவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் கொல்லிமலைப் பகுதியில் உள்ள மலைவாழ் மக்கள் 2, 3 செண்ட் வாங்குகின்றபோது அந்த ரிஜிஸ்ட்ரேசன் பீஸ் அதிகமாக இருக்கின்ற காரணத்தால், மலைவாழ் மக்களுக்காக சலுகை தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கொல்லிமலைப் பகுதியில் சாந்தமங்கலம் என்ற பகுதியில் ஒரு சார்பதிவாளர் அலுவலகம் கொண்டுவரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டம் ராசிபுரத்தில் ஒரு பால் வள மையம் ஆரம்பிக்கவேண்டும் என்றும் அதற்கு அனுமதி வழங்கவேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் செங்கற்பட்டு, மதுராந்தகம் பகுதியில் உள்ள யானைபுரம் என்ற கிராமத்தில் பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பதற்கு ஆணை பிறப்பிக்கப் பட்டு, இன்று வரையிலும் கட்டிடம் கட்டவில்லை. அதற்கு உடனடியாகக் கட்டிடம் கட்டுவதற்கு ஏற்பாடு செயயவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சிதம்பரம் பகுதி மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கிற காரணத்தால், அம்மாப்பேட்டை கிராமத்தில் கறவை மாடுகளுக்குத் தீனி வழங்குகின்ற ஒரு தீவனத் தொழிற்சாலையை துவக்கவேண்டும் என்று கேட்டு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன், வணக்கம்.

*திரு. எஸ். இளையபெருமாள். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவாகளே, இன்று பால் பண்ணை, வளர்ச்சித் துறை, பத்திரம் பதிவு, முத்திரைத்தாள், நிர்வாகம் போன்ற மானியக் கோரிக்கையிலே நான் சார்ந்திருக்கின்ற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்லவிரும்புகிறேன்.

முதலிலே பால் பண்ணை வளர்ச்சித்துறையிலே நம்முடைய அரசாங்கம் நல்லமுறையிலே செயல்பட்டுவருவதை நான் பாராட்டுகிறேன். 1982—லே தினசரி 4.19 இலட்சம் லிட்டரும், 1983—லே 5.11 இலட்சம் லிட்டரும் விற்பனை என்று குறிப்பிலே கொடுத்திருக்கிறார்கள். விற்பனை 51 கோடியிலேயிருந்து 65 கோடிக்கு உயர்ந்திருக்கிறது என்றும் குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள். எனவே பால்வளத்துறையிலே நாம் அதிக முன்னேற்றம் பெற்றிருக்கிறோம் என்று சொல்வதிலே நான் மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் இந்தப் பால் வளத்துறையிலே பணியாற்றுகின்ற ஏழை எளிய தொழிலாளர்களுக்கு நாம்

செய்ய வேண்டிய கடமையிலேயிருந்து தவறியிருக்கிறோம் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குறிப்பாக மாதவரம் பால் பண்ணையிலே நிலைமை மிக மோசமாக இருக்கின்றது. தொழிலாளர்கள் தவறு செய்தால், சட்டரீதியாக நடக்காமல் சட்டத்தை மீறுபவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதிலே எனக்கு எந்தவிதமான கருத்து வேறுபாடும் கிடையாது.

(முற்பகல் 11-30)

ஆனால் உண்மையாகவே யாரோ செய்த தவற்றுக்கு நிரபராதிகள் தண்டிக்கப்படுகிறார்கள் என்பது போல கிட்டத்தட்ட 500-க்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நான் நேரிடையாக அவர்களிடம் பேசியபோது எனக்குக்கிடைத்த தகவலைச் சொல்கிறேன். அதில் நிரபராதிகளும் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறபோது ஒரு தனி கமிட்டி அமைத்தோ, அல்லது அமைச்சர் அவர்களை நேரிலே அழைத்துப் பேசியோ, அல்லது விசாரணை நடத்தியோ அல்லது தொழில் கோர்ட்டுக்கு அனுப்பியோ, ஏதாவது ஒரு வழியில், உண்மையானவர்களுக்கு, நிரபராதிகளுக்கு நீங்கள் ஒரு வழி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

செய்யத் தவறினால் நாம் ஏழைகளின் பால் இரக்கம் கொண்டவர்கள் என்பதோ, தொழிலாளர்களின் நலனுக்காக பலவித சட்டங்களை இயற்றியிருக்கிறோம் என்பதோ உண்மைக்கு மாறாகப் போய், அரசாங்கத்திற்கு கெட்ட பெயர் தான் வரும். ஆகவே சட்டங்களை செய்தால் மட்டும் போதாது. அவைகள் அமலுக்கு கொண்டு வரப்பட்டிருக்கிறதா என்பதையும் கருத்தில் வைத்துக்கொண்டு செய்தால் ஒழிய நமக்கு நல்ல பெயர் வராது என்பதோடு மட்டுமல்ல, நியாயமான வழியில் அரசு நடக்கவில்லை என்ற ஒரு கெட்ட பெயரும் வரும். அதைத் தடுக்கவேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே நீங்கள் கொடுத்திருக்கும் குறிப்பில் 5 ஆம் பக்கத்தில் 1983 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை இந்திய பால் பண்ணை வளர்ச்சிக் கழகம் அளித்துள்ள நிதி உதவித் தொகை ரூ. 671.91 இலட்சமாகும் என்றும், அதில் உபயோகப் படுத்தப் பட்ட தொகை ரூ. 512.47 இலட்சமாகும் என்றும் கொடுக்கப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 159.44 இலட்சம் இன்னமும் செலவழிக்கப்படாமல் இருக்கிறது என்று நம்முடைய குறிப்பிலேயிருந்து தெரிகிறது, அந்தப் பணம் செலவழிக்கப் படாத நிலைமைக்கு என்ன காரணம்? 1984-85-க்கு செலவழிப்பதற்காக வைத்திருக்கிறீர்களா அல்லது வருங்காலத்தின் நிதியோடு அந்தப் பணத்தைச் சேர்த்துக் கொண்டு, 1984, 85, 86-வது வருஷங்களில் உபயோகப்படுத்தப்படுமா என்று எந்த விதமான குறிப்பும் இதில் இல்லை.





ஆனால் இந்தத் தொகைகளின் மூலம் இன்னும் பல்வேறு பால் பண்ணைகளைத் துவங்கினால், அதன் மூலம் மக்களுக்கு பொருளாதார நிலை உயர்வதற்கு ஒரு வழி ஏற்படும். அதனால் அவைகளை அதிகாரிகள் மூலம் உபயோகப்படுத்துவதற்கு ஆவன செய்யவேண்டும்.

அதைப்போலவே ஆதிதிராவிட மக்களுக்கு நம்முடைய அரசு, மத்திய அரசின் உதவியோடு, இந்தத் துறை மூலம் பல உதவிகளைச் செய்து வருகிறது. அவர்களுக்கு ஒரு காலத்தில இந்தத் தொழிலையே நாட்டில் செய்ய முடியாத ஒரு நிலைமை இருந்தது. ஆனால் குறிப்பாக தற்போது, பால் பண்ணைகளில் தான் இந்த தீண்டாமை என்ற கொடுமை இல்லாமல், எல்லோரும் ஒன்றாக முன் வந்து, அவர்கள் உற்பத்தி செய்கிற பாலை நாமும் வாங்கலாம் என்ற வகையில் ஒரு நல்ல எண்ணம் மக்கள் மத்தியில் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதற்கு அரசாங்கம் தான் காரணம். அரசாங்கம் தான் இந்தத்துறை மூலம் அதைச் செய்திருக்கிறது.

ஆனாலும், அவர்களுக்கு கூட்டுறவு முறையிலே சங்கங்கள் அமைக்கிறபோது இரண்டு கஷ்டங்கள் இருக்கின்றன. அவைகளைப் பற்றி இந்த 4 ஆண்டுக்காலத்திலே பல முறை அமைச்சர் அவர்களிடம் சொல்லியிருக்கிறேன். குறிப்பாக, ஒரு சொசைட்டி இருக்கிறது என்றால், அங்கே, ஆதிதிராவிட மக்களை, பின் தங்கிய மக்களை அவர்களுக்கு வேண்டியவர்களாக இருந்தால் சேர்த்துக் கொள்கிறார்கள். அவர்களுக்கு இஷ்டப்படாதவர்கள் என்றால் சேர்க்க மறுக்கிறார்கள். அப்படி ஒரு நிலைமை வருகிற போது டி.ஆர்., ஜே. ஆர். போன்றவர்களிடம் சொல்லி, அவர்கள் நேரிடையாகச் சொன்னாலும் கூட, இதிலே ஒன்றும் செய்ய முடியவில்லை. ஏன் என்று தெரியவில்லை. ஆளும் கட்சி சார்பு என்ற எண்ணமோ, அல்லது அவர்களுக்கு அதாவது ஆதி திராவிடர்களுக்கு ஆகாததாகவே செய்யவேண்டும் என்ற கெட்ட எண்ணமோ, இந்த இரண்டில் எது என்று எனக்குத் தெரியவில்லை .அதைச் சொல்ல முடியாத நிலைமையில் இருக்கிறேன்.

காரணம் எவ்வளவோ சொல்லியும் பயன் அற்றுப் போய் விட்டது. இது சம்பந்தமாக, அரசாங்கத்திடம் சொல்லியும் நடவடிக்கை எடுக்க முடியவில்லை. மேல் அதிகாரிகளிடம் சொல்லியும் நடவடிக்கை எடுக்க முடியவில்லை. அங்கே சீனியர் இன்ஸ்பெக்டராக இருக்கக்கூடிய ஒருவர் அதைச் செய்கிறார் என்று சொல்கிறார்கள். அப்படி என்றால், இதில் நேரிடையாக இல்லாமல், மறைமுகமாக, அந்தரங்கமாக தவறுகள் நடந்து கொண்டிருக்கின்றன என்பதுதான் பொருள். அதற்கு யார் காரணம்? இந்த அமைச்சர் அவர்கள் பார்த்துச் செய்யவேண்டும் என்பதை அமைச்சர் அவர்களுக்கு வேண்டுகோளாக வைக்கிறேன்.

அடுத்து, ஆதிதிராவிடர்களுக்கு மாடுகள் கொடுப்பதிலே ஒரு பிரச்னை. அப்படி கொடுக்கும்போது சில மாடுகள் சில சமயங்களில் இறந்துவிடுகின்றன. ஒரு சில கிராமங்களிலே டாக்டர் இருக்கிறார், மருத்துவ வசதியும் இருக்கிறது. ஆனால் சில கிராமங்களில் 5 மைல் 10 மைல் தூரம் ஹாஸ்பிடலுக்கு செல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது. 10 மைல் தூரம் இறந்த மாட்டையும் எடுத்துச் செல்வது மிகுந்த சிரமமாக இருக்கிறது. ஆகவே, அங்கேயே இருக்கிற சங்கத்தின் தலைவரோ, அல்லது அங்கேயிருக்கிற கிராம அதிகாரிகளோ, அல்லது அங்கேயிருக்கிற பிளாக் ஆபீசரோ, மாடு இறந்துவிட்டது என்று உண்மையாக ஒரு சர்டிபிகேட் கொடுப்பார்களேயானால், டாக்டர் சர்டிபிகேட் இல்லை என்ற காரணம் காட்டி, அவர்களுக்கு கடன் பளுவை மேலும் அதிகரிக்காமல், அவைகளை ரத்து செய்து கொடுக்கலாம் என்ற நிலைமையை உருவாக்க வேண்டும் என்று இந்தப் பால் பண்ணை வளர்ச்சித் துறையில் இருக்கிற நிர்வாகத்தினருக்கு ஒரு தாக்கீது கொடுத்துச் செய்யவேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக பத்திரப் பதிவுத் துறை. இந்தப் பத்திரப் பதிவுத் துறையிலே நாம், 46 மாவட்டங்களாக வைத்திருக்கிறோம். சென்ற ஆண்டும், அதற்கு முந்தைய ஆண்டும் கூட, இந்தத் துறையிலே புதிய மாவட்டங்கள் உண்டாக்கப்படும் என்ற ஒரு நல்ல செய்தியை சொன்னார்கள். ஆனால் இந்த ஆண்டிலே எந்தச் செய்தியும் இல்லை. முக்கியமான பெரிய மாவட்டங்கள் இருக்கின்றன. அவைகளை பிரிக்க வேண்டும் என்ற எண்ணமெல்லாம் கோரிக்கையாக கொடுத்தும் ஏன் இந்த ஆண்டு அது பிரிக்கப்படவில்லை என்று எனக்குத் தெரியவில்லை.

அரசாங்கத்திலே இந்தத் துறையிலே இருக்கிற அதிகாரிகளுக்கு உதவி செய்ய வேண்டும். அலுவலகங்களிலே அவர்களுக்கு வேலை பளுவும் அதிகமாக இருக்கிறது. போதிய கிளார்க்குகளும் கிடைக்கவில்லை. அது மட்டுமல்ல அலுவலகத்தில் மேசை நாற்காலி கூட இல்லாத ஒரு அவல நிலை இருக்கிறது. பத்திரங்களை பதிவு செய்ய வருகிற பொது மக்களுக்கு கூட, வசதியில்லை அந்த அலுவலகங்களிலே—100க் கணக்கான அலுவலகங்களிலே இட வசதி அற்ற நிலைமை இருக்கிறது. இவைகளையெல்லாம் சிறு விஷயங்களாக இருந்தாலும் மக்களுடைய சௌகரியத்தை முன்னிட்டு——பதிவுத் துறையிலே அதிக வருமானம் வருகிறது என்று குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள், ஆகவே பணம் அதிகமாக வருகிறபோது——இதுபோன்ற சீர்திருத்தமான காரியங்களைச் செய்வதற்கு அரசு முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

சீட்டுக் கம்பெனிகள் நிலைமைகளை எடுத்துச் சொல்ல வேண்டுமானால் 335 நிதி நிறுவனங்கள் தவறு செய்ததாக கண்டு பிடிக்கப்பட்டன. இந்த கொள்கை குறிப்பிலே 4-வது பக்கத்திலே சொல்லப்பட்டிருப்பது 71 நேர்வுகளில் குற்றமிழைத்தவர்



களுக்குச் சிறைத்தண்டனை, அபராதம் விதிக்கப்பட்டது. ஏனைய 1,908 குற்றங்களில், 96 நேர்வுகளில் குற்றம் இழைத்தவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டது என்று இருக்கிறது. இந்த 96 போக மற்ற கேஸ்கள் என்ன நிலையில் இருக்கின்றன. கேஸ்களிலே அவர்கள் வெற்றி பெற்றுவிட்டார்களா? கடவுளுக்கு அடுத்தபடியாக இப்போது கோர்ட்டை நாம் நம்பவேண்டியிருக்கிறது. சீர்திருத்த நாட்டில் சமுதாயப் புரட்சி நடக்கிற ஒரு நாட்டில் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து சமுதாயத்திற்கு சம நியாயம் வழங்கவேண்டுமென்று நீதிமன்றங்களுக்கு வரும் காலத்தில் செயல்படவேண்டுமென்று சொல்லிவிட்டு அந்த நிலையில் 1,908 வழக்குகளில் 96 வழக்குகள் போக மற்றவை என்ன நிலையில் இருக்கின்றன என்பதைப்பற்றி இந்தக் குறிப்பிலே இருக்குமானால் மன ஆறுதலாக இருக்கும் அரசும் அதிகாரிகளும் கண்டிப்பதற்கு வழிவகுத்திருக்கிறார்கள் என்று சந்தோஷப்படமுடியும். அந்த நிலை பற்றி குறிப்பிலே இல்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பத்திரப் பதிவுத் துறையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உள்ள நிலைமைப் பற்றிச் சொல்லவிரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் சொல்லலாம், ஐ.ஜி.யாக இருக்கிறவர் அந்த சமுதாயம் என்று சொல்லலாம். நான் கல்வி மானியத்திலே பேசியபோது சொன்னார்கள், சாந்தப்பா அங்கே இல்லையா என்று. உயர்ந்த உத்தியோகத்தை யாரோ ஒருவருக்கு கொடுத்துவிட்டு அவருடைய கைகால்களைக் கட்டிப் போட்டுவிட்டு நியாயத்தைக் கேட்பதற்கு ஆள் இல்லை என்றால், அமைச்சரிடம் சொல்லி அமைச்சரும் கேட்கவில்லை, இங்கே சபையிலேயும் சொல்லி கேட்கவில்லையென்றால் எங்கே போய்ச் சொல்வது? 1974 ஆம் ஆண்டிலே ஒரு தவறு நடந்திருக்கிறது. பெரிய மேட்டிலே உள்ள அலுவலகத்திலே அனுசூயா என்ற பெண் யூ.டி.சி. ஆக இருந்தவர் சப்ரிஜிஸ்திரராக பணியாற்றி வந்தார். ஆனால் அதே ஆபீசிலே பார்வர்ட் கம்யூனிட்டியைச் சேர்ந்தவர் ஒருவர் யு.டி.சியாக இருந்தார். அந்த அம்மையார் சப்ரிஜிஸ்திரராக ஆக்கப்பட்டதற்கு 6 மாதங்களுக்குப் பின்னாலே அந்த அம்மையார் மீண்டும் யு.டி.சி.யாக ஆக்கப்பட்டார். அந்த அம்மையார் இடத்தில் அந்த பார்வர்ட் கம்யூனிட்டியைச் சேர்ந்தவரை சப் ரிஜிஸ்திரராக ஆக்கிவிட்டார்கள். ஏதாவது குற்றம் இருக்கிறது, தவறு இருக்கிறது என்றால் அதற்காக ரிவர்ஷன், பதவி உயர்வைத் தாழ்த்தியிருக்கிறோம் என்று சொன்னால் ஏற்றுக் கொள்ளத் தயார். ஆனால் 1974 முதல் 84 வரையில் என்ன நிலை என்று தெரியவில்லை. கிளார்க்குகள் அட்டென்டர்கள் இருக்கிறார்கள். அவர்கள் 18, 20 வருடங்கள் வேலை செய்கிறார்கள். நான் தகுதியில்லாதவர்களுக்காகப் போராடவில்லை. தகுதியுள்ளவர்கள் இருக்கிறார்கள், தகுதியுள்ளவர்கள் இருந்தும், அவர்களுக்கு புரமோஷன் நேரத்திலே கான்பிடென்ஷியல் ரிப்போர்ட் எழுதுகிறார்கள். இந்த நிலைமை இருக்கிறது. 113 வருஷமாகிறது இந்தத் துறை வந்து என்று சொல்லப்படுகிறது.

வெள்ளைக்காரன் காலத்திலே கொடுத்தது 10 சதவீதம், சுதந்திரம் வந்ததற்குப் பிறகு 15 ஆயிற்று, 16 ஆயிற்று, இன்றைக்கு 18 ஆகியிருக்கிறது. 18 சதவீதத்திற்குக் கொடுக்கவில்லை என்று சொல்கிறபோது அமைச்சர் அவர்கள் சொல்லி எங்களை திருப்திப்படுத்துவதிலே நியாயம் இல்லை. ஒன்று ஆரம்ப நேரத்திலே சார் பதிவாளர் அலுவலகங்கள் வருகிறபோது அந்த மக்களுக்கு அந்த கோட்டாவைக் கொடுக்காத காரணத்தினால் அவர்களுக்கு புதிதாக வருகின்ற அலுவலகங்களிலே முன்னுரிமை கொடுக்கவேண்டும். அந்தக் கோட்டாவைப் பூர்த்தி செய்யவேண்டுமென்பது ஒரு வழி.

எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சிலே கேட்டால் சொல்கிறார்கள். படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள் qualified candidates are available among the Scheduled Castes and Scheduled Tribes என்று அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் அரசாங்கத் தரப்பிலே உள்ளவர்கள் qualified candidates are not available among the Scheduled Castes and Scheduled Tribes, என்று சொல்கிறார்கள். இரண்டு பேர்களும் அரசாங்க அலுவலகத்தில் உள்ளவர்கள்தான். இரண்டு பேர்களும் அரசாங்க உத்தியோகஸ்தர்கள்தான். அமைச்சரின்கீழ் பணியாற்றுகிறவர்கள்தான். ஆனால் ஒருவருக்கொருவர் ஏன் இந்த மாறுபாடான கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள்? இதிலே எது உண்மை?

(முற்பகல் 11-40)

நாங்கள் ஏதோ வருடா வருடம் சொல்வதும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருப்தியாக பதில் சொல்வதும் இதில் எது உண்மை என்று விசாரித்து அதைச் சொல்லாமல் போவதுமாக இருந்தால் இங்கே நாம் அரசியல்வாதி என்ற காரணத்தைத் தவிர அனுபவ ரீதியாக, சட்ட ரீதியாக 3 ஆயிரம் ஆண்டுகளாக இந்த மக்களுக்கு கொடுக்கவேண்டிய அவர்களுடைய பங்கைக் கொடுக்கவில்லை. இதற்காகத்தான் காந்தியார் அவர்களும், அம்பேத்கார் அவர்களும், பெரியார் போன்றவர்களும், அண்ணா போன்றவர்களும் எந்த உரிமையோடு சொன்னார்களோ அந்த நிலைமையை நீங்கள் மாற்றி செய்யவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மொத்தம் 566 அலுவலகங்கள் இருக்கின்றன. அதில் தனியார் கட்டிடத்தில் 266 அலுவலகங்கள் அதிக வாடகை கொடுத்துக்கொண்டு இருக்கின்றன. வசதி அற்ற நிலைமை இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருங்காலத்தில் ஒரு 5 ஆண்டு காலத்தில், அல்லது 10 ஆண்டு காலத்தில் இந்த அலுவலகங்களுக்கு எல்லாம் கட்டிடம் கட்டிக்கொடுக்க வேண்டும். நம்முடைய சப்-ரிஜிஸ்ட்ரார்களுக்கு வீடுகள் இல்லாத நிலைமை மிக மோசமாக இருக்கிறது. குறைந்தபட்சம் சப்-ரிஜிஸ்ட்ராருக்கு மட்டுமாவது சப்-ரிஜிஸ்ட்டார் அலுவலகத்திற்கு



பக்கத்தில் ஒரு வீட்டை கட்டிக்கொடுக்க நம்முடைய நிதி நிலைமைக்கு ஏற்ப ஒரு திட்டமாக எடுத்து 5 ஆண்டு, 10 ஆண்டுக்குள் செய்வோம் என்ற நிலைமையை நாம் உருவாக்க வேண்டும்.

பெரிய மாவட்டமாக இருப்பதை சிறு மாவட்டமாக பிரிக்க வேண்டும். புதிய ரிஜிஸ்ட்ரார் அலுவலகங்களை நாம் உருவாக்கவேண்டும். 4 சிறப்பு மாவட்ட பதிவாளர்கள் பதவி ஒவ்வொரு மாவட்டத்திலும் உண்டாக்கப்படும் என்று இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. 4 சிறப்பு மாவட்ட பதிவாளர்களை மட்டும் நியமித்தால் போதாது, குறைந்தபட்சம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒன்றாவது நாம் செய்வதற்கு அல்லது 16 மாவட்டங்களில் ஒரு 10 மாவட்டங்களிலாவது ஒரு ஸ்பெசல் அதிகாரிகளை சிறப்பு மாவட்டங்களாக கொடுத்து வேலைப் பளுவை குறைப்பதற்கு வழி செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக பால் குளிருட்டும் நிலையம் சம்பந்தமாக நல்ல முறையில் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து இருந்தாலும் தென் ஆற்காடு மாவட்டத்தில் திண்டிவனம் பகுதியில் இந்த பால் குளிருட்டும் நிலையம் ஒன்று ஆரம்பிக்க வேண்டும் என்று அந்த பகுதியில் உள்ள மக்களும் அந்த விவசாய மக்களும் அரசுக்கு கோரிக்கை கொடுத்து இருக்கிறார்கள். கழிவுகளுக்கு எழுதியிருக்கிறார்கள். நம்முடைய அமைச்சருக்கும் கொடுத்து இருக்கிறார்கள். அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. தங்கமணி போன்றவர்கள் இந்த சிறிய விஷயத்திற்காக உண்ணாவிரதம் இருக்க வேண்டிய நிலை வந்தும் இன்னும் என்ன நிலையில் இருக்கிறது என்று புரியவில்லை. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிச்சயமாக இதற்கு ஆவன செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதேபோன்று நிர்வாகத் துறையில் நான் கடைசியாக சொல்லவிரும்புகிறேன்; நம்முடைய சட்டமன்ற காலம் இன்னும் எத்தனை நாள் இருக்கிறது என்று தெரியாது. ஆகவே இந்த சமயத்தில் கூட சட்டமன்றத்தில் இது கடைசி பேச்சாக இருந்தால் கூட நான் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. ஏன் என்றால் அரசியல் சூழ்நிலை அப்படியிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இளைஞராக இருந்தபோதே நன்றாகத் தெரியும். இந்த அமைச்சரவையில் செய்யவேண்டிய கடமைகளில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கொடுக்கவேண்டியதை அவர்களுடைய உத்தியோகம், உத்தியோக உயர்வு இவைகளில் இதை நாம் சொல்லத் தேவை இல்லை சென்ற தடவையே சொன்னார்கள் நிச்சயமாக மிகவும் இருப்பதைக் கடற்கரையில் பார்த்தால் கூட சந்தித்துச் சொல்லுங்கள் நாங்கள் முடித்துக் கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். 2 ஆண்டு காலத்தில் இதுவரை 10 தடவை மாண்புமிகு அமைச்சர் அவர்களை நேரில் பார்த்துக் கொண்டேன். என்ன காரணத்தினாலோ இந்த உத்தியோக உயர்வு அவர்களுக்கு

கொடுக்காமல் 18 சதவீத உயர்வு கொடுக்காமல் இருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே 15 தினங்களுக்கு முன்பு என்னிடம் நேராகச் சொன்னார்கள். உத்தியோக உயர்வை கட்டாயமாக கொடுக்கச் சொல்லியிருக்கிறேன். என்றும் அது நீண்ட காலமாக 1952-லிருந்து உத்தியோக உயர்வு, புரமோஷன் என்பதை நிறுத்தப்பட்டதைக் கொடுப்பதற்கு எல்லா இலாக்காவுக்கும் நான் அனுப்பியிருக்கிறேன் என்று சொன்னார்கள். அனுப்பி இருப்பது உண்மையா? கொடுக்காதது உண்மையா? கொடுக்கிறீர்களா? என்பதை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிச்சயமாக பதில் சொல்லும்போது சொல்வார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. இந்த பால் வளத்தில் நாம் முன்னேறி இருப்பதற்கு பாராட்டுதலை தெரிவித்து என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன், நன்றி. வணக்கம்.

•

*மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று மன்றத்தில் விவாதிக்கப்படும் பால் வள மேம்பாட்டுத்துறை, பத்திரப் பதிவுத் துறை, முத்திரைத்தாள்கள் ஆகிய 3 கோரிக்கைகளின் மீது 7 கண்ணியம் மிக்க சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய நல்ல கருத்துக்களை எல்லாம் இங்கே எடுத்து வைத்து இருக்கிறார்கள். குறிப்பாக பால்வளத் துறையினைப் பொறுத்தவரை அது கடந்த 4 ஆண்டு காலமாக தமிழகத்தினுடைய கிராமப்புறங்களில் உருவாக்கி இருக்கிற ஒரு அமைதியான புரட்சியைப் பற்றி, அங்கே வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிற பல்லாயிரக் கணக்கான விவசாயப் பெருங்குடி மக்கள் வாழ்க்கையில் உருவாகி இருக்கிற நல்ல திருப்பங்களைப் பற்றி எல்லாம் மனதார இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னதற்கு அவர்களுக்கு என்னுடைய நன்றி அறிதலை இந்த அரசினுடைய சார்பாக முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான்காண்டுக் காலத்தில், பால் வளத் துறையிலே உருவாகியிருக்கின்ற நல்ல பலன்களெல்லாம் இன்றைக்குக் கிராமப்புறங்களிலே உள்ள மக்களும், நகர்ப்புறங்களிலே உள்ள நுகர்வோர்களும் உணர்ந்து கொண்டு வருகின்ற பாங்கினைப் பார்க்கின்றோம். குறிப்பாக இன்றைக்குப் பால்வளப் பெருக்கத்திற்காக எல்லாவிதமான வசதிகளையும் இன்ஃப்ராஸ்ட்ரக்சர் பெசிலிட்டீஸ் என்று ஆங்கிலத்தில் சொல்வார்களே அந்த வசதிகளையெல்லாம் அமைத்துக் கொடுத்த காரணத்தால் நான்காண்டுகளுக்கு முன்பிருந்த நிலைமைகளைவிட இந்த நான்காண்டுகளுக்குப் பிறகு எண்ணிப் பார்க்கின்ற பொழுது மகத்தான திருப்பத்தையும், முன்னேற்றத்தையும் தமிழ்நாடு பால்வளத்துறை உருவாக்கியிருக்கிறது என்பதை நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1980-81 ஆம் ஆண்டு தமிழகத்தைப் பொறுத்தவரையில் இருந்த, பாலைக் குளிரூட்டக் கூடிய நிலையங்களின் வாயிலாக 3.8 இலட்சம் லிட்டர்கள் மட்டுமே குளிரூட்டக்கூடிய வசதிகளைத் தமிழகம் பெற்றிருந்தது. இந்த நான்காண்டுக் காலத்தினுடைய தொடர்ந்து எடுத்துக்கொள்ளப்பட்ட தீவிரமான முயற்சிகளின் காரணமாக, நாள் ஒன்றுக்கு 6.3 இலட்சம் லிட்டர்களைக் குளிர் பதனம் செய்யக்கூடிய வசதிகளைப் பெற்றிருக்கின்ற கால கட்டத்தைப் பார்க்கின்றோம்.

பாலைப் பதப்படுத்துகின்ற மொத்தத் திறன் 1980-81 ஆம் ஆண்டில் 7.13 இலட்சம் லிட்டர்கள் மட்டுமே பெற்றிருந்தோம். அரசின் தீவிரமான, தீர்க்கமான முடிவின் காரணமாக இன்றைக்கு நாள் ஒன்றுக்கு 13 இலட்சத்து 87 ஆயிரம் லிட்டர் பாலைப் பதப்படுத்துகின்ற திறனைப் பெற்றிருக்கிறோம்.

1980 ஆம் ஆண்டு ஒரேயொரு பால் பவுடர் தொழிற்சாலை மதுரையில்தான் இருந்தது. இன்றைக்கு நாள் ஒன்றுக்கு 40 டன் உற்பத்தி செய்யும் அளவிற்குக் கிருஷ்ணகிரியிலேயும், சேலத்திலேயும், ஈரோட்டிலேயும் என இந்த மூன்று இடங்களிலும் இந்த நான்காண்டுகளில் பால் பவுடர் தொழிற்சாலைகளை உருவாக்கி, அந்த விவசாயிகளுக்கு ஒரு பாதுகாப்பைக் கொடுக்கின்ற வகையில், புதிய நம்பிக்கையைக் கொடுக்கின்ற சூழலை உருவாக்கி பால்பொடி தயாரிக்கின்ற அந்த முனையில் சாதனையை உருவாக்கியிருக்கிறோம்.

கால்நடைத் தீவனங்களின் உற்பத்தித் திறன் 1981 ஆம் ஆண்டு 200 டன்கள் என்று இருந்த நிலைமை மாறி, இன்றைக்கு 300 டன்களாக உற்பத்தி செய்யும் திறனைப் பெற்றிருக்கிறோம்.

பால் கொள்முதல் நாள் ஒன்றுக்கு 4 இலட்சம் லிட்டர் என்று 1980 ஆம் ஆண்டில் இருந்து நிலைமை மாறி, இன்றைக்கு 8 இலட்சம் லிட்டர் நாள் ஒன்றுக்குக் கொள்முதல் செய்யும் அளவிற்கு, 100 சதவீத வளர்ச்சியை நாம் பெற்றிருக்கிறோம்.

1980 ஆம் ஆண்டு 4 இலட்சம் விவசாயிகள் மட்டுமே இந்தத் துறையின் மூலம் பயன்பெறும் நிலையில் இருந்தார்கள். ஆனால் இன்றைக்கு 8 இலட்சம் விவசாயிகள் பயன் பெறுகின்ற நிலையில் முன்னேற்றத்தைக் கண்டிருக்கிறோம். ஆகவே, எல்லாத் துறைகளிலேயும் இந்த நான்காண்டுக் காலத்திலே வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பதனை இந்த நேரத்தில் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1983 ஆம் ஆண்டு — சென்ற ஆண்டு பால் வளத் துறையைப் பொறுத்தவரையிலே ஒரு பெருமைக்குரிய ஆண்டு என்று நான் கருதுகிறேன்.

அந்த ஆண்டில் எல்லா மாவட்டங்களிலேயும் புதிய புதிய வசதிகளைப் பால் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்குத் தமிழக அரசு உருவாக்கித் தந்திருக்கிறது.

திருவண்ணாமலை, சேத்தியா தோப்பு என்ற இரண்டு இடங்களில் கட்டி முடிக்கப்பெற்ற சில்லிங் செண்டர்கள் சென்ற ஆண்டு தொடங்கப்பட்டது.

அதைப்போல, திருவள்ளூர், பட்டுக்கோட்டை. புதுக்கோட்டை, செய்யாறு பக்கத்தில் உள்ள அனக்காவூர் ஆகிய இந்த நான்கு இடங்களில் புதிய குளிரூட்டும் நிலையங்களுக்குக் கட்டுமானப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு முடியும் நிலைமையில் இருக்கிறது.

இரண்டு புதிய பால் பண்ணைகள் சேலம், கிருஷ்ணகிரி என்ற இடங்களில் மாதிரி ஓட்டமாக ஓடிக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உதகமண்டலம், திருநெல்வேலி, காரைக்குடி ஆகிய மூன்று இடங்களில் புதிய பால் பண்ணைகளுக்கான கட்டுமானப் பணிகள் மிகவும் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

(முற்பகல் 11-50)

ஈரோட்டு நகரில், அதாவது பெரியார் மாவட்டத்தில் ஒரு உறைவிந்து நிலையம் திறக்கப்பட்டு அது செம்மையாக கால்நடை வளர்ச்சிக்குப் பயன்பட்டு வருகின்றது. 1983-ஆம் ஆண்டைப் பொறுத்தவரையில் இன்றைக்கு நாம் மன நிறைவு கொள்கின்ற வகையில் காரியங்களையெல்லாம் இந்தத் துறையிலே செய்து வருகிறோம். அதைப்போலவே உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்குச் செய்த சில நடவடிக்கைகளையும், நன்மைகளையும் சில காரியங்களையும் இந்தச் சபைக்குக் கொண்டுவருவது என்னுடைய கடப்பாடு.

பால் கொள்முதல் விலை ஏறக்குறைய ஒரு லிட்டருக்கு 35 பைசா வீதம் 1983 மே மாதம் முதல் உயர்த்தப்பட்டிருக்கின்றது எனது அன்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள் இங்கே பேசுகின்றபோது பால் விலையைக் கூட்டிக் கொடுக்க வேண்டும் என்றும், நியாயமான விலையை உற்பத்தியாளர்களுக்குக் கொடுத்தால்தான் அவர்களுக்கு உற்சாகம் ஏற்படுமென்றும் அவர்களுக்குநியாயமான ஊதியம் கிடைத்தால்தான் அவர்கள் அந்தத்தொழிலில் தொடர்ந்து ஈடுபட உதவும் என்றும் சொன்னார்கள். அந்த வகையில் மே மாதம் முதல் 35 பைசா ஒரு லிட்டருக்குக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். மேலும் விரைவிலே இதுபற்றி ஆய்ந்து அதற்குரிய விலையை அரசு கொடுக்க முன்வரும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அண்மைக் காலத்திலே வறட்சி ஏற்பட்டது வறட்சியின் போது ஏறத்தாழ 500 டன் கால்நடைத் தீவனம் சப்சிடைஸ்ட் ப்ரைஸ் என்ற அளவிலே கிலோ ஒரு ரூபாய்என்ற அளவில் இணையத்தின் வாயிலாக அதாவது ஃபெடரேஷன் வாயிலாக பால் உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டிருக்கின்றது. அண்மைக்காலத்திலே தஞ்சைப்பகுதியிலே பெரு வெள்ளத்தாலும் இயற்கையின் சீற்றத்தாலும் பாதிப்பு ஏற்பட்டபோது அங்கே கால்நடைகள்தான் பாதிக்கப்பட்டன, அந்தத் தஞ்சை விவசாயிகளுக்கு 330 டன் கால்நடைத் தீவனம் சலுகை விலையில் அளிக்கப்பட்டு பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கின்றது.

மேலும் கால்நடை விருத்திக்கு நவீன முறைகளில் ஏறக்குறைய 2 இலட்சம் செயற்கை முறைக் கருத்தரிப்பு, கடந்த ஆண்டிலே மட்டும் செய்யப்பட்டிருக்கின்றது. இதன் காரணமாக நல்ல வீரியம் உள்ள கால்நடைகள் ஏற்பட்டு, அதன் காரணமாக நல்ல உற்பத்தி ஏற்படுகின்ற சாத்தியக்கூறுகளை பால்உற்பத்தியாளர்களுக்காக உருவாக்கி இருக்கிறோம் என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து கன்ஸ்யூமர்ஸ் என்று சொல்லப்படுகின்ற பாலை வாங்கிச் சாப்பிடுகின்றவர்களைப் பொறுத்தவரையில் அதாவது நுகர்வோரைப் பொறுத்தவரையில் நகர்ப்புறத்தில் இருக்கின்ற பல இலட்சம் மக்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்திருக்கிறோம், பால் உற்பத்திக்கான மொத்தச் செலவு பெருமளவுக்கு அதிகரித்தபோதிலும் கூட இங்கே சென்னை போன்ற நகரங்களில் பாலின் விலையை ஏற்றவில்லை என்பதை இந்தச் சபைக்கு சொல்வது என்னுடைய கடமை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதாவது பால் கொள்முதல் செய்வதைப் பொறுத்தவரையில் அந்த விவசாயிகளுக்கு விலையைக் கூட்டிக் கொடுத்திருக்கிறோம். இதன் காரணமாக சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய் அளவுக்கு இழப்பு வருகின்றது என்றாலும் கூட கன்ஸ்யூமர்களுக்குப் பால் விலையை ஏற்றவில்லை, இவ்வாறு கொள்முதல் விலையை அதிகரித்தாலும் அந்தச் சுமையை நுகர்வோர் மீது வைக்கக்கூடாதென்பதற்காகத்தான் விலை ஏற்றப்படவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து அதிகக் கொழுப்புடன் உள்ள தரமான பால் இன்றைக்குக் கிடைக்கின்றது. அது சென்னையிலே விநியோகிக்கப்படுகின்றது. ஏனென்றால் சிலபேர் 6 சதவீதம் கொழுப்பு தேவை என்று சொல்கிறார்கள். எனவே அவர்களுடைய வசதியை அனுசரித்து அது கொடுக்கப்படுகின்றது. பால் ப்ளாஸ்டிக் பைகளில் பல மாவட்டங்களிலும், மேலும் அதிகமான இடங்களிலும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. அந்த வசதி ஏற்கெனவே சென்னையிலேயும், மதுரையிலேயும் மட்டும்தான் இருந்தது. ஆனால், இன்றைய தினம் மிகமிகச் சிறிய ஊர்களில் கூட அவ்வாறு ப்ளாஸ்டிக் பைகள் மூலமாக விநியோகிக்கின்ற முறையைப்

புகுத்தி இருக்கிறோம் என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதிகமான இடங்களில் முக்கியமாக சென்னையைச் சுற்றியுள்ள இடங்களில் எல்லாம் பால் வினியோகத்தைத் தீவிரமாக வளர்ப்பதற்குரிய முயற்சிகளை எடுத்துக்கொண்டு வருகிறோம். இன்றைக்கு 31 நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அதாவது மில்க் கன்ஸ்யூமர்ஸ் சொசைட்டி என்ற வகையில் ஏற்படுத்தபடுமென்று 1980-ஆம் ஆண்டிலே இந்த மாமன்றத்திலே முதல் முதலாக பால்வளத் துறை மானியக்கோரிக்கை வந்தபோது சொன்னேன். ஆங்காங்கே இருக்கின்ற பால் நுகர்வோர் சங்கங்களை அமைத்துக்கொண்டால் அவர்களிடத்திலே பாலை விநியோகம் செய்வது ஒப்படைக்கப்படுவதால் அவர்களுக்கு ஓரளவுக்கு லாபம் கிடைக்கும். மேலும் அந்த வகையிலே அவர்கள் மக்களுக்குச் சேவை செய்யக்கூடிய ஒரு புதிய வாய்ப்பு உருவாகும் என்று சொன்னேன். அந்த வகையில் நான்காண்டு காலத்திலே 31 சங்கங்கள் உருவாகியிருக்கின்றன. இன்றைக்கு ஏறத்தாழ் 150 வட்டங்கள் இருக்கின்றன. எனவே முடிந்த அளவில் வட்டத்திற்கு ஒரு சங்கம் என்ற வகையில் அமைப்பதற்கு சாத்தியமாகும் அளவிற்கு நிலைமைகளை உருவாக்கி இருக்கிறோம். அந்த வகையிலே இன்றைக்கு சென்னையிலே உருவாக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, இன்றையதினம் நம்முடைய மாதவரம் பிரச்னையைப் பற்றி அன்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர்கள் பரவலாகப் பேசினார்கள். அனைவருமே தங்களுடைய உணர்வுகளை எல்லாம் இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள். குறிப்பாக, அந்தப் பிரச்சனையிலே அரசினுடைய நிலைமையை நான் பல நேரங்களிலே தெளிவாக மன்றத்திற்கு எடுத்துச் சொல்லியிருக்கிறேன். நம்முடைய நண்பர்கள் தனியாக என்னைக் கலந்து இது சம்பந்தமாகப் பேசுகிற நேரத்திலேயும் நான் என்னுடைய உணர்வுகளை சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடுகள்) நல்ல, நியாயமான பதிலை என்றைக்குமே சொல்வது என்னுடைய மரபு, வாடிக்கை. நம்முடைய அன்பிற்குரிய மாண்புமிகு சோமு அவர்களும் நம்முடைய மாண்புமிகு அழகர்சாமி அவர்களும் இதுபற்றிச் சொன்னார்கள். இந்தப் பிரச்னை பற்றி 4 ஆண்டுக்காலமாக இரண்டு தரப்பிலே இருந்தும் பல நிலைகளை எடுத்து, கருத்துக்களை எல்லாம் நாட்டுக்கும் சொல்லியிருக்கிறோம். பத்திரிகையிலும் எழுதியிருக்கிறோம், இந்த மன்றத்திற்கும் சொல்லியிருக்கிறோம். அண்மையிலே ஒரு தீர்ப்பு வந்தது என்றும், அந்தத் தீர்ப்பை வைத்துக்கொண்டு அரசு மறுபரிசீலனை செய்து இன்றைக்கு வேலையிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்ட அந்தத் தொழிலாளர்களுக்கு ஒரு பாதுகாப்பு கொடுக்கக்கூடாதா என்ற வகையிலேமாண்புமிகு உறுப்பினர் நல்ல எண்ணத்தைச் சொன்னார்கள். ஆனால் அவர்கள் சொல்கின்ற நேரத்தில் சென்னை உயர்நீதிமன்றத்திலே நடைபெற்றது என்ன என்ற தகவலை இந்தச் சபைக்கு முழுமையாகச் சொல்லவில்லை என்று நான்கருதுகிறேன்.



சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பினுடைய அடிப்படை என்ன, சென்னை உயர்நீதிமன்றம் என்ன அரசுக்குச் சொல்லியிருக்கிறது என்ற விவரத்தை மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது என்னுடைய கடமை.

உயர்நீதிமன்றத்தீர்ப்பில் மாண்புமிகு நீதிபதி திரு.வெங்கடசாமி அவர்கள் தொழிலாளர் ஸ்டிரைக் பற்றிய பிரச்னையைத் தொழில் கோர்ட்டுக்கு அனுப்ப வேண்டுமென்று கூறி அரசுக்குத் தாக்கீது அளித்தார்கள் என்ற விவரத்தை இங்கே சொன்னார்கள். அப்படி இல்லை என்பதனை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு நீதிபதி வெங்கடசாமி அவர்கள் அரசைப் பார்த்து இந்தப் பிரச்னையைத் தொழில் கோர்ட்டுக்கு அனுப்புங்கள் என்று சொல்லவில்லை. அதற்கு மாறாக இன்றைக்கு உயர்நீதிமன்ற மாண்புமிகு நீதிபதி வெங்கடசாமி அவர்கள் என்ன தீர்ப்பை நல்கி இருக்கிறார்கள் என்றால், அரசு இப்பிரச்னையை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்பதாகும் அப்படித்தான் தெரிவிக்கப்பட்டிருக்கிறதே தவிர, உடனடியாக நீங்கள் அனுப்புங்கள் என்று சொல்லவில்லை. அதிலே சில சட்டப் பிரச்சினைகள் எங்கள் தரப்பிலேயும் இருக்கிறது, சொல்லுகின்ற அந்தத் தொழிற் சங்கத் தரப்பிலேயும் இருக்கிறது எனவே மீண்டும் நீங்கள் ஆய வேண்டுமென்ற அந்த அக்கறையின் மீதுதான் இன்றைக்கு ஒரு நிலையை அரசு எடுத்திருக்கிறதே தவிர, நீங்கள் சொல்வதுபோல் மாண்புமிகு நீதிபதி அவர்கள் சொல்லி இந்த அரசாங்கம் கேட்கவில்லை என்றோ, நீதிபதி ஏதோ தொழிலாளர்களுக்குச் சாதகமாகச் சொல்லி, அதனைப் புறக்கணிக்கின்ற அரசு நமது புரட்சித் தலைவர் அரசு என்ற ஒரு மயையை, அல்லது மயக்கத்தை, தமிழ்நாட்டிலே உருவாக்க வேண்டுமென்று திட்டமிட்டு சில நேரங்களிலே தொழில்சங்கவாதிகளால் செய்யப்படுகிறது.

ஆனால் நீதிமன்றம் சொன்னது அரசாங்கம் மீண்டும் ஒருமுறை பரிசீலனைசெய்ய வேண்டுமென்றுதான். ஏனென்றால், மாண்புமிகு நீதிபதி அவர்களுக்கு அந்த அதிகாரம் இருக்கிறது. உடனடியாக, இதனை தொழில்கோர்ட்டுக்கு ரெஃபர்செய்யலாம்என்று அவர்கள் சொல்லியிருக்கக்கூடும். ஆனால் அவர்கள் சொன்னதை இன்றைக்கு ஆய்ந்துப் பார்த்ததில். அரசினுடைய கருத்து இதுதான். வேறுசில சட்டப் பிரச்னைகளையும், மனிதாபிமான பிரச்னைகளையும் நிர்வாகப் பிரச்னைகளையும் அனுபவ பிரச்னைகளையும் ஒட்டு மொத்தமாக இதிலே பார்க்கவேண்டும். தொழிலாளர் பிரச்னையாக மட்டும் பார்க்காமல், ஏனென்றால் தொழிலாளர் பிரச்னை என்று அதை மட்டும் ஓர் அம்சமாக எடுத்துக்கொள்ள முடியாது. இன்றைக்குப் பால் வள நிறுவனம் என்பது தனியாருடைய நிறுவனம் அல்ல, இன்றைக்கு பால்வள நிறுவனம் என்பது 10 இலட்சம் விவசாயிகளுடைய நிறுவனம்— இது விவசாயிகளுடைய அற்புதமான அமைப்பு. படைக்கலன். இதனை சீர்குலைக்கவோ அல்லது குழப்பமோ செய்கின்றசக்தி, அது தொழிலாளர் பெயராலே இருந்தாலும் சரி, அல்லது நிர்வாகத்தின் பெயராலே இருந்தாலும் சரி, அனுபவ பூர்வமாக அவ்வளவு உகந்த

செயல் அல்ல. அந்த முறையிலேதான் இன்றைக்கு அரசாங்கம் பார்க்கிறது, இந்தப் பிரச்னையைத் தொழிலாளர் பிரச்னையாகவும் பார்க்கிறது. 10 இலட்சம் விவசாயிகளுடைய பிரச்னையாகவும் பார்க்கிறது, 10 இலட்சம் நுகர்வோர்களுடைய பிரச்னையாகவும் பார்க்கிறது, விநியோகம் செய்கின்ற நேரத்திலே அல்லது விவாதம் செய்கின்ற நேரத்திலே இது ஒட்டு மொத்தமான தொடர்புடையவைகளை உருவாக்குகின்ற காரணத்தாலே எங்களுடைய நிலைமையையும், இன்றைக்கு அமைதியாக எங்களுடைய அனுபவத்தைக் கொண்டு, நடைமுறையிலே சில விவரங்களை, விளக்கங்களை எடுத்து வைக்கிறோமே தவிர, மற்றபடி தொழிலாளர்களுக்குப் புறம்பாக இருக்க வேண்டுமென்றோ, அவர்கள் கண்ணீருக்கு நாங்கள் காரணமாக இருக்க வேண்டுமென்றோ அப்படிப்பட்ட உகந்த நிலையிலே இல்லை.

(நண்பகல் 12-00)

10 இலட்சம் விவசாயிகள் எங்களுடைய உள்ளத்திலே இருக்கிறார்கள். 10 இலட்சம் நுகர்வோர்களும் எங்களுடைய உள்ளத்திலே இருக்கிறார்கள். இப்படி ஒருங்கிணைந்த முயற்சியாக அந்தப் பிரச்னையை, மாதவரம் பிரச்னையை பார்க்கிற காரணத்தாலே, இன்றைக்கு எச்சரிக்கையாக, நிதானமாக, மிகுந்த பொறுப்புணர்ச்சியோடு அந்தக் கையாண்டுக்கொண்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே சொல்வது என்னுடைய கடமையாக கருதுகிறேன்.

அடுத்து ஒரு முக்கியமான திருப்பம் தமிழ்நாட்டினுடைய பால் வளத் துறையிலே இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. அந்தத் தகவலை இந்த நேரத்திலே சொல்வது பெருமைக்குரிய நிகழ்ச்சியாக கருதுகிறேன், தமிழ்நாட்டில் இன்றைக்கு ஒன்பது மாவட்டங்களில்தான் பால் வளப் பெருக்கத் திட்டம் ஃப்ளட் ஆப்பரேஷன்' இருக்கிறது. இதிலே ஒரு சீரான வளர்ச்சியில்லாமல் இருக்கிறது. ஏறத்தாழ ஆறு மாவட்டங்கள் திருநெல்வேலி, முகவை, கன்யாகுமரி, தஞ்சை, புதுக்கோட்டை, திருச்சி ஆகிய மாவட்டங்களில் Imbalanced growth இருக்கிறது. ஒன்பது மாவட்டங்களில் பெருவாரியான வளர்ச்சி: ஆனால் இந்த ஆறு மாவட்டங்களில் வளர்ச்சியே இல்லை. இந்த இடைவெளியை நீக்கவேண்டும் என்பதற்காக நான்கு ஆண்டுகளாக தமிழ்நாடு அரசு தன்னுடைய நிதியை ஒதுக்கி மாண்புமிகு அழகர்சாமி அவர்களுக்கு தெரியும்—திருநெல்வேலியில் ஒரு கோடி ரூபாயில் பால் வளத் திட்டம்; அதேபோல காரைக்குடியில் ஒரு கோடி ரூபாயில் பால் வளத் திட்டம்; தஞ்சையிலே பட்டுக்கோட்டையில் ஒரு புதிய முயற்சி; திருச்சியிலே தமிழக அரசினுடைய சார்பாக சில முயற்சிகள்: புதுக்கோட்டையில் ஒரு முயற்சி என்று நான்காண்டுகளில் எடுத்த இந்த நிலையை வேகப்படுத்த வேண்டும் என்பதற்காக இன்றைக்கு என்.டி.டி.பி. அதாவது நேஷனல் டைரி டெவலப்மெண்ட் போர்டு என்ற மத்திய அரசின் நிறுவனத்திற்கு ஒன்பது மாவட்டங்களைப் போலவே, இந்த மாவட்டங்களையும் ஃப்ளட் ஆப்பரேஷனில் சேர்த்துக்கொண்டு, பெருவாரியான நிதியைக் கொடுத்து; கோவையிலே எப்படி இருக்கிறதோ, நீலகிரியில் எப்படி இருக்கிறதோ, பெரியார் மாவட்டத்தில் எப்படியிருக்கிறதோ தென்னாற்காட்டில் எப்படி இருக்கிறதோ அதைப்போல பெருவாரியான நிதியைவைத்து அவர்கள் எப்படி வேகமாக வளர்கிறார்களோ. அப்படி இந்த சோழ மண்டலம் என்று சொல்கிறோமே, திருச்சி, தஞ்சை, புதுக்கோட்டை ஆகிய மூன்று மாவட்டங்களையும் இந்த 'ஃப்ளட் ஆப்பரேஷனில்' இந்தப் பால் வளப் பெருக்கத் திட்டத்தில் சேர்க்க வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் கடந்த நான்கு ஆண்டுகளாக மத்திய அரசை வற்புறுத்தினார்கள். மத்திய அரசு அண்மையில் தமிழக அரசிற்கு, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு ஒரு நல்ல செய்தியை அளித்திருக்கிறது. இந்த மூன்று மாவட்டங்களும் இன்றைக்கு சேர்க்கப்பட்டிருக்கின்றன. 10 கோடி ரூபாய் இதற்காக அவர்கள் ஒதுக்கி இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். திருச்சி தஞ்சை, புதுக்கோட்டை ஆகிய மூன்று மாவட்டங்களும் விடுபட்ட மாவட்டங்களாக இருந்தன. இங்கே ஏறத்தாழ ஒரு லட்சத்து 50 ஆயிரம் லிட்டர் பால் பக்குவப்படுத்துவதற்கு, பால் பண்ணைக்கு 10 கோடி ரூபாய் கேட்டிருக்கிறோம். அதுமட்டுமல்லாமல் ஏறத்தாழ 900 புதிய சங்கங்களுக்கு, அந்தச் சங்கங்களுக்கு வேண்டிய தளவாடங்களுக்கு, வசதிகள், வாய்ப்புகள் உருவாக்க அவர்கள் நிதி வசதி உருவாக்கி இருக்கிறார்கள். அந்த வகையிலே இந்த ஆண்டு நம்முடைய பால் வளத்துறையைப் பொறுத்தவரையில் 10 கோடி ரூபாயில் திருச்சி, தஞ்சை, புதுக்கோட்டை ஆகிய மூன்று மாவட்டங்களில் 900 பால் கூட்டுறவுச் சங்கங்களின் வாயிலாக ஏறத்தாழ ஒரு லட்சத்து 50 ஆயிரம் லிட்டர் உற்பத்தி செய்து, அங்கே ஒரு பால் பண்ணை உருவாக்க வேண்டிய வசதிகளை அந்த விவசாயிகளுககு விரிவாக்குவதற்கு இன்றைக்கு மத்திய அரசு அனுமதி அளித்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அனுமதியை என்.டி.டி.பி அளித்து இருக்கிறது. அதற்காக என். டி. டி. பி. பொறுப்பிலே இருக்கிற நம்மிடைய தமிழகத்தைச் சேர்ந்த அன்பிற்குரிய டாக்டர் கொரியன் அவர்களுக்கு நான் தமிழக அரசின் சார்பாக, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் சார்பாக நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.



அதேபோல இன்றைக்கு ஏற்கனவே செயல்பட்டு வருகிற பகுதிகளில், சேலம், ஈரோடு போன்ற பகுதிகளில், இது வரையிலும் ஏறத்தாழ 42 கோடி ரூபாயிலேதான் அவை செயல்பட்டு வந்தன. அதிலே 18 கோடி ரூபாய் அதிகமாக அளித்து இன்றைக்கு 60 கோடியாக இந்தத் திட்டத்தை விரிவு செய்து, ஏராளமான வசதிகளை வருகிற ஆண்டுகளில் செய்வதற்கு ஃப்ளட் ஆப்பரேஷன் 2-லே அவர்கள் அனுமதி அளித்திருக்கிறார்கள். அதற்கு 60கோடி ரூபாயாகும்; அதைப்போல மூன்று மாவட்டங்களுக்கு பத்துகோடி ரூபாய்; ஆகவே ஏறத்தாழ 70 கோடி ரூபாய் அளவிற்கு இந்த இரண்டாவது பால் பெருக்கத் திட்டம் நடைபெறவிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே, வருகிற ஆண்டில் தென் சென்னையிலே ஒரு பால் பண்ணையை நான்குகோடி ரூபாய் செலவில் அமைக்கும் கருத்துருவை சில நாட்களுக்கு முன் வைத்து இருக்கிறேன். அது விரைவிலே கட்டிமுடிக்கப்படும் வகையில் 4கோடி ரூபாய் செலவில் அந்தப் பால் பண்ணையை நாம் தென் சென்னையிலே உருவாக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கிறோம் இப்படி பலப்பல காரியங்களை பால்பண்ணை வாயிலாக நாம் செய்துவருகிறோம்.

இதன் காரணமாக 4 இலட்சம் விவசாயிகள் பயன்பெற்று இருந்த நிலைமை மாறி, இன்றைக்கு 8 லட்சம் விவசாயிகள் பயன் பெற்று வருகிற நிலை வந்திருக்கிறது. 4 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்யும் நிலை மாறி இன்றைகு 8 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தியாகும் நிலைமை இருக்கிறது. ஆகவே, பால்வளத் துறை மிகுந்த நம்பிக்கைத் தருகின்ற அளவிற்கு இந்த நான்கு ஆண்டுகளாகச் செயலாற்றி வருகிறது என்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

பத்திரப் பதிவு, முத்திரைத்தாள்கள் மானியக்கோரிக்கை மீது மாண்புமிகு உறுப்பினர்கள் நல்ல பயன்தரு ஆலோசனைகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இங்கே என் இனிய நண்பர் சோமு அவர்கள் பத்திரப்பதிவுத்துறைப் பற்றியக் கருத்துக்களைச் சொல்கிற நேரத்தில் வருமான வரிச் சட்டத்திலே இருக்கிற சில சங்கடங்களையும், சிக்கல்களையும் நீக்கவேண்டும் என்று சொன்னார்கள். அந்தப் பிரச்னை த்மிழக அரசின் உள்ளத்திலும் சில நாட்களாக வாட்டிக்கொண்டு இருக்கிறது. மத்திய அரசுக்கு இது சம்பந்தமாக தமிழக அரசு ஒரு நிலையைச் சொல்லி, அதிலே மாறுதலை செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல், அந்தச் சொத்துக்களின் மதிப்புகள் எல்லாம் இந்த 10 ஆண்டுக்காலத்தில் முன்பு இருந்ததை விட மாறி இருக்கிறது, முன்பு 20 ஆயிரம் ரூ. என்று இருந்த மதிப்பு இன்றைக்கு 1 லட்சம் அளவிற்கு மாறியிருக்கிறது, 1 லட்சத்திற்கு இருந்த மதிப்பு இன்றைக்கு 10 லட்சம் அளவிற்கு மாறியிருக்கிறது. ஆகவே, இதற்கு வருமான வரிச் சட்டத்திலே 50,000 என்று வரையரை வைத்து இருப்பது இந்தக் காலத்திற்கு ஒவ்வாதது. தற்போதுள்ள காலத்திற்கு ஏற்றவகையில் அது மாற்றியமைக்கப்பட வேண்டும். தமிழக அரசு டெல்லியிலுள்ள அரசை வற்புறுத்தி கடிதம் எழுதியிருக்கிறோம். அண்மையில் ஒரு நல்ல செய்தி டெல்லியிலிருந்து நமக்குக் கிடைத்திருக்கிறது. வருமான வரிச் சட்டம் 230(ஏ) பிரிவில் 50,000ரூ. என்று இருப்பதை 1 லட்சம் ரூபாய் என்ற அளவிற்கு உச்சவரம்பை உயர்த்த வேண்டும் என்று தமிழக அரசு பரிந்துரை செய்ததை மத்திய அரசு பரிசீலித்து வருவதாக இந்திய நிதி அமைச்சர் அவர்கள் சமீபத்தில் பாராளுமன்றத்தில் அறிவித்துள்ளார்கள் என்ற தகவல் நமக்குக் கிடைத்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் சோமு அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன்.



சீட்டுக் கம்பெனியைப் பற்றி சில புள்ளி விவரங்களையெல்லாம் நடைமுறையில் உள்ள சிக்கல்களைப் பற்றி எல்லாம், சட்டத்தில் உள்ள சந்துபொந்துகளின் காரணமாக குற்றவாளிகள் தப்பித்துக் கொள்கிறார்கள். தண்டிக்கப்பட்ட குற்றவாளிகள் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது என்றும் கொள்கை விளக்கக் குறிப்பிலே கொடுக்கப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் இங்கேஎடுத்துச் சொன்னார்கள். இரண்டு ஆண்டுகளாக அப்படிப்பட்ட நிலைமைகளைத் தவிர்ப்பதற்காக நாம் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். தற்போது மத்திய அரசாங்கம் ஏப்ரல் மாதம் 13—ஆம் தேதி ஒரு புதிய சட்டத்தைக் கொண்டு வந்து இருக்கிறார்கள். அது தமிழ் நாட்டிற்கு மட்டுமல்ல, இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கின்ற 22 மாநிலத்திற்கும் பொருந்தும் வகையில் அந்த மத்தியச் சட்டம் வந்திருக்கிறது. அந்த மத்திய சட்டத்தின் பயனாக தவறுகள் நிச்சயமாக தடுத்து நிறுத்தப்படும்.

தமிழ்நாட்டில் இன்று சேமிக்கும் பழக்கமுடைய பல சொந்தக்காரர்களுக்கும், ஏழை எளிய மக்களுக்கும் உதவும் வகையில் தமிழ்நாடு சீட்டுக் கார்ப்பரேஷன் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இன்றைக்கு தமிழ்நாடு சீட்டு நிதி சட்டப்படி பார்த்தால், சீட்டு நடத்துகிறவர்கள் தவறு செய்தால் ரூ. 100 மட்டுமே அபராதம் விதிப்பது என்று இருக்கிறது. மத்திய அரசு சட்டத்தைப் பொறுத்தவரையில், இப்படிப்பட்ட குற்றங்களுக்கு அபராதத் தொகையோடு, சிறை தண்டனையும் கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. தமிழ்நாடு சட்டப்படி இந்தக் குற்றங்கள் 'நான்-காக்னிசிபிள்' என்று உள்ளது. மத்திய அரசு புதிய சட்டப்படி இந்தக் குற்றங்கள் 'காக்னிசிபிள்' என்று இருக்கிறது. நம்முடைய சட்டப்படி குற்றவாளிகள் தப்பித்துக்கொண்டதற்குக் காரணம் அந்தக் குற்றங்கள் நான்-காக்னிசிபிளாக' இருந்ததுதான். இப்போது அந்தக் குற்றங்கள் 'காக்னிசிபிளாக' ஆக்கப்பட்டு விட்டதால், அது கடுமையான முறையில் இருப்பதால், குற்றவாளிகள் தப்பிக்க முடியாமல் இருப்பதற்கு அது ஒரு நல்ல சுற்றுச் சுவராக அரணாக இருக்கும். ஆகவே, ஏற்கனவே இருந்த குறைகள் இந்த புதிய மத்தியச் சட்டத்தின் மூலம் தவிர்க்கப்பட்டு இருப்பதால், குற்றவாளிகள் தப்பிக்க முடியாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் ஹேமச்சந்திரன் அவர்களும், மணி அவர்களும் மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தில் இருந்து வருகிற மாண்புமிகு உறுப்பினர்களும், கேரள மாநிலம் அண்மையில் இருப்பதால், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பத்திரப் பதிவு நிலவரத்தை கடந்த இரண்டாண்டுகளாக எடுத்துச் சொல்லி வருகிறார்கள். தமிழ்நாட்டில் உள்ள சொத்துக்களின் மீதான பத்திரப் பதிவுகளை அந்த மாவட்டத்தில் உள்ளவர்கள் கேரள மாநிலத்திற்குச் சென்று, செய்துகொண்டு வருகிறார்கள்.

ஏனென்றால் அங்கே குறைவாக இருக்கிறது; தமிழ்நாட்டில் அதிகமாக இருக்கிறது. அதனால் கேரளத்தில் ரெஜிஸ்டிரேஷன் செய்து, நம்முடைய வருமானத்தை இழந்துவிடுகிறோம் என்று சொன்னார்கள். அதன் அடிப்படையிலே நாம் மத்திய சர்க்காருக்கு எழுதியிருக்கிறோம். ஏனென்றால் இது இரண்டு மாநிலங்கள் சம்பந்தப்பட்டதாக இருக்கிறது. ஆகவே மத்திய சர்க்கார் இந்திய முத்திரைத்தாள் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அது மைய அரசின் பரிசீலனையில் இருக்கிறது. நாம் தொடர்ந்து பரிசீலனை செய்துக்கொண்டிருப்பதால் அந்தப் பலவீனத்தை விரைவிலே போக்கி, கேரளத்திற்குப் போகிற அந்த வருமானத்தை தமிழ்நாடே தக்கவைத்துக்கொள்ள எல்லா முயற்சிகளையும் எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12–10)

பால்வளத் துறையைப் பற்றிப் பேசும்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. சோமு அவர்களும், திரு. அழகர்சாமி அவர்களும் பேசும்போது பல கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். குறிப்பாக திரு. சோமு அவர்கள் சென்னையில் பால் விநியோகம் செய்யும் லாரிகளுக்கு 250 ரூபாய் வாடகை கொடுக்கப்படுகிறது என்ற தகவலைக் கொடுத்தார்கள். ஆனால் எனக்கு கிடைத்திருக்கிற தகவல் 180 ரூபாய்தான் கொடுக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு திரு. சோமு அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்..

இன்னொரு த வலையும் அளித்தார்கள். தினசரி சென்னையில் 5,000 லிட்டர்பால் வீணாக்கப்படுகிறது என்று சொன்னார்கள். அது சரியான தகவல் அல்ல என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் சில நேரங்களில் மின் அழுத்தம் திடீரென்று குறைவதால், இப்படிப்பட்ட நேரங்களில் பிளாஸ்டிக் பைகள் சரியாக சீல் செய்யப்படாமல் பால் ஒழுகும் நிலை ஏற்படுகிறது. அம்மாதிரி ஒழுகும் பாலையும் சேகரித்து, மீண்டும் பயன்படுத்துகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

அதைப்போன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள் சொல்லுகிறபோது கோவில்பட்டியில் ஒரு குளிரூட்டும் நிலையம் வேண்டுமென்று சொன்னார்கள். எட்டயபுரத்தில் தினசரி 4,000 லிட்டர் பாலை குளிரூட்டும் நிலையம் விரைவில் அமைக்கப்படும் என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்,



திரு. கே. எம், தங்கமணி அவர்கள் திண்டிவனத்தில் ஐ.ஆர்.டி.பி. திட்டத்தின் கீழ் ஒரு குளிரூட்டும் நிலையத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டார்கள். திண்டிவனத்தைப் பொறுத்தவரையில் ஐ.ஆர்.டி..பி. திட்டத்தின் மூலம் தினசரி 10,000 லிட்டர் பாலை குளிரூட்டும் சில்லிங் சென்டர் விரைவில் உருவாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள் பால் கொள்முதல் விலை குறைவாக இருக்கிறது, கட்டுபடியாக வில்லை, உற்பத்தியாளர்களுக்கு கட்டுபடியாகக் கூடிய விலை கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். கட்டுபடியாகக் கூடிய விலைதான் கொடுக்கிறோம். அதிகமாக உற்பத்தியாகக் கூடிய காலத்தில் ஒரு விலை நிர்ணயம் செய்து கொடுக்கிறோம்; மற்ற காலங்களில் ஒரு விலை நிர்ணயம் செய்து, அதன்படி கொடுத்து வருகிறோம். நமக்கு கிடைக்கிற பாலின் அளவைப் பொறுத்து விலை நிர்ணயம் செய்கிறோம். அந்த வகையில் நிச்சயமாக உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படாத அளவுக்கு விலை நிர்ணயம் செய்து கடந்த காலத்திலும் கொடுத்திருக்கிறோம், இந்த ஆண்டும் கொடுப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அளவில் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பல்வேறு நல்ல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அவற்றை எல்லாம் மனதிலே வைத்து தொடர் நடவடிக்கை எடுப்போம் என்று சொல்லி, முத்திரைத் தாள்கள்—நிர்வாகம், பத்திரப் பதிவு பால் வழங்கு திட்டங்கள் ஆகிய இந்த மூன்று மானியக் கோரிக்கைகளையும், அவைகளுக்குக் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் பெருந்தன்மையோடு திரும்பப் பெற்றுக்கொண்டு, நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

திரு. என். வி. என். சோமு: துணைத் தலைவரவர்களே. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே அந்த வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களைப்பற்றி பேசும்போது நீதி மன்றத்திலே நீதிபதிகள் அளித்த தீர்ப்பைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். நீதிமன்றத்திலே தொழிலாளர்கள் சார்பில் கொடுக்கப்பட்ட மனுவில்,

"..To dir-ct the First Respondent to refer the dispute relating to the non-employment of the members of the Petitioner Union for adjudication under the, Companies Act."

என்றுதான் இருக்கிறது. இறுதியிலே நீதிபதி வெங்கடசாமி

அவர்கள் "The Writ Petition is allowed. . ." என்று சொல்லியிருக்கிறார்கள். அட்ஜுடிகேஷனுக்கு அனுப்ப உத்தரவிட வேண்டுமென்பதை ஏற்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகுதான் அப்பீலுக்கு சென்றிருக்கிறீர்கள். கருணையோடு நடவடிக்கை எடுக்கின்ற அமைச்சர் அவர்கள் அந்தத் தொழிலாளர்கள் பிரச்சனையையும் கருணையோடு அணுகிப் பார்த்து, அவர்களை வேலையில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நீதிபதி வெங்கடசாமி அவர்கள் அளித்த ஒரு தீர்ப்பினுடைய சில அம்சங்களை விவரங்களை சொன்னேன். மாண்புமிகு நீதிபதி வெங்கடசாமி அவர்கள் அரசாங்கத்திற்கு தெரிவித்த ஆணையினை மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

Extract from Mr. Justice Venkatasamy's judgment.

However the consequent prayer or mandamus directing the government to refer the matter to a competing tribunal is not given.— "..The First Respond nt i.e. the Government, the First Respondent is directed to consider the matter afresh, in the light of the principles laid down in the various judgments referred to in this order and pass orders in accordance with the law." என்று மறுபடியும் பரிசீலனை செய்யுங்கள். என்று சொன்னார்களேயொழிய, தொழில் கோர்ட்டுக்கு அனுப்புங்கள் என்று தமிழக அரசிற்கு மாண்புமிகு நீதிபதி அவர்கள் எந்த கட்டளையையும் இடவில்லை. எனவே தான் பரிசீலனை செய்த பிறகு, மீண்டும் நீதிமன்றத்திற்குச் சொல்லி—தமிழக அரசின் சார்பாக தகவலைச் சொல்லி— எங்களுடைய நிலைமைகளை வற்புறுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம்.

திரு. எல். இளையபெருமாள்: துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அரசாங்கத்திலுள்ள எல்லா டிபார்ட்டுமெண்டு அதிகாரிகளுக்கும் Promotion for S.Cs/S.Ts. கொடுக்கவேண்டுமென்று சொல்லி தாக்கீது கொடுத்து......
(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அது இதிலே வராது. (குறுக்கீடு) எல்லா உறுப்பினர்களும் இதிலே கருத்து கொண்டிருக்கிறார்கள். நீங்கள் மீண்டும் என்ன சொல்கிறீர்கள். மற்ற உறுப்பினர்களுக்கு இந்த அக்கறை இல்லை என்றா அர்த்தம்? நீங்கள் மட்டும்தான் பேச வேண்டுமா? All members are interested in their welfare. All are championing their cause.





எல்லோரும்தான் ஓட்டுவாங்கி வரவேண்டும். இதே பிரச்சினையைப் எந்த மான்யம் வந்தாலும் சொல்கிறீர்கள்.

திரு. எல். இளையபெருமாள்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்களுக்கும் அக்கறை உண்டு. எல்லோருக்கும் அக்கறை உண்டு. இல்லையென்று சொல்லவில்லை. இந்த மாதம் 10-ம் தேதி மக்கள் குரல் பத்திரிகையில் வந்திருக்கிறது. முதல்வர் அவர்கள் எல்லா அரசுத் துறை அதிகாரிகளுக்கும் தாக்கீதுகள் அனுப்பி, Reservation should be made in promotion for Scheduled Castes and Scheduled Tribes என்று வந்திருக்கிறது.

அதுபோலவே நம்முடைய அமைச்சரவர்கள் சென்ற ஆண்டிலே இதற்குப் பதில் சொன்னார். இம்மாதிரி குறைகள் இருந்தால் கண்டிப்பாக கண்டித்துச் சொல்லி, அவர்களுக்குப் பிரமோஷன் கொடுப்பதாகச் சொன்னார்கள். ஆனால் இன்று வரையிலும் அவர்களுக்குக் கொடுக்கவில்லை. வருங்காலத்திலாவது கொடுப்பதற்கு ஆவன செய்வார்களா? முதலமைச்சர் அவர்கள் சொன்னதை, உங்களுடைய டிபார்ட்டுமெண்டிலே செய்வதற்கு தாக்கீது அனுப்பியிருக்கிறீர்களா? அல்லது மேற்கொண்டு செய்வீர்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மீண்டும் சில தகவல்களை அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அந்தத் தகவலின் அடிப்படையிலே, தொடர் நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது; இப்போது வாக்கெடுப்பு.

கோரிக்கை எண் 5—முத்திரைத்தாள்கள்—நிர்வாகம்

திரு. பெ. சு. திருவேங்கடம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றது.

திரு என். எஸ். வி. சித்தன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றதாகக் கருதப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—"மானியக் கோரிக்கை எண் 5—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 99,81,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுச்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண்.6 —பத்திரப்பதிவு

திருவாளர்கள் என். எஸ். வி. சித்தன், பெ. சு. திருவேங்கடம் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—''மானியக் கோரிக்கை எண்.6—பத்திரப்பதிவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 5,31,40,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 10—பால் வழங்கு திட்டங்கள்

திரு. என்.எஸ். வி. சித்தன் அவர்களுடைய வெட்டுத்தீர்மானம் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது.

திருவாளர்கள் கெ. சொக்கலிங்கம், என். பழனிவேல் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாகக் கருதப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—''மானியக் கோரிக்கை எண்.10—பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,28,10,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்ப்பெற்றது.

(பிற்பகல் 12-20)

(ஈ) கோரிக்கை எண். 48 —கிராமத் தொழில்கள்

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 48-கிராமத் தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ.9,43,82,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.'',



13625 சென்னை 600 009

THIRU N.S.V. CHITHAN: Sir, to discuss, policy, I move—

''that the allotment of Rs 9,43,82,000 under Demand No. 48 Rural Industries be reduced by Rs.100''.

(உ) கோரிக்கை எண். 56—கிராமத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 56—கிராமத் தொழில்கள் குறித்தமூலதனச்செலவுஎன்றதலைப்பின்கீழ் ரூ.1,29,34,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்''

THIRU N.S.V. CHITHAN: Sir to discuss policy, I move—

''that the allotment of Rs.1,29,34,000 under Demand No-56Capital outlay on Rural Industries be reduced by Rs.100'',

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் முன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூறவிரும்பினால் கூறலாம்,

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில்கொள்கையும் திட்டங்களும் *என்பது பற்றிய குறிப்புகளும், விளக்கங்களும் பேரவை முன் வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை எல்லாம் நான் படித்ததாகக் கருதி அவைக்குறிப்பிலே ஏற்றுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லுகின்ற ஆலோசனைகளையும் கருத்துக்களையும் கேட்டபின்பு, இறுதியாக என் கருத்துக்களை எடுத்து வைக்கவிரும்புகிறேன்.

திரு. பாபு ஜனார்த்தனன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில் கொள்கையும் திட்டங்களும் என்ற தலைப்பின் கீழ் மானியமாகவும், மூலதனமாகவும் 10 கோடிக்கு மேல் கொடுக்கப்பட்டு இருக்கின்ற இந்த திட்டங்களுக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

பொதுவாக இந்த கிராமத் தொழில் திட்டத்தில் ஈடுபட்டு இருக்கின்ற தொழில் முதலீட்டு நிறுவனம், தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம், இந்திய சிறு தொழில் நிறுவனம் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் என்றஎண்ணத்தில் மானியமாகவும், மூலதனமாகவும் கொடுக்கப்படுவது 10 கோடியாக இருந்தாலும், இந்த நிறுவனங்களின் மூலம் இந்தகிராமத் தொழில்களுக்கு சற்றேறக்குறைய 200 கோடிக்கு மேல்

* 877-543ம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

N84.67.2 A N84 V21/91

தொழிலில் முதலீடு செய்து பயன் அடைகிறார்கள். இந்தத் திட்டங்கள், ஏழை எளிய மக்களுக்காக உருவாக்கப்பட்டன என்றாலும், இன்றைய தினம் நடை முறையிலே இருக்கின்ற நிலைமைகளைப் பார்க்கின்றபோது, இதிலே பெரிய சிக்கல்களும், இன்னும் சொல்லப் போனால் எந்த ஏழைகமக்களுக்காக அவர்களுடைய உயர்வுக்காக, அவர்களுடைய வளர்ச்சிக்காக இந்த திட்டங்கள் கொண்டு வரப் பட்டனவோ, அவர்கள் மிகச் சுலபமாக இதிலே டலன் பெற முடியவில்லை என்பதைத்தான் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நாட்டுடமையாக்கப்பட்ட தேசிய வங்கிகள், இதிலே மிக உயர்ந்த நிலையிலே, 1,500 ரூயாய் 2,000 ரூபாய் என்று சம்பளம் பெறுகின்ற அதிகாரிகள் கூட இந்தத் தொழில் முதலீட்டுக்காக அவர்களை அணுகுகின்றபோது, எப்போதும் இல்லாத அளவிற்கு இன்றையதினம் நாட்டுடமையாக்கப்பட்ட தேசிய வங்கிகள் மூலம் தொழில் செய்ய அவர்களை அணுகினால் அவர்கள் இன்றைய தினம் கையூட்டுப் பெறுகின்ற அளவிற்கு எல்லா இடத்திலேயும் பரவலாக இருக்கிறது என்பதை நான் அவர்கள் மீது குற்றச்சாட்டாக சொல்லவில்லை. நாட்டு நிலைமைகளை, நடைமுறையிலே இருக்கின்ற உண்மையைச் சொல்கிறேன். சாதாரண நிலைமையிலே, குறைந்த சம்பளத்தில் இருப்பவர்கள் தங்களுக்குப் போதவில்லை, ஆகவே அவர்களிடத்திலே ஏதோ பெற்றுக்கொள்ளலாம் என்று எண்ணினாலும் கூட, அதுவே தவறு என்கிறோம். அதைக்கூட மன்னித்து விடலாம். ஆனால் தேசிய வங்கிகள் என்று சொல்லப்படுகிற அந்த நிறுவனங்கள், இந்த ஊரக தொழில் செய்வதற்காக அவர்களை அணுகுகின்றபோது, அவர்கள் எந்த அளவிற்கு கேட்கிறார்கள் என்றால், 3 ஆயிரம் ரூபாய் கடன் தருகிறார்கள் என்றால், அதிலே 400 ரூபாய் 500 ரூபாய் அளவிற்குப் பெறுகின்ற நிலைமை இருக்கிறது. அந்த அளவிற்கு வங்கிகள் இன்று கெட்டிருக்கின்ற நிலைமையை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இன்னும் சொல்லப் போனால் தேசிய வங்கிகள் கடந்த ஒரு வார காலமாக, கடன் உதவி பெற்று தொழில் செய்ய முன் வருபவர்களிடம் சில கட்சிகள் நாங்கள் தான் ஏகபோக உரிமையாளர்கள். எங்களுடையது தான் வங்கி. நாங்கள் சொல்பவர்களுக்குத்தான் கொடுப்பார்கள். ஆகவே எங்களுடைய கட்சியிலே உறுப்பினராகுங்கள். எங்களிடமிருந்து ஃபாரம் வாங்கி எங்களிடத்திலே கையெழுத்து வாங்குங்கள் என்று இன்றையதினம் சில கட்சிகள்,—நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்பவில்லை—தேசிய வங்கியில் கடன் பெறுவதற்கான



பாரங்களை வெளியே இருக்கிற அச்சகங்ககளில் அச்சடித்து வைத்துக் கொண்டு, ஏழை எளிய மக்களிடத்திலே அதற்காக 2ரூ, 3ரூ. 5ரூ என்று வாங்கிக் கொண்டு, அந்தக் கட்சியிலே உறுப்பினராகுங்கள் என்று தைரியமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். கடனைப் பெறுகிறார்களோ; பெறவில்லையோ அந்த ஏமாற்றுவித்தை இந்த நாட்டிலே நடக்கிறது. அதை அரசு கண்டுபிடித்து தண்டிக்க வேண்டும் என்பதுதான்.... (குறுக்கீடு)

கட்சியை குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்றால்? உடனே ஆதாரம் எங்கே என்பார்கள்? இங்கே இருக்கிற அத்தனை உறுப்பினர்களுக்கும், நாட்டிலே உள்ள அத்தனை பேர்களுக்கும் அது தெரியும். அதைச் சொல்லித்தான் ஆக வேண்டும் என்றால், அதற்கு அவசியமில்லை, அவர்களுடைய மனசாட்சிக்குத் தெரியும். ஆக இப்படிப்பட்ட நிலைமைகளில் தொழில் செய்வதற்காக வருகின்றவர்களுக்கு பெரிய சங்கடங்கள் ஏற்பட்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல சிறிய அளவிலே தான் நாம் ஒன்றியங்களிலே இருந்து சிறு தொழில்களுக்காக உதவி பெறமுடிகிறது. ஒன்றியங்களிலேயிருந்து பெறுகிறோம் என்று சொன்னால், அங்கே மானியம் கிடைக்கிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்கள் கூட சொன்னார்கள். ஆதிதிராவிட மக்களுக்கு அதிலே நன்மை இல்லை. அவர்களுக்கு கொடுக்கின்ற கடனை ரத்து செய்ய வேண்டும். அவர்கள் நல்முறையில் வாழ முடியவில்லை என்ற கருத்தைச் சொன்னார்கள். ஆனால் அப்படி மானியங்கள் தரப்படுவதற்குக் கூட, ஏதாவது அவர்களை கொஞ்சம் கவனித்தால்தான் பெற முடியும் என்ற நிலைமை இருக்கிறது, என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். அந்தக் குற்றச்சாட்டு அங்கே இருக்கிறது.

ஆனால் பெறுபவர்களிடம் குறைபாடு இல்லையா என்றால், குறைபாடு அவர்களிடமும் இருக்கிறது. இப்படி பெறுபவர்கள் கூட வாங்கிய கடனை நல்ல முறையில் செலுத்த வேண்டும் என்ற அளவிலே செய்தால் ஒழிய, சிறு தொழில் நிறுவனங்கள், தொழில்நிறுவனங்கள், இந்திய சிறு தொழில் நிறுவனங்கள், நாட்டுடமையாக்கப்பட்ட தேசிய வங்கிகள் மூலம் தரப்படுகின்ற கடன்கள், நாட்டுமக்களுக்கு நல்ல முறையில் பயன் அளிக்காது. ஆகவே அவைகள்பயன் அளிக்கின்ற வகையிலே செயல்படுவதற்கு, இதில் நாம் சர்வகட்சி அமைப்பில் ஒரு அமைப்பு ஏற்படுத்தி, மக்களுக்கு உண்மையான பலன் கிடைக்கும் எப்படி செய்தால் என்று புனர் ஆலோசனை செய்ய வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொளகிறேன்.

அடுத்து ஊரக வளர்ச்சி தொழிலிலே பல்வேறு தொழில்கள் இருக்கின்றன. அந்த தொழில்களுக்கு அரசு ஆதரவு தருகிறது. வங்கிகள் ஆதரவு தருகிறது. அதன் மூலம் ஏழை எளிய மக்கள் பலர் பயனடைகின்றார்கள். அதில் குறிப்பாக தீப்பெட்டித் தொழிலை எடுத்துக் கொண்டால் கிராமங்களிலே இருக்கிற ஏழை எளிய மக்கள் நல்ல முறையில் பயன் அடையக்கூடிய அளவுக்கு ஒரு தொழிலாக அது இருக்கிறது. குறிப்பேட்டிலே குறிப்பிட்டிருப்பதைப் போல மகளிர்கள் சங்கங்களாக அங்கே 279 சங்கங்களும், ஆதித்திராவிடர் சங்கங்களாக 57 சங்கங்களும், உடல் ஊனம் உற்றோர் சார்பாக 1 சங்கமும், முன்னாள் ராணுவத்தினர் 2 சங்கங்களும், மற்றவர்கள் 100 சங்கங்களும் வைத்திருக்கிறார்கள். என்ற அளவிலே அந்தத் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் பல்வேறு இடங்களிலே அமைக்கப்பட்டுள்ளன.

கிராமங்களிலே உள்ள ஏழை எளிய மக்கள் அந்தக் குச்சிகளிலே மருந்திட்டு, பெட்டிகளிலே அடைத்து, ஓரளவிற்கு வருமானம் பெறுகிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. அது அதிகமாக தமிழகத்திலே குறிப்பாக வட ஆற்காடு மாவட்டத்திலே குடியாத்தத்திலே மிக நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. ஆனால் அவைகள் எல்லாம் தனியார்களிடம் இருக்கின்றன. ஆகவே, அந்தத் தொழிற்சாலைகளை தனியார்களுடைய தொழிற்சாலைகளாக இல்லாமல், கூட்டுறவு சங்கத்தின் கீழ் வரும் தொழிற்சாலைகளாக மாற்றுகிற அளவுக்கு உற்சாகத்தை நாம் ஏற்படுத்த வேண்டும்.

அதேபோல தேயிலை தொழிற்சாலை. இந்தத் தேயிலைத் தொழிற்சாலையை கூட்டுறவு சங்கங்கள் மூலமாக செய்தால் ஒழிய அதில் பலன் பெற முடியாது. ஆனால் அங்கே வேலை செய்கிற தொழிலாளர்கள் மிகக் குறைந்த அளவுக்கு ஊதியம் பெற்றுக் கொண்டு, அன்றாட ஜீவனமே செய்ய முடியாத அளவுக்கு வாழ்கிறார்கள் என்பதை, அந்தத் தொகுதியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நாமெல்லாம் நேரிடையாகக் கூடப் பார்த்தோம். அதேபோல் இந்த தொழில் நிறுவனத்தின் மூலமாக ஜவ்வரிசி தொழில் சேலம் மாவட்டத்தில், ஏறக்குறைய 50 ஆயிரம் அல்லது 1 லட்சம் மக்கள் நம்பி வாழக்கூடிய வகையில் இருக்கிறது. அந்தத் தொழில்கள் கூட்டுறவுச் சங்க அமைப்பு முறையிலே இருக்கிறதா என்பதைப் பார்த்து, அவைகளையெல்லாம் கூட்டுறவு முறைலே கொண்டு வரவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கயிறு தொழில். இந்தத் தொழிலிலே மிக வேகமாக நாம் முன்னேற்றத்தை அடைந்துக் கொண்டிருக்கிறோம். பல்வேறு வகையான மூலப்பொருள்களைக் கொண்டு செய்கிற அதன் உபதொழில்கள் நல்ல முறையில் பலன் அடையச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





அதைப்போலவே பாலிதீன் தொழில் இருக்கிறதே. அதில், ஒவ்வொரு மாவட்டத்திலேயும் மகளிர் சங்கங்கள் ஏற்படுத்துவதற்கு கொள்கை ரீதியாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு முடிவு எடுத்துக் கொண்டால் பலதரப்பட்ட வாழ்விழந்த விதவைகள், படித்த பெண்கள், வாழ முடியாத பெண்கள் எல்லாம், இந்தச் சங்கத்திலே அங்கத்தினர்களாகி அவர்களுக்கெல்லாம் வேலை செய்து வாழக்கூடிய அளவில் ஒரு வழி ஏற்படும். ஆகவே இந்தத் தொழிலில் கூட்டுறவுச் சங்கங்களை, குறிப்பாக பெண்கள் மட்டும் செய்கிற தொழிலாக இது இருப்பதால், இதை நல்ல முறையில் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30)

அதேபோல் தோல் பதனிடும் தொழிற்சாலை. தோல் பதனிடும் தொழிற்சாலை குறிப்பாக வட ஆற்காடு மாவட்டத்திலே இராணிப்பேட்டை, வாணியம்பாடி, பேரணாம்பட்டு மதுரை மாவட்டத்திலே திண்டுக்கல் ஆகிய இடங்களிலே அந்தத் தொழில் சிறப்பாக இருக்கிறது. தோல் ஏற்றுமதியிலே இந்தியாவிலே மொத்தம் 425 கோடி ரூபாய்க்கு தோல் ஏற்றுமதி ஆகிறது என்றால் அதிலே தமிழ்நாட்டிலேயிருந்து மட்டும் ஏறக்குறைய 300 கோடி ரூபாய் அளவுக்கு ஏற்றுமதி செய்கிற நிலைமை இருக்கிறது. ஆனால் அப்படி தோல் ஏற்றுமதி செய்கிற [illegible] கூட்டுறவுத் துறையிலே வளர்ச்சி பெற்றால் அதிலே ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்கள் தங்கள் வாழ்க்கையை நல்ல முறையில் அமைத்துக் கொள்ளமுடியும், அந்தத் தொழிலாளர்கள் இன்றைக்கு வறுமையில் இருக்கிறார்கள், சுகாதாரக் கேடால் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள், அவர்களுடைய வம்சா வழியினர் சுகாதாரம் இல்லாத நிலையிலே கல்வி வளர்ச்சி இல்லாத நிலையிலே இன்னும் சொல்லப்போனால் எந்தவிதமான முன்னேற்றமும் இல்லாத நிலையிலே ஏகபோக முதலாளிகள் தான் வளர்கிறார்களே தவிர கூட்டுறவுத் துறையின் மூலமாக வளர்ச்சி பெறுகிற நிலை இல்லை. ஆகவே கூட்டுறவுத் துறை மூலமாக வளர்ச்சியடையச் செய்தால் அதன் மூலம் ஏழை எளிய மக்கள் பலன் பெறமுடியும். ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் வட ஆற்காடு மாவட்டத்திலே எக்ஸ்பிரிமெண்டலாக எடுத்து சில இடங்களிலே கூட்டுறவுத் துறை மூலமாக ஏற்படுத்த முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பட்டுத் தொழிலைப் பொறுத்தவரையில் பட்டு வளர்ப்புத் துறையில் மொசுக்கொட்டை இலைகள் அதிகமாக பயிர்செய்யக்கூடிய முறையிலே மெல்லிய அளவிலே ஏராளமாக வளர்க்கக்கூடிய முறையிலே பல்வேறு மாவட்டங்களிலே ஏற்பாடு செய்து, பட்டு வளர்ப்புத் துறையிலே அதிகமாக கவனம் செலுத்தினால் அதைச் செய்கிற விவசாயிகளுக்கு ஏராளமான வருமானம் வர வாய்ப்பு இருக்கிறது என்ற முறையில் அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பெரிய தொழிற்சாலைகளிலே முதலீடு செய்கிற அளவிலே இல்லாமல் கிராமங்களிலே ஏழை எளிய மக்கள் வாழ்வதற்கு வாய்ப்பைப் பெறக்கூடிய முறையிலே கிராமப்புறங்களிலே தொழில்களைப் பரப்புவதற்கு ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். பல தொழில் முதலீட்டு நிறுவனங்கள் 25 சதவீதம் செய்தால் 75 சதவீதம் முதலீடு கொடுக்கின்றன, இன்னும் சில இடங்களில் 35, 40, 50 சதவீதம் கூட தருகின்றன. தனிப்பட்டவர்கள் வளர்வதைவிட கூட்டுறவுத் துறை மூலமாக இவைகளை வளர்ப்பதற்கு அமைச்சர் அவர்கள் முடிவெடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கைவினைப் பொருட்களைப் பொறுத்தவரையில் தமிழ் நாட்டைப் போல் உலகத்திலே வேறு எந்த நாட்டிலேயும் கைவினைப் பொருட்கள் இல்லை என்று சொல்லமுடியும். இன்றையதினம் பூம்புகார் நிறுவனம் நட்டத்தில் நடக்கிறது. என்ன காரணம்? சரிவர விற்பனை செய்யவில்லையா? அல்லது பொருளில் தரமில்லையா? கைவினைப் பொருட்கள் சிறப்பாக இருக்கின்றன. அப்படி இருக்கிறபோது பூம்புகார் நிறுவனம் ஏன் நட்டத்தில் நடக்கிறது என்றால் நிர்வாகம்தான் காரணம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக அற நிலையத் துறையின் மூலமாக தேர் செய்யப்படுகிறது, சிலைகள் செய்யப்படுகின்றன. ஆகவே அறநிலையத் துறை தேர் செய்யும்போது அந்த வேலைகளை இந்த கைவினைப்பொருட்கள் செய்யும் துறைக்கு தரவேண்டும், அப்படி செய்தால் நல்ல முறையிலே அது லாபகரமாக நடத்தப்படுவதற்கான வழி பிறக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

செய்யாறு வட்டத்தில் நல்லமுறையில் மண்வளம் இருக்கிறது. அங்கே பீங்கான் தொழிற்சாலையை ஏற்படுத்துகிற அளவிற்கு ஏற்பாடுகளை செய்யவேண்டும். இராணிப்பேட்டையிலே பாரி கம்பெனி இருக்கிறது. செய்யாறு வட்டத்திலே திருவத்திபுரம் அருகில் தூளி என்ற இடத்தில் சிகப்புக் காவிக்கல் கிடைக்கிறது, மஞ்சள் காவிக்கல் கிடைக்கிறது, வெள்ளைக் கல், கருப்புக் கல் கிடைக்கிறது. அந்த மண்ணைக் கொண்டு பீங்கான் தொழிற்சாலை நடத்தவேண்டும். பாரி கம்பெனிக்கு 20.30 மைல்களுக்கு அப்பால் இருக்கிற இடத்திலிருந்து மண்ணை எடுத்துச் செல்கிறார்கள். ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பாக எண்ணத்தில் இதை எடுத்துக்கொண்டு பீங்கான் தொழிற்சாலை ஆரம்பிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால் அந்தப் பக்கத்திலே இருக்கிறவர்கள் நல்ல முறையிலே பலன் அடைவார்கள். ஏழை எளியவர்களுக்குப் பலன் கிடைக்கும்.

நேற்றையதினம் தொழில் துறை அமைச்சர் அவர்கள் 33 வட்டங்கள் என்று அறிவித்தார்கள். அந்த வட்டங்களை அதிகப்படுத்தவேண்டும். மத்திய அரசு மானியம் 15 சதவீதம்



கொடுப்பதை அதிகமாகப் பெறுகிற முறையிலே தமிழ்நாட்டில் அதிகமான வட்டங்களை ஏற்படுத்தக்கூடிய முறையிலே பரிந்துரை செய்து அதிகமான மானியம் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும்.

அப்படிச் செய்வதன் மூலமாக மக்கள் நல்லமுறையிலே பலன் அடையமுடியும். மாநில அரசு தருகிற மானியத்தையும் அதிகமாகக் கொடுக்கவேண்டும். ஊரக வளர்ச்சித் துறை ஏழை எளிய மக்கள் பலன் அடையக்கூடிய முறையிலே முனைப்பாக இவைகளைச் செயல்படுத்தவேண்டும். நான் முதலிலேயே குறிப்பிட்டபடி லஞ்ச லாவண்யங்கள் இருக்கின்றன. நோக்கம் நல்ல நோக்கம், ஆனால் லஞ்சம் கொடுத்தால்தான் ஏழை எளிய மக்களுக்கு கிடைக்கிறது என்ற நிலைமையைப் போக்குவதற்கு அரசு முயற்சி செய்யவேண்டும். ஏதாவது ஒரு நிறுவனத்திலே பணம் வாங்க வேண்டுமென்றால் அங்கே ஏதாவது கொடுத்தால் தான் நடக்கிறது என்பது மனச்சாட்சி உள்ள அத்தனை பேர்களுக்கும் தெரியும். ஆகவே அப்படிப்பட்ட நிலைமை இல்லாமல் இருப்பதற்கு அரசு ஆவன செய்யவேண்டும் என்று கூறி இந்த அளவில் கருத்துக்களை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டு இருக்கிற இந்த மானிய கோரிக்கையை வரவேற்று ஒரு சில கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன். தமிழகம் தொடர்ந்து மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் ஆட்சியிலே தொழிலில் முன்னேற்றப் பாதையில் நடந்து கொண்டு இருக்கிறது என்பதற்கு இது தொழில் குறித்த இந்த மானிய கோரிக்கையில் தரப்பட்டு இருக்கிற விளக்கங்கள் நமக்கு உதாரணமாக அமைந்திருக்கிறது. மத்திய அரசை சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, சில நேரங்களில் அரசியல் கட்சிகளின் மேடைகளில் ஆனாலும் சரி தமிழகம் 2-வது இடத்திலிருந்து 9-வது இடத்திற்கு, 13-வது இடத்திற்கு என்று அந்த அந்தநேரத்தில் தங்களுக்கு எது தோன்றுகிறதோ அதை சொல்கிற ஒரு வழக்கத்தை நாம் பார்த்துக் கொண்டு வருகிறோம். ஆனால் நானும் கூட பலயிடங்களில் இதற்கான ஆதாரங்களைத் தேடிப் பார்த்தேன். தமிழகம் 2-வது இடத்திலிருந்து 13-வது இடத்திற்கு போய்விட்டால் 13-வது இடத்தில் உள்ள மாநிலம் 2-வது 3-வது இடத்திற்கு வந்து இருக்கவேண்டும். ஆக தமிழகம் பின்னே போய்விட்டது அல்லது 10-வது 13-வது இடத்திற்கு போய்விட்டது என்று சொன்னால் எந்த மாநிலம் 2-வது 3-வது இடத்திற்கு வளர்ந்து இருக்கிறது என்பதை இதுவரை இதைப்பற்றி பேசியவர்கள் தெரிவிக்கவில்லை. ஆகவே இது ஒரு வெறும் உண்மைக்கு மாறுபட்ட அரசியலுக்காக எழுப்புகிற ஒரு வாதம் என்பதை சொல்வதற்காக நான் இதைச் சொல்கிறேன். தமிழகம் தொடர்ந்து தொழில் வளர்ச்சியில் அதற்குரிய இடத்தை தக்க வைத்துக்கொண்டு தான் இருக்கிறது என்பதை அரசியல்

காரணங்களுக்காக இது ஏதோ 10-வது 13-வது இடத்திற்கு சென்று விட்டது என்று சொல்கிற காரணத்திற்கு அதற்கான ஆதாரங்கள் இல்லாமல் சொல்கிற அந்த வாதத்திற்கு பதிலாக இதை நான் சொல்ல விரும்புகிறேன்.

இன்னும் சொல்லப்போனால் இந்தியாவினுடைய தொழில் வளர்ச்சி 5. 2 சதவீதம் 1982-83 ஆம் ஆண்டில் என்று சொல்லப்படுகிறது. அதற்கு முந்தைய ஆண்டுகளில் பார்த்தல் 1980 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து 3.6 சதவீதத்திலிருந்து 5.2 சதவீதமாகத்தான் 'இண்டஸ்ட்ரியல் குரோத்ரேட்' இருந்து கொண்டு வருகிறது. அண்மையில் கூட மத்திய அரசு பட்ஜெட்டை தாக்கல் செய்த மத்திய நிதி அமைச்சர் அவர்கள் இந்தியாவினுடைய தொழில் முன்னேற்றம் 5.2 சதவீதம் என்று சொல்லவும் எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் அது ஆதாரம் அற்றது என்றும் அதைவிட குறைவு என்றும் வாதிட்டார்கள். அது அப்படி இருக்கிறபோது இந்த 5 ஆண்டுகளில் இந்தியாவில் இருக்கிற எந்த மாநிலம் தமிழகத்தை முந்திக்கொண்டு முன்னேறிவிட்டது என்பதை அருள்கூர்ந்து நாம் கவனிக்கவேண்டும், அதற்கு மாறாக தமிழகத்தில் தொழில் வளர்ச்சிக்கு தமிழக அரசு, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அரசு எடுத்து இருக்கிற சீரான நடவடிக்கைகள் அதனால் ஏற்பட்டு இருக்கிற தொழில் வளர்ச்சியை நாம் இங்கே சுட்டிக்காட்டி ஆக வேண்டும்.

சிறு தொழில் வளர்ச்சிக்காக மாநில அரசு, மத்திய அரசு அறிவித்த பின்தங்கிய வட்டங்களைத் தவிர 30 வட்டங்களை ஒதுக்கி அதற்கு என்று பல சலுகைகளை இன்று தந்து இருக்கிறது. கடன் சலுகையும், வட்டி சலுகையும், 'சேல்ஸ் டாக்ஸ்' விற்பனை வரி சலுகையும் இப்படி அடுக்கு அடுக்காக பல சலுகைகளை தந்ததன் மூலம் சிறு தொழில் வளர்ச்சி இன்று இந்தியாவிலேயே ஊரகத் தொழில். அதாவது சிறு தொழில் தமிழகத்தில் முதலிடம் வகிக்கிற அளவுக்கு முன்னேறி இருக்கிறது என்பதை இந்தப் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. அது மட்டும் அல்லாமல் நடைமுறையில் கூட நாம் பார்க்கிற போது தமிழக அரசும், மத்திய அரசும் தொழிலுக்காக கொடுக்கக்கூடிய உதவிகளை நிதி நிறுவனங்கள் மூலம் கொடுக்கப் படுகிற உதவிகளை அதிக அளவில் பயன்படுத்தியதும் தமிழகத்தில் இருக்கிற சிறு தொழில் அதிபர்கள் தான். ஆக அந்தக் கணக்கைப் பார்த்தாலும் முதலீடு என்று பார்த்தாலும் துவக்கப் படுகிற தொழில்கள் என்று பார்த்தாலும் குரோத் ரேட் என்று பார்த்தாலும் தமிழகம் தொடர்ந்து முன்னணியை வகித்து வந்து இருக்கிறது. நாம் தொழில் வளர்ச்சியில் இன்றைக்கு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் கண்டிருக்கிறோம் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-40)

மைய அரசு சுய வேலைவாய்ப்புக்காகக் கடனுதவி தருகின்ற திட்டத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. பரிபூ ஜனார்த்தனன் அவர்கள் சொன்னார்கள். அதில் முழுக்





உண்மை இல்லை என்றாலும்கூட, அதற்காக கொடுக்கப்பட்ட விண்ணப்பங்கள்—மாவட்டத் தொழில் மையங்களில் பரிந்துரை செய்யப்பட்டுள்ள விண்ணப்பங்களையும், வங்கிகளால் அங்கீகரிக்கப்படுகின்ற விண்ணப்பங்களையும் பார்க்கின்ற நேரத்தில் வங்கிகள் நமது இளைஞர்களுக்கு அவ்வளவு உதவிகரமாக இருக்கவில்லை என்பதைத்தான் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சென்னையிலே மட்டும், கடந்த ஜனவரி 1 ஆம் தேதி வரையில் தொழில் மையங்களுக்குக் கொடுக்கப்பட்ட கடனுதவி விண்ணப்பங்கள் 23,000; பரிந்துரை செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2,556; ஆனால் அதிலே வங்கிகளால் அங்கீகரிக்கப்பட்டவை 115 தான். சென்ற ஆண்டு சுதந்திர தினத்தில் பாரதப் பிரதமர் அவர்கள் இந்த நாட்டிற்கு அளித்த இந்தப் பெரிய திட்டத்தின் முழுப் பயன்—படித்த வேலையில்லாத இளைஞர்களுக்குப் பயன்படும் வகையில் வங்கிகளின் ஒத்துழைப்பு இல்லை என்பதை நானும் வலியுறுத்த விரும்புகிறேன். தொழில் துறை மையங்களில் உள்ள நம்முடைய கைதேர்ந்த அதிகாரிகள் 2558 விண்ணப்பங்களைப் பரிந்துரை செய்கிறார்கள்; ஆனால் 115 விண்ணப்பங்கள் மட்டும்தான் வங்கிகளிலே அங்கீகரிக்கப்படுகின்றன என்று சொன்னால், வங்கிகள் இதில் தங்களுக்குரிய பங்கினைச் செலுத்தவில்லை என்பதைத்தான் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, இந்த விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்கின்ற நேரத்தில் வங்கிகளின் அதிகாரிகளையும் இந்த மாவட்ட தொழில் மையங்களுக்கு அழைத்து அங்கே அவர்களையும் உட்கார வைத்துக்கொண்டு, தொழில் மையங்கள் அங்கீகரிக்கின்ற பொழுதே, வங்கிகளும் அங்கீகரித்ததாகக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற நிலைமையை ஏற்படுத்தினால்தான் சுய வேலை வாய்ப்புத் திட்டத்திற்காகக் கொடுக்கப்படும் கடன்கள் உரிய தொழில் முன்னேற்றத்திற்குப் பயன்படும் என்பதை மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

சேலத்தைப் பொறுத்தவரையில், விண்ணப்பங்கள் குறைந்திருந்தாலும், வங்கிகளால் அதிக அளவிற்கு அங்கீகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நிறைந்த அளவில் இல்லை என்றாலும், கோவையை விட சேலத்தில் அதிகமாகப் பரிந்துரை செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, வங்கியின் அதிகாரிகளாக யார் இருக்கிறார்களோ அவர்களைப் பொறுத்து இந்த உதவி கிடைக்கின்ற தன்மை மாறுபடுகிறது என்பதைத் தான் இது உணர்த்துகிறது. ஆகவே, இதில் மாற்றம் தேவை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறிய தொழில்களைப் பொறுத்தவரையில், தமிழக[illegible] மற்றப் பகுதிகளைக் காட்டிலும் கோவையில் அதிகமாக வளர்ந்து கொண்டு வருகிறது. [illegible] மோட்டார் பம்பு செட்டு[illegible]

பவுண்டரித் தொழில், ஸ்டீல் அல்லது புதிதாகத் துவக்கப்பட்டுக் கொண்டு வருகின்ற எலக்ட்ரிக்கல் போன்ற தொழில்கள் தொடர்ந்து வளர்ந்து கொண்டு வருகின்றன. ஆகவே, அந்த வளர்ச்சிக்கேற்றவாறு சிறு தொழில் முனைவர்களின் முன்னேற்றத்திற்கான சில வாய்ப்புகளை நாம் ஏற்படுத்தித் தருவதற்குக் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சிறு தொழில்களை நடத்துபவர்களுக்கு உள்ள முதல் பிரச்னை மூலப்பொருட்களைக் கொண்டு வருவதாகும். தமிழ்நாட்டில் எந்த மூலப் பொருளும் கிடைப்பதில்லை. வட மாநிலங்களிலிருந்துதான் நிலக்கரி, ஸ்டீல் அல்லது மற்றப் பொருட்கள்—ராமெட்டீரியல்ஸ் கொண்டு வரப்பட வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். அவைகள் கோவைக்கு வந்து சேருவதற்கான வேகன்கள் கிடைப்பதில்லை. ஆண்டுக்காண்டு இரயில்வே சார்ஜை மத்திய அரசாங்கம் உயர்த்திக்கொண்டே வருகிறது; பட்ஜெட்டிலேயும் உயர்த்துகிறது: பட்ஜெட் இல்லாமலேயும் உயர்த்துகிறது. ஆகவே, அப்படி உயர்ந்து வருகின்ற போக்குவரத்துக் கட்டணங்களினால் மிகுதியான செலவு ஆவதற்குக் காரணமாக அமைகின்றது. ராமெட்டீரியல்ஸ் கிடைப்பது ஒரு காலத்தில் அரிதாக இருந்தது; ஆனால் தற்பொழுது தமிழக அரசு தொழில் துறை எடுத்த முயற்சிகளின் காரணமாக கோல், ஸ்டீல் போன்றவைகள் ஓரளவிற்குப் பகிர்ந்து அளிக்கப்படுகின்ற முறைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும்கூட, உரிய நேரத்தில் வேகன் கிடைக்காத காரணத்தினால் வந்து சேருவதில் சிரமமாக இருக்கிறது. ஆகவே, மத்திய அரசாங்கம் இந்த விஷயத்தில் கவனம்செலுத்தி, தொழில்களுக்குத் தேவையான மூலப் பொருட்களைக் கொண்டு வருவதற்குக் கட்டண சலுகைகளை அளித்து, இந்த வேகன்களை உரிய அளவிற்குக் கொடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த வேண்டுகோளை இந்த மன்றத்தின் மூலமாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தொழில் விரிவாக்கம் செய்யும்பொழுது ஏற்படுகின்ற பிரச்னைகளைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். கோவையில் சிறு தொழில்களைப் பொறுத்தவரையில், 30 சென்ட், 40 சென்டிலே இருப்பதை இன்னும் கூடுதலாக 10 சென்ட், 15 சென்ட்டிலே விரிவாக்கம் செய்ய வேண்டும் என்று அவர்கள் நினைக்கின்றபொழுது நம்முடைய அர்பன் லேண்ட் சீலிங் ஆக்ட் அதற்குத் தடையாக இருக்கிறது. ஒரு தொழில் நடத்திக் கொண்டிருக்கிறவர் அதை விரிவாக்கம் செய்யும்பொழுது வெளியே இன்னொரு இடத்தில் ஆரம்பிப்பதால் பல சிரமங்கள் ஏற்படுகின்றன. இங்கே ஒரு நிர்வாகம், அங்கே ஒரு நிர்வாகம் என்று வைக்க வேண்டியிருக்கும். எனவே ஏற்கனவே சிறு தொழில்களை நடத்திக்கொண்டிருப்பவர்கள் 15 சென்ட் 20 சென்ட் அளவிற்கு இருக்கிற இடத்திலேயே விஸ்தரிக்க வேண்டுமென்றால், அதற்கான வசதிகளை நாம் தடை செய்து விடக்கூடாது.



கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். சுமார் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னாலே ஒரு கிலோ பசும் தேயிலைக்கு ரூபாய் ஒன்று தான் கிடைத்து வந்தது; இன்றைக்கு அதற்கு மாறாக 5 ரூபாய்க்கு மேலே கிடைக்கிற நிலை இருக்கிறது.

1982-83-ல் விற்பனை ரூபாய் 10.90 கோடியாக இருந்தது. இந்த ஆண்டிலே இது ரூபாய் 24 கோடியை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் தொழிற்சாலையின் மூலமாக அந்தப் பகுதியில் சிறு அளவில் பயிரிடுபவர்களில் 89 சதவீதத்திற்கு மேலே உள்ளவர்கள் வறுமைக் கோட்டிற்கு மேலே உயர்த்தப்பட்டிருக்கிறார்கள். 12 தொழில் கூட்டுறவுச் சங்கங்களில் 5 தொடர்ந்து சமாளித்து எல்லா நஷ்டத்தையும் ஈடு செய்து விட்டது. இன்னும் 5, இந்த ஆண்டு செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் இந்த நிலையை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நீலகிரி தவிர கொடைக்கானலில், சேலம் மாவட்டத்தின் மலைப் பகுதிகளில் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலை அமைப்பதிலே அரசு தீவிரமாக பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. எனவே அந்த அளவில் பார்க்கிறபோது தேயிலை தொழிற்சாலையைப் பொறுத்தவரையில், முன்பு நஷ்டம் இருந்தாலும் இப்போது அரசு அதிக கவனம் செலுத்தி, அந்த நஷ்டத்தை ஈடுகட்டி லாபம் ஈட்டித் தரும் அளவிற்கு செயல்பட்டு வந்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகம் அவர்கள் பேசும்போது, அங்கே 46,000 பேர்களுக்கு மறைமுகமாக எவ்வாறு வேலை கொடுக்கப்படுகிறது என்று கேட்டார்கள். தேயிலை தொழிற்சாலை சங்கங்களில் பணியாற்றுகிறவர்கள் தேயிலை உற்பத்தியைச் செய்கிறவர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பதால் அவர்கள் தேயிலை உற்பத்தியில் மும்முரமாக ஈடுபடுகிறார்கள். அந்த வகையில் தேயிலை உற்பத்தியில் ஈடுபடுகிறவர்களையும் கருத்தில் கொண்டு தான் வேலைவாய்ப்பு நேர்முகமாகவும், மறைமுகமாகவும் 46,000 பேர்களுக்கு கிடைக்கிறது என்று நாம் இங்கே அவர்களுக்கு தெரிவிக்க ஆசைப்படுகிறேன்.

தீப்பெட்டி தொழிற்சாலையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே அரசின் கவனத்திற்கு சில பிரச்னைகளைக் கொண்டு வந்தார்கள். தீப்பெட்டித் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில், அது சீரான முறையில் செயல்படவில்லை என்பதையும், அது நல்ல முறையில் இயங்குவதற்கு கவனம் செலுத்த வேண்டும் என்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் இன்றைய தினம் குடிசைத் தொழில் மூலப்பொருள்களின் தேவைகளை நிறைவு செய்வதற்காக தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் நிறைவு செய்யும் நோக்குடன், குன்றக் குடியில் 1984 மார்ச்சு முதல்

அமைத்து அதன்மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்கின்ற நிலையத்தை அமைக்க அரசு உதவி செய்யவேண்டும். டி.ஐ.ஐ.சி போல் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளும் சிறு தொழில்களுக்கு உதவுகின்ற வகையிலே தமிழ்நாடு அரசு மைய அரசின் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிடத்திலே கேட்டுக்கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கோவை புறநகர்ப் பகுதிகளில் வளர்ந்து வருகின்ற தொழில்களுக்கு ஏதுவாகத் தொழில் கூடங்கள் கிடைக்கவில்லை. ஏற்கனவே கட்டப்பட்டிருக்கின்ற கூடங்களும் வளர்ந்து வருகின்ற தேவையை நிறைவு செய்கின்ற வகையிலே இல்லை. எனவே கூடுதலாகத் தொழில் கூடங்களை அமைத்துத் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அவிநாசியைப் பிற்படுத்தப்பட்ட தாலுக்கா என்று அறிவித்த பிறகு அந்தப் பகுதியிலே தொழில் பேட்டைகளை அரசு அமைத்து ஓனர்ஷிப் பேஸிஸிலே அதாவது ஹையர் பர்சேஸ் என்ற அளவிலே தொழில் முனைவோருக்குக் கொடுக்கின்ற வகையிலே நல்ல திட்டத்தை உருவாக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தொண்டாமுத்தூர், பெரியநாயக்கன் பாளையம் பகுதிகளில் இரண்டு டைனி செக்டார் யூனிட்டுகளைத் துவங்க இருப்பதாக முன்னாள் ஊரகத் தொழில் துறை அமைச்சர் வலியுறுத்திச் சொல்லி அதற்கான உத்தரவையும் தந்தார்கள். ஆனால் தொண்டாமுத்தூரிலேயும், பெரியநாயக்கன் பாளையத்திலும் டைனி செக்டார் யூனிட் அமைக்கப்படவில்லை. அந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் அந்த மாவட்ட அளிவிலே இருப்பவர்கள் போதிய அக்கறை செலுத்தவில்லை என்று தெரிகின்றது. பெரியநாயக்கன்பாளையத்தை பொறுத்தவரையில் தொழில் அபிவிருத்தியாகி வருகின்ற பகுதியாகும். அங்கே மிக நிறைந்த அளவிலே சிறு தொழில்கள் வளர்ந்து வருகின்றன. பிரிமியர் எக்யுப்மென்ட் இன்டஸ்ட்ரி வாகனங்களுக்கு தேவையான உபகரணங்களைச் செய்துகொண்டு வருகிறார்கள். அவர்கள் மட்டும் 20 Ancillary தொழிற்சாலைக்கு வேண்டிய ஷெட்டுக்களை எடுத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறார்கள், எனவே டைனி செக்டார் ஏற்படுத்தினால் நல்ல தொழில் போட்டி ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. எனவே டைனி செக்டார் யூனிட்டுக்கான நிலத்தை கையகப்படுத்தாத காரணத்தால் தொழில்துவங்குகிற முயற்சி அப்பகுதியில் தடைபட்டுவருகின்றது. எனவே பெரியநாயக்கன் பாளையத்திலும், தொண்டாமுத்தூர் பகுதியிலும் இரண்டு டைனி செக்டார் யூனிட்டுகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்றும் விரைவாக அதற்கான நிலத்தை ஆர்ஜிதம் செய்து தர துறை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.



இறுதியாக நமது சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. ஆனூர் ஜெகதீசன் அவர்கள் கடந்த பல ஆண்டுக்காலமாக கிண்டி தொழிற்பேட்டைக்கு திரு. வி. க. அவர்களுடைய பெயரைச் சூட்ட வேண்டுமென்று வலியுறுத்தி வந்திருக்கிறார்கள், இதற்குக் காரணம் இந்தியாவில் மட்டுமல்ல, தென் கிழக்கு ஆசியாவிலேயே முதன் முதலாக ஒரு தமிழ்ப் பெருமகன்; முதற் தொழிற் சங்கத்தை நிறுவினார் என்கிற வரலாறு நம்மிடையே இருக்கிறது. அவருடைய தமிழைப் போற்றுகிறோம். அவர் ஆற்றிய தமிழ்த் தொண்டைப் போற்றுகிற அதே நேரத்தில் தொழிற் சங்கத்தில் முதன் முதலாக ஈடுபட்ட அவர்கள் சிறப்பை நாட்டுக்கு எடுத்துக்காட்டும் வகையில் கிண்டி தொழிற்பேட்டைக்கு திரு. வி. க. வினுடைய பெயரைச் சூட்ட வேண்டுமென்கிற அவருடைய வேண்டுகோளை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து இம்மானியக் கோரிக்கையை வரவேற்று நான் எனது வார்த்தைகளை முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.

(பிற்பகல் 12-50)

திரு. டி. மணி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊரகத் தொழில் அமைச்சர் மூலமாக இங்கே தரப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கையின் மீது நான் சார்ந்திருக்கிற இயக்கத்தின் சார்பாக சில கருத்துக்களையும் சொல்ல விழைகிறேன். குறிப்பாக மாவட்டத் தொழிற் மையங்கள் இன்று கிராமங்களிலே இருக்கின்றன. சிறு தொழில்களை ஊக்கப்படுத்துவதற்கும் தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கும் அமைக்கப்பட்ட அந்த மாவட்ட மையங்கள் போதுமான அளவில் செயல்படவில்லை என்பது என்னுடைய முதலாவது குற்றச்சாட்டாகும். காரணம், அந்த மாவட்ட மையங்களிலே இருக்கிற அதிகாரிகள் அவர்களுடைய மாவட்டங்களில் நடைபெறுகிற வளர்ச்சி மன்றக் கூட்டங்களில் டி.டி.சி. கூட்டங்களில் முறையாகக் கலந்து கொண்டால்தான் எந்தக் கிராமங்களில் எந்தத் தொழில்கள் எந்தத் துறையிலே இருக்கின்றன, எந்தத் தொழிலை விஸ்தரிக்க முடியும் என்ற அடிப்படையிலேதான் அந்த விவாதத்திலே கலந்து கொண்டு அந்தத் தொழில்களை அபிவிருத்தி செய்ய முடியும். குறிப்பாக, நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்திலே இருக்கிற தொழில் மையத்திலே பணி புரிபவர்கள் வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே கலந்து கொள்வதே இல்லை. காரணம் என்ன என்று தெரியவில்லை.

அது மட்டுமல்ல, அதுபோன்ற சுயவேலை வாய்ப்புத்திட்டத்திற்காக ரூ. 25,000 வழங்கப்படுவதாக நாம் ஏற்கனவே சொல்லி வருகிறோம். ஆனால் எந்த தேசியமயமாக்கப்பட்ட வங்கியினை எடுத்துக் கொண்டாலும் சரி, அங்கே செல்கிற நேரத்தில் ரூ 25,000-க்குப் பதிலாக, ரூ. 5,000 தான் வழங்கப்படுகின்ற ஒரு நிலையை பெருவாரியாக இன்று நடைமுறையில் நாம் பார்க்கிறோம்.

அது மட்டுமல்ல், அந்த ரூபாய் கிடைப்பதிலேகூட கால தாமதம் ஏற்படுகிறது. பெருவாரியான மக்கள் இன்று தங்களுடைய மனுக்களைக் கொடுத்துக் கொண்டு, கிடைக்காத ஒரு நிலையிலே மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் அரசாங்கத்திடமும் தங்களுடைய மனுக்களைத் தந்து கொண்டிருக்கிற ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. எனவே இந்தச் சுய வேலை வாய்ப்புத் திட்டத்திலே பல்வேறு தொழில்கள் இணைந்திருக்கிற காரணத்தாலே அந்தப் பணம் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமாக தாராளமாகக் கிடைப்பதற்கான வழிவகைகளைச்செய்வதற்கானஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தீப்பெட்டித் தொழிற்சாலையைப் பொறுத்த மட்டில், கிராமங்களிலே வாழ்கின்ற ஆயிரக்கணக்கான ஏழை, எளிய பெண்மணிகளுக்கு வேலை தருகின்ற ஒரு துறையாக—கூட்டுறவுத் துறையாக-இது அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தாலும் கடந்த ஓராண்டுக் காலமாக இதற்குக் கிடைக்க வேண்டிய மூலப்பொருள் கிடைக்காத காரணத்தாலே, குறிப்பாக குளோரைட் கிடைக்காத காரணத்தாலே, பல கூட்டுறவுச் சங்கங்கள் செயலற்ற முறையிலே இருந்து வருகின்றன. அதன் காரணமாக அவர்கள் உற்பத்தி செய்த பொருள்கள்கூட இன்று விற்பனை ஆகாமல் இன்னொரு பக்கத்திலே இருக்கின்றன. காரணம், இன்றைக்குப் பெரிய முதலாளிகள், குறிப்பாக விம்கோ போன்ற நிறுவனங்களோடு போட்டி போட்டுக் கொண்டு தாங்கள்உற்பத்தி செய்கின்ற பொருளை விற்பனை செய்வதற்குச் சாத்தியம் இல்லாத நிலைமை உருவாகியிருக்கிறது.

அது மட்டுமல்ல, அவர்கள் உற்பத்தி செய்கின்ற அந்தப் பொருள்கள் விற்பனை ஆகாத காரணத்தால் குறிப்பாக, மஞ்சாலமுடி தீப்பெட்டி உற்பத்தி சங்கத்திலே, வேலை செய்கின்றவர்களுக்கு இரண்டு மாதங்களாகப் பணமே கொடுக்கப் படவில்லை, சம்பளம் கொடுக்கப்படவில்லை என்ற ஒரு புகாரும் கூட இருந்து கொண்டே இருக்கிறது.

அடுத்தபடியாக நம்முடைய டான்சி நிறுவனத்தைப் பொறுத்தமட்டில் இன்று நம்முடைய மாநிலத்தினுடைய பல்வேறு மாவட்டங்களிலே வார்ப்படத் தொழில்களைச் செய்வதோடு பல்வேறு பொருள்களை உற்பத்தி செய்கிறார்கள். அந்த நிறுவனம்கூட பல பகுதிகளிலே மூடப்படுகிற பேரபாயம் இருந்து கொண்டு இருக்கிறது. குறிப்பாக, குடிசை மாற்று வாரியம், குடிநீர் வடிகால் வாரியம், கூட்டுறவுச் சங்கங்கள், ஆலைகள் பொதுப்பணித் துறை ஆகியவற்றிற்கு தேவையான அந்தப் பொருள்கள் பூராவையும், டான்சி நிறுவனத்திலே உற்பத்தி செய்கின்றவற்றை நாம் வாங்கிக் கொண்டால்தான் அங்கு இருக்கிற விநியோக முறை,முறையாக இருக்கும். அந்தப் பொருள்களை அவர்கள் வாங்கினால்தான் அதை அபிவிருத்தி





செய்ய முடியும். ஆகவே, இந்த டான்சி நிறுவனம் உற்பத்தி செய்கின்ற பொருள்கள் பூராவையும் அரசாங்கத்தினுடைய இதர துறைகள் வாங்குதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அது மட்டுமல்ல, அத்தொழிலில்கூட சுமார் ஆயிரம் பேருக்குப் பாதிப்பு ஏற்படக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. அந்த நிறுவனத்திலே பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கு கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னாலே ஏற்பட்ட சம்பள ஒப்பந்தம் காலாவதியாகி விட்டது. அவர்களுடைய பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்கின்ற முறையிலே அந்தச் சங்கங்களோடு கூடிப் பேசி அந்தப் பிரச்சினைக்கும் தீர்வுகாண வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய தோல் தொழிலைப் பொறுத்தவரையில் தோல் பதனிடும் தொழிற்சாலை என்பது நம்முடைய மாநிலத்திலே வளர்ந்து வருகிற துறையாக இருந்தாலும், இந்தத் தொழிலைப் பெறுவதற்கான வாய்ப்பைப் பல நேரங்களில் நாம் இழந்து விடுகிறோம். வடஆற்காடு மாவட்டம் விண்ணமங்கலத்தில் 'டான்சி' தோல் பதனிடும் தொழிற்சாலை இன்றைக்கு நஷ்டத்திலே ஓடுவதாகச் சொல்கிறார்கள். காரணம் என்னவென்று தெரியவில்லை; அதிகாரிகள் கவனக் குறைவோ அல்லது சந்தைகளைக் கண்டறியாத காரணத்தாலோ என்னவோ இன்றைக்கு அந்த நிறுவனம் நஷ்டத்திலே ஓடுகிறது என்று தகவல் சொல்கிறார்கள். ஆகவே இந்த நிலையில் அதனை விசாரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அடுத்து, ஜவ்வரிசி உற்பத்தி செய்வதற்கான மரவள்ளிக் கிழங்கை நம்முடைய மாநிலத்தில், சேலம் மாவட்டத்திலும், அதனையடுத்த பகுதிகளிலும் ஏராளமாக உற்பத்தி செய்கிறோம் என்றும் அவற்றை வடமாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்கிறோம் என்றும் சொல்லி இருக்கிறார்கள். இந்த மாநிலத்தில் ஒரு பகுதியை அவர்கள் ஏனோ மறந்து விடுகிறார்கள். என்ன காரணமென்று தெரியவில்லை, குமரி மாவட்டத்தில் முதன் முறையாக மரவள்ளிக் கிழங்கு ஏராளமாக உற்பத்தி செய்து வருகிறார்கள். இன்றைக்கு மலையோர பகுதிகளில் ரப்பர் பயிர் செய்வதால் இதை விட்டுவிட்டாலும்கூட, தென் பகுதிகளில் ஏராளமாக உற்பத்தி செய்கிறார்கள். ஆகவே ஜவ்வரிசி உற்பத்தி செய்வதானாலும்சரி, இதை உற்பத்தி செய்கிற நிலையானாலும் சரி, அந்த மாவட்டத்திலே அப்படிப்பட்ட தொழில் கூட்டுறவுத் துறை ஏற்படுத்துவதற்கு என்ன நடவடிக்கை மேற்கொள்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன். ஆகவே அந்தத் துறையை அபிவிருத்தி செய்வதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நம்முடைய கயிறு தொழிலைப் பற்றி இங்கே சொல்கிறார்கள். நான் தெரிந்துகொள்ள விரும்புவது எல்லாம் 1972-லிருந்து 1984-ம் ஆண்டு வரையிலும் அந்தத் துறை மத்திய அரசினுடைய 'காயர் போர்டிலே' எத்தனை லட்சம் ரூபாய்களை எத்தனை கோடி ரூபாய்களை பெற்றுக் கொண்டது என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன். மத்திய அரசினுடைய கடந்த ஐந்தாண்டுத் திட்டங்களில் இந்த கயிறு தொழில் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட கோடிக்கணக்கான ரூபாயில் எத்தனை கோடிகளை இந்தத் துறை பெற்றுக் கொண்டது? மத்திய அரசிடத்திலேயிருந்து போதுமான நிதியாதாரங்களைப் பல்வேறு துறைகளில் நாம் பெறவில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்திலே நமக்கு ஒதுக்கப்பட்ட தொகையில், காயர் போர்டிலிருந்து எவ்வளவு பணத்தைப் பெற்றுக் கொண்டோம் என்று நான் அறிய விரும்புகிறேன். இந்த கயிறு தொழிலைப் பொறுத்த வரையில் நம்முடைய மாநிலத்தில் வளர்ந்து வருகிற ஒரு தொழில் என்ற முறையிலே இன்றைக்கு இருந்து வருகிறது. சேலம் மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படுகிற கயிறுதான் தரமான கயிறாக இருக்கிறது. நம்முடைய நாட்டில் அந்தக் கயிறுக்கு அதிகமான கிராக்கி இருக்கிறது. இந்தத் துறையை விஸ்தரிப்பதற்காக அடுத்த மாவட்டங்களுக்கு, நெல்லையானாலும் சரி, கோவையானாலும்சரி, குமரியானாலும்சரி, ஏதாவது திட்டத்தை வைத்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்பு கிறேன்.

அதேபோல தேங்காய் மட்டை நாரைப் பயன்படுத்தி, அதோடு ரப்பரையும் கலந்து கொண்டால் மெத்தைகளை தயார் செய்யலாம். கடந்த ஆண்டிலும், அதற்கு முந்தைய ஆண்டிலும் இந்தக் கோரிக்கையை நான் எழுப்பி இருக்கிறேன். இன்றைக்கு தஞ்சையிலே அந்த ஆக்கப்பூர்வமான திட்டத்தை இப்போது ஆரம்பிக்க இருக்கிறோம் என்று சொல்கிறார்கள். இந்த ரப்பர் எங்கள் மாவட்டத்தில் அதிகமாகக் கிடைக்கிறது. குமரி மாவட்டத்தில் 20 ஆயிரத்திற்கும் அதிகமான கயிறு தொழிலில் பணியாற்றுகிற தொழிலாளர்கள், அதிலும் பெருவாரியான பெண்கள் இருக்கிறார்கள். அங்கே 5,000-க்கும் அதிகமான கைராட்டைகள் இருக்கின்றன. அங்கே ரப்பர் அதிகமாக கிடைப்பதாலும், அது ஒரு கேந்திரமான தொழிலாக இருப்பதாலும், அந்தப் பகுதியில் தேங்காய்மட்டை நாரைப் பயன்படுத்தி, ரப்பரை கலந்து செய்கிற மெத்தை தயாரிக்கிற யூனிட்டை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையின்கீழ் மார்க்கெட்டிங் சொசைட்டி; காயர் போர்டினுடைய 25 கூட்டுறவுச் சங்கங்கள் அங்கே இருக்கின்றன. ஆனால் போதுமான நிதியாதாரங்கள் இல்லாத காரணத்தால் அவைகள் முறையாக செயல்படுகிற நிலை இல்லை. இருக்கிற நிதியை வங்கிகளிலே கட்ட வைத்திருக்



கிறார்கள். சத்தாமொழியில் இருக்கிற கூட்டுறவுச் சங்கத்திலே 1¼ லட்சம் ரூபாயை வங்கியிலே கட்ட வைத்திருக்கிறார்கள், இப்படிச் செய்தால் அந்தக் கூட்டுறவுத் துறை எப்படி செயல்பட முடியும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

தேங்காய் மட்டையை இப்போது ஊற வைத்து நார் எடுக்கிறார்கள். சாதாரணமாக பச்சை மட்டையிலிருந்து தான் நார் தயார் பண்ணுவார்கள்.

ஊற வைத்த மட்டையிலிருந்து நாரைத் தயாரிக்கிறார்கள். இப்போது தேங்காய் மட்டை கிடைக்காமல் சிக்கல் இருக்கிறது. இதைக் கூட்டுறவு முறை மூலமாகக் கொண்டு வந்து அந்த மாவட்டத்தின் அந்தத் தொழிலை ஒழுங்கு படுத்த வேண்டும். அப்படிப்பட்ட நிலையை ஏற்படுத்தினால்தான் அதை விரிவுபடுத்த முடியும். இதனால் இதிலே பணியாற்றும் கூட்டுறவு சங்கங்கள் தங்களுடைய வளர்ச்சிப் போக்கில் நடவடிக்கை மேற்கொள்ள முடியும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-00)

கன்னியாகுமரி பகுதியில் இருந்து அடுத்த மாவட்டங்களுக்கும், மாநிலங்களுக்கும் ரா-மெட்டீரியல்ஸ் ஏற்றுமதி செய்யும் நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அங்கே இருக்கின்ற தேங்காய் மட்டைகளை அந்த மாவட்டத்திலே பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அடுத்த மாநிலத்திற்குப் போவதை தடை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

கயிறைப் பொறுத்தவரையில், பல்வேறு விதமான கொள்கையைச் சொன்னாலும், தஞ்சாவூரில் ஏற்படுத்தப் பட்டுள்ள ரிசர்ச் சென்டர் எந்த அளவுக்குப் ஃபங்ஷன் செய்ய வேண்டுமோ அந்த அளவிற்கு பணி செய்யவில்லை என்ற குறை இருக்கிறது. அந்த இடத்திலே இருக்கிற மேலாளர் அதற்கான விரிவான, சரியான பணியைச் செய்யவில்லை என்று புகார் கொடுத்து இருக்கிறார்கள். ஆகவே, அதைக் கவனிக்க வேண்டும். கயிறைப் பொறுத்தவரையில், கொல்லங்கோடு பகுதி ஒரு மாதிரி கிராமமாக காயர் போர்ட்டால் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறது. அந்த மாதிரி கிராமத்திற்கு எந்த விதமான உதவியும் செய்யவில்லை. ஆகவே, அந்தக் காரியங்களை காயர் போர்டு அமைப்புகளுக்குப் பரிந்துரை செய்து, அதை விரைவாகச் செய்யவேண்டும் என்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

*திரு. கே. உக்கிர: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய சிறு தொழில் கொள்கை திட்ட மானியக் கோரிக்கை மீது என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். தமிழகத்தைப் பொறுத்தவரையில் பட்டி தொட்டிகளில் [illegible], குறிப்பாக எந்தெந்தப் பகுதிகளிலே இன்று [illegible]

கிடைக்கின்றனவோ அங்கெல்லாம் சிறு தொழில்களுக்கு முக்கியத்துவம் அளித்து வருகிறோம். இதிலே தீப்பெட்டித் தொழிற்சாலை, ஜவ்வரிசித் தொழிற்சாலை, தேயிலைத் தொழிற்சாலை, உப்பு மற்றும் கடல்-படும் ரசாயனப் பொருள்கள், தோல் பதனிடும் தொழில்கள், பாலிதீன் பைகள் தயாரித்தல் போன்ற பல்வேறு தொழில்களுக்கு இந்த அரசு ஊக்கம் அளித்து வருகிறது.

நான் நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்ற காரணத்தால், அங்கே பெரிய அளவில் பயிராகும் தேயிலை பற்றியும், அதைப் பதப்படுத்தும் தொழிலைப் பற்றியும் என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கூட்டுறவுத் துறையில் அங்கே தேயிலைத் தொழிற்சாலைகள் 12 இருக்கின்றன. அவற்றில் தேயிலை பதப்படுத்தப்படுகிறது .13-வது தேயிலை பதப்படுத்தும் தொழிற்சாலை அமைப்பதற்கான வேலை நடந்து கொண்டு இருக்கிறது. அது கிட்டத்தட்ட அடுத்த ஆண்டு தன்னுடைய பணியைத் துவங்கும் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்தத் தேயிலைத் தொழிற்சாலையில் கிட்டத்தட்ட 7,230 சிறு தேயிலை விவசாயிகள் 16,100 ஏக்கர்களில் தேயிலையை உற்பத்தி செய்து, அந்தத் தொழிற்சாலைகளில் பதப்படுத்துவதற்காக அளிக்கிறார்கள். தற்போது தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் மொத்த தேயிலை உற்பத்தியில் 9% நீலகிரி மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு தேயிலை உற்பத்தி சங்கங்கள் மூலம் செய்யப்படுகிறது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். அப்படி உற்பத்தி செய்யும் தேயிலையைக் கடந்த 1977-78—ஆம் ஆண்டுகளி ஏலத்தில் விற்பனை செய்கிறபோது விலை குறைவாக இருந்ததால் அந்த மக்கள் மிகவும் தொல்லை பட்டார்கள். காரணம், அதன் உற்பத்தி செலவு அதிகம், ஆனால் 1983–84-ஆம் ஆண்டில் அந்த ஏல விற்பனையில் மாற்றம் ஏற்பட்டு, கடந்த பல ஆண்டுகளாக அவர்களுக்கு ஏற்பட்ட நஷ்டத்தை சரிகட்டி, அந்த நஷ்டம் வேகமாகக் குறைந்து வருகிறது என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அப்படி குறைத்துக் கொண்டு வருவதைப் பார்க்கிறபோது, ஒரு காலத்தில் 1977–78–ல் தேயிலை ஒரு கிலோவுக்கு ரூ. 2 இருந்தால்தான் அந்தப் பகுதி மக்கள் வாழ முடியும் என்று இருந்தது. இன்றைக்கு அது ரூ. 5 என்ற அளவிற்கு மேலாக ஒரு கிலோவுக்குக் கிடைக்கிறது என்ற செய்தியை நான் மகிழ்ச்சியாக சொல்லிக் கொள்கிறேன்.

அதைப்போலவே, தேயிலை விவசாயிக்கு நிவாரணம் அளிக்கக்கூடிய முறையில் 5% விற்பனை வரியை நம்முடைய அரசு 2 % விற்பனை வரி என்ற அளவிற்கு குறைத்துள்ளது



இதை நான் வரவேற்கும் அதே நேரத்தில் கிட்டத்தட்ட 9 சதவீதம் மட்டுமே உற்பத்தி செய்கிற சிறு விவசாயிகளுக்கு இதில் போதுமான இலாபம் கிடைக்காது. இந்த முழு நன்மையும் 91 சதவீதம் உற்பத்தி செய்கிற மொத்த வியாபாரிகளுக்குப் போய்ச் சேருகிறது. இலாபம் எல்லாம் அவர்களுக்குத்தான் கிடைக்கிறது. ஆகவே, சிறு விவசாயிகளுக்கு இந்தச் சலுகைகள் மூலம் நன்மை கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்காக என்ன செய்ய வேண்டுமென்றால் இப்போது 50 சதவீத மானியத்தில் கன்றுகளை வழங்குவதற்குப் பதிலாக 75 சதவீத மானியத்தில் வழங்க வேண்டும். அதைப்போன்று 25 சதவீத மானிய விலையில் கொடுக்கின்ற உரத்தை 50 சதவீத மானிய விலையில் கொடுக்க வேண்டும். அதைப்போன்று 10 சதவீத மானியத்தில் கொடுக்கின்ற பூச்சி மருந்துகளை 25 சதவீதத்தில் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அரசையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மத்திய சர்க்காருக்கு கலால் வரியாக ஏராளமாகக் கொடுக்கிறோம். ஆனால் இந்த வரியை ஒரே காலத்தில் ரூ. 1.10 என்று இருந்ததை 60 பைசா என்றும் கூடலூர் பகுதியில் 40 பைசா என்று இருந்ததை 36 பைசா என்றும் மத்திய சர்க்கார் குறைத்திருக்கிறது. இந்த வித்தியாசம் இருக்கக் கூடாது. எல்லாப் பகுதிகளுக்கும் ஒரே விதமான வரியை விதிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் ஒரு புதிய தேயிலைத் தொழிற்சாலையை அமைக்க வேண்டுமென்றால்—பல்வேறு காலத்தில் தேயிலைத் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படுகின்றன ஒரு காலக்கெடுவைக் குறிப்பிட்டு, அதை ஒரு பேஸ் இயராக வைத்து, அதற்குப் பின்னால் புதிய தேயிலைத் தொழிற்சாலை அமைத்தால் அவர்கள் ரூ. 1.10 கலால் வரி கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. இந்த பேஸ் இயர் என்பதை மாற்றி எல்லாத் தேயிலைத் தொழிற்சாலைகளுக்கும் இதில் விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

போதுமான அளவுக்கு உற்பத்தியைப் பெருக்கும்போது அந்தப் பொருளுக்கு மார்க்கெட் வசதி செய்தாக வேண்டும். இப்போது கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலமாகவும், சிறப்பு அங்காடி மூலமாகவும் உற்பத்தி செய்கின்ற தேயிலையை விற்கிறோம். சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலம் இராணுவத்திற்குத் தேவையான தேயிலையை அனுப்புகிறார்கள். இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும் அவர்களுக்கு தேயிலை அனுப்ப தம்முடைய அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்.

தேயிலை வாரியம் (டீ போர்டு) இருக்கிறது. 5 ஆண்டுகளுக்கு மேலாக தேயிலைச் செடியினை வெட்டவில்லை என்றால் போதுமான கொழுந்து உற்பத்தியாகாது. 5 ஆண்டுகளுக்கு மேல் வெட்டிவிட்டபின் மீண்டும் உற்பத்தி செய்ய ஒன்றரை ஆண்டு ஆகும். இந்த இடைப்பட்ட காலத்தில் உற்பத்தி இல்லை என்ற காரணத்தால் மத்திய சர்க்கார் இந்த டீ போர்டு மூலமாக கிட்டத்தட்ட ஹெக்டேருக்கு 3,000 ரூபாய் கொடுக்கிறார்கள். அது சாதாரண ஏழை எளிய விவசாயிகளுக்குப் போய்ச் சேருவதில்லை. ஆகவே, இந்த தேயிலை மானியத்தை இன்கோ சர்வ் நிறுவனத்தின் மூலமாகவோ தோட்டக்கலைத் துறை (ஹார்டிகல்சர்) மூலமாகவோ கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

எரிபொருள் பிரச்சனை ஒரு முக்கியமான பிரச்சனை. நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் எரிபொருள், அதாவது விறகு கிடைப்பதில் பெரும் தட்டுப்பாடு இருக்கிறது. அதனால் விஸ்கோஸ் நிறுவனத்திற்கு எந்த அடிப்படையில் சலுகை விலையில் விறகு கொடுக்கிறோமோ அந்த அடிப்படையில் இந்த 12, 13 கூட்டுறவுத் தொழில் சங்கங்களுக்காவது கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

14—வது தேயிலைத் தொழிற்சாலையை உதகை வட்டத்தில் குந்தா பகுதியில் கிண்ணக்கொரை கிராமத்தில் ஏற்படுத்த வேண்டும். 'டீ புரோக்கர்'களை நம்பித்தான் இந்த 13 தேயிலைத் தொழிற்சாலைகளும் தங்களுடைய உற்பத்தியைப் விற்பனை செய்துகொண்டிருக்கிறார்கள். அதனால் வரக்கூடிய இலாபத்தை எல்லாம் அந்த புரோக்கர்கள் அனுபவித்து வருகிறார்கள். இந்த நிலையை மாற்றி, இன்கோ சர்வ் என்று சொல்லப்படுகிற அந்தத் தாய்க்கழகமே இலாபத்தை பெற வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நீலகிரியில் 'தமிழ்நாடு ஃப்ளைவுட் லிமிடெட்' என்று ஒரு ஃபாக்டரியை அமைக்க வேண்டும். இப்போது இருக்கிற 12, 13 தேயிலைத் தொழிற்சாலைகளில் தயாரிக்கின்ற தேயிலையை பெட்டிகளில் அடைத்து வெளி மாநிலங்களுக்கு அனுப்புகிறார்கள். தேயிலை அடைப்பதற்குத் தேவையான பெட்டிகளைத் தயார் செய்வதற்கு என்று தமிழ்நாடு ஃப்ளைவுட் லிமிடெட் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் கடந்த பல வருஷங்களாக வேலை நடைபெறாமல், இன்னும் முடிவடையாமல் இருக்கிறது. அதை உடனடியாக முடித்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மசினக்குடி பகுதியில் தொழிலாளர்கள் நிறைய பேர்கள் இருக்கிறார்கள். அங்கே பிரிக்ஸ் தொழிற்சாலை அமைக்க நல்ல வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதியில் செங்கல் உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலை ஒன்றை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அதைப்போன்று பாலித்தீன் பேப்பர், சாக்குக் கட்டி போன்ற பொருள்களை உற்பத்தி செய்யும் தொழில்களையும் ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்துஸ்தான் போட்டோ பிலிம் நிறுவனத்திற்கு சிட்கோ மூலமாக கட்டிக்கொடுக்க வேண்டிய 20—க்கு மேற்பட்ட ஷெட்டுகள் பணி இன்னும் தொடங்கப்படவில்லை. அந்தப் பணிகளை உடனடியாக ஆரம்பிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக ஒன்றை மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன். இருதய நோயைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் தேயிலையில் மிகுதியாக இருக்கிறது, என்று விஞ்ஞானிகள் தெரிவித்திருக்கிறார்கள். எனவே எல்லோரும் அதிகமாக தேனீரை அருந்தி, உடல் நலத்தைப் பேணி பாதுகாத்துக்கொள்ள வேண்டுமென்ற வேண்டுகோளை விடுத்து, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

(பிற்பகல் 1-10)

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தொழில் கொள்கைகள், திட்டங்கள் சம்பந்தமாக நான் சார்ந்திருக்கிற இந்தியக்கம்யூனிஸ்டு கட்சியின்சார்பாக ஒரு சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கக்கூடிய பல்வேறு திட்டங்கள், பட்டுப் புழு வளர்த்தல், தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம், தோல் தொழில் வளர்ச்சி, தீப்பெட்டித் தொழில் இதுபோன்ற பல்வேறு திட்டங்களை அறிவித்திருந்தும் இந்த அரசைப் பொறுத்தமட்டிலும், எங்களுக்கு இருக்கக்கூடிய கருத்து, இந்தத் தொழிற்சாலைகளைப் பாதுகாப்பதற்காக இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதே.

தமிழ்நாட்டிலுள்ள தீப்பெட்டித் தொழில் நசிந்து போகக் கூடிய நிலையில் இருக்கிறது. விம்கோ போன்ற பெரிய மானோபோலி கம்பெனிகளுக்கு லைசன்சுகளைக் கொடுக்கிறார்கள். அதே நேரத்தில் கிராமப்புறங்களிலுள்ள ஏழை எளிய மக்கள் கைத்தொழிலாகச் செய்யும் தீப்பெட்டித் தொழிலுக்கும் லைசன்சுகளைக் கொடுத்துவிடுகிறார்கள். ஆக ஒரு புறத்திலே இப்படிப்பட்ட பெரிய விம்கோ நிறுவனத்திற்கும், மறு பக்கத்திலே கிராமப்புறங்களிலே செய்யப்படுகின்ற சிறு தொழில்களுக்கும் லைசன்சுகளை கொடுத்தால், விம்கோவில் தயாரிக்கப்படும் தீப்பெட்டிகளுடன் கிராமப்புறத்திலுள்ளவர்கள் எப்படி போட்டி போடமுடியும்? இப்படிப் பெரிய தொழில் நிறுவனங்களுக்கு லைசன்சுகளைக் கொடுத்து, அவர்கள் உற்பத்தி

செய்யும் பொருள்களுடன், கிராமப் புறத்திலுள்ள தீப்பெட்டித் தொழிற்சாலைகள் கைத்தொழில் மூலமாக போட்டிபோட முடியாது. எனவே இந்தத் தொழிற்சாலைகள் நசிந்துகொண்டு வரக்கூடிய அபாயம் இருக்கிறது.

தோல் பதனிடும் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில், திண்டுக்கல், வடாற்காடு போன்ற இடங்களில் ஏற்றுமதி செய்வதற்காக பல லைசன்சுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. தோல் பதனிடாமலேயே ஏற்றுமதி செய்யலாம் என்ற புதிய கொள்கையை தமிழ்நாடு அரசு எடுத்திருக்கிறது. இதனால் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் பாதிக்கப்பட்டு, பல மக்கள் வேலை இழக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எனவே அவைகளையெல்லாம் பாதுகாப்பதற்காக, தமிழ்நாடு அரசு என்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என்பது கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்படவில்லை. அவைகளைப்பற்றி இந்த அரசாங்கத்தின் அணுகுமுறை என்ன? எதிர்காலத்தில் இந்தத் தொழிலைப் பாதுகாப்பதற்கு இந்த அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன என்பதைப்பற்றி இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பட்டுப்புழு வளர்ச்சி. இதிலே தமிழ்நாட்டிலே வளர்ச்சி இருப்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். தமிழகத்தில் பட்டுப்புழு வளர்ச்சி 1984 ஆம் ஆண்டு ஜனவரி முடிய 61,242 ஏக்கரில் முசுக்கொட்டை செடிகள் பயிரிடப்பட்டதாக கூறப்படு கிறது. என்னுடைய தொகுதியில் முசுக்கொட்டை வளர்ப்புக்கான பயிற்சிக்காக இரண்டு கூடங்களைக் கட்டி முடித்திருக்கிறார்கள். உண்மையிலேயே அது பாராட்டப்பட வேண்டிய ஒரு விசேஷ அம்சமாகும். அதை பலப்படுத்துவதற்கும்; அந்தத் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கும், வேளாண் குடி மக்கள் வளம் பெறுவதற்கும், ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

முசுக்கொட்டைச் செடி வளர்ச்சிக்காக அரசாங்கம் கொடுக்கக் கூடிய கடனாகட்டும், வங்கிகளில் கொடுக்கக் கூடிய கடனாகட்டும், காலாகாலத்தில் கிடைப்பதில்லை. அப்படிக் கிடைத்தாலும்கூட, அரசாங்கம் கொடுக்கக்கூடிய மானியம் குறைவாக இருப்பதால் இந்தத் தொழிலில் ஈடுபடும் விவசாயப் பெருங்குடி மக்கள் அதிகமாக உற்பத்தி செய்ய முடியாமல் கஷ்டப்படுகிறார்கள்.

எனவே இந்தத் தொழிலை ஊக்குவிக்கும் வகையில்,, மானியத்தை அதிகப்படுத்த வேண்டுமென்றும் அதே நேரத்தில், வங்கிகளும், அரசாங்கமும் கொடுக்கும் கடன்களை அதிகப்படுத்த வேண்டுமென்றும், இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.



அடுத்தபடியாக அரசாங்க நிறுவனமான, தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம், டான்சியின் இப்போதைய நிலைமை என்ன? டான்சியில் இப்போது உற்பத்தி செய்யக்கூடிய நாற்காலி, பெஞ்ச் இது போன்ற பல்வேறு பொருள்களை அரசு துறையி லிருப்பவர்கள்கூட வாங்குவதில்லை. அந்தச் சிறு தொழில் நிறுவனம் நசிந்து போவதற்கு அரசாங்க அதிகாரிகளும் காரண மாக இருக்கிறார்கள். அரசாங்கமே உத்தரவிட்டிருக்கிறது, டான்சியில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை வாங்க வேண்டுமென்று. ஆனால் டான்சியில் உற்பத்தி செய்யப்படும் பெஞ்ச், நாற்காலி போன்ற பொருள்களையும், இன்னும் இதர தோல் பொருள்களையும் அதிகாரிகள் வாங்குவதில்லை. அரசாங்க இலாக்காவான சிறைச்சாலையில் செய்யப்படும் பொருள்களையும் வாங்குவதில்லை. பள்ளிக்கூடங்களுக்கு பெஞ்ச், நாற்காலி போன்றவைகள் தேவைப்பட்டால், தனியார் துறைகளிலே வாங்குகிறார்களே தவிர, அரசு நிறுவனமான டான்சியில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை வாங்குவது இல்லை. எனவே இவைகளுக்கு அடிப்படையான காரணம், அங்கே அவர்கள் வாங்கவேண்டும் என்று அரசாங்கம் கண்டிப்பான உத்தரவைப்போடவேண்டும். டான்சியிலே உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களைத்தான் ஆசு அதிகாரிகளும், அரசு இலாக்காக்களும் வாங் வேண்டும் என்று உத்தரவு போடவேண்டும். அப்போதுதான் இந்த நிறுவனம் திறமையாகவும், லாபகரமாகவும் செயல்பட முடியும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். டான்சியிலே பணிபுரியக்கூடிய தொழிலாளர் களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்காக, அவர்களுக்குப் பணிப் பாதுகாப்பு, புரமோசன் போன்ற நடவடிக்கைகளில் அரசாங்கம் சரியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் தொழில் கொள்கையிலே விடுபட்டு இருக்கக்கூடிய ஒரு பிரதான அம்சம், பாத்திரத் தொழிற்சாலைகள்;—பாத்திரம் உற்பத்தி செய்யக்கூடியவை. என்னுடைய கோவை மாவட் டத்திலே இருக்கக்கூடிய திருப்பூர், அவினாசி போன்ற பகுதிகளிலே, அலுமினியப் பாத்திரங்களும், அதேநேரத்தில் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் உற்பத்தி செய்யக்கூடிய பாத்திரங்களும் அதிகமாக உற்பத்தி செய்து கொண்டிருக்கிறார்கள். அவை களைப்பற்றி இந்த அறிக்கையில் சொல்லப்படவில்லை. எனவே பாத்திரம் உற்பத்தி செய்யக்கூடிய இந்த திருப்பூர். அவினாசி போன்ற பகுதியிலே இந்தத்தொழில் வளம்பெறுவதற்கு, அரசாங்கம் மானியம் கொடுப்பதோடு மட்டுமல்லாமல், வங்கி களில் அதிகமாகக் கடனைக் கொடுத்து, இந்தத் தொழிலை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இதற்கு அடுத்தாற்போல, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், கடன் வழங்குவதில் ஏற்படக்கூடிய காலதாமதங்கள். விண்ணப்பங்கள் போட்டாலும்கூட, காலத்திலே கடன் கிடைப்பதில்லை. அவர்கள் இந்தக் கடனை வாங்குவதற்கு அதிகமான அளவிலே செலவு செய்யக்கூடிய நிலைமைகள் நடைமுறையிலே பல சிக்கல்கள் எல்லாம் இருக்கின்றன. காலத்திலே கிடைப்பதில்லை. எனவே அவர்கள் தொழில் ஆரம்பிப்பதற்கு ஒரு புறத்திலே லைசென்ஸ் வேண்டும் என்று கேட்டால், லைசென்ஸ் கிடைப்பதில்லை. மறுபுறத்திலே கடன் வேண்டும் என்று கேட்டால் கடனும் கிடைப்பதில்லை. மத்திய அரசாங்கத்தினுடைய தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளாக இருக்கக்கூடியவைகள் அவர்கள் கடன வாங்க கால் வலிக்க நடக்க வேண்டியிருக்கின்றது. அவர்களுக்கு முறையாக கடன் கிடைப்பதில்லை என்ற நிலைமைதான் இருக்கின்றது. எனவே அரசாங்கம் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலே முறையாக காலத்திலே தொழில்களை ஆரம்பிக்கின்றவர்களை உற்சாகப்படுத்தக்கூடிய முறையிலே, லைசென்ஸ் பெறுவதற்கும், மாவட்டத் தொழில் மையங்களில் கடனைக் கொடுப்பதற்கும், தொழில் முதலீட்டுக் கழகத்திலே கடன்களை உடனடியாக வழங்குவதற்கும், அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் தேயிலைத் தொழிற்சாலைகள். நீலகிரி மாவட்டத்திலே 12 தேயிலைத் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. ஒரு தொழிற்சாலை வரக்கூடிய காலகட்டத்திலே இயங்குவதாக இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. இதிலே 16,100 ஏக்கரில், 46 ஆயிரம் பேர்கள் மறைமுகமாகவும், நேரடியாகவும் வேலை வாய்ப்பைப் பெற்றிருப்பதாகச் சொல்லப்படுகிறது. நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், இந்த 12 தொழிற்கூடங்களில் 46 ஆயிரம் பேர்களுக்கு மறைமுகமாகவும், நேரடியாகவும் வேலை வாய்ப்பு வழங்கியிருப்பதாகச் சொல்லி இருக்கிறீர்களே, எந்த அடிப்படையிலே அவர்களுக்கு வேலைகள் கிடைக்கின்றன. ஒரு தொழிற்சாலையில் மீறிப்போனால், 100 பேர்கள், 200 பேர்களுக்குமேல் வேலை செய்ய முடியாது. அப்படி என்றால், 46 ஆயிரம் பேர்கள் என்பது எப்படி இருக்கமுடியும். அதை அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் தொழிற்சாலைகளிலே பணிபுரியக்கூடிய தொழிலாளர்களைப் பொறுத்தமட்டில், தொழிற்சாலைச்சட்டத்திற்குள்ளேயும் வருவதில்லை. தொழிற்தகராறு சட்டத்திற்குள்ளேயும் வருவதில்லை. அவர்களுக்கு இருக்கக்கூடிய சட்டப்படியான சலுகைகள், வழங்கப்படாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. எனவே அவர்களுக்குச் சட்டப்படியான சலுகைகளை வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



வால்பாறை போன்ற பகுதியில், எப்படி நீலகிரி மாவட்டத்திலே சிறிய தொழிற்சாலைகள் இருக்கின்றனவோ, அதைப்போல, வால்பாறையிலேயும் சிறிய கூட்டுறவுத் தொழிற்சாலை அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 40 ஏக்கர் 50 ஏக்கர், 20 ஏக்கர் என்று வைத்திருக்கக்கூடிய தேயிலை பயிரிடக்கூடிய விவசாயிகள் இருக்கிறார்கள். அவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய பச்சைத் தேயிலையை பெரிய தொழிற்சாலைகளில், தனியார்களுக்குத்தான் விற்கக்கூடிய நிலைமை இருக்கிறது. எனவே நீலகிரி மாவட்டத்திலே உருவாகி இருக்கக்கூடிய தேயிலை கூட்டுறவுத் தொழிற்சாலையைப்போல, வால்பாறையிலேயும், தொழிற்சாலையை உருவாக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், ஜவ்வரிசி, மற்றும் மாவுப் பொருள்கள் சம்பந்தமாக இதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். என்னுடைய கோவை மாவட்டம் மரவள்ளிக் கிழங்கு அதிகமாக உற்பத்தி செய்யக்கூடிய மாவட்டம். அதுவும் அவினாசி போன்ற பகுதியிலே வானம் பார்த்த பூமியாக இருக்கின்ற காரணத்தால், அங்கே மரவள்ளிக்கிழங்குதான் அதிகமாக உற்பத்தி செய்யப் படுகின்றது. எனவே அதிகமான உற்பத்தி செய்யக்கூடிய அவினாசிப் பகுதியிலே, ஜவ்வரிசி மற்றும் மாவுப்பொருள் தயாரிக்கக்கூடிய ஒரு தொழிற்சாலையை உருவாக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியை தொழிற் துறையிலே பின்தங்கிய தொகுதியாக அவினாசியை அறிவித்தார்கள். அப்படி அறிவித்து 2 ஆண்டுக்காலம் ஆகிவிட்டது. 3 இடங்களிலே தொழிற்சாலைகளைக் கட்டுவதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டது. ஆனால் இதுவரையில் அந்த இடங்கள் எந்த நிலையிலே இருக்கின்றன என்று தெரியவில்லை. தேர்வு செய்யப்பட்டுவிட்டனவா? அல்லது தேர்வு செய்யப்படாமல் இருப்பதற்கு அடிப்படையான காரணம் என்ன என்பது புரியவில்லை. எனவே தொழிற் துறையில் பின்தங்கிய தொகுதியாக அறிவித்திருக்கக்கூடிய என்னுடைய அவினாசிதொகுயிலே சிறுதொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-20)

கடைசியாக மத்திய அரசாங்கம் அறிவித்திருக்கக்கூடிய வேலையில்லாத இளைஞர்களுக்கு கடன் கொடுக்கக்கூடிய முறையில் உள்ள முறைகேடுகளைப் புரிந்துக் கொள்ளவேண்டும். தேசிய வங்கிகள் கடன் கொடுப்பதேயில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னராசு அவர்கள் சொல்லியதும், மாண்புமிகு உறுப்பினர் திரு. பாபு ஜனார்த்தனன் அவர்கள் சொல்லியதுமாகிய அதே கருத்துத்தான் எனக்கும். தேசிய வங்கிகளில் கடன் கேட்டால் கொடுப்பதே இல்லை. ஆகவே, மாவட்ட

அபிவிருத்தி கவுன்சல் கூட்டத்திற்கு அவர்களையும் அழைத்து முறையாக விண்ணப்பங்கள் பெற்று, அவர்களுக்குக் காலதிலே கடன் கிடைக்கக்கூடிய முறையிலே அறிவிக்கவேண்டும் என்றுக் கேட்டுக்கொண்டு, இப்படிப்பட்ட அறிவிப்புகள் எல்லாமே, ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது என்பதுபோல, ஏட்டிலே மட்டும் இருக்காமல், நடைமுறையிலேயும் இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு நான் விடைபெறுகிறேன்.

* திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த மானியக் கோரிக்கையின்மீது ஒரு சில கருத்துக்களை நான் சொல்லவிரும்புகிறேன். நாம் அத்தனை தொழில்களையும் ஊக்குவிக்க வேண்டும், மக்கள் எல்லோருக்கும் வேலை வாய்ப்பைக் கொடுக்க வேண்டும் என்பதற்காக, வீட்டுக்கு ஒருவருக்கு வேலை திட்டம் என்றெல்லாம் ஒரு நிலையை அரசு எடுத்திருக்கிறது. அதை நான் பாராட்டு கிறேன். வரவேற்கிறேன். ஆனால் எப்படி நாம் வேலை வாய்ப்புக்கொடுக்க முடியுமஎன்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். ஏதுஎது பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்பட்டிருக்கிறதோ, அந்தப் பகுதிகளில் எல்லாம் நம்முடைய டான்சி, சிட்கோ நிறுவனங்கள் மூலமாக, அரசாங்கமே சில தொழில்களை ஆரம்பிக்க முன்வரவேண்டும். அப்போதுதான் அது நன்றாக இருக்கும்.

ஏற்கெனவே 1960 ஆம் ஆண்டு காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் தச்சு, கொல்லுப்பட்டறையை ஆரம்பித்தோம். அப்படி ஆரம்பித்த போது, வத்தலகுண்டில் அந்தப் பகுதியில் இருக்கிற 10 பேர் களுக்குப் பயிற்சி கொடுத்து ஆரம்பித்தோம். அந்த நிறுவனத்தில் இன்றைக்கு யூனியனில் சொந்தமாக ஒரு கட்டிடத்தைக் கட்டிய தோடு மட்டுமல்லாமல் கிட்டத்தட்ட 80-81லே மட்டும் 1 லட்சத்து 60 ஆயிரத்து 427 ரூபாயும், அதேபோல 81-82 ஆம் ஆண்டு 2 லட்சத்து 62 ஆயிரத்து 900 ரூபாயும்; 82-83-ல் 3 லட்சத்து இரண்டாயிரத்து நானூற்று முப்பத்து மூன்று ரூபாயும் லாபம் பெற்றிருக்கிறது. ஆகவே, இப்படி எந்தத் தொழிலை நாம் ஆரம்பித்தாலும் அதை லாபகரமாக நடத்து வதற்கு நாம் முயற்சிக்க வேண்டும்.

ஏற்கெனவே நான் கேள்வி நேரத்தின்போது கேட்டேன் அப்போதுகூட 119 யூனியன்களிலேயும், இந்த தச்சுக் கொல்லப்பட்டறை இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள்.



ஆனால் இன்றைக்கு நாம் பல இடங்களிலே ஆரம்பித்த தொழில்கள் இழுத்து மூடப்படக்கூடிய நிலையிலே இருந்துக் கொண்டிருக்கின்றன. இந்தத் தொழிற்சாலைகளைவிரிவுபடுத்த, லாபகரமாக நடத்த என்னென்ன செய்யவேண்டுமோ அத்தனை யையும் செய்யவேண்டும். அங்கே என்னென்ன சாமான்கள் செய்யப்படுகின்றனவோ அவைகளை விற்பனை செய்வதற்கும் அரசாங்கம் முயற்சி எடுக்க வேண்டும். உதாரணமாக வீட்டுக்கு வேண்டிய சாமான்கள், மரச்சாமான்கள், ஜன்னல்கள், கிரில்கள், இரும்பு வண்டிகள், இரும்பு கேட்டுகள் இப்படி பல சாமான்களை உற்பத்தி செய்து கொண்டு வருகிறார்கள். அதேபோல புதியதாக பல சாமான்களைச் செய்வதற்குக்கூட இங்கே எஸ்டிமேட் போட்டு அனுப்பப்பட்டிருப்பதாக தெரிகின்றது.

வத்தலகுண்டு யூனியனில் தொழிலை விரிவுபடுத்த கட்டிடம் கட்ட 1 லட்சம் ரூபாய், இயந்திரம் வாங்க 50 ஆயிரம் ரூபாய், பயிற்சியாளர்களுக்கு ரூ. 4,800 பத்து பேர்களுக்கு பயிற்சி கொடுப்பதற்காக 18 ஆயிரம் ரூபாய் என்று இப்படி வழங்கக்கூடிய அளவிற்கு நிலைமையை உருவாக்கியிருக்கிறார்கள். இதுபோன்ற தொழில்களை நாம் ஊக்குவிக்க வேண்டும். ஏற்கெனவே வத்தலகுண்டில் தச்சு, கொல்லுப்பட்டறை வேலையை ஆரம்பித்தபோது பத்து பேர்களுக்கு பயிற்சி கொடுத்தோம். இன்றைக்கு 50 பேர்களுக்கு அது வேலை வாய்ப்புக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. இதைப்போன்று ஒவ்வொரு யூனியனிலும் ஏற்படுத்தி, மேலும் பத்து பேர்களுக்கு பயிற்சி கொடுக்கும் பணியில் ஈடுபட்டால், அதற்கு ஆக்கத்தையும், ஊக்கத்தையும் அளித்தால், அந்தந்த இடங்களில் மேலும் 50 பேர்களுக்கு, வேலை வாய்ப்பு கிடைக்க ஒரு வாய்ப்பினை உண்டாக்கும். எனவே இம்மாதிரி தொழிற்சாலைகளை கிராம அளவிலே நாம் செய்து கொடுத்தால்தான், அது அந்தப்பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பைக் கொடுப்பதற்கு ஒரு நல்ல வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து டான்சி நிறுவனம். எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகம் அவர்கள் கூட அதைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். டான்சி நிறுவனம் நல்ல முறையிலே பணியாற்றினால் கூட, அங்கே வாங்கக்கூடிய சாமான்களை நாம் வெளி மார்க்கெட்டுக்கு கொண்டு போனால், பொது மக்கள் அதிலே தரம் கம்மியாக இருக்கிறது என்று சொல்லி விட்டு, தனியார்களிடத்திலேயிருந்து அதே சாமான்களை வாங்குகிறார்கள்.

இப்படி அதன் தரம் ஏன் கம்மியாக இருக்கிறது? அதன் தரத்தை உயர்த்த அரசாங்கம் முயற்சிக்க வேண்டும் என்பதோடு, எல்லாத் துறைகளிலும், எல்லாப் பள்ளிகளிலும் வேண்டிய அத்தனை மேசை நாற்காலி சாமான்களையும், அத்தோடு அரசு துறைகளில் இருக்கக்கூடிய அத்தனை அலுவலகங்களிலும்,

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகளுக்கு வீட்டுக்கு வேண்டிய அத்தனை சாமான்களையும், அரசாங்கத்திலே பணியாற்றக் கூடிய அத்தனை பணியாளர்களுக்கு வேண்டிய சாமான்களையும், டான்சி நிறுவனத்தின் மூலமாகத்தான் வாங்கமுடியும் என்ற நிலைமையை ஏற்படுத்தினால், அந்த நிறுவனம் மேலும் மேலும் வளர்ந்து மேலும் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கக்கூடிய ஒரு வாய்ப்பையும் கொடுக்கும் என்று இந்த நேரத்திலே சுட்டிக் காட்டவிரும்புகிறேன்.

அது மட்டும் அல்லாமல் சென்னையிலே ஒரு கட்டிடம் இருக்கிறது. டான்சிக்கு சொந்தமான ஒரு கட்டிடம். அந்தக் கட்டிடத்தில் திருடர்கள் சென்று ஒளிந்துக் கொள்ளக்கூடிய நிலைமை இருக்கிறது. அந்தக் கட்டிடத்திலே எந்த வே லையும் செய்யாமல், அது சும்மா பூட்டி வைக்கப்பட்டிருக்கிறது. அதனால் யாராவது திருடர்கள் திருடிவிட்டு அந்தக் கட்டிடத்தின் உள்ளே நுழைந்து விடுகிறார்கள். பிறகு பாதுகாப்பாக மறைந்து கொள்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. அதையெல்லாம் சற்று கவனத்திலே வைத்து காரியம் ஆற்ற வேண்டும்.

அடுத்து சிட்கோ மூலமாக எத்தனையோ தொழில்கள் செய்யப்படுவதாக இந்தக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. தமிழகத்திலே உள்ள அத்தனை கிராமப்புறங்களிலேயும் அந்தத் தொழில்களை ஏற்படுத்தக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தினால் அதன் மூலமாக லட்சக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்பை உண்டாக்கிக் கொடுக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்து ஐ.ஆர்.டி.பி. என்று சொல்லப்படுகிற ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பல பேர்களுக்கு பயிற்சி அளிக்கிறோம். நிலக்கோட்டையிலே 20 பேர்களுக்கு Rewinding பயிற்சி கொடுத்தார்கள். அதற்காக மாதம் 150 ரூபாய் மானியத் தொகை அவர்களுக்குக் கொடுக்கவேண்டும். ஆனால் அது இதுவரையில் அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. அந்தப் பயிற்சி 6 மாதங்கள் நடந்தது., அதிலே படித்து முடித்து விட்ட மாணவர்கள் வெளியே வந்து விட்டார்கள். அந்த ஆசிரியர்களுக்கும் சம்பளம் கொடுக்கப் டவில்லை. கிராமப் புறங்களிலே இருந்து அந்த மாணவர்கள் எல்லாம் வாடகை சைக்கிளிலே வந்தார்கள். அந்த வாடகையைக் கூட அவர்களால் கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. ஆகவே அந்த 20 மாணவர்களுக்கும் 6 மாதத்திற்கு மானியத் தொகை கொடுக்கவும் ஆசிரியர்களுக்கும் சம்பளத்தைக் கொடுக்கவும் சூழ்நிலைகளை உருவாக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்து தீப்பெட்டி தொழில். தீப்பெட்டித் தொழிற்சாலையை கூட்டுறவுத் துறையிலே ஆரம்பித்தோம். அந்தத் தொழிற்சாலை நசிந்துபோகக்கூடிய அளவிலே இருக்கிறது. விம்கோ நிறுவனத்திற்கு, பெரிய நிறுவனத்திற்கு 9 யூனிட்டுகளுக்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அவர்கள் என்ன செய்கிறார்கள், நல்ல இயந்திரங்களை வைத்து அதிகமாக உற்பத்தி செய்து வெளியே விற்பனைக்குக் கொண்டு வருகிறார்கள். நாம் அவர்களுடன் போட்டிபோட முடியாத நிலைமை ஏற்படுகிறது. எனவே நல்லமு றையிலே செயல்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பட்டு வளர்ப்புத் துறை. நானே ஒரு பட்டு வளர்ப்பு விவசாயிதான். என் தோட்டத்திலே நான் 100 முட்டைகள் வளர்த்தேன். அப்படி வளர்த்ததால் 1,800 ரூபாய் ஒரு மாதத்திற்கு கிடைத்தது. என்னாலே பார்க்க முடியாத நிலையில் 2 நபர்களை வைத்து அவர்களுக்கு 500 ரூபாய் சம்பளம் என்று கொடுத்தாலும் 1 800 ரூபாய் வருகிறபோது மீதி இருப்பது போதுமானதுதான். பட்டுக்கூடுகளை இலாகாவிற்கு கொண்டு போடுகிறபோது இலாகாவினர் பணம் உடனே கொடுப்பதில்லை. பல விவசாயிகளுக்கு கூடுகள் போட்டும் 2, 3 மாதம் ஆகிறது, பணம் கொடுக்கப்படவில்லை. 10 நாட்களாக அவர்கள் இரவு நேரம் என்றும் பகல் நேரம் என்றும் தூங்காமல் இருந்து புழுக்களுக்கு மணியைப் பார்த்து இலைகளைப் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். அப்படி அவர்கள் கஷ்டப்பட்டு கூடுகளைக் கொடுத்துவிட்ட பிறகுகூட பணம் கொடுப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது என்றால் சாதாரண விவசாயி, இந்தப் பட்டு வளர்ப்பை மட்டுமே செய்துகொண்டு இருக்கிற விவசாயி நசிந்துபோகக் கூடிய நிலைமை ஏற்படும். மேலும் அதன் காரணத்தினால் எந்த ளவுக்கு நிறைவேற்ற வேண்டுமென்று குறியீடு வைத்திருக்கிறோமோ அதை அடைய முடியாத நிலைமை ஏற்படும். ஆகவே உடனடியாகப் பணம் கொடுக்கக்கூடிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். நம்முடைய மாநிலத்திலே புஞ்சைக் காடுகள் நிறைய இருக்கின்றன, 10, 20 ஏக்கரில் பெரிய கிணறை பட்டு வளர்ப்புத் துறையே வெட்டிக் கொடுத்து அதிலே பம்புசெட் அமைத்துக்கொடுத்து -- அதற்காக வாட்டர் செஸ் வேண்டுமென்றால் வசூல் செய்து கொள்ளலாம்— பட்டு வளர்ப்புக்குப் போதுமான அளவுக்குத் தண்ணீர் கொடுத்தால் பட்டு வளர்ப்பிலே நம்முடைய மாநிலம் தன்னிறைவு அடையும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி பற்றி பலமுறைகளில் நான் சட்டப் பேரவையில் சொல்லியிருக்கிறேன். சொல்லிச் சொல்லி அலுத்து விட்டது. மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள என்னுடைய தொகுதியிலே ஆரஞ்சுப் பழம், வாழைப் பழம், திராட்சைப்

பழம் நிறைய உற்பத்தியாகின்றன. திராட்சைப் பயிர் மழை காலத்திலேயும் வெயில் காலத்திலேயும் பாதிக்கப்படுகிறது. அதனால் பெரும் அளவுக்கு அந்த விவசாயிகள் பாதிக்கப் படுகிறார்கள். அங்கே மல்லிகை பூ உற்பத்தியாகிறது. ஆகவே அங்கே ஜாஸ்மைன் சென்ட் உற்பத்தி செய்யக்கூடிய தொழிற் சாலையை ஆரம்பிப்போமானால் அரசுக்கும் வருமானம் கிடைக்கும், சிறிய சிறிய விவசாயிகளுக்கும் வருமானம் கிடைக்கும். கொடைரோடு, நிலக்கோட்டை, வத்தலகுண்டு, அம்பாத்துறை, திண்டுக்கல் பழ உற்பத்தி செய்யக்கூடிய இடங்கள், அங்கே பழ பக்குவப்படுத்தும் தொழிற்சாலையை ஆரம்பிக்கவேண்டும். அப்படி ஆரம்பித்துக் கொடுத்தால் பல நூற்றுக்கணக்கான பெண்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும். இங்கே பல லட்சக்கணக்கான ரூபாய் ஒதுக்கி விதவைப் பெண் களுக்கு உதவித் தொகை கொடுத்து அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க பல வழிவகைகளைச் செய்து கொண் டிருக்கிறோம். ஆனால் கூட்டுறவுத் துறைமூலமாகவோ அரசு நேரிடையாகவோ எந்த எந்தப் பகுதிகள் பின்தங்கிய பகுதிகளாக இருக்கின்றனவோ அந்தப் பகுதிகளிலே எல்லாம் தொழில் ஆரம்பித்து, எனக்கு முன்னாலே முதன்முதலாக பேசிய உறுப்பினர் சொன்னதுபோல் பாலித்தின்பேப்பர், வையரிங் சாமான்கள், பீஸ் கம்பிகள், குளிர்சாதனப் பெட்டிகள் இந்த மாதிரி சாமான்களைச் செய்வோமானால் பெண்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படும். அவர்களுடைய குடும்பங்களில் விளக்கேற்றி வைக்கக்கூடிய நல்ல சூழ்நிலை ஏற்படும்.

(பிற்பகல் 1.30)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவையின் அனுமதி யுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் : பின்தங்கிய பகுதிகளில் நீங்கள் கணக்கு எடுக்கச் சொல்லுங்கள். கணக்கு எடுக்கச் சொல்லி ஒவ்வொரு ஊரிலேயும் அங்கே இருக்கிற ரா-மெட்டீரியல்ஸ் என்ன என்று பார்க்கவேண்டும். இன்றைக்கு நாம் வீடுகளைக கட்டிக்கொண்டு இருக்கிறோம். என்னுடைய தொகுதியில் நிறைய மண் இருக்கிறது. நல்ல செங்கல் செய்வதற்கு நல்ல மண் இருக்கிறது. ஆகவே அங்கே செங்கல் செய்வதற்கு சேம்பர் ஏற்படுத்தி அதை செய்யக்கூடிய நிலையை உருவாக்கிக் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்பதை கூறி மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவருக்கு நன்றி கூறி முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு இந்த மன்றத்திலே ஒரு உறுப்பினரை அழைத்த நேரத்திலே எப்படி அழைக்க வேண்டும், ஜாதிப் பெயரை இணைத்துக்கொள்வதா? இல்லையா



என்ற ஒரு விவாதம் ஏற்பட்டதாக நான் அறிந்தேன். என்னைப் பொறுத்த வரையில் நம்முடைய மன்றத்தினுடைய உறுப்பினர் களை அழைப்பதில் May's Parliamentary Practi:e-ஐ பின்பற்றுவது பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். நீங்கள் 2 வரிகளை படிக்க எனக்கு அனுமதி அளிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, நேற்று எழுப்பிய பிரச்சினைக்கு இன்று எப்படி பாயின்ட் ஆப் ஆர்டர் வரும்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. அவர் பேசும்போது இதை முதல் கட்டமாகச் சொல்கிறார்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "In order to guard against all appearance of pe.sonality in debate, no Member should refer to another by name. Each Member must be distinguished by the Office he holds, by the place he represents or by other designations, as 'the noble Lord the Secretary of State for foreign affairs. 'the honourable. or 'right honourable gentleman the Member for York, or 'the honourable and learned Member who has just sat down, or, when speaking of a member of the same party, 'my right honourable friend the Member for...." என்று பேசலாம் என்று போட்டு இருக்கிறது. ஆகையால் நாம் ஒரு மரபை, இங்கே ஒரு உறுப்பினரைக் கூப்பிடுகிற நேரத்தில் பெயரைக் கூப்பிடாமலேயே அல்லது அதைப் பற்றி சொல்கிற நேரத்தில் அவர் சார்ந்து இருக்கிற தொகுதிப் பெயரைச் சொல்லி....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்களை எப்படி கூப்பிடச் சொல்கிறீர்கள் என்று சொன்னால் நன்றாக இருக்கும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : திருமங்கலம் தொகுதி யினுடைய சட்டமன்ற உறுப்பினர் என்று அழைக்கலாம் அல்லது வேறு பதவி இருந்தால். அந்தப் பதவியின் பெயரைச் சொல்லி அழைத்தால் நல்ல மரபாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சரி, திருமங்கலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என். எஸ். வி. சித்தன் என்று அழைக்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாமன்றத்தில் நம்முடைய ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களால் கொடுக்கப்பட்டு இருக்கிற இந்த கோரிக்கைகள் மீது நான் கொடுத்து இருக்கிற வெட்டுத்

தீர்மானங்களை ஆதரித்து இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சிறு தொழில்களை பாதுகாக்கவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்திச் சொன்னார்கள். நான் இங்கே குறிப்பிட விரும்புவது எல்லாம் சில பொருட்களை தயாரிப்பதில் சிறு தொழில்களுக்கும், பெரிய தொழில்களுக்கும், நடுத்தர தொழில் களுக்கும் கொடுக்கப்பட்டு இருக்கிறது. உதாரணமாக ஒரு பொருளை எடுத்துக்கொண்டால் ஒரே பொருளை உற்பத்தி செய்கின்ற ரப்பர் தொழில் டையர், டியூப் எடுத்துக்கொள்ளலாம், தீப்பெட்டித் தொழிலை எடுத்துக்கொள்ளலாம். இப்படி பல்வேறு பொருட்கள் இருக்கின்றன. ஆகவே ஒரு சிறிய தொழிலில் உற்பத்தி செய்கிற பொருள்களுக்கு பாதுகாப்பு அளிக்கிற முறையில் இந்தச் சிறு தொழிலுக்கு என்று சில பொருட்களை நாம் ஒதுக்கியிருக்கிறோம். அந்தப் பொருட்களை மட்டுமே தயாரிக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறோம்; பெரிய தொழிலுக்கு முன்னால் அனுமதி கொடுத்து இருப்போமானால் படிப்படியாக குறைத்துக்கொள்ளவேண்டும். திடீர் என்று அவைகளை ரத்து செய்து விட முடியாது. படிப்படியாக குறைத்துக்கொண்டே வந்து சிறு தொழிலுக்கு பாதுகாப்பு அளிக்கிற முயற்சியில் அரசு ஈடுபடவேண்டும் என்ற ஒரு கருத்தை இங்கே சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய தேசத்தைப் பொறுத்தவரை பஞ்சாப் மாநிலம் இன்றைக்கு சிறிய பொருட்களை உற்பத்தி செய்வதில் முன்னணியில் இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் வெளிநாடுகளுக்கு எல்லாம் போய் வந்தார்கள். ஜப்பான் நாட்டுக்கு கூட போய் வந்தார்கள். ஆனால் ஜப்பான் இன்றைக்கு உலக சந்தையில் வேறு எந்த நாடும் அதோடு போட்டிப் போட முடியாத அளவுக்கு இன்றைக்கு பொருட்களை உற்பத்தி செய்து அமெரிக்கா போன்ற பெரிய வல்லரசு நாடுகளில் தனக்கு என்று ஒரு சந்தையை ஸ்தாபித்து வைத்துக்கொண்டு இருக்கிறது என்று சொன்னால் சிறு தொழில் பொறுத்தவரை அந்த நாட்டில் அவர்களுக்கு கிடைக்கின்ற ஊக்கம் என்பதை நாம் மறந்து விடக் கூடாது. நம்முடைய நாட்டில் இன்றைக்கு பஞ்சாப் முன்னணியில் இருக்கிறது என்று சொன்னால் நம்முடைய தமிழகத்தைப், பொறுத்தவரை சிறு தொழிலில் ஈடுபடுபவர் களுக்கு லைசன்ஸ்களை—அனுமதியை பொறுத்தவரை, இப்போது இருக்கின்ற கட்டுப்பாடுகளை பரவலாக நீக்கவேண்டும். இருக்கின்ற சிறு தொழில்கள் வளர்ச்சி அடைய வேண்டுமென்றால், அரசாங்கம் அதில் தனிக் கவனம் செலுத்தி, எந்த அளவிற்குச் சிறு தொழில்களுக்குச் சலுகைகளைக் கொடுக்க வேண்டுமோ அவைகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





பொதுவாக நம்முடைய அரசாங்கத்தின் சார்பில் இருக்கின்ற நிதி நிறுவனங்கள் ஆகட்டும் அல்லது வங்கிகள் ஆகட்டும், சிறு தொழில் நடத்துகின்றவர்களுக்குக் கடனுதவி செய்கிறார்கள். ஆனால் என்ன காரணத்தினாலோ தெரியவில்லை, அந்தச் சிறுதொழில் நிறுவனங்கள் சில நேரங்களில் சிக்காகி—நோயுற்று இருக்கின்றபொழுது என்ன காரணத்தினால் அது அவ்வாறு ஆகியிருக்கிறது என்று ஆராய்ச்சி செய்கின்ற முறை இல்லை. வட்டி, கமிஷன் முதலியவற்றை அவர்களிடமிருந்து முறையாக வாங்குகிறோம். அவர்கள் வட்டியை ஒழுங்காகக் கட்டாவிட்டால் சில நேரங்களில் நடவடிக்கைகளை எடுக்கிறோம். ஆனால் சின்னச்சின்னத் தொழிலகங்கள் மூடப்படுகின்றநேரத்தில் அதற்கு என்ன காரணம் என்பதை ஆராய்ந்து அதற்கு எந்த அளவிற்கு உதவி செய்யலாம் என்று அரசாங்கம் ஈடுபடுவதாகத் தெரிய வில்லை இவ்வாறு இருப்பது, வளமான தொழில் வளத்திற்குத் துணையாக இருக்காது. ஆகவே, அரசாங்கம் இதில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருமங்கலத்திற்கு அருகில் உள்ள கப்பலூரில், காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பல தொழில்கள் அங்கே ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. ஆரம்பிக்கப்பட்டிருக் கின்றன என்றுதான் சொல்ல முடியுமே தவிர, நல்லமுறையில் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்று சொல்ல முடியாது. நிர்வாகச் சிக்கல்களினாலும், நல்ல சந்தை கிடைக்காத தினாலேயும் மூலப் பொருட்களின் விலை அதிகமாக இருப்பதினாலேயும், வரி பளு இருப்பதினாலேயும் பல தொழில்கள் மூடப்பட்டிருக்கின்றன. எனவே, இது குறித்து அரசாங்கம் விரிவான முறையில் ஆராய்ச்சி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் நல்லமுறையில் செயலாற்றிக்கொண்டு வருகிறது; திறமையான நிர்வாகிகள் இருக்கிறார்கள். அரசாங்கத்தின் புள்ளி விவரத்தில் 1982-83-ம் ஆண்டில் அனுமதி வழங்கப்பட்ட மொத்தத் தொகை 55·87 கோடி ரூபாய் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. சிறுதொழில் களுக்கு வழங்கியுள்ளது 48.59 கோடி ரூபாய் என்று குறிப்பிடப் படுகிறது. வழங்கப்பட்ட தொகை 39.56 கோடி ரூபாய். வேலைவாய்ப்பைப் பொறுத்தவரையில் 1981–82 ஆம் ஆண்டில் 52,000 பேர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பல கோடிக் கணக்கில் இந்த ஆண்டு அதிகமாகக் கொடுத்தும் 37,000 பேர்களுக்குத்தான் வேலைவாய்ப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. தொழிலில் ஈடுபடுபவர்கள், தொழிலாளர்கள் ஆகியவர்களின் எண்ணிக்கை உயர வேண்டுமென்பதற்காகத்தான் நாம் கடன்களைக் கொடுக்கின்றோம். ஆனால் இவ்வளவு அதிகமாகப் பணத்தைக்

கொடுத்தும் இந்தத் தொழிலாளர்களின் எண்ணிக்கை உயரவில்லை, கூடவில்லை, வளரவில்லை. எனவே, இதுகுறித்து அமைச்சரவர்கள் பதில் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சிக் யூனிட்டுகளைப் பொறுத்தவரையில், அவைகள் இந்த நிதி நிறுவனங்களுக்கு வட்டி கட்டுகின்ற நேரத்தில் பல நேரங்களில் பினல் இன்டரஸ்ட் — அதாவது அபராத வட்டி என்று போடுகிறார்கள். சாதாரணமாக வட்டிக்குக் கடன் கொடுக்கின்ற தனியார் வேண்டுமானால் அவ்வாறு போடலாம். ஆனால் அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், சில நல்ல தொழில்கள் வளர வேண்டுமென்பதற்காக, Institution with Heart என்று விளம்பரம் செய்கிறார்களே, அப்படிப்பட்ட இன்ஸ்ட்டிடியூஷன்களுக்கு பீனல் இன்டரஸ்ட் போடுவது முறை அல்ல. அப்படிப் போட்டிருந்தாலும் அதை ரத்து செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறு தொழில் நிறுவனம் — சிட்கோவைப் பொறுத்தவரையில் கொள்கை விளக்கக் குறிப்பிலே தச்சுத் தொழிலைப் பற்றிக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். எனக்கு முன் பேசிய பொதுவுடைமைக் கட்சித் தோழர் அவர்கள் சொன்னார்கள். வெளிச் சந்தையிலே விற்கப்படுகின்ற விலையை ஒப்பிட்டு நோக்கும் பொழுது இந்தத் தச்சுப் பட்டறைகளில் உற்பத்தியாகின்ற மேசை, நாற்காலி போன்ற பொருட்களின் விலைகள் கூடியிருக்கின்றன. ஆகவே, இந்த நிறுவனம் இலாபத்தில் இயங்க வாய்ப்பில்லாமல் உள்ளது. எத்தனையோ பேர்களுக்கு இதில் வேலைவாய்ப்பு கொடுக்கப்படுகிறது என்றாலும்கூட, தனியார் ஓப்பன் மார்க்கெட்டிலே விற்பதை ஒப்பிட்டுப் பார்க்கின்ற பொழுது மக்களுக்குக் குறைந்த விலையில் தரமான பொருட்கள் கிடைக்கின்றனவா என்பதுபற்றிய விவரம் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே இல்லை. இதைப்பற்றி அமைச்சரவர்கள் விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழ்நாடு மொப்பெட்ஸ் நிறுவனத்தைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். ஒரு காலத்தில் நாம் துவிச்சக்கர வண்டி என்று சொல்லப்பட்ட சைக்கிளில், பின்னர் பவரை வைத்து, விசையால் ஓட்டுகின்ற அளவிற்கு அந்த வண்டியைத் தயார் செய்து அந்த ஊர்தியில் போகின்ற காலம் வந்துகொண்டிருக்கிறது. இப்பொழுதெல்லாம் சாலைகளில் பார்த்தால் நிறைய மொப்பெட்ஸ் ஓடுகின்றன. ஆனால் நம்முடைய சிட்கோ நிறுவனம் ஏன் இவைகளைத் தயாரிக்கின்ற முயற்சியைக் கைவிட்டு விட்டது என்று தெரியவில்லை. ஆனால் அதை நிறுத்தியதற்குச் சொல்லப்படுகின்ற காரணம்தான் எங்களுக்கு ஆச்சரியத்தை அளிக்கின்றது. மொபெட் வாகனங்களை





தயாரிப்பதை நிறுத்தி வைத்து, மூன்று தனிப் பிரிவுகளை அமைத்து வெளியார் கொடுக்கும் பணிகளை ஏற்று நிறைவேற்றி வருகிறது என்றும், "மொபெட்" வண்டிகளின் எண்ணிக்கையை 20,000 வரையில் உயர்த்துவதற்குமான செயற்குறிப்பு பரிசீலிக்கப்பட்டது என்றும், இதில் அதிக அளவு முதலீடு செய்ய வேண்டிய அவசியத்தைக் கருத்தில் கொண்டும், நிலையான விற்பனை இல்லாததாலும், இந்தியா முழுவதிலும் விற்பனை பணி வசதிகளை ஏற்படுத்துவதில் உள்ள இடையூறுகளினாலும் இத்திட்டத்தை தொடர்ந்து நடத்த இயலாது என்று முடிவு செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இது ஒரு நியாயமான

(பிற்பகல் 1–40)

காரணமாக எனக்குப்படவில்லை. நாட்டிலே எத்தனையோ வாகனங்கள் இன்றைக்குப் பல்வேறு துறைகளில் இருந்து வந்து கொண்டிருக்கின்ற நேரத்தில் அரசாங்கத்தின் சார்பிலே ஏன் நடத்த முடியவில்லை? எனவே வேறு காரணங்கள் இருக்கலாம். பணம் இல்லை என்று அரசாங்கம் சொன்னால் அதை ஒப்புக் கொள்ள முடியாது. மற்றைய நிறுவனங்களால் இலாபகரமாக நடத்த முடிகின்றது என்று சொன்னால் நிதிவசதி படைத்திருக்கின்ற, சர்வ வல்லமை படைத்திருக்கின்ற அரசாங்கத்தாலே ஏன் நடத்த முடியவில்லை? எனவே அதற்கு வேறு காரணம் இருக்கும் என்று நான் கருதுகிறேன். எனவே அமைச்சர் அவர்கள் பதில சொல்லும்போது காரணத்தைச் சொல்லவேண்டும். நல்ல இலாபகரமாக மக்களுக்குப் பயன் அளிக்கக்கூடிய வகையில் இன்னும் மலிவு விலையில் மொப்பட்டுக்களை அரசாங்கத்தால் கொண்டுவர முடியும். எனவே அதற்கான முயற்சிகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ளவேண்டும். எனவே இங்கே குறிப்பிலே கொடுத்திருக்கின்ற காரணம் சரியான காரணமாக எனக்குப்படவில்லை.

அடுத்து இந்த மன்றத்திலேயே முன்னாலே ஒரு முறை நான் சொன்னேன். தொழில் நடத்துகிறவர்களுக்கு அவர்கள் செலுத்திய வணிக வரியின் மீது கடன் கொடுப்பது பற்றிச் சொல்லி இருக்கிறேன். இன்ட்ரஸ்ட் ஃப்ரீ சேல்ஸ் டாக்ஸ் லோன், தற்போதுள்ள நடைமுறையில் புதிய தொழில்களுக்கும், நடுத்தரத் தொழில்களுக்கும் மட்டுமே அவ்வாறு கடன் கொடுக்கின்ற முறை இருந்து கொண்டிருக்கின்றது. அதை சிறு தொழில்களுக்கும் கொடுக்கவேண்டும் என்ற கோரிக்கையைப் பல்வேறு முறைகளில் நான் எழுப்பி இருக்கிறேன். அரசாங்கம் ஒரு குறிப்பிட்ட ஆண்டைக் கணக்காக வைத்து அதற்குப் பின்னாலே தொடங்குகின்ற தொழில்களுக்கும், அவ்வாறு தொழிற்சாலை வைத்திருப்பவர்களுக்கும் அவர்கள் செலுத்தி இருக்கின்ற வணிகவரியிலிருந்து கடன் கொடுக்கின்ற முறை இருக்கின்றது. அந்த முறை இல்லாமல் அதற்கு முன்னாலே தொழில்களை ஆரம்பித்தவர்களுக்கும் அந்த வணிகவரித்

தொகைக்கு ஈடான தொகையை கடனாகக் கொடுப்பார்களே யானால் சிறந்ததாக இருக்கும். அதிலே மூன்றாண்டுக்காலம் ஹாலிடே பீரியட் இருக்கின்றது என்று நான் நினைக்கிறேன். 5 ஆண்டுக்காலத் தவணை கொடுக்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே இந்த முறை ஒரு நல்ல முறை. எனவே சிறிய தொழில்களை நடத்துகின்றவர்களுக்கும், பல்வேறு தொழில்களில் இருப்பவர்களுக்கும் உற்சாகம் அளிக்கக்கூடிய ஒன்றாக இருப்பதன் காரணத்தால் அவர்கள் எந்த ஆண்டிலே இதை ஆரம்பித் திருந்தாலும் அவர்களுக்கு வணிகவரித் தொகையிலிருந்து கடன் கொடுக்கின்ற முறையை அரசாங்கம் கொண்டுவரவேண்டும். அதற்கான ஒரு நல்ல அறிவிப்பை அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக நம்முடைய உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் அவர்கள் மல்லிகைப் பூ தைலம் பற்றிச் சொன்னார்கள். கடந்த ஆண்டு கூட அவர்கள் அதைப்பற்றி வலியுறுத்தி இருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். இந்தத் தைலம் தயாரிக்கின்ற தொழிற்சாலை ஒரு நல்ல அருமையான தொழிற்சாலை; அன்னியச்செலவாணியை ஈட்டித் தருகின்ற ஒரு தொழிற்சாலையாகும். அதை ஜேஸ்மின் அப்சல்யூட் கான்சன்ட்ரேட் என்று சொல்வார்கள். பல இலட்சக்கணக்கான ரூபாய் கூட அல்ல; பல கோடிக்கணக்கான ரூபாய் அன்னியச் செலவாணியை ஈட்டித் தரக்கூடிய தொழிலாகும். எனவே இதனை அரசாங்கம் வெகு விரைவிலே தொடங்கவேண்டும். வட மதுரைமாவட்டத்தில் அதற்கானவாய்ப்பு ஏராளமாகஇருக்கின்றது கடந்த ஆண்டு மாண்புமகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலில் சொல்கின்றபோது கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தொழிலை ஊக்குவிக்கின்ற வகையில் ஒரு கூட்டுறவு அமைப்பு ஆரம்பிக்க இருப்பதாக அதில் பல இலட்சக்கணக்கான ரூபாயை அரசாங்கம் முதலீடு செய்யப் போவதாக அவர்களுடைய பதிலிலே நான் பார்த்தேன் அதுபற்றிய விவரம் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே இன்றைக்கு இல்லை. அந்த முயற்சி ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றதா? நடைபெற்றிருக்கின்றதா? எத்தனைபேர் அதிலே உறுப்பினர்களாகச் சேர்ந்திருக்கிறார்கள்? எத்தனை விவசாயிகள் அதில் பலன் பெற்று இருக்கிறார்கள்? அரசாங்கத்திற்கு அதற்கான இலாபம் என்ன? இ படிப்பட்ட போதிய விவரங்கள் எல்லாம் அதிலே இல்லாததிலிருந்து நான் ஊகிக்க முடிகின்றது; அந்த முயற்சி இன்னும் அறிவிப்பு நிலைமையிலேயே இருக்கின்றது என்று ஊகிக்க முடிகின்றது. எந்தவிதமான நடவடிக்கையும் தொடரப்படவில்லை என்ற கருத்துக்குத்தான் வரவேண்டி இருக்கின்றது.

அதைப்போல கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தொழிற் சாலையைப் பொறுத்தவரையில் டையர், டியூப் தொழிற்சாலை ஒன்றை அரசாங்கம் ஆரம்பிக்க இருக்கின்றது என்று பல ஆண்டுகளுக்கு முன்பே அறிவிப்பு வந்தது. அதுவும் இன்னும் அறிவிப்பு நிலைமையிலேயே இருக்கின்றதா? அதை அரசாங்கம் தொடங்கி இருக்கின்றதா என்ற விவரங்கள் எல்லாம் இதில்





இல்லை. நான் பல்வேறு கருத்துக்களைச் சொல்லவேண்டும் என்றிருந்தாலும் கூட நேரம் அதிகமாக இல்லாததன் காரணத்தால் ஒன்றைமட்டும் சொல்லி நான் நிறைவாக்க விரும்புகிறேன்.

என்னுடைய கட்சியினைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்கள் ஊராட்சி ஒன்றியங்கள் சார்பிலே நடத்தப்படுகின்ற தச்சுப் பட்டறைகள், இரும்புப் பட்டறைகள் போன்றவற்றிலே இருந்து உற்பத்தி செய்யப் படுகின்ற பொருட்களுக்கெல்லாம் வணிகவரி போட்டிருப்பதாகச் சொன்னார்கள். அந்த வணிகவரியினைச் செலுத்த முடியாத காரணத்தால் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் வழக்கு மன்றத்திலே நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். ப வேறு வழக்குகள் தஞ்சை, வடஆற்காடு, தென்னாற்காடு போன்றமாவட்டங்களில் உள்ள நீதிமன்றங்களில் இருப்பதால் அவற்றை எல்லாம் ரத்து செய்யவேண்டும். மேலும் அந்த ஊராட்சி ஒன்றியங்களின் சார்பிலே தயாரிக்கப்படுகின்ற*அந்தப் பொருட்களுக்கான வணிக வரியினைச் செலுத்தக்கூடாது என்ற வகையிலே கருத்தைக் சொல்லி இருக்கிறார்கள். அதை அரசாங்கம் பரிவோடு கவனிக்க வேண்டும் என்று சொல்லி என்னுடைய உரையை நிறைவாக்கு கிறேன்.

*மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஊரகத் தொழில் துறை மானியக் கோரிக்கையின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் 7 பேர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களை அரசினுடைய கவனத்திற்கு கொண்டு வந்தும், அதே சமயத்தில் தங்களுடைய மேலான ஆலோசனைகளையும் எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். எனவே அந்த அடிப்படையில் ஒருசில கருத்துக்களை நான் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். தொழில் வணிகத் துறையில் மாவட்ட தொழில் மையங்கள் துவங்கப்பட்டபொழுது தமிழகத்தின் நிரந்தரச் சான்றிதழ்கள் பெற்றிருந்த சிறு தொழில்கள் 18,789 ஆகும். 1983 டிசம்பர் இறுதியில் இது 48,667-ஆக உயர்ந்துள்ளது. 1978 வரை நிரந்தரப் பதிவு பெற்றிருந்த சிறு தொழில்கள் மூலம் சுமார் 2.55 இலட்சம் நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டிருந்தது. 1979 முதல் 1982 வரையான காலத்தில் கிட்டத்தட்ட 3 இலட்சம் நபர்களுக்கும், 1983—84-ல் பதிவு பெற்றிருந்த சிறு தொழில்கள் மூலம் மட்டும் சுமார் 40,000 நபர்களுக்கும் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கின்றது. சிறு தொழில்களுக்கு வங்கிகளிட மிருந்து நிதி உதவி பெற்றுத் தருவதில் இந்த மையங்கள் சிறப்பு மிக்க பணியாற்றினார்கள் என்பதற்குக் கடந்த 4 ஆண்டுகளில் சுமார் 15,000 சிறு தொழில்களுக்கு சுமார் ரூ. 32 கோடி வரையில் உதவி பெற்று தரப்பட்டுள்ளது. 1983-84-ல் மட்டும் சுமார் 1,300 சிறு ரக தொழில்களுக்கு ரூ. 500 இலட்சம் நிதி உதவியாகக் கிடைத்துள்ளது. இவற்றைத்தவிர இதே ஆண்டில்

2,779 சிறு தொழில்களுக்கு ரூ. 1462.78 இலட்சங்கள் இதர நிதி நிறுவனங்களிடமிருந்து உதவியாகக் கிடைக்க வழி வகுக்கப் பட்டுள்ளது. சிறுதொழில்கள் வளர்ச்சியை மேலும் ஊக்குவிக்கும் நோக்கத்துடன் அரசு உரிமம் வழங்கும் நடைமுறைகளை மேலும் எளிமைபடுத்த பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இங்கே பேசும்பொழுது மாண்புமிகு உறுப்பினர்கள் வங்கிகளிடமிருந்து நிதி உதவியைப் பெறுகின்ற சமயங்களில் அவைகள் எளிமையாக்கப்பட வேண்டுமென்றும் உரிமங்கள் தரப்படுகின்ற மு றைகள் எளிமையாக்கப்பட வேண்டுமென்றும் கூறினார்கள். எனவே அப்படிப்பட்ட ஒரு நடவடிக்கையினை அரசு எடுத்துள்ளது என்பதைச் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஒரு கூரையின் கீழ் அனைத்து உரிமங்களும் கிடைக்க வழி வகுக்கப்படுவதற்கான தனிப்பட்ட குழுக்களை அரசு நியமித்து ஆணைகளை 1984 மார்ச் திங்களில் பிறப்பித்துள்ளது என்பதை கூறிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதே சமயத்தில் இங்கே பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். சுய வேலை வாய்ப்புத் திட்டத்திற்காக அணுகுகின்ற நேரத்தில் வங்கிகளிடமிருந்து உதவி பெறுவதில் காலதாமதம் ஏற்படுகிறது என்றும் அதே சமயத்தில் இங்கே மாண்புமிகு உறுப்பினர் பாபு அவர்கள் குறிப்பிட்ட பொழுது தவறுகள் நடப்பதாகவும் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அதற்கு அடிப்படை காரணம் ஆரம்பத்தில் சுயவேலை வாய்ப்புத் திட்டம் என்று சொன்ன நேரத்தில் தொழில் மையங்களின் மூலமாக வங்கிகளிடத்திலே பல உதவித் தொகையைப் பெறுவது என்பது அவைகளுடைய முடிவாகும். அந்தச் சமயத்தில் வங்கிகளுக்குப் பரிந்துரை செய்கின்ற நேரத்தில் வங்கிகள் அதை முழுமையும் புரிந்துகொள்ளாத நிலைமையில் அவர்கள் செக்யூரிட்டி என்று பல வகையில் இந்த நேரத்தில் பல வேதனைகளைக் கொடுக்கும் நிலைமையில் இருந்தார்கள். ஆனால் நடைமுறையில் அந்த உண்மைகளைப் புரிந்து கொண்டதற்குப் பிறகு வங்கிகள் சரியான முறையில் தற்போது செயல்பட்டு வருகின்றன என்பதற்குப் பல்வேறு எடுத்துக் காட்டுகளை என்னால் கூற முடியும் என்று நம்புகிறேன்.

கடந்த ஆண்டில் செயல்படுத்தப்பட்ட முக்கியமான சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலமாக, தொழில் மையத்தில் செயல்படும் பணிக் குழுக்கள் உதவிபெறத் தகுதி உடையவர் களைத் தேர்ந்தெடுத்து வங்கிகளுக்குப் பரிந்துரை செய்கின்றது. 31–3–1984 வரை பணிக் குழுக்கள் 34,000 மனுக்களை வங்கிகளுக்குப் பரிந்துரை செய்துள்ளன. அவற்றின் மொத்த மதிப்பு ரூ. 50.91 கோடியாகும். இவற்றில் 21,241 நபர்களுக்கு



ரூ. 31.15 கோடி வங்கிகள் ஒப்பளிப்பு செய்துள்ளன. தமிழகத்திற்கென்று நிர்ணயிக்கப்பட்டுள்ள இரண்டு இலக்குகளும் அதாவது உதவி பெற வேண்டிய நபர்களின் எண்ணிக்கை, மற்றும் உதவித் தொகை இரண்டும் நிறைவு செய்யப்பட்டுள்ளன. வேறு பல மாநிலங்களில் இத்திட்டத்திற்கு நிர்ணயிக்கப் பட்ட இலக்குகள் அடையப்படாததால் இத்திட்டம் இன்னும் 6 மாதகாலத்திற்கு நீக்கப்பட்டுள்ளது. எனவே, மைய அரசு கூறியதன் அடிப்படையில் இன்றையதினம் இந்தியாவிலேயே தமிழகம்தான் இந்த சுய வேலை வாய்ப்புத் திட்டத்தை மிகச் செம்மையாக நடத்தியுள்ளது என்பதை மிகத் தெளிவாக இங்கே நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, மற்ற மாநிலங்கள் இதை நிறைவேற்றாத நிலைமையில் நம்முடைய மாநிலம் டார்கெட்டுக்கு மேலாக, அதிக அளவில் வேலை வாய்ப்பு அளித்துள்ள அதே சமயத்தில், அதிகத் தொகையினை அந்த வேலை வாய்ப்பு பெறுவதற்காக அவர்களுக்கு உதவி செய்வதற்காகத் தொழில் மையங்கள் மிகச் சிறப்பாகச் செயல்பட்டிருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்ட கடமைப் பட்டிருக்கிறேன். எனவே இரண்டு நாட்களுக்கு முன்பு கூட நம்முடைய தலைமைச் செயலாளர் ஒரு அறிக்கை வெளியிட் டிருக்கிறார். இந்தியாவின் பிரதமர் குறிப்பிடும்போது தமிழகம் தான் முன்னணியில் இருக்கிறது என்பதையும் அதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன் என்பதையும் மிகப் பெருமையோடு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 1-50)

எனவே திறம்பட நடக்கிற இந்த சுய வேலை வாய்ப்பின் மூலமாக மேலும் அடுத்த ஆறு மாதக் காலத்தில் 17,500 நபர் களுக்கு உதவி வழங்க ரூபாய் 35 கோடி தமிழகத்திற்கு ஒதுக்கப் பட தமிழக அரசு மத்திய அரசை கோரியுள்ளது. எனவே மேலும் நிதியுதவி கிடைக்குமென்று நான் நம்புகிறேன். உதவி பெற்ற சிலர் ஏற்கனவே செயல்பட துவங்கி விட்டனர். என்றும் கூடிய யுள்ளவர்கள் அதாவது இன்னும் தொகை பெறாதவர்கள் விரைவில் செயல்பட வழி வகுப்பதற்கு தொழில் மையங்கள் அனைத்து உதவிகளையும் அளித்து வருகின்றன என்பதைக் கூறிக் கொள்ள நான் ஆசைப்படுகிறேன்.

அடுத்து தொழில் கூட்டுறவுச் சங்கங்களைப் பற்றி சொல்ல விரும்புகிறேன். தொழில் துறையைப்பற்றி சொல்கிறபோது தொழில் கூட்டுறவுச் சங்கங்களுடைய முக்கியத்துவத்தை குறிப்பிடவில்லை என்றால் எந்தக் கருத்தும் முழுமை பெற்ற தாகாது. 1977-78 ல் தமிழகத்தில் பதிவு பெற்றிருந்த தொழில் கூட்டுறவுகளின் எண்ணிக்கை 297 ஆகும். அது 1983 மார்ச் இறுதியில் 898-ஆக உயர்ந்தது. இந்த ஆண்டிலே டிசம்பர் வரையில் சங்கங்களுடைய எண்ணிக்கை 913 ஆக உயர்ந்துள்ளது. குறிப்பிட்ட சில ஊரகத் தொழில்களை வளர்த்திடவும், வேலை

வாய்ப்பை பரவலான முறையில் பெருக்கிடவும் ஒரு சாதானமாக பயன்படுத்தி வரப்பட்டுள்ள தொழில் கூட்டுறவுகளில் கயிறு, தீப்பெட்டி, தேயிலை, ஜவ்வரிசி போன்றவைகள் அடங்கும். 1977–78 ல் இவற்றின் உற்பத்தி ரூபாய் 15.09 கோடியாகவும், விற்பனை ரூ. 17.62 கோடியாகவும் இருந்தது. 1982–83-ல் அதாவது 1983 மார்ச் இறுதியில் உற்பத்தி ரூபாய் 39.06 கோடியாகவும், விற்பனை ரூபாய் 73.79 கோடியாகவும் உயர்ந்தது. இந்த ஆண்டில் முதல் ஒன்பது மாதங்களில் அதாவது டிசம்பர் 1983 வரையில் உற்பத்தி ரூபாய் 64.48 கோடியாகவும், விற்பனை ரூபாய் 69.23 கோடியாகவும் உயர்ந்திருக்கிறது. இந்த ஆண்டு இறுதியில இவற்றின் விற்பனை ரூபாய் 94 கோடியாக இருக்கும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. எனவே இந்த வகையில் மிகச் சிறப்பான பணியை செயல்படுத்தி இருக்கிறோம்.

அடுத்து ஜவ்வரிசி தொழிலைப் பற்றி பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். இருக்கிற தொழில்களில் ஜவ்வரிசி தொழில் முதல் இடத்தை வகிக்கிறது என்று பெருமையோடு தெரிவித்துக் கொண்டு, சேலம், தர்மபுரி மாவட்டங்களின் ஜவ்வரிசி உற்பத்தியாளர்களுக்கு உதவிடுவதற்கு இரண்டு சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் வெற்றிகரமாக செயல்பட்டு வருகின்றன. இவற்றில் மொத்தம் 571 நபர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். இந்த மாவட்டங்களிலே ஜவ்வரிசி தொழிலினுடைய எண்ணிக்கையிலே இது 95 சதவீதம் ஆகும். 1982-83-ல் இவற்றின் விற்பனை ரூபாய் 27.74 உயர்ந்தது. 1983-84-ல் இது சுமார் ரூ. 45 கோடியாக உயர்ந்துள்ளது. இந்த ஆண்டு ஈட்டப்பட்டுள்ள இலாபம் சுமார் 9 லட்சம் ரூபாய் ஆகும். ரூபாய் 16.64 லட்சம் செலவிலே பெரியககாரன்பட்டி என்ற இடத்திலே இன்னும் ஒரு புதிய தொழில் கூட்டுறவுச் சங்கம் நிறுவப்பட்டிருக்கிறது. ஏனென்றால் சேலம் மாவட்டத்தில் இந்த ஜவ்வரிசித் தொழில் மிகச் சிறப்பாக செயல்படுகிற காரணத்தால் அங்கே மேலும் ஒரு ஜவ்வரிசி தொழிற்சாலை நிறுவுதற்கு அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. இது 1984–85ல் செயல்படத் துவங்கும்.

பொருள்கள் தரத்தை உயர்த்தவும், இயந்திரச் சாதனங்களை புதுப்பிக்க உதவும், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பிரிவு ஒன்றை ஏற்படுத்துவதற்கு பரிசீலனையில் இருக்கிறது.

அடுத்து தேயிலை தொழிலைப் பற்றி பல்வேறி கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள். இன்றைக்கு நீலகிரி மாவட்டத்திலே தொழில் கூட்டுறவுத் துறையில் 12 தேயிலை தொழிற்சாலைகள் செயல்பட்டு வருகின்றன. இவைகள் ஆரம்ப நிலையில் நஷ்டத்திலே நடைபெற்றன என்பதை நாம் அனைவரும் உணர்ந்து இருந்தாலும், அந்த நஷ்டத்தை ஈடு செய்கிற வகையிலே இன்றைய தினம் அவை இலாபத்தைச் கொடுத்துக் கொண்டிருக்கின்றன என்பதை பெருமையோடு தெரிவித்துக்





கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். சுமார் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னாலே ஒரு கிலோ பசும் தேயிலைக்கு ரூபாய் ஒன்று தான் கிடைத்து வந்தது; இன்றைக்கு அதற்கு மாறாக 5 ரூபாய்க்கு மேலே கிடைக்கிற நிலை இருக்கிறது.

1982-83-ல் விற்பனை ரூபாய் 10.90 கோடியாக இருந்தது. இந்த ஆண்டிலே இது ரூபாய் 24 கோடியை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் தொழிற்சாலையின் மூலமாக அந்தப் பகுதியில் சிறு அளவில் பயிரிடுபவர்களில் 89 சதவீதத்திற்கு மேலே உள்ளவர்கள் வறுமைச் கோட்டிற்கு மேலே உயர்த்தப் பட்டிருக்கிறார்கள். 12 தொழில் கூட்டுறவுச் சங்கங்களில் 5 தொடர்ந்து சமாளித்து எல்லா நஷ்டத்தையும் ஈடு செய்து விட்டது. இன்னும் 5, இந்த ஆண்டு செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் இந்த நிலையை எட்டும் என்று எதிர்ப்பார்க்கப் படுகிறது. நீலகிரி தவிர கொடைக்கானலில், சேலம் மாவட்டத்தின் மலைப் பகுதிகளில் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலை அமைப்பதிலே அரசு தீவிரமாக பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. எனவே அந்த அளவில் பார்க்கிறபோது தேயிலை தொழிற்சாலையைப் பொறுத்தவரையில், முன்பு நஷ்டம் இருந்தாலும் இப்போது அரசு அதிக கவனம் செலுத்தி, அந்த நஷ்டத்தை ஈடுகட்டி லாபம் ஈட்டித் தரும் அளவிற்கு செயல்பட்டு வந்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகம் அவர்கள் பேசும்போது. அங்கே 46,000 பேர்களுக்கு மறைமுகமாக எவ்வாறு வேலை கொடுக்சப்படுகிறது என்று கேட்டார்கள். தேயிலை தொழிற்சாலை சங்கங்களில் பணியாற்றுகிறவர்கள் தேயிலை உற்பத்தியைச் செய்கிறவர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பதால் அவர்கள் தேயிலை உற்பத்தியில் மும்முரமாக ஈடுபடுகிறார்கள். அந்த வகையில் தேயிலை உற்பத்தியில் ஈடுபடுகிறவர்களையும் கருத்தில் கொண்டு தான் வேலைவாய்ப்பு நேர்முகமாகவும், மறைமுகமாகவும் 46,000 பேர்களுக்கு கிடைக்கிறது என்று நான் இங்கே அவர்களுக்கு தெரிவிக்க ஆசைப்படுகிறேன்.

தீப்பெட்டி தொழிற்சாலையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே அரசின் கவனத்திற்கு சில பிரச்னைகளைக் கொண்டு வந்தார்கள். தீப்பெட்டித் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில், அது சீரான முறையில் செயல்படவில்லை என்பதையும், அது நல்ல முறையில் இயங்குவதற்கு கவனம் செலுத்த வேண்டும் என்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் இன்றைய தினம் குடிசைத் தொழில் மூலப்பொருள்களின் தேவைகளை நிறைவு செய்வதற்காக தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் நிறைவு செய்யும் நோக்குடன், [illegible] 1984 மார்ச் முதல்

குளோரேட் தொழிற்சாலை ஒன்று உற்பத்தியில் ஈடுபடத் துவங்கியுள்ளது. இதன் உற்பத்தித் திறன் ஆண்டொன்றிற்கு 396 மெட்ரிக் டன்னாகும். ஆதிதிராவிடர் நலனுக்கென திருவில்லிப்புத்தூரில் அட்டை மற்றும் தீப்பெட்டிக் குச்சி தயாரிப்பு தொழிற்சாலை நிறுவப்பட்டு வருகிறது. இதற்கு அரசு உதவித் தொகையாக ரூ. 2.27 லட்சம் அளித்துள்ளது. ரூ.5.25 லட்சம் செலவில் தார் பூசிய காகித உற்பத்திக்கென கூட்டுறவுச் சங்கம் ஒன்றை சாத்தூரில் அமைப்பதும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

தொழில் கூட்டுறவுச் சங்கங்களாகவும், கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கட்டுப்பாட்டிலும் செயல்பட்டு வந்த தீப்பெட்டி குடிசைத் தொழில்களுக்கு கிடைக்கப் பெற்று வந்த சுங்க வரிச் சலுகை 1-3-82 முதல் எல்லா குடிசைத் தொழில்களுக்கும் அளிக்கப்பட்டு வருகிறது. கூட்டுறவு அடிப்படையில் ஊக்குவிக்கும் நோக்குடன், இவற்றிற்கு சுங்க வரியில் சிறப்பு சலுகை அளிக்கப்பட வேண்டுமென தமிழக அரசு மைய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது. அதாவது சேவைத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் குடிசைத் தொழில்களுக்கு குரோசு தீப்பெட்டிக்கு 60 காசுகள் விலக்கு அளிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இந்தச் சலுகையை மைய அரசு அளிக்க முன் வந்தால், அதன் மூலம் தமிழகத்தின் ஊரகப் பகுதிகளில் சுமார் 1½லட்சம் நபர்கள் தொடர்ச்சியான வேலை வாய்ப்பினை பெற இயலும். இத்தொழில் புதிய பகுதிகளில் துவக்கப்பட்ட சங்கங்களின் உறுப்பினர்களுக்கு தீப்பெட்டித் தொழிலில் போதிய பயிற்சியின்மையால் அவர்களால் தேவையான அளவிற்கு உற்பத்தியை அதிகரிக்க இயல்வில்லை. ஊரக வளர்ச்சி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது என்பதை நான் இங்கே கூறிக்கொள்கிறேன். எனவே மத்திய அரசு உதவியை எதிர் பார்த்து இருக்கிறோம். அது வருமானால் அந்தத் தொழிலை மேலும் அதிக அளவில் செய்ய அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தோல் தொழிலைப்பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு வரை கூட பாதியளவு நிறைவு செய்த தோல் உற்பத்தி மட்டுமே மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. நிறைவு செய்வதனை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், அதற்கு வேண்டிய பொது வசதிகளை அளித்திடக் கூடிய சேவை கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தேவையான இயந்திர சாதனங்களை சொந்தத்தில் அமைத்துக் கொள்ள வசதி பெற்றிராத சிறு அளவில் தோல் பதனிடுவோர் இவற்றின் அங்கத்தினர்களாகச் சேர வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளது. ஒவ்வொன்றிலும் ரூ. 1 கோடி செலவில் இத்தகைய நான்கு



சேவைக் கூட்டுறவு சங்கங்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளன. அடுத்து, மூன்று தற்போது செயல்பட்டு வருகின்றன. அதாவது வாணியம்பாடி, ராணிப்பேட்டை, திண்டுக்கல் ஆகியவை செயல்பட்டு வருகின்றன. பேரணாம்பட்டில் மற்றொன்று இவ்வாண்டு செயல்படத் தொடங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 2-00)

அடுத்து, கயிறு தொழில் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்களும் மற்றவர்களும் ஒரு சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். கயிறுத் தொழிலின் வளர்ச்சியை மேலும் விரைவு படுத்தக் கூடிய வகையில் அண்மையில் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இவற்றின் விளைவாக 1980 வரை 10 ஆக இருந்த கயிறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை இன்றைய தினம் 57 ஆக உயர்ந்துள்ளது. இதன் மூலம் சுமார் 5,800 நபர்களுக்கு ஊரகப் பகுதிகளில் கூடுதலாக வேலை வாய்ப்பு கிடைக்க வழி வகுக்கப்பட்டுள்ளது. மேலும் இத்தொழிலை விரிவு படுத்துவதற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன. இந்த ஆண்டில் 70 இலட்சம் ரூபாய் செலவில் இரப்பர் கலந்த நார் உற்பத்தி நிலையம் அமைக்கப்பட உள்ளது. 'நீடில்டு ஃபெல்ட் தொழிற்சாலையொன்றும் நிறுவப்பட இருக்கிறது நாட்டிலேயே இத்தகைய தொழிற்சாலை சோதனை அடிப்படையில் கயிறு வாரியத்தால் பெங்களூரில் மட்டும் நிறுவப்பட்டுள்ளது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. சிறு பொருள்களின் விற்பனையை ஊக்குவிக்கும் நோக்குடன், மைய விற்பனை கூட்டமைப்பு ஒன்றினை இந்த ஆண்டில் ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இது உறுப்பினர் சங்கங்களின் பொருள்களை வாங்கி, அவற்றின் விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்யும். கயிறு வாரியம் அதன் கயிறு வளர்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தை தமிழ்நாட்டில் நிறுவ முன் வந்துள்ளது. இது 50.90 இலட்சம் செலவில் தஞ்சாவூர் மாவட்டம் பிள்ளையார்பட்டி கிராமத்தில் அமைக்கப்பட்டு வருகிறது. இதற்கென தமிழக அரசு 10 ஏக்கர் நிலத்தை இனாமாக வழங்கியுள்ளது. கட்டட வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லப்பன் அவர்கள் ஒரு வெட்டுத் தீர்மானத்தில் பெரியார் மாவட்டம் பெருந்துறை பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். பெருந்துறை வட்டத்தில் ஏற்கனவே சிரங்க கவுண்டன்பாளையம் கயிறு தொழில் கூட்டுறவுச் சங்கம் 30—11—81—ல் பதிவு செய்யப்பட்டு, இயங்கி வருகிறது. இச்சங்கத்தில் கூடுதலான நபர்களை அங்கத்தினர்களாகச் சேர்த்துக் கொண்டு வேலை வாய்ப்பு அளிக்க வசதி உள்ளது.

கயிறு கூட்டுறவுச் சங்கங்கள் தான் அங்கத்தினர்களின் கயிறுப் பொருள்களை வாங்கி மத்திய கயிறு சங்களுக்கு அனுப்ப வேண்டும். சேலத்தில் உள்ள மத்திய கயிறு விற்பனைச் சங்கத்திற்குப் புத்துயிரூட்ட அரசு 1983-84 ஆம் ஆண்டில் 5 லட்சம் ரூபாய் பங்குத் தொகையாக வழங்கியுள்ளது. இது இப்பகுதியில் பொருள் விற்பனையை மேற்கொள்ளும்.

பயிற்சி அளிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு கயிறு வாரிய நிதியிலிருந்தும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழும் தேவையான கருவிகளை வாங்கித்தர வாய்ப்புள்ளது. இதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப் போன்று நிலக்கரி பற்றியும் குறிப்பிட்டார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் சிறு தொழில்களுக்கு நிலக்கரி பெறுவதில் உள்ள இடர்ப்பாடுகளைக் களைந்து, இது தடையில்லாமல் கிடைக்க வழி வகுப்பதற்கென சென்னை, திருச்சி, கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் 32 இலட்ச ரூபாய் செலவில் கரிக் கிடங்குகள் அமைக்கும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. சென்னையில் இது செயல்பட்டு வருகிறது. மற்ற மூன்று இடங்களிலும் இவற்றை விரைவில் செயல்படுத்த எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. சேலத்தில் இத்தகைய கிடங்கு ஒன்றினை அமைப்பது அரசின் பரிசீலனையில் உள்ளது.

இம்மாநிலத்திற்கு கூடுதலாக நிலக்கரியைப் பெற எடுத்துக் கொண்ட முயற்சிகளின் விளைவாக நல்ல முன்னேற்றம் காணப் படுகிறது. இதன் மூலம் 1-1-79-க்குப் பிறகு அமைய பெற்ற சில தொழில்களுக்கும் இம்மூலப்பொருள் கிடைக்கக் கூடிய வகையில், நிலக்கரி அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் நிதி தேவைகளை நிறைவு செய்யும் நோக்குடன் ஏற்படுத்தப்பட்டுள்ள தமிழ்நாடு மாநில தொழில் கூட்டுறவு வங்கி, இத்துறையில் வளர்ச்சியில் சிறப்பான பணியினை ஆற்றி வருகிறது என்பதை நான் பெருமையோடு சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதனிடம் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ள சங்கங்களுக்கு, நிலை முதலீடு மற்றும் மூலதனம இவற்றிற்குரிய கடன் வசதி அளிக்கப்படுகிறது. 30-6-83 அன்றைய நிலவரப்படி இந்த வங்கி கடனாகவும், முன்பணமாகவும் 578 இலட்சம் ரூபாய் தந்திருக் கிறது. 1973-ல் கடனாகவும், முன்பணமாகவும் 163 இலட்சமே கொடுக்கப்பட்டிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்வங்கியின் இலாபத்திலும் கணிசமான உயர்வு காணப்படுகிறது. கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தில் அனுமதிக்கப்பட்ட உச்ச அளவான 12 சதவீத டிவிடென்டு அண்மையில் அறிவிக்கப்பட்டுள்ளது.



இருபது அம்சத் திட்டத்தின்கீழ், ஆதிதிராவிடர், பழங் குடியினர் மற்றும் பின் தங்கிய வகுப்பினர் ஆகியோரது நலனுக்காகத் துவங்கப்படும் தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சலுகை வீதங்களில் நிதி உதவி வழங்கும் திட்டம் ஒன்றை இவ்வங்கி வகுத்துள்ளது. இதன் கீழ், 50,000 ரூபாய் வரை 8 சதவீத சலுகை வட்டி வீதத்தில் சங்கங்களுக்கு கடன் உதவி அளிக்கப்படும். இதற்கு முக்கியமான நிபந்தனை, குறிப்பிட்ட சங்கத்தில், இப்பிரிவினைச் சேர்ந்தவர்களில் குறைந்தது 25 நபர் களாவது அங்கத்தினர்களாக இருக்க வேண்டும். நலிவுற்ற பிரிவினருக்கு, சங்கங்கள் வேலை வாய்ப்பளிக்க இத்திட்டம் வழி வகுக்கும். 'நபார்டு' என்று சொல்லப்படுகின்ற நேஷனல் பாங்க் ஃபார் அக்ரிகல்சுரல் அன்ட் ரூரல் டெவலப்மெண்ட் நிறுவனத்திடமிருந்து மறுநிதி உதவி கிடைக்கப் பெற்றால் இதன் பணிகள் கணிசமாக உயரும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, மின் அணுத் தொழிலைப் பொறுத்தவரையில், திருச்சிராப்பள்ளி, சேலம், தூத்துக்குடி, விழுப்புரம் போன்ற தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் முன் மாதிரிகளையும், தொழில் நுட்ப வடிவமைப்புகளையும் தயாரித்து அளிக்கக் கூடிய நிலையங்களை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் முன் மாதிரிகளையும், வடிவமைப்புகளையும் தனியார் நிறுவனங்கள் தாமே செய்து கொள்ள வேண்டிய அவசியம் நீக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையங்களால் அபிவிருத்தி செய்யப்படும் வடிவமைப்புகளை வாணிப முறையில் பயன் படுத்துவதற்கென மின் இயல் மற்றும் மின்னணுத் தொழிலியல் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஓரளவிற்கு பயிற்சி பெற்ற நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க ஏதுவாக அமையும். தொழில் துறை, பெண்களுக்கென தனிப் பட்ட மின்னணு தொழிற்பேட்டை ஒன்றை அமைக்கவும் உத்தேசித்துள்ளது. இத்தொழிற்பேட்டையில் துவக்கத்தில் 12 கட்டடங்கள் கட்டித்தரப்படும். பின்னர் தேவைக்கேற்ப கட்டடங்கள் கட்டப்படும் என்பதைத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, பட்டுத் தொழிலைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு யோசனைகளைக் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். பட்டுத் தொழிலைப் பொறுத்த வரையில், பணப்பயிரான முசுக்கொட்டை செடி தரும் பொருளாதார மேம்பாடு கிராமங்களில் வறுமையை அகற்றி வளத்தினைப் பெருக்குகின்ற பாங்கினைக் கண்டு வருகின்றோம். தமிழகத்தில் சுமார் 62,042 ஏக்கர்களில் சுமார் 76,000 குடும்பங்கள் பட்டுத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றன. அதிலே மலைவாழ் மக்கள் மேம்பாடு திட்டத்தின் மூலம் 290

குடும்பங்கள், ஆதிதிராவிட மேம்பாட்டு சிறப்பு திட்டத்தின் மூலம் 740 குடும்பங்கள் பயன் அடைகின்றன சுமார் 3,10,210 பேர் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

பட்டுத் தொழிலை மேம்படுத்துவதற்காக; தற்போது தமிழ்நாடு முழுவதும் 61 பட்டு நூற்பு தொழில் கூட்டுறவு சங்கங்களும், 98 கிராம அளவிலான இளம் பட்டுப் புழு வளர்ப்பு மையங்களும் செயல்பட்டு வருகின்றன. 1983-84 ஆம் ஆண்டில், 1984 மார்ச் முடிய 110.27 இலட்சம் பட்டு முட்டை தொகுதிகள் உற்பத்தி செய்யப்பட்டு, பட்டு வளர்ப்பு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. 30.00 இலட்சம் நூற்பு பட்டுக் கூடுகளும், 1.77 இலட்சம் கிலோ கச்சா பட்டும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

இம்மாநிலத்தில் உற்பத்தியாகும் பட்டுக்கூடுகள் கர்நாடக மாநிலத்திற்கு எடுத்துச் செல்லும் நிலையை தடுப்பதற்காக, கோவை மற்றும் ஒசூர் அரசு பட்டு நூற்பு நிலையங்களில் நூற்பு ஏனங்களை அதிகப்படுத்தவும், நவீனமாக்கவும், 1983—84-ல் ரூ. 14.00 இலட்சம் செலவில் திட்டம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி நீர்த்தேக்கப் பகுதியில் சுமார் 33.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கிராமிய இரு பட்டு நூற்பாலை தற்போது பரீட்சார்த்த முறையில் உற்பத்தியைத் துவக்கியிருக்கிறது. இதேபோன்று வட ஆற்காடு மாவட்டம் நாட்றம் பள்ளியில் கூட்டுறவு முறையில் பெரும்பாலும் ஆதிதிராவிடர்கள் மற்றும் மலைவாழ் மக்களை உறுப்பினர்களாகக் கொண்டு கூட்டுறவு முறையில் ஒரு கிராமிய நூற்பாலை தொடங்கப் படவுள்ளது. இந்த ஆலைக்கு ஆகும் செலவினம் சுமார் ரூ.27.00 இலட்சம்.

பைவோல்டின் எனப்படும் அயல்நாட்டின் பட்டுப்புழு வ்ளர்ப்புத் திட்டம் தமிழ்நாட்டில் அண்மையில் கொண்டு வரப் பட்டுள்ளது. சுமார் 2000 உழவர்கள் பைவோல்டின் இனப் பட்டுப்புழு வளர்ப்பை மேற்கொண்டுள்ளனர். இப்பட்டுப்புழு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் சுமார் 5 இலட்சம் கி. கிராம் பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யக் கூடுமென்று மதிப்பிடப்படுகிறது. ரூ. 89.25 இலட்சம் செலவில் பைவோல்டின் (இரு சுழற்சி இன செயல் முறை மற்றும் பட்டு நூற்பு பயிற்சி மையம் கோவை மாவட்டத்தில் அமைக்கப்படவுள்ளது என்பதை இங்கே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்:

அதேபோல் மத்திய பட்டு வாரியத்தின் உதவிக் கொண்டு புட்டுப் புழுக்களைத் தாக்கும் ஊசி எனும் ஈயைத் தடுக்க ரூ. 1.72 இலட்சம் செலவில் ஒரு திட்டம் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் பாதிக்கப்பட்ட வடஆற்காடு மற்றும்





தர்மபுரி மாவட்டங்களில் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

(பிற்பகல் 2-10)

இதன் முக்கிய அம்சமாக பட்டுப்புழு வளர்ப்பு விவசாயிகளுக்கு ஈ தடுப்பு நைலான் வலைகளும், தடுப்பு மருந்துகளும் விநியோகம் செய்ய நடவடிக்கைகள் மேற் ொள்ளப்பட்டு இருக்கின்றன என்பதை நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன். இந்த நிதியாண்டில் மேலும் 5000 ஏக்கர் பரப்பளவில் முசுக் கொட்டை செடி சாகுபடிக்கு கொண்டு வர திட்டமிடப் பட்டுள்ளது. சிறப்பு அம்சமாக மானாவாரியில் முசுக்கொட்டை பயிர் செய்பவர்களுக்கு வி தக்குச்சிகளுக்குப் பதிலாக நாற்றுகளாக விநியோகம் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது இரு சுழற்சி இன (பைவோல்டின்) விதைக் கூடுகள் உற்பத்தியில் தன்னிறைவு பெறும் நோக்கத்தோடு கோவை மாவட்டத்தில் சுமார் 15 இலட்சம் செலவில் ஒரு விதைக்கூடு உற்பத்திப் பண்ணை தொடங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். எனவே பட்டுப் புழு வளர்ச்சியைப் பொறுத்தவரையில் அரசு மிகவும் தீவிரமாக கவனம் செலுத்தி வருகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, கைத்திறப் பொருள் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியிருக்கிறார்கள். பூம்புகாரைப் பற்றி இங்கே சொன்னார்கள். பூம்புகாரைப் பொறுத்தவரையிலும், அது ஆரம்பத்திலே, நான் முன்பே கூறியதைப்போல, பல்வேறு வகையிலே ஊரகத் தொழிலைப் பொறுத்தவரையில் நஷ்டத்திலே இயங்கினாலும், தற்காலச் சமயங்களில், அது நஷ்டத்தை ஈடு கட்டுகின்ற வகையில், அது லாபத்தை நோக்கி வருகின்ற அளவிலே சிறப்பாக அது செயல்படுகிறது என்பதை நான் இங்கே ஒரு சில குறிப்புகளை வைத்து சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்நிறுவனம் 1979-80 முதல் 1982-83 வரை 3,600 பேர்களுக்கு மறைமுக வேலை வாய்ப்பு அளித்திருக்கிறது. இந்நிறுவனம் இந்தியாவில் இதர பகுதிகளில் தமிழ்நாட்டின் கலைத்திற கைவினைப் பொருட்களை பிரபலப்படுத்த பொருட் காட்சிகள் நடத்தி முக்கிய பங்கு வகித்து வருகிறது.

1979-80—ல் விற்பனை ரூ. 143.78 லட்சமாக இருந்தது. உற்பத்தி 42 லட்சம், அதில் லாபம் 2.36 லட்சம். 1982—83-ல் இதைப் பார்க்கும்போது, விற்பனை 231 லட்சம். உற்பத்தி 73 லட்சம். லாபம் 5 லட்சம், 1983—84-ல் மீட்டும் விற்பனை 226 லட்சம் உற்பத்தி 65 லட்சம், லாபம் 3 லட்சம். லாபம் 3 லட்சம் என்பது தற்போதைக்கு அதிகமாகக்கூட இருக்கும் என்று நான் நம்புகிறேன், எனவே அந்த அளவிலே இந்த நிறுவனம் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(திரு. இரா. அருணாசலம்) [1984 ஏப்ரல் 25

இந்த கைத்திறப் பொருள்களைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் பாபு ஜனார்த்தனம் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே கைத்திறத் தொழிலாளர்களுக்கு தக்க பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்றும், அதேசமயத்தில் அத்தகைய தொழில்களுக்கு சிறப்பான பாதுகாப்புஅளிக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டார்கள். அந்த வகையில் பார்க்கும் போது, உலோகமணி மற்றும் பித்தளை பொருட்கள் தயாரிக்கும் இரண்டு பிரிவுகளை நாச்சியார் கோவில் மற்றும் சுவாமி மலையில் ஆரம்பிக்கப்பட்டு உற்பத்தி ஊக்குவிக்கப்பட்டுள்ளது. புதிதாக திட்டங்கள் ஆரம்பித்து கைவினைஞர்களுக்கு பயிற்சி அளித்தும் மேலும் கிராமத் தொழில் திட்டத்தின் மற்றும் ஒருங்கிணைந்த ஊரக அபிவிருத்தி திட்டத்தின் மூலமும் அவர்களுக்கு உதவப்பட்டு வருகின்றது. இதுவரை இந்நிறுவனத்திற்கு அரசு பங்கு மூலதனம், மானியம் மற்றும் கடனாக 180 லட்சம் வரையில் அளித்துள்ளது.

1984-85-ல் கீழ்க்கண்ட திட்டங்களை இந்நிறுவனம் செயல் படுத்த திட்டமிட்டுள்ளது.

காகிதக்கூழ் மற்றும் களிமண்ணினாலான பொருட்கள் தயார் செய்ய பொதுக்கூடம், அதாவது காமன் பெசிலிட்டிஸ் சென்டர் ஒன்றை சென்னையிலே நிறுவுதல் என்ற அடிப்படையிலே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

சூரத்திலுள்ள இந்திய வைர நிறுவனத்தின் கிளை ஒன்றை திருச்சியில் வைரம் பட்டை தீட்டும் பயிற்சி அளிப்பதற்காக நிறுவுதல். தொடராச் செலவாக ரூ. 4 இலட்சங்களும் (இயந்திரங்களுக்கும்) தொடரும் செலவாக ஆண்டிற்கு ரூ. 1 லட்சமும் (வாடகைக்காக) சூரத்திலுள்ள இந்திய வைர நிறுவனத்திற்கு, திருச்சியில் கிளையை நிறுவுவதற்காக, தமிழக அரசுக்கு திட்டக் கமிஷன் பரிந்துரைத்துள்ளது. இதற்கு விரைவில் ஆணை பிறப்பிக்கப்படும் என்பதை கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டும் அல்லாமல் 25 தாழ்த்தப்பட்ட தமிழ்நாடு மாணவர்களுக்கு வைரம் பட்டைத் தீட்டும் கைவினையில் பயிற்சி அளிக்க இந்தத்துறை ஏற்பாடு செய்திருக்கிறது.

அதைப்போல ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நடத்த உள்ள திட்டங்களில் முக்கியமாக, கைவினைஞர்களுக்கு தொழிற் கூடம் மற்றும் இருப்பிட வசதிகளை ஏற்படுத்துதல். மலைசாதி கைவினைஞர்களின் தொழில் திறமை மற்றும் அவர்களின் திறமைகளை விஞ்ஞான ரீதியில் வளர்க்க ஆய்வு நடத்துதல். தமிழகத்தில் நலிந்து வரும் கைவினைகளை உயிரூட்டும் வகையில் இந்த கைவினைகளில் மாணவர்களுக்கு பயிற்சி அளித்தல். கிராமப்புறங்களில் வாழும் கைவினைஞர்களுக்கு நியாயமான விலையில் மூலப் பொருட்கள் வழங்க மூலப்பொருள் கிடங்குகள் நிறுவுதல், ஆகியவையெல்லாம் 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிறைவேற்றப்பட இருக்கின்றன என்பதைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.



1984 ஏப்ரல் 25]

திரு. கு. ரமணி: துணைத் தலைவர் அவர்களே, இன்னும் எவ்வளவு நேரம் அவை நீடிக்கும் என்று சொன்னால் நல்லது.

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்: 2-30 மணியளவில் முடித்துவிடுகிறேன்.

அடுத்தபடியாக சிட்கோ நிறுவனத்தைப் பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதிலே மத்திய அரசால் பின்தங்கிய வட்டங்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ள 33 வட்டங்களிலும், மாநில அரசு அறிவித் துள்ள 30 வட்டங்களிலும் புதிதாக ஆரம்பிக்கப்படும் சிறு தொழில்களுக்கு 15 சதவீதம் மத்திய மாநில முதலீட்டு மானியங் களை சிட்கோ வழங்கி வருகிறது. 1983-84 ஆம் ஆண்டில் ரூ. 229.20 இலட்சம் மத்திய மானியமாகவும், ரூ. 29.08 இலட்சம் மாநில மானியமாகவும் வழங்கப்பட்டுள்ளன. மத்திய மானியத் திட்டம் ஆரம்பித்த நாள் முதல் இந்த நாள் வரை, ஒரு வருடத்தில் வழங்கப்பட்ட மானியத் தொகையின் உச்ச அளவு, 1981-82-ல் வழங்கப்பட்ட ரூபாய், 121.86 இலட்ச மாகும். இந்த உச்ச அளவோடு நோக்குகையில், 1983—84-ல் வழங்கப்பட்ட மானியத் தொகை, சுமார் இரண்டு மடங்கு அதிகமாகும்.

சிறு தொழில்களுக்கு விற்பனை வசதி சரியான முறையில் கொடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 1983-84 ஆம் ஆண்டில் ரூ. 772.45 லட்சம் மதிப்புள்ள சிறு தொழில்களின் பொருட்களை விற்பனை செய்வதற்கு சிட்கோ உதவி புரிந் துள்ளது. சிட்கோ மூலமாக 1981-82-ல் விற்பனை செய்த பொருள்களின் மதிப்பு 221.66 இலட்சமாக இருந்து, 1982-83-ல் ரூ. 491.58 லட்சமாக உயர்ந்து, அது 1983-84-ல் ரூ. 772.45 இலட்சமாக மேலும் உயர்ந்துள்ளது இதனுடைய வளர்ச்சியை எடுத்துக் காட்டுவதாகவே இருக்கிறது.

இச்சட்டத்தின் கீழ் சிறு தொழில்களுக்குத் தேவைப்படும் இரும்பு, மற்றும் எஃகு கல்கரி, தீப்பெட்டி மெழுகு போன்ற அரிதான மூலப் பொருள்களை விநியோகிக்கும் பணியை சிட்கோ மேற்கொண்டுள்ளது. 1983-84 ஆம் ஆண்டில் ரூ. 18 கோடி மதிப்புள்ள மூலப்பொருள்கள் சிறுதொழில்களுக்கு வினியோகிக்கப் பட்டன. மேற்கண்ட திட்டங்கள் தவிர, நலிவுற்ற சிறு தொழில் களுக்கு முன் வரம்புத் தொகை வழங்குதல், மின் மானியம் வழங்குதல் முதலிய பல்வேறு திட்டங்களையும் சிறு தொழில் களின் வளர்ச்சிக்காக சிட்கோ நிறுவனம் செயல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிடும்போது சிட்கோ நிறுவனத்தின் மூலம் தொழிலை ஆரம்பிக்கிற நேரத்தில், அவர்கள் நடத்த முடியாத நிலையில் வாங்கிய கடன்களில் வட்டியும் அதே சமயத்தில் அபராத தொகையும் அதிக அளவில் இருப்பதாகச் சொன்னார்கள்.

பல்வேறு சங்கங்களில், பல்வேறு தொழிலினுடைய உரிமையாளரிடமிருந்து பல்வேறு மனுக்கள் அரசினுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. உடனடியாக அபராதத் தொகையோ வட்டித் தொகையோ குறைக்க முடியாவிட்டாலும் கூட, இன்ன காரணத்தால் இந்தந்த தொழிலை நடத்த முடியவில்லை என்று, தவறான தகவல்கள் அல்ல, உண்மையாகவே நடத்த முடியாமல் இருப்பவர்கள் இருந்தால் அவர்களுக்கு மீண்டும் தவணை முறையில் தள்ளிவைத்து, தவணை முறையில் அந்தத் தொகையை கட்டுவதற்காக அரசு அதற்கான சலுகைகளை அளித்திருக்கிறது என்பதை இங்கே நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 2-20)

தொழில் முதலீட்டு நிறுவனத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்நிறுவனம் நிலம், கட்டிடம், தளவாடங்கள், இயந்திரங்கள் போன்ற நிலையான சொத்துக்களை வாங்குவதற்காகத் தொழில் நிறுவனங்களுக்கு நீண்டகால, நடுத்தர கால கடனுதவிகளை வழங்குவதுடன் இயந்திரங்களை வாங்குவதற்காக தொழில் நிறுவனங்கள் செய்து கொள்ளும் காலம் தாழ்த்தித் தொகையினை திருப்பிச் செலுத்துவதற்கான ஒப்பந்தங்களுக்கு உத்திரவாதமும் மேல் உத்திரவாதமும் அளிக்கிறது. தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளிலுள்ள தொழில் நிறுவனங்களுக்கு அதிலும் குறிப்பாக கிராமப் பகுதியிலுள்ள 'தொழில் நிறுவனங்களுக்கு பெரும் அளவில் உதவி புரியும் நோக்கத்துடன் குறைந்த வட்டி, கடனைத் திருப்பித் தர நீண்ட கால கெடு, அடிப்படை நிதி உதவி முதலிய பல சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன. வட்டி விதம், கடனைத் திரும்பச் செலுத்த துவங்குவதற்கு நீண்டகால அவகாசம், கடனைத் திரும்பச் செலுத்த நீண்ட கால கெடு, குறைந்த பிணைத் தொகை போன்ற தாராளமாக எளிய நிபந்தனைகளில் இந்நிறுவனம் கடனுதவி அளிக்கிறது என்பதை நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இது எந்த அளவிற்கு மிகத் திறமையாக செயல்பட்டிருக்கிறது என்பதற்காக சில குறிப்புகளைக் கொடுக்க கடமைப்பட்டிருக்கிறேன். 1949 ஆம் ஆண்டு முதல் 1978 ஆம் ஆண்டு வரை அதாவது 30 ஆண்டுக் காலம் செயல்பட்டதில் மொத்தம் அனுமதிக்கப்பட்ட தொகை 118·77 கோடி ஆகும். சிறு தொழில்களுக்கு அனுமதிக்கப்பட்ட தொகை 33.85 கோடி ஆகும். அனுமதிக்கப்பட்ட தொகையில் சிறுதொழில்களுக்கு அனுமதிக்கப்பட்ட தொகையின் சதவீதம் 28.5 ஆகும் வழங்கப்பட்ட தொகை 74.5 கோடி ஆகும். 30 ஆண்டு காலத்திற்கு இந்த அளவுக்கு இருக்கிறது. ஆனால் 1978-79-லிருந்து 1983-84 ஆம் ஆண்டு வரையிலான இந்த 6 ஆண்டுக்காலத்திலே மட்டும் மொத்தம் அனுமதிக்கப்பட்ட தொகை 232.98 கோடி ஆகும்.





சிறு தொழில்களுக்கு அனுமதிக்கப்பட்ட தொகை 183.82 கோடி ஆகும். அனுமதிக்கப்பட்ட தொகையில் சிறு தொழில்களுக்கு அனுமதிக்கப்பட்ட தொகையின் சதவீதம் 78.8. வழங்கப்பட்ட தொகை 158·18 கோடி ஆகும். எனவே 30 ஆண்டுகளைவிட இந்த 6 ஆண்டுக்காலத்தில் மட்டும் அதிகத் தொகையை வழங்கி மிகச் சிறப்பாக செயல்பட்டிருக்கிறது என்பதை நான் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து டான்சி பற்றி குறிப்பிட்டார்கள். டான்சி நட்டத்தில் இருக்கிறது என்றும், அதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைப்பற்றி எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியிருக்கிறார்கள். குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் மொபெட் பற்றி விளக்கம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அந்த அடிப்படையில் டான்சியைப் பொறுத்தவரையில் பல்வேறு பகுதிகளில் இருக்கிறபோது சில இடங்களிலே அவையெல்லாம் நடைமுறைப்படுத்தாமல் இருந்தாலும்கூட அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு என்ன என்ன வழிவகை காணமுடியுமோ அந்த வகையில் அரசு தற்போதைய நிலையில் செயல்பட்டு வருகிறது என்பதை கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

உற்பத்தி செயல் திறனைப் பார்க்கும்போது 1965–66 ஆம் ஆண்டில் ரூ. 389 இலட்சமாக இருந்த உற்பத்தி மதிப்பு படிப்படியாக அதிகரித்து 1982–83 ஆம் ஆண்டில் 2216 லட்சமாக உயர்ந்தது. 1983–84 ஆம் ஆண்டின் உற்பத்தி ரூ.2600 லட்சமாகும். போதிய வழங்கல் ஆணை கிடைக்காமை இந்நிறுவனத்தின் மூன்று பெரிய தொழிற் பிரிவுகளான மேட்டூரிலுள்ள கட்டுமான மற்றும் முலாம்பூசும் பிரிவு, அம்பத்தூரிலுள்ள கட்டுமானப் பிரிவு, விண்ணமங்கலத்திலுள்ள தோல் பதனிடும் தொழிற் பிரிவு ஆகியவற்றில் ஏற்பட்ட இழப்பு, சிறு தொழிற் பிரிவுகளுக்குக் கிடைக்கும் மைய அரசின் ஆயத் தீர்வு விலக்கு இந்நிறுவனத்திற்குக் கிடைக்காமையால்; டான்சி தயாரிப்புகளின் விற்பனை விலை அதிகமாகி, அதனால் விற்பனை குறைவு ஏற்பட்டது. எனவே டான்சியில் உற்பத்தியாகும் பொருள் விலை அதிகமாக இருக்கிற காரணத்தினாலே தனியார்கள் துறை கொடுக்கிறபோது விலை குறைவாக இருப்பதால் உற்பத்தித் திறன் நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. நான் முன்பே சொன்னதைப்போல் முடிந்த வரைக்கும் எந்த எந்த வகையில் எல்லாம் முடியுமோ அந்தவகையிலே ஈடு கட்டுவதற்கு அரசு முயற்சி மேற்கொண்டிருக்கிறது. அப்படி முடியாத அளவில் எந்த வகையில் செயல்படுவது என்பதைப்பற்றி அரசு தீவிரமாக பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. மொபெட் பற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள். மொபெட் பொறுத்த அளவில் சரியான முறையில் நடத்தமுடியாத நிலையில் ஆண்டுக்காண்டு பல லட்சம் ரூபாய் நட்டத்தில் இயங்குகிற காரணத்தால் அந்த நட்டத்தை மேலும் மேலும் அதிகப்படுத்தாமல் அவைகளைக் குறைக்கிற

(திரு. இரா. அருணாசலம்) [1984 ஏப்ரல் 25

வகையில் உடனடியாக மூடப்பட்டது. எனவே இன்றைய நிலையில்
தொழிலாளர்களுக்கான அந்த உரிமங்கள் அப்படியே இருக்
கின்றன. எனவே மொபெட்டை நடத்துவதா அல்லது விட்டு
விடுவதா அல்லது தனியாருக்கு விட்டுவிடுவதா என்பதைப்பற்றி
அரசு தீவிரமாக பரிசீலித்துக்கெண்டிருக்கிறது. விரைவில்
அதற்கான முடிவை எடுக்கும் என்பதை நான் மாண்புகு
உறுப்பினர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்ததாக இதன் மூலமாக புதிய திட்டங்கள் எச்.எம்.டி.
நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் பல்பு தயாரிக்கும் திட்டம்
ஆய்விலுள்ளது. பள்ளிக் குழந்தைகளுக்கு இலவசமாக பற்பொடி
வழங்கும் திட்டத்தின் கீழ் பற்பொடி தயாரிக்கும் பிரிவு நிறுவிடும்
திட்டமும் ஆய்வில் உள்ளது. எனவே டான்சியைப் பொறுத்தவரை
அரசு அதிகமான கவனம் செலுத்தி வருகிறது என்பதை நான்
இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்ததாக தோல் வளர்ச்சி நிறுவனம். இந்தியாவிலேயே
தோல் தொழில் செய்யும் தமிழகம் முக்கிய இடத்தை வகிக்கிறது.
தோல் உற்பத்தியில் 70 விழுக்காட்டையும், அதை ஏற்றுமதி
செய்வதில் 60 விழுக்காட்டையும் பெற்று இருக்கிறது. ரூபாய்
260 கோடி மதிப்புள்ள தோல் தமிழகத்திலிருந்து ஏற்றுமதி
ஆகிறது. தோல் மற்றும் தோல் பொருட்களை அதிகமான
அளவில் ஏற்றுமதி செய்யும் கைவினைஞர்களை ஊக்குவிக்கவும்
அவர்கள் நல்ல ஊதியம் பெறவும் தாட்கோ நிறுவனம் திட்டங்
களை அமுல்படுத்தி இருக்கிறது. ஒருங்கிணைந்த மேம்பாடு
திட்டத்தை அமுல்படுத்தி இருக்கிறது. இதன் கீழ் பல்வேறு
பணிகளான பொது நல மையங்கள் வடிவமைப்புத் தரக்
கட்டுப்பாடு முதலியவைகளை இணைத்து கைவினைஞர்கள்
தோல் பொருட்களான காலணி போன்றவற்றை செய்து அதை
சொந்தப் பொறுப்பில் விற்பனைச் செய்ய வழி வகுத்து இருக்கிறது.
மேலும் கைவினைஞர்களுக்கு பயிற்சியும் பெண்களுக்கு தோல்
பொருட்களை உற்பத்திச் செய்ய பயிற்சியும் அளிக்கப்படும்.
1984-85 ஆம் நிதி ஆண்டுக்கு ரூபாய் 350 லட்சம் அளவில்
திட்டங்களை தீட்டி தீட்டி அதற்கு தலைமை முறை பாங்காக
ரூபாய் 50 லட்சத்தை அரசு அளிக்க இருக்கிறது, என்பதை
கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதே சமயத்தில் மாண்புமிகு
உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் பதப்படுத்தாமல் தோல்
அனுப்பப்படுவதைப் பற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள்.
ஏற்றுமதியில் 87 விழுக்காடு பதப்படுத்தப்பட்டு தொழில்
செய்யும் பொருட்களுக்குத்தான் ஏற்றுமதி செய்யப்படுகிறது.
7 ஆம் ஐந்தாண்டுத் திட்டத்தில் தோல் பொருட்களின் ஏற்றுமதி
300 விழுக்காட்டுக்கு மேல் அதிகரிக்க திட்டமிட வகை செய்யும்
என்பதை நான் இங்கே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எனவே
இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய கருத்துக்களை எல்லாம்
அரசு தன்னுடைய கவனத்தில் கொண்டு அதன்மீது



1984 ஏப்ரல் 25] (திரு. இரா. அருணாசலம்)

நடவடிக்கைகள் எடுக்கப்படுவதைப்பற்றி நிச்சயமாக கவனத்தில்
கொள்ளும் என்று இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள
ஆசைப்படுகிறேன்.

அது மட்டும் அல்ல, இங்கே மாண்புமிகு உறுப்பினர்
திரு. சின்னராசு அவர்கள்பேசும்போது கிண்டி தொழிற்சாலைக்கு
தமிழ் தென்றல் திரு. வி. க. பெயரை அளித்திட வேண்டும்
என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். அதே கருத்தை இதற்கு
முன்பு பல முறை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆலூர் ஜகதீசன்
அவர்கள் இதே மன்றத்தில் எடுத்து வைத்து இருக்கிறார்கள்.
எனவே மாண்புமிகு உறுப்பினர்களுடைய உணர்வின் அடிப்
படையில் இதற்கு முன்பு மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவர்
அவர்களைப் பொறுத்தவரை பலவேறு துறைகளில் கல்வித்துறை
ஆகட்டும், தொழில்துறை ஆகட்டும், பல்வேறு வகைகளிலும்
தேசிய தலைவர்களை, கவிஞர்களை, சான்றோர்களை நாம்
பெருமைப்படுத்துகிற வகையில் அவர்களுடைய பெயரை அந்த
துறையின் கட்டிடங்களுக்கு வைத்து பெருமைப்படுத்தி இருக்
கிறோம். அந்த வகையில் மாண்புமிகு தமிழக முதல்வர்
டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் அந்தக்
கோரிக்கையை ஏற்று தமிழ் தென்றல் திரு. வி. க. பெயரை கிண்டி
தொழிற்பேட்டைக்கு வைக்க வேண்டும் என்ற கோரிக்கையை
ஏற்று அதற்கு அனுமதி அளித்து ஆணை இட்டு இருக்
கிறார்கள் என்பதை பெருமையோடு எடுத்துச் சொல்லக்
கடமைப்பட்டு இருக்கிறேன். விரைவில் அங்கே திரு. வி. க
தொழிற்பேட்டை, கிண்டி என்ற அளவில் அங்கே பொறிக்கப்படும்
என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

(பிற்பகல் 2-30)

மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருக்கின்ற வெட்டுத்
தீர்மானங்களுக்கு முடிந்த அளவிற்கு இங்கே பதில் அளித்திருக்
கிறேன். அந்தவகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் திருப்தியடைந்
திருப்பார்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். எனவே,
மாண்புமிகு உறுப்பினர் கொடுத்து இருக்கின்ற வெட்டுத்
தீர்மானங்களைத் திரும்பப்பெற்றுக் கொண்டு, இந்த மானியக்
கோரிக்கைகளை நிறைவேற்றித்தர வேண்டுமென்று அன்புடன்
கேட்டுக்கொண்டு அமைகின்றேன். வணக்கம்.

கோரிக்கை எண். 48 — கிராமத் தொழில்கள்

திரு. என். எஸ். வி. சித்தன் அவர்களுடைய வெட்டுத்
தீர்மானம், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக்
கொள்ளப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:—பேரவை முன்னுள்ள
கேள்வி—

"மானியக் கோரிக்கை எண். 48 —கிராமத் தொழில்கள்
என்ற தலைப்பின்கீழ் ரூ. 9,43,82,000-க்கு மேற்படாத்
தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 56—கிராமத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு

திரு. என்.எஸ்.வி. சித்தன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"மானியக் கோரிக்கை எண். 56—கிராமத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,29,34,000 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 26-4-1984 காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.31 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

## 7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும் எதுவுமில்லை.

### (ஆ) அறிக்கைகள். அறிவுப்புகள், ஏனைய தாள்கள்,

162. கோரிக்கை எண். 5—முத்திரைத்தாள் நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1984-85 (தமிழ், ஆங்கிலம்).

163. கோரிக்கை எண். 6—பத்திரப் பதிவுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1984-85 (தமிழ், ஆங்கிலம்).

164. கோரிக்கை எண். 10—பால் பண்ணை வளர்ச்சித்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1984-85 (தமிழ், ஆங்கிலம்).





165. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் செயலாக்கம் பற்றிய ஆய்வுரை (தமிழ், ஆங்கிலம்).

166. தொழில் கொள்கையும், திட்டங்களும் (ஊரகத் தொழில்களும் சிறு தொழில்களும்) 1984-85 (தமிழ், ஆங்கிலம்)

167. ஊரக மற்றும் சிறு தொழில்கள் பற்றிய சாதனைத் திட்டம், 1984-85 (தமிழ், ஆங்கிலம்).

168. 1983-84 ஆம் ஆண்டில் பட்டு வளர்ச்சித் துறை பற்றிய சாதனைத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

169. தமிழ்நாட்டில் சிறு தொழில்கள் சிறப்பான வளர்ச்சிக்கு சிட்கோ என்ற புத்தகம் (தமிழ்).

170. 1983-84 ஆம் ஆண்டு நீர்ப்பாசனம் மீதான மானியக் கோரிக்கையின் மீது நடைபெற்ற விவாதத்தின் போது சட்ட மன்றப் பேரவை, மேலவை உறுப்பினர்கள் அளித்த ஆலோசனை களின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவர அறிக்கை (தமிழ், ஆங்கிலம்).

171. சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் ஐந்தாவது அறிக்கை. (ஏழாவது சட்டமன்றப் பேரவை) (ஆங்கிலம்).

## இணைப்பு I.

(352 ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க,)

### மானியக் கோரிக்கை எண். 5

### முத்திரைத்தாள் நிர்வாகம்.

1. பொது :

இந்த மாநிலத்தின் வருவாயில் ஒரு சிறு பகுதி 1899 ஆம் ஆண்டின் இந்திய முத்திரைச் சட்டத்தில் (மத்தியச் சட்டம் 2/1899) வகை செய்யப்பட்டுள்ள சொத்து உரிமை மாற்ற ஆவணம் மற்றும் இதர ஆவணங்களின் பெறும் முத்திரைத் தீர்வை மூலம் பெறப்படுகிறது. இந்திய முத்திரைச் சட்டம் 1—12—1980 முதல் முதன்மை கட்டுப்பாட்டு அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள பதிவுத்துறை தலைவரால் நிருவகிக்கப்படு கிறது.

2. வருவாய்

1981–82 ஆம் ஆண்டில் முத்திரைத்தாள் விற்பனை மூலம் அரசுக்குக் கிடைத்த வருவாய் ரூ. 64.98 கோடி. 1982–83 ஆம் ஆண்டில் இது ரூ. 74.42 கோடியாக உயர்ந்துள்ளது. 1983–84 ஆம் ஆண்டில் அரசுக்குக் கிடைக்கக்கூடிய வருவாய் ரூ. 80.43 லிருந்து ரூ. 100.00 கோடி வரை இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. 1981—82 ஆம் ஆண்டில் இச்சட்டத்தின் குறைபாடுகள் நீக்கப்பட்டு, முத்திரைத்தாள் தீர்வை வீதங்கள் உயர்த்தப்பட்டதும் திருத்தி அமைக்கப்பட்டு 1-9-1981 முதல் செயலுக்கு கொண்டு வரப்பட்ட வழிகாட்டி மதிப்பேடுகளும் இந்த வருவாய் உயர்வுக்குக் காரணமாகும். இந்த முத்திரைத் தீர்வையில் 90 சதவிதம் பதிவு அலுவலகங்களில் பதிவு செய்யத்தக்க ஆவணங்களில் செலுத்தப்படும் முத்திரைத் தீர்வை மூலம் பெறப்படுகிறது.

3. முத்திரைத்தாள் கொள்முதலும் விற்பனையும்

முத்திரைத்தாள்கள் நாசிக்கில் உள்ள இந்தியப் பாதுகாப்பு அச்சகத்தால் அச்சிடப்பட்டு வழங்கப்படுகின்றன. இந்த முத்திரைத்தாள்களின் கொள்முதல், இருப்பு வைத்தல், விநியோகம், விற்பனை மற்றும் இந்த முத்திரைத்தாள்களை அச்சிடுவதற்காக நாசிக் இந்திய பாதுகாப்பு அச்சகத்திற்குச் செலுத்தப்படும் தொகை ஆகியவற்றின் மீதான கட்டுப்பாடு கருவூலங்கள் மற்றும் கணக்குகள் துறை இயக்குநரின் கீழ் பணிபுரியும் உதவி முத்திரைத்தாள் கண்காணிப்பாளரால் கண்காணிக்கப்படுகிறது. நீதித்துறை சாரா முத்திரைத்தாள்கள், நீதிமன்றங் கட்டண வில்லைகள், ஒட்டு முத்திரை வில்லைகள் ஆகியவற்றை நேரடியாக கருவூலங்களுக்கு எந்தெந்த மதிப்பில் எவ்வளவு தேவைப்படுகின்றன. அவற்றை வழங்குவதற்காகத் தாள்கள் எவ்வப்போது வழங்கவேண்டும் என்கிற விவரங்களைக் குறிப்பிட்டு, தனது தேவைக்குறிப்புகளை நாசிக்கிலுள்ள முத்திரைத்தாள் கட்டுப்பாட்டு அதிகாரிக்கு முத்திரைத்தாள் உதவி கண்காணிப்பாளர் மூன்று மாதங்களுக்கொருமுறை அனுப்புகிறார். முத்திரைத்தாள் கட்டுப்பாட்டு அதிகாரியிடமிருந்து முத்திரைத்தாள்கள் வந்த பின்னர், அவற்றை கருவூலங்கள் முத்திரைத்தாள் விற்பனையாளர்களின் தேவைக்கேற்பவும் இருப்பில் உள்ள முத்திரைத்தாள்களின் எண்ணிக்கையைப் பொறுத்தும் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன. பொதுவாக முத்திரைத்தாள் கட்டுப்பாட்டு அதிகாரி, முத்திரைத்தாள் உதவி கண்காணிப்பாளர் கொடுத்த தேவைக்குறிப்பு அட்டவணையில் கண்டுள்ள படியும் அதில் குறிப்பிட்டுள்ள மதிப்புகளிலும் முத்திரைத்தாள்களை வழங்குகிறார், எனினும், எதிர்பாராச் சூழ்நிலைகளாலும் போக்குவரத்து நெருக்கடியாலும் முத்திரைத்தாள் கட்டுப்பாடு ஏற்படும்போது அவை முறையாக வழங்கப்பட இயலாதபோதும் முத்திரைத்தாள் உதவி கண்காணிப்பாளர் முத்திரைத்தாள்கள் மிகையாக உள்ள கருவூலங்களிலிருந்து





தேவை உள்ள கருவூலங்களுக்கு அவற்றை அனுப்ப ஏற்பாடு செய்வார். முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் முத்திரைத்தாள் நெருக்கடியை உருவாக்காமல் கவனித்துக் கொள்ளும் பொருட்டு, இம்மாநிலத்திலுள்ள 556 பத்தரப்பதிவுத்துறை அலுவலகங்களிலும் முத்திரைத்தாள்களை விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பத்திரங்களைப் பதிவு செய்யும் மக்கள் முத்திரைத் தீர்வைகள் முத்திரைத்தாள் வடிவில் செலுத்துவதற்குப் பதிலாக, பத்திரப் பதிவு அலுவலகத்திலேயே ரொக்கமாகவும், செலுத்தலாம். இம்முறை பொதுமக்கள் முத்திரைத்தாள் கட்டுப்பாட்டு அதிகாரி வழங்கும் முத்திரைத்தாள்களையே நம்பியிருக்கும் நிலையை மாற்றியுள்ளதுடன் குறிப்பிட்ட மதிப்புடைய முத்திரைத்தாள் கிடைக்காமல் பொதுமக்கள் அவதிப்படும் நிலையும் மாறியுள்ளது.

4. 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் (மத்தியச் சட்டம் 2/1899). நிர்வாகம்.

முத்திரைத் தீர்வை வருவாயில் பெரும்பகுதி இயங்காச் சொத்துக்களை விற்பனை செய்தல், உரிமை மாற்றம் செய்து கொடுத்தல், முதலியவற்றின் மீது செலுத்தப்படும் நீதித்துறை சாரா முத்திரைத் தாள்களின் விற்பனையிலிருந்து கிடைக்கிறது. சொத்துக்களின் அங்காடி மதிப்பையொட்டி, முத்திரைத்தாள் தீர்வை விதிக்கப்படத்தக்கதாகும். பத்திரத்தில் கையொப்பமிடும் தரப்பினர்கள் அப்பத்திரத்தில் சம்பந்தப்பட்ட சொத்தின் அங்காடி மதிப்பைக் குறிப்பிட வேண்டும். பத்திரத்தில் குறிப்பிடப்படும் இயங்காச் சொத்துக்களின் அங்காடி மதிப்பு சரியா என்பதை பத்திரப்பதிவு அதிகாரிகள் நன்கறியவும், பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட சொத்து குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளதா? முத்திரைத்தாள் தீர்வை செலுத்துவதினின்று எவரும் தந்திரமாகத் தப்பிக்க முயற்சிக்கின்றனரா என்பனவற்றைக் கண்டறிந்து உறுதி செய்யவும், பத்திரப்பதிவு அதிகாரிகளுக்கு வழிகாட்டிப் பதிவேடுகள் வழங்கப்பட்டுள்ளன. இப்பதிவேட்டில், நில அளவைகள், அந்நிலங்களின் மதிப்பு ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளன. பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள இயங்கா சொத்தின் மதிப்பு சரியாகக் குறிப்பிடப்படவில்லை என்று பதிவு அலுவலர் ஐயுறுவதற்குக் காரணமிருப்பின், அச்சொத்தின் உண்மையான அங்காடி மதிப்பை நிர்ணயிப்பதற்காக இந்திய முத்திரைச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட ''மாவட்ட ஆட்சியர்'' (கலெக்டர்) ஆவணத்தை அனுப்ப அச்சட்டம் அவருக்கு அதிகாரமளிக்கிறது. இச்சட்டத்தின் கீழ் அளிக்கப்பட்ட 'மாவட்ட ஆட்சியரின்' அதிகாரங்கள் தற்போது சம்பந்தப்பட்ட வருவாய்க் கோட்ட அலுவலர்கள், உதவி ஆட்சியர்கள், சார் ஆட்சியர்கள் ஆகியோரிடமும் சென்னை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளரிடமும் நிலைபெற்றுள்ளன. இப்பணியின் ஒரு பகுதியை திருநெல்வேலி, மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம்

தென்னாற்காடு, வடஆர்க்காடு மாவட்டங்களில் இதற்கெனத் தனியாக அனுமதிக்கப்பட்ட நான்கு சிறப்பு மாவட்டப் பதிவாளர்களிடம் அரசு ஒப்படைத்துள்ளது. இம்மாவட்டப் பதிவாளர்களுக்கு நில அளவை நிலவரி ஏற்பாட்டில் தேவையான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. சொத்து மதிப்பீடு பதிவேடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண்களில் பத்திரங்கள் பதிவு செய்யப்படும்போது அதற்கிணங்க வழிகாட்டிப் பதிவேட்டில் குறிப்பிட்டுள்ள மதிப்பு நாளது வரையில் சரிசெய்யப்பட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கட்டிடம் அமைந்துள்ள பகுதியையும், கட்டிடத்தின் மதிப்பையும் சரி பார்ப்பதில் பத்திரப் பதிவு அதிகாரிகளுக்கு உதவி செய்யவும், கட்டிட அமைப்பு மேற்கூரை முதலியவை தொடர்பாகக் கட்டிடத்தின் மதிப்பை நிர்ணயிக்கும் வகையில் பொதுப் பணித்துறையுடன் தொடர்பு கொள்ளவும், உதவி நிர்வாக பொறியாளர் பதவி ஒன்று பத்திரப் பதிவுத்துறைத் தலைவர் அலுவலகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது இந்த உதவி நிர்வாக பொறியாளர் பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட சொத்துக்களை நேரடியாக பார்வையிடுகிறார். இது வரை இவர் மேற்கொண்ட தீவிரமான பணியினால் 1982-83ல் பதிவுக்கு ஏற்கப்பட்ட சில ஆவணங்களில் குறித்த சொத்துக்களின் மதிப்பு ரூ. 60.84 லட்சம் வரை குறைவாக மதிப்பிடப்பட்டிருந்தது என கண்டு பிடிக்கப்பட்டது. சொத்துக்களின் மதிப்பில் ஏற்படக்கூடிய குறைவு மதிப்பினை கண்டறிய மாதிரி சோதனைகளையும் (Random) அவர் மேற்கொள்கிறார்.

5. உரிமை மாற்றுத் தீர்வை

ஆவணங்களைப் பதிவு செய்வதற்காக செலுத்தவேண்டிய முத்திரைத் தீர்வையைத்தவிர விற்பனை, பரிமாற்றம், தானம் உடைமை உரிமையுடன் கூடிய அடைமானப் பத்திரம், முடிவடையும் காலம் குறிக்காத குத்தகைகள் ஆகிய ஆவணங்களில் குறித்த சொத்து மதிப்பில் 5 சதவீதம் உரிமை மாற்றுத் தீர்வையாக வசூலிக்கும் பணியையும் பதிவுத்துறை மேற்கொள்கிறது. இவ்வாறு வசூலிக்கப்படும் தொகையில் 3 சதவீதத்தொகையை பணிக்கட்டணமாக அரசு எடுத்துக் கொள்கிறது. எஞ்சியுள்ள 97 சதவீதத் தொகை சம்பந்தப்பட்ட ஊராட்சிகள், நகரியங்கள், நகராட்சிகள், மாநகராட்சிகள் மற்றும் உள்ளாட்சி மன்றங்களுக்கு பிரித்துக் கொடுக்கப்படுகிறது

6. வருவாய்;

ஒவ்வொரு முத்திரைத்தாள் இனத்தின் கீழும் வரவு, திருப்பளிப்பு செலவு, ஆகிய விவரங்கள் வருமாறு;—



1983-84ஆம் ஆண்டில் "முத்திரைத்தாள் நிர்வாகம்" என்பதன் கீழ் வரவு-செலவு பற்றிய விவரங்கள்.

| தொடர் எண். | முத்திரைத் தாள்களின் வகை. | 1982 ஏப்ரல் முதல் 1983 மார்ச் வரையில். | 1983-84 ஆண்டு (1983 ஏப்ரல் முதல் 1983 நவம்பர் வரை) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | ரூபாய். | ரூபாய். |
| 1. | நீதித்துறை சாரா முத்திரைத்தாள்கள். | 56,47,01,780.55 | 41,55,26,605.75 |
| 2. | நீதித்துறை சார்ந்த முத்திரைத்தாள்கள். | 7,30,14,766.20 | 4,83,97,008.39 |
| 3. | உண்டியல் முத்திரைத் தாள்கள். | 16,39,123.25 | 12,32,065.75 |
| 4. | ஒட்டு முத்திரை வில்லைகள். | 2,65,95,632.60 | 1,82,87,090.25 |
| 5. | பல்வகை வரவுகள் | 7,82,49,051.74 | 5,28,01,846.46 |
| | பெரு மொத்த வரவு .. | 74,42,00,354.34 | 53,62,44,616.60 |
| | கழித்திடுக திருப்பிச் செலுத்திய தொகை. | | |
| | நீதித்துறை சாரா முத்திரைத்தாள்கள் மற்றும் உள்ளாட்சி மன்றங்களுக்குச் செலுத்தியவை. | 21,25,43,355.50 | 14,09,70,272.99 |
| | நீதித்துறை சார்ந்த முத்திரைத்தாள்கள். | 28,75,745.56 | 17,43,178.55 |
| | திருப்பிச் செலுத்திய மொத்தத் தொகை .. | 21,54,19,101.06 | 14,27,13,451.54 |

| தொடர் எண்ணும், முத்திரைத்தாள்களின் வகையும். | 1982 ஏப்ரல் முதல் 1983 மார்ச் வரையில். | 1983-84ம் ஆண்டு (1983 ஏப்ரல் முதல் 1983 நவம்பர் வரை) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 முத்திரைத்தாள் விற்பனையில் தள்ளுபடி | 53,82,437.80 | 39,39,817.19 |
| 2 பணியாளர்கள் செலவு | 9,18,873.10 | 6,67,319.30 |
| 3 நாசிக்கிலுள்ள முத்திரைத்தாள் அச்சகத்திற்குச் செலுத்தத்தக்க முத்திரைத்தாள்களின் மதிப்பு. | 29,52,692.44 | 27,92,035.40 |
| மொத்தச் செலவு .. | 92,54,003.34 | 73,99,171.89 |
| மொத்த வரவுகள் .. | 74,42,00,354.34 | 53,62,44,616.60 |
| மொத்தச் செலவும், திருப்பிக் கொடுக்கப் பட்ட தொகைகளும். | 22,46,73,104.40 | 15,01,12,623.43 |
| நிகர வரவுகள் .. | 51,95,27,249.94 | 38,61,31,993.17 |



## இணைப்பு II

(352 ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக்கோரிக்கை எண்.6

### பத்திரப் பதிவுத்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு.

பத்திரப் பதிவுத்துறை 1834 ஆம் ஆண்டில் கிழக்கிந்தியக் கம்பெனி காலத்தில் ஏற்படுத்தப்பட்டது. இத்துறை 1864 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் ஒரு தனித்துறையாக உருவாக்கப் பட்டது. ஆனால், பத்திரப் பதிவுத் துறைத் தலைவர் என்ற பெயருடன் இவ்வலுவலகம் 1871 ஆம் ஆண்டில் உருவாக்கப் பட்டது. 113 ஆண்டுகளுக்கும் மேலாக இயங்கிவரும் இத்துறை, முக்கியமாக 1908 ஆம் ஆண்டு பத்திரப் பதிவுச் சட்டத்தை (மத்தியச் சட்டம் 16/1908) செயல்படுத்தி வருகிறது. பொது மக்களின் சொத்துக்கள் தொடர்பான உரிமைப் பத்திரங்களைப் பாதுகாக்கிறது. உழவர்கள் உட்பட பொதுமக்களுக்கு பத்திரப் பதிவுத் துறை வழங்கும் 'வில்லங்கச் சான்றிதழின்' அடிப் படையிலேயே கடன் வழங்கப்படுகிறது.

2. நிருவாக அமைப்பு முறை—(i) இந்திய ஆட்சிப் பணித் தரத்திலுள்ள ஒருவர் பத்திரப் பதிவுத் துறைத் தலைவராவார். இவர் பிறப்பு—இறப்பு, திருமணங்கள் பதிவு செய்யும் தலைமை பதிவாளராகவும் (Registar — Gen ral), சீட்டுகள் நிதி பதிவு இயக்குநராகவும், 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத் தாள் சட்டத்தின்படி வருவாய்க் கட்டுப்பாட்டுத் தலைமை அதிகாரி யாகவும் இருக்கிறார். அவருக்கு உதவியாக பின்வரும் அதிகாரிகள் பணியாற்றி வருகின்றனர்.—

கூடுதல் பதிவுத்துறைத்த தலைவர் ஒருவர்;
சட்ட அதிகாரி ஒருவர்
சீட்டு நிதி கூடுதல் இயக்குநர் ஒருவர்

பதிவுத் துறைத் தலைவரின் (பொது) நேர்முக உதவி யாளர் ஒருவர்;

பதிவுத் துறைத் தலைவரின் (கணக்குகள்) நேர்முக உதவி யாளர் ஒருவர்;

கட்டிடங்களின் அங்காடி மதிப்பை நிர்ணயிப்பதற்காக உதவி நிருவாகப் பொறியாளர் ஒருவர்;

காவல்துறை துணை கண்காணிப்பாளர் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் ஒழுக்கச் கண்காணிப்புச் சிறப்புப் பிரிவு ஒன்று.

(ii) 1—8—82 முதல், பதிவுத் துறை, வேலூர், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய இடங் களைத் தலைமை இடங்களாகக் கொண்டு துணை பதிவுத்துறை தலைவரின் கட்டுப்பாட்டின்கீழ் செயலாற்றும் நான்கு மண்டலங்

[1984 ஏப்ரல் 25

களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பதிவுத்துறை துணைத்தலைவரின் அலுவலகம் ஒவ்வொன்றுடனும் இரண்டு பத்திரப் பதிவகங்களின் ஆய்வாளர் அலுவலகங்கள் இணைக்கப்பட்டுள்ளன. ஆய்வுப் பணிகள், விசாரணைகள், பத்திரப் பதிவகங்களின் ஆய்வாளர் அலுவலகங்களிலிருந்தும், மாவட்டப் பதிவாளர்களிடம் இருந்தும் வரும் பணி முன்னேற்ற அறிக்கைகளை மறு ஆய்வு செய்தல் போன்ற பணிகள், துணை பதிவுத் துறைத் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அவர்களின் அதிகார வரம்பிற்குள் உள்ள பதிவகங்களின் ஆய்வாளர்கள், மாவட்டப்பதிவாளர்கள் மற்றும் சார் பதிவாளர்கள் அலுவலகங்கள் மீது கட்டுப்பாடு செலுத்தவும், பணிகளை மேற்பார்வையிடவும் அதிகாரமளிக்கப் பட்டுள்ளது.

(iii) மதுரை, திருநெல்வேலி, கடலூர், தஞ்சாவூர், சென்னை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், மற்றும் சேலம் ஆகிய இடங்களில் ஒவ்வொன்று வீதம் மொத்தம் எட்டு பதிவகங்களின் ஆய்வாளர் அலுவலகங்கள் உள்ளன. சார் பதிவாளர் அலுவலகங்களை திடீரென ஆய்வு செய்தல் முறைகேடு குறைவாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் குறித்த புகார்கள் மீது விசாரணை மேற்கொள்ளுதல் முதலியவை இவ்வலுவலர்களின் முக்கியப் பணிகளாகும். இவ்வலுவலர்கள் சங்கங்கங்கள். சீட்டு நிதி நிறுவனங்கள் ஆகியவற்றையும் ஆய்வு செய்கின்றனர்.

(iv) மாவட்டப் பதிவாளர் அலுவலகங்கள்:—இம்மாநிலம் 46 பதிவு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பதிவு மாவட்டமும், ஒரு மாவட்டப் பதிவாளரின் நிருவாகத்தின் கீழ் இயங்கி வருகிறது. இவரே நிறுவனங்கள், சங்கங்கள் மற்றும் திருமணங்கள் ஆகியவற்றைப் பதிவுசெய்யும் பதிவாளரும் ஆவார் சார் பதிவாளர் அலுவலகங்களை ஆய்வு செய்தல், ஆவணங்களை பதிவு செய்வதற்கு மறுப்பு தெரிவிக்கப்படுவது தொடர்பாக வரும் மேல்முறையீடுகள் மனுக்கள் ஆகியவற்றை விசாரித்தல் மதிப்புக் குறைவாகக் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களைக் கண்டுபிடித்தல் அவை தொடர்பாக வரும் புகார்கள் குறித்து விசாரணை செய்தல் ஆகிய பணிகளை இவர் மேற்கொள்ளுகிறார்.

(v) சார் பதிவாளர் அலுவலகங்கள்:—46 மாவட்டப் பதிவாளர் அலுவலகங்கள் தவிர. 510 சார்பதிவாளர் அலுவலகங் களும் செயல்பட்டு வருகின்றன. இச்சார்பதிவாளர் அலுவலகங் கள், சார் பதிவாளரால் நிருவகிக்கப்பட்டு வருகின்றன. ஆவணங் களைப் பதிவு செய்தல், வில்லங்கச் சான்றிதழ்கள் வழங்குதல், சான்றளிக்கப்பட்ட நகல்கள் வழங்குதல், ஆகிய பணிகளை இவர் மேற்கொண்டுள்ளார். மேலும். சீட்டு நிதி நிறுவனங்கள், திருமணங்கள் ஆகியவற்றின் பதிவாளராகவும் பணியாற்றுகிறார் 1984—85—ல் மேலும் நான்கு புதிய சார்பதிவாளர் அலுவலகங் களைத் தொடங்க கருதப்பட்டுள்ளது.



1984 ஏப்ரல் 25]

(vi) வருவாய் இழப்பு ஏற்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு பதிவாளர் அலுவலகங்களின் கணக்குகளைத் தணிக்கையிடுவதற் காக 24 உள் தணிக்கைப் பிரிவுகள் உள்ளன. இத்துறையின் வருவாய்க் கணக்குகள் மாநில கணக்குத் துறைத் தலைவராலும் தணிக்கையிடப்படுகிறது.

3. பல்வேறு வகைச் சட்டங்களை நிருவகித்தல்.—(1) 1908 ஆம் ஆண்டு பதிவுச் சட்டத்தைத் தவிர, பின்வரும் சட்டங் களின் நிருவாகமும் இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது;—

(அ) 1932 ஆம் ஆண்டு இந்தியக் கூட்டாண்மைச் சட்டம்;

(ஆ) தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டம்;

(இ) 1886 ஆம் ஆண்டு பிறப்பு, இறப்பு மற்றும் திருமணங்கள் சட்டம் (1886 ஆம் ஆண்டு மத்திய சட்டம்);

(ஈ) (i) 1936 ஆம் ஆண்டு பார்சி திருமணம், திருமண விலக்குச் சட்டம்;

(ii) 1872 ஆம் ஆண்டு இந்தியக் கிறித்துவத் திருமணங் கள் சட்டம்;

(iii) 1969 ஆம் ஆண்டு பிறப்பு, இறப்பு சட்டம்;

(iv) 1954 ஆம் ஆண்டு சிறப்புத் திருமணங்கள் சட்டம்;

(v) 1955 ஆம் ஆண்டு இந்து திருமணங்கள் சட்டம்

(உ) 1961 ஆம் ஆண்டு வரதட்சிணைத் தடுப்புச் சட்டம்;

(ஊ) தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம்;

(எ) 1972 ஆம் ஆண்டு வணிகம் அல்லாத நிறுவனங்கள் சட்டம். (1—7—1981 முதல்);

(ஏ) 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் சட்டம் (1—12—1980 முதல்);

(2) சீட்டு நிதிகள் நிர்வாகம்—(i) தமிழ்நாடு 1961ஆம் ஆண்டு சீட்டுநிதிகள் சட்டம், 8-7-1964 முதற்கொண்டு சேர்க்கப் பட்ட பகுதிகளில் முதன்முதலில் செயல்படுத்தப்பட்டது. பின்னர் இச்சட்டம், சென்னைக்கும், 1-12-1969 ஆம் ஆண்டு முதல் மாநிலம் முழுவதற்கும் நீடிக்கப்பட்டது. பத்திரப் பதிவுத் துறைத் தலைவர், சீட்டு நிதி நிறுவனத்துறையின் அலுவல் முறையிலான இயக்குநராகப் பணியாற்றுகிறார். சார் பதிவாளர்கள் சீட்டு நிதிப் பதிவாளர்களாவர்.

(ii) 1982—83 ஆம் ஆண்டின் இறுதியில் மொத்தம் 19,001 சீட்டுநிதிகள் இயங்கின. முந்திய ஆண்டு இறுதியில் மொத்தம் 18,438 சீட்டு நிதிகள் இருந்தன. 1982-83 ஆம் ஆண்டின்

இறுதியில், சீட்டு நிதி நிறுவனங்கள் பதிவாளரிடம் மொத்தம் ரூ.21.74 கோடி ரூபாய், பிணைய வைப்புத் தொகையாக இருந்தது. முந்தைய ஆண்டின் இறுதியில் இத்தொகை ரூ.17.02 கோடியாக இருந்தது.

(iii) 1982–83–ல் ஏற்பளிக்கப்படாத 335 சீட்டு நிதி நிறுவனங்கள் கண்டுபிடிக்கப்பட்டன; இவற்றுள், 71 நேர்வுகளின் குற்றமிழைத்தவர்களுக்குச் சிறைத்தண்டனை, அபராதம் விதிக்கப்பட்டது. ஏனைய 1968 குற்றங்களில், 96 நேர்வுகளின் குற்றம் இழைத்தவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டது மொத்தம் ரூ.4,805 அபராதத் தொகையாக வசூலிக்கப்பட்டது.

(iv) சீட்டு நிதியில் சேருபவர்களின் நலனைப் பாதுகாக்கும் பொருட்டு சட்டப்படியான விதித்துறைகளுடன் கூடிய 1982 ஆம் ஆண்டு மத்தியச் சீட்டு நிதிகள் சட்டத்தை மத்திய அரசு விரைவில் செயலுக்குக் கொண்டுவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இச்சட்டம், தமிழ்நாடு 1961–ஆம் ஆண்டு சீட்டு நிதி நிறுவனங்கள் சட்டத்திற்கும் பதிலாகச் செயல்படுத்தப்படும்.

4. ஆவணங்கள் எழுதுவோர் உரிம விதிகள்:—இந்த விதிகளின் கீழ் 31—12—1983 ஆம் நாள் வரை வழங்கப்பட்டுள்ள உரிமங்களின் விவரம் வருமாறு:—

| | | |
|---|---|---|
| மாநில உரிமங்களின் எண்ணிக்கை | ... | 1,211 |
| மாவட்ட உரிமங்களின் எண்ணிக்கை | ... | 4,756 |
| துணை மாவட்ட உரிமங்களின் எண்ணிக்கை | ... | 3,221 |
| மொத்தம் | ... | 9,18 |

மொத்தம் ரூ, 7,59,950 உரிமக் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

5. தமிழ்நாடு சீட்டு நிறுவனத்தின் தோற்றம்:— 1956 ஆம் ஆண்டு நிறுவனங்களின் சட்டத்தின் கீழ் 11—1—1984 ஆம் நாளன்று பதிவு செய்யப்பட்டுள்ள சீட்டு நிறுவனம், சீட்டுக்களை வெளியிடுவதற்கான தொடக்க ஏற்பாடுகளை செய்து வருகிறது. இந்நிறுவனம் தொடங்கும் சீட்டுகளில் பொதுமக்களும் அரசுப் பணியாளர்கள், ஓரளவு அரசுத்தன்மை வாய்ந்த பணியாளர்கள், ஆகியோர் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

6. வருவாய் (i) வருவாய் வாயில்கள்:— முத்திரைதாள்தீர்வை ஆவணங்கள் பதிவு செய்வதற்காக வசூலிக்கப்படும் கட்டணம் ஏனைய பணிக்களுக்கான கட்டணம் ஆகியவையே இதன் முக்கிய நிதி வாயில்களாகும். இவற்றைத் தவிர, சீட்டுக்கள், சங்கங்கள், நிறுவனங்கள் திருமணங்கள் ஆகியவற்றைப் பதிவு செய்வதற்காக வசூலிக்கப்படும் வகையில் ஓரளவு வருவாய் கிடைக்கிறது.



(ii) இத்துறையின் வரவு-செலவு விவரம்.— 1977-78 ஆம் ஆண்டு முதல் பதிவுக்கட்டணம், ஆவணங்களைத் தேடுவதற்கான கட்டணம், நகலெடுப்பதற்கான கட்டணம் ஆகியவகையில் வசூலிக்கப்பட்ட கட்டணங்களின் விவரம் வருமாறு:—

| ஆண்டு | வருவாய் (ரூபாய் இலட்சத்தில்) | செலவு |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1977–78 | 359.26 | 213.85 |
| 1978–79 | 537.84 | 234,40 |
| 1979–80 | 568.27 | 265.00 |
| 1980–81 | 559.51 | 299.88 |
| 1981–82 | 912.54 | 354.92 |
| 1982–83 | 985.06 | 429.63 |
| 1983–84 (1983 ஏப்ரல் முதல் நவம்பர் வரை) | 693,51 | 343.66 |

1983–84 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ. 11 கோடி வருவாய் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

[1984 ஏப்ரல் 25

## இணைப்பு III.

(352ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

பால் பண்ணை வளர்ச்சித் துறை ம்ற்றும் பால் வழங்கும் திட்டங்கள்.

கோரிக்கை எண். 10.

கொள்கை விளக்கம்.

1984—85.

பால் பண்ணை வளர்ச்சித் துறை.

பால் முக்கியமாக கிராமங்களில் உற்பத்தி செய்யப்படுகிறது பால் பண்ணை தொழில் விவசாயத்திற்கு அடுத்தபடி உள்ள முக்கிய தொழிலாகும். பால் கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கங்கள் ஆங்காங்கு அமைக்கப்படுவதன் மூலம், பால் உற்பத்தி யாளர்களின் நலன்கள் பேணப்படுவதுடன் , நகர்ப்புறங்களில் உள்ள பால் நுகர்வோர்களுக்குச் சிறந்த நல்ல தரமான பாலும் அதனுடைய உபபொருள்களும் நியாயமான விலையில் வழங்கப்பட்டு அவர்களின் நலனும் பாதுகாக்கப்படுகிறது. பால் உற்பத்தியாளர்கள் மற்றும் பால் நுகர்வோர்கள் நலனைக் காக்கும் பொருட்டு அனைத்து முன்னேற்பாடான வசதிகளும் அரசால் இம்மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இம்மாநிலத்தில் பால்பண்ணை தொழில் அபிவிருத்தி செய்வதின் பொருட்டு 1958-ம் ஆண்டு பால் பண்ணை வளர்ச்சித் துறை நிறுவப்பட்டது. 1963ஆம் ஆண்டு முதன் முதலில் நவீன பால் பதப்படுத்தும் தொழிற்சாலை மாதவரத்தில் தொடங்கப் பட்டது. அதைத் தொடர்ந்து 1967 ஆம் ஆண்டில் மதுரை பால் பண்ணை நிறுவப்பட்டது. கிராமங்களில் கிடைக்கும் அதிக மான பாலை சென்னை மற்றும் மதுரை பால் பண்ணைகளுக்கு அனுப்புவதற்கு முன்பு பக்குவம் செய்யும் பொருட்டு அநேக குளிரூட்டும் நிலையங்கள் அவ்வப்பொழுது நிறுவப்பட்டன. 1972 ஆம் ஆண்டு பால் பண்ணை வளர்ச்சித் துறையின் வணிக சம்பந்தமான பால் கொள்முதல், பக்குவப்படுத்தல் மற்றும் விநியோகம் செய்தல் போன்ற நடவடிக்கைகள் தமிழ்நாடு பால் வள நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டன. 1981 ஆம் ஆண்டு அந்நிறுவனம் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையமாக மாற்றப்பட்டது. பால் பண்ணை வளர்ச்சித் துறை இம்மாநிலத்தில் கிராம அளவில் கூட்டுறவு சங்கங்களை அமைப்பதையும், மாவட்ட அளவில் ஒன்றியங்களை நிறுவுவதையும் கவனித்து வருகிறது.



1984 ஏப்ரல் 25]

பால் பண்ணை வளர்ச்சித்துறை கூட்டுறவு சங்கங்களை அமைத்து, பதிவு செய்து, அவைகளை மேற்பார்வை செய்து வருகிறது. பால் பெருக்குத் திட்டத்தில் சேராத, தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய ஆறு மாவட்டங்களில் இத்துறை செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தி யாளர்கள் இணையம் பால் பெருக்குத் திட்டத்தில் சேர்ந்த செங்கல்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, சேலம், தருமபுரி, கோயம்புத்தூர், பெரியார், நீலகிரி மற்றும் மதுரை ஆகிய 9 மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் பால் கூட்டுறவு சங்கங்களின் நிர்வாகம்.—

கிராம அளவில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் நிறுவப்படுகின்றன. பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் 'ஆனந்த்' முறையில் அமைக்கப்படுகின்றன. இம்முறையின் கீழ் கிராம அளவில் பால் உற்பத்தியாளர்கள் சங்கமும், மாவட்ட அளவில் ஒருங்கிணைந்த பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியமும், மாநில அளவில் அவ்வொன்றியங்களின் உறுப்பினர்களை அங்கத்தினர்களாகக் கொண்ட இணையமும் ஆகிய மூன்று அடுக்குமுறை மலர்ந்துள்ளது.

பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களை அமைப்பதில் வளர்ச்சி.—

(அ) தமிழ்நாட்டில் 4,882 ஆரம்ப பால் உற்பத்தி யாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் நிறுவப்பட்டு செயலாற்றி வருகின்றன. 1983—84 ஆம் ஆண்டில் (1983 நவம்பர் 30-ம் தேதி வரை) புதிதாக அமைக்கப்பட்ட 490 சங்கங்களும் இதில் அடங்கும். 1984—85 ஆம் ஆண்டில் புதிதாக 500 புதிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(ஆ) 1983-84 ஆம் ஆண்டில் (1983 டிசம்பர் 31-ம் தேதி வரை) 87 வழக்கமான பால் வழங்கும் சங்கங்கள் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களாக மாற்றி அமைக்கப் பட்டுள்ளன. 1984 மார்ச் திங்கள் முடிவடைவதற்கு முன்னால் மேலும் 13 அத்தகைய பால் வழங்கும் சங்கங்கள் பால் உற்பத்தி யாளர்கள் சங்கங்களாக மாற்றி அமைக்கப்படும்.

1984—85 ஆம் ஆண்டில் மேலும் 50 பால் வழங்கும் வர்த்தக சங்கங்களை 'ஆனந்த்' முறையிலான பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களாக மாற்றி அமைக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது.

(இ) 1983—84 ஆம் ஆண்டில் 66 செயல்படாத சங்கங்கள் புதுப்பிக்கப்பட்டு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. அச்சங்கங்கள் 'ஆனந்த்' முறையில் செயல்பட்டு வருகின்றன.

[1984 ஏப்ரல் 25

1984–85 ஆம் ஆண்டில், மேலும் 150 செயல்படாத சங்கங்களை புதுப்பித்து பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களாக மாற்றி அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சிறப்பு அம்சங்களும் புள்ளி விவரங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன,—

(அ) ஆரம்ப சங்கங்கள்—

| | |
|---|---|
| 1. தமிழகத்திலுள்ள செயல்படும் ஆரம்ப பால் கூட்டுறவுகளின் எண்ணிக்கை. | 5,181 |
| ஆரம்ப பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள். | 4,882 |
| ஆரம்ப பால் வழங்கும் சங்கங்கள் | 259 |
| கூட்டுறவு பால் பண்ணைகள் | 2 |
| பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள | 38 |
| | 5,181 |
| 2. பால் வழங்கும் கூட்டுறவுகளில் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை. | 12.18 (இலட்சம்) |
| 3. சங்கங்களில் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம். | ரூ. 234.71 (இலட்சம்) |

(ஆ) கூட்டுறவு பால் ஒன்றியங்கள்—

| | |
|---|---|
| 1. பால் வழங்கும் ஒன்றியங்களின் எண்ணிக்கை. | 10 |
| 2. பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களின் எண்ணிக்கை. | 15 |
| 3. பால் ஒன்றியங்களில் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை. | 32,000 |
| 4. ஒன்றியங்களில் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம். | ரூ. 71.41 (இலட்சம்) |

(இ) பால் உற்பத்தியும் விற்பனையும்.—

| | (லிட்டர் இலட்சத்தில்) |
|---|---|
| 1. நாள் ஒன்றுக்கு சராசரி பால் உற்பத்தி. | 8.74 |
| 2. உள்ளூர் சராசரி விற்பனை. | 3.40 |
| 3. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்திற்கு ஒன்றியங்கட்கு நாள்தோறும் வழங்கும் சராசரி பால் அளவு | 5.34 |



1984 ஏப்ரல் 25]

பால் பண்ணை வளர்ச்சித் துறையால் செயல்படுத்தப்படும் திட்ட வேலைகள்:—

1. பால் சேகரிப்புக் குழு.—

'பால் பெருக்குத் திட்டத்தில் சேராத தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் செயல்படும் மாவட்டங்களைப் போன்று பால் உற்பத்தியினை பெருக்கும் குறிக்கோளின்படி 'பால் சேகரிப்பு குழுக்கள்' செயல்பட்டு வருகின்றன. அக்குழுக்கள் 'ஆனந்த்' முறையில் இதுவரை 632 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களை நிறுவியுள்ளன. அச்சங்கங்கள் நாள் ஒன்றுக்கு சராசரி 33,155 லிட்டர் பாலை உற்பத்தி செய்கின்றன. 1983–84 ம் ஆண்டில் மேலும் மூன்று பால் சேகரிப்பு குழுக்களை அமைக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

1984–85ம் ஆண்டு, மேலும் ஒரு 'பால் சேகரிப்பு குழு' நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. நடமாடும் கால்நடை மருந்தகங்கள்.—

பால் பெருக்கு திட்டத்தில் சேராத மாவட்டங்களில் ஐந்தாண்டு திட்டத்தின்படி ஐந்து 'நடமாடும்' கால்நடை மருந்தகங்களும், இத்திட்டத்தில் சேராத நான்கு மருந்தகங்களும் தற்பொழுது செயல்பட்டு வருகின்றன.

1983–84 ஆம் ஆண்டில் மேலும் ஐந்து நடமாடும் மருந்தகங்கள் அமைக்க அரசு அனுமதி அளித்துள்ளது.

3. பால் பண்ணை நிலையங்கள் நிறுவுதல்.—

புதுக்கோட்டை, இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் உற்பத்தி செய்யப்படும் பாலை பதப்படுத்தும் வசதிகள் இல்லாமையைக் கருத்தில் கொண்டு, அத்தகைய வசதி தேவையென அரசு உணர்ந்தது. அதன்படி திருநெல்வேலியில் நாள் ஒன்றுக்கு 50,000 லிட்டர் பாலை பதப்படுத்தும் திறனுடைய நிலையம் ஒன்றை நிறுவ அரசு ஆணை பிறப்பித்துள்ளது. கட்டிடம் கட்டுதல் மற்றும் இயந்திரங்களை நிறுவுதல் போன்ற பணிகள் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்திடம் (Turn Key முறையில்) ஒப்படைக்கப்பட்டுள்ளன. வேலைப்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

4. குளிரூட்டும் நிலையங்கள் நிறுவுதல்.—

அ. புதுக்கோட்டை குளிரூட்டும் நிலையம்.—

புதுக்கோட்டையில் ரூ. 18.25 இலட்சம் திட்ட செலவில் நாள் ஒன்றுக்கு 10,000 லிட்டர் பாலை கையாளும் திறனுடைய ஒரு குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு அனுமதி அளித்துள்ளது. கட்டிடம் கட்டுதல் மற்றும் இயந்திரங்களை நிறுவுதல் ஆகிய பணிகள் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்திடம் (Turn Key) முறையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. வேலைப்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

[1984 ஏப்ரல் 25

ஆ. பட்டுக்கோட்டை குளிரூட்டும் நிலையம்.—

1983-84-ம் ஆண்டு பட்டுக்கோட்டையில், நாள் ஒன்றுக்கு 20,000 லிட்டர் பால் கையாளும் திறனுடைய ஓர் குளிரூட்டும் நிலையம் ரூ. 19 இலட்சம் திட்ட செலவில் நிறுவ அரசு ஆணை பிறப்பித்துள்ளது. நடப்பு ஆண்டில் (அதாவது 1983-84) இத் திட்டத்தை அமுலாக்க அரசு ரூ. 6 இலட்சம் வழங்கியிருக்கிறது. கட்டிடம் கட்டுதல் மற்றும் இயந்திரங்களை நிறுவுதல் போன்ற பணிகள் 'Turn-Key' முறையில தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. பணிகள் நடைபெற்று வருகின்றன.

இ. நாள் ஒன்றுக்கு 10,000 லிட்டர் பால் கையாளக் கூடிய ஓர் குளிரூட்டும் நிலையம் தென் ஆற்காடு மாவட்டம் சேத்தியா தோப்பு என்னுமிடத்தில் சமீபத்தில் துவக்கப் பட்டுள்ளது. இதற்கான தொகை மாவட்ட ஊரக வளர்ச்சிக் கழகம் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் ஆகியவைகளிடமிருந்து கிடைக்கப்பெற்றுள்ளது.

ஈ. 1984-85-ம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள வள்ளியூரில் நாளொன்றுக்கு 20,000 லிட்டர் கையாளுகின்ற குளிரூட்டும் நிலையம் ஒன்றை மொத்தம் ரூ. 28 இலட்சம் செலவில் 1984-85-ல் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்காக 1984-85-ம் ஆண்டு ரூ. 8 இலட்சம் நிதி ஒதுக்கப் பட்டுள்ளது.

5. கூட்டுறவு சங்கங்களுக்கு மானியம்.—

(அ) 1983-84-ம் ஆண்டில் 250 சங்கங்களைப் புதுப்பித்து பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கங்களாக மாற்றி அமைக்கவும், மற்றும் 100 பால் வழங்கும் சங்கங்களை பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கங்களாக மாற்றி அமைக்கவும், அச்சங்கங்கள் பால் பரிசோதிக்கும் கருவிகள், இரசாயனப் பொருட்கள் மற்றும் பதிவேடுகள் முதலியன வாங்கவும் ஒவ்வொரு சங்கத்திற்கும் ரூ. 1,500 வீதம் ரூ. 5.25 இலட்சம் மானியமாக அரசு ஒதுக்கியுள்ளது. இது தவிர 1983-84-ம் ஆண்டு பால் கூட்டுறவு சங்கங்களுக்கு நிர்வாகம் மற்றும் தொழில் நுட்பப் பணியாளர்களுக்காக ரூ. 65,000 மானியமாக ஒதுக்கப்பட்டுள்ளது, 1984-85 ஆம் ஆண்டில் 50 வழக்கமான பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களை பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களாக மாற்றி அமைக்கவும், செயல்படாத 150 சங்கங்களை பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களாக மாற்றி அமைக்கவும் அரசு உத்தேசித் துள்ளது. அதற்காக 1984-85-ல் அரசு ரூ. 4.27 இலட்சம் நிதி ஒதுக்கியிருக்கிறது.

(ஆ) மாட்டுத் தீவன வளர்ப்புத் திட்டத்தின் கீழ் தேர்ந் தெடுக்கப்பட்ட பால் கூட்டுறவு சங்கங்களுக்கு தீவன வித்துக்கள் வாங்க சங்கம் ஒன்றுக்கு ரூ. 500 வீதம் மானியம் வழங்கப் படுகிறது. புல் வளர்க்க சங்க அங்கத்தினருக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 200 வீதம் மானியம் வழங்கப்படுகிறது.



1984 ஏப்ரல் 25]

1983-84 ஆம் ஆண்டில் தீவனப் பண்ணை பராமரிப்புக்கு ரூ. 37,000 மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இதனால் 24 சங்கங்களில் 365 அங்கத்தினர்கள் பயனடைந்துள்ளனர்.

1984-85 ஆம் ஆண்டில் தீவனப் பண்ணை பராமரிப்புக்கு மானியமாக வழங்க ரூ. 35,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

6. கூட்டுறவு சங்கங்களுக்கு கடன் உதவி.—

1983-84 ஆம் ஆண்டில் பால் கூட்டுறவு சங்கங்களுக்கு பால் குவளைகள், பால் கருவிகள், குளிர் பதனங்கள், போக்குவரத்து வாகனங்கள் வாங்கவும் ஆய்வுக்கூடம் மற்றும் கிடங்குகள் கட்டவும் ரூ. 5 இலட்சம் அளவில் கடனுதவி அளிக்கப் பட்டுள்ளது.

1984-85 ஆம் ஆண்டிற்கு மேற்படி கடனுதவி அளிக்க ரூ. 5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் 1983-84 ஆம் ஆண்டில் கொடைக்கானல் கூட்டுறவு பால் வழங்கும் ஒன்றியத்திற்கு பாலாடைக் கட்டியை பதனிடவும் மற்றும் பதனிட்ட பாலாடைக் கட்டியை விநியோகம் செய்வதற்கு தகுந்த எந்திர தளவாடங்கள் வாங்கவும், அரசு ரூ. 1.50 இலட்சம் கடன் உதவி அளித்துள்ளது.

சென்னை நகரிலும் மற்றும் மாவட்டங்களிலும் கூட்டுறவு நுகர்வோர் சங்கங்கள் அமைத்தல்.—

சென்னை நகரிலும் மற்றும் மாவட்டங்களிலும் பால் நுகர் வோர்கட்கு பால் விநியோகம் செய்ய பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் நிறுவப்பட்டு வருகின்றன.

தற்பொழுது சென்னை நகரில் 31 பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்களும் மற்றும் புறநகர் பகுதிகளில் 7 நுகர் வோர் சங்கங்களும் செயல்பட்டு வருகின்றன, அத்தகைய சங்கங்கட்கு ஆரம்ப நிலையில் "பங்கு மூலதன உதவியாக" நிதி உதவி அளிக்கப்பட்டு வருகிறது.

தவிர ஆரம்ப கட்டத்தில் அச்சங்கங்கள் பணி புரிய துவங்கிய நாளிலிருந்து ஓராண்டு காலத்திற்கு சங்கம் ஒன்றிற்கு மாதம் ரூ. 500 வீதம் நிர்வாகப் பணியாளர்கள் அமர்த்த உதவியாக அளிக்கப்படுகிறது.

பால் பண்ணை அபிவிருத்தி துறையினால் செயல்படுத்தப் படும் சிறப்புத் திட்டங்கள்.—

(1) மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்.—

மலைப்பகுதிகளில் பால்பண்ணை தொழில் வளம் பெருக அரசு கடன் உதவி மற்றும் பங்கு மூலதன உதவி முதலியன வழங்கி வருகிறது. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நாள் ஒன்றுக்கு 50,000 லிட்டர் பால் கொள்ளளவு கொண்ட ஒரு பாலாடைக்கட்டி தொழிற்சாலை (Chesse Cum-Dairy Complex) உதகமண்டலத்தில் ரூ. 300 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்பட்டு வருகிறது.

1983–84 ஆம் ஆண்டு இத்திட்டத்தின்படி கீழ்க்கண்ட வற்றிற்கு ரூ. 17.90 இலட்சம் நீலகிரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்ய அரசு ஆணை பிறப்பித்துள்ளது. கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

| | இலட்சம் |
|---|---|
| (1) பால்பண்ணை இணைப்பு கட்டிடம்கட்ட | ரூ. 11.00 ,, |
| (2) புல் அபிவிருத்திக்கு | ரூ. 0.90 ,, |
| (3) பால்பண்ணை பெருக்கம் மற்றும் பயிற்சி நிலையம் | ரூ. 3.00 ,, |
| (4) கட்டிடம் கட்ட ஆரம்ப பால் கூட்டுறவு சங்கங்கட்கு நிதி உதவி | ரூ. 3.00 ,, |
| மொத்தம் | ரூ. 17.90 ,, |

2. வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம்—

(அ) தருமபுரி மாவட்டத்தில் உள்ள கிருஷ்ணகிரியில் பால் உற்பத்தி சமப்படுத்தும் பால் பண்ணை ஒன்று நிறுவப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்தப் பண்ணை அரசால் ''வறட்சிக்கு இலக்காகும் பகுதி திட்டத்தின்'' கீழ் ஒப்பளிக்கப் பட்டது.

(ஆ) இத்திட்டத்தின்கீழ் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள காரைக்குடியில் ரூ. 150 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் பால் பண்ணை ஒன்று நிறுவப்பட்டு வருகிறது. கட்டிடம் கட்டும் பணி இயந்திரங்களை நிறுவும் பணிகள் அனைத்தும் தேசிய பால் பண்ணை வளர்ச்சி வாரியத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளன. வேலைபாடுகள் நடைபெற்று வருகின்றன.

(இ) மேலும் இத்திட்டத்தின் கீழ் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள விருதுநகரில் திரவ நைட்ரஜன் ஆலை ஒன்று நிறுவ அரசு ரூ. 48.40 இலட்சம் ஒப்பளித்துள்ளது. இதன் கட்டுமானப் பணிகளும் தேசிய பால்பண்ணை வளர்ச்சி வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

3. தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்தின் மூலம் மத்திய அரசின் உதவி—

1983–84 ஆம் ஆண்டில் மத்திய அரசின் உதவியின்கீழ் ஆதி திராவிடர்களுக்கு கறவை மாடுகள் வாங்கி அதனால் அவர்களை மேம்பாடடையச் செய்ய ரூ. 50 இலட்சம் 50 சதவீதம் மானியமாக வழங்கப்பட்டிருக்கிறது. 4000 கறவை மாடுகள் வாங்க இம்மானியம் வழங்கப்பட்டிருக்கிறது. இதில் 2000 பெண் அங்கத்தினர்கள் பயனடைகின்றனர்.

4. ஆதிதிராவிடர் நலத் திட்டம்—

ஆதிதிராவிடர் நலத் திட்டத்தின்கீழ் பால் கூட்டுறவுகளில் ஆதி திராவிட அங்கத்தினர்கள் கறவை மாடுகள் வாங்க ஆதி



திராவிடர் நல வரவு-செலவு திட்டத்தின்கீழ் மானியம் வழங்கப் படுகிறது. 1983–84 ஆம் ஆண்டின் பால் கூட்டுறவுகளில் இருக்கும் 3,600 ஆதி திராவிடர் அங்கத்தினர்களுக்கு மானியமாக வழங்க ''ஆதிதிராவிடர் நல வரவு-செலவு திட்டத்தில்'' ரூ. 30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. மேலும் கிறிஸ்துவர்களாக மாறிய ஆதி திராவிட அங்கத்தினர்கள் 120 பேருக்கு ரூ. 1 இலட்சம் மானிய நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

1984–85 ஆம் ஆண்டிற்கு ஆதிதிராவிடர் மற்றும் மலை ஜாதியினர் நலத்துறையின் வரவு-செலவுத் திட்டத்தில் பால் கூட்டுறவுகளில் உள்ள 3600 ஆதி திராவிடர் அங்கத்தினர்களுக்கு மானியமாக வழங்க ரூ. 30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. அது போல கிறிஸ்துவர்களாக மாறிய ஆதி திராவிட அங்கத்தினர் 120 பேருக்கு கறவை மாடுகள் வாங்கி பயனடைய ரூ. 1 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5. பால் பண்ணை வளர்ச்சித் துறையில் பணியாளர்களுக்கு கல்வி மற்றும் பயிற்சி அளிக்கும் திட்டம்—

பால் பண்ணை வளர்ச்சித் துறையில் பணி ஆற்றும் கூட்டுறவுத் துறையைச் சார்ந்த பணியாளர்களுக்கு ஈரோட்டி லிருக்கும் தேசிய பால் பண்ணை அபிவிருத்தி வாரியத்தின் மண்டல செயல்முறை மற்றும் பயிற்சி நிலையத்தில் 3 வாரங் கட்கு 'ஆனந்த்' முறையில் பணிபுரியும் பால் கூட்டுறவுகளின் நடப்பு பற்றி பயிற்சி அளிக்கப்பட்டது. 1983-84 ஆம் ஆண்டு இப்பயிற்சித் திட்டத்திற்கு அரசு ரூ. 1 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்தது.

மேலும் 1984-85 ஆம் ஆண்டில் பால் பண்ணை வளர்ச்சித் துறையின் நிர்வாக பணியாளர்கட்கு (கண்காணிப்பாளர் மற்றும் உதவியாளர்) பால் பண்ணை கூட்டுறவுகளின் நிர்வாகம் பற்றி பயிற்சி அளிக்க ரூ. 1 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

1984–85 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்.

1. திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள வள்ளியூரில், நாளொன்றுக்கு 20,000 லிட்டர் பாலை கையாளுகின்ற குளிரூட்டும் நிலையம் ஒன்றினை ரூபாய் 28 இலட்சம் செலவில் நிறுவுதல்; அதற்காக 1984–85 ஆம் ஆண்டு ரூ. 8 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2. ரூபாய் 4.27 இலட்சம் செலவில் 50 வழக்கமான பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களை மாற்றி அமைத்தல் மற்றும் 150 செயல்படாத சங்கங்களை புதுப்பித்து மாற்றி அமைத்தல்.

3. 'பால் பெருக்குத் திட்டம்' செயலபடுத்தப்படாத மாவட்டங்களில் கூடுதலாக பால் சேகரிப்புக் குழு ஒன்று ரூ. 3.26 இலட்சம் செலவில் அமைத்தல்.

1984-85 ஆம் ஆண்டில் ரூபாய் 1 இலட்சம் செலவில் பால் பண்ணை வளர்ச்சித் துறையின் நிர்வாகப் பணியாளர்கட்கு பால்பண்ணை கூட்டுறவுகளின் நிர்வாகம் பற்றி தக்க பயிற்சி அளித்தல்.

5. மாதவரம் பால் பண்ணையில் உள்ள சாலையை மாற்றி அமைத்து புதுப்பிக்க 1983-84 ஆம் ஆண்டில் ரூ. 8 இலட்சம் நிதியும் 1984-85 ஆம் ஆண்டில் மேலும் ரூ. 5 இலட்சம் நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளன.

6. நிர்வாகத்தை திறன்படுத்தும் பொருட்டு ஆறு துணைப் பதிவாளர்களின் (பால்பதம்) அலுவலகங்களில் கூடுதலாக அலுவலக மேலாளர்களை ரூ. 0.96 இலட்சம் செலவில் அமர்த்தல்.





கோரிக்கை எண் 10

திட்ட ஒதுக்கீடு:

1982-83 ஆம் ஆண்டின் செலவுக் கணக்குகள், 1983-84 ஆம் ஆண்டின் திட்ட மதிப்பீடு, திருத்தப்பட்ட மதிப்பீடு மற்றும் 1984-85 ஆம் ஆண்டிற்கான திட்ட மதிப்பீடு பின்வருமாறு:—

| இனம். | 1982-83 ஆம் ஆண்டிற்கான கணக்குகள். | 1983-84 ஆம் ஆண்டின் வரவு-செலவு திட்ட மதிப்பீடு. | 1983-84 ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு. | 1984-85 ஆம் ஆண்டின் வரவு. செலவு திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் ஆயிரத்தில்). | | |
| 1. குளிரூட்டும் நிலையம் நிறுவுதல். | 2 | 78 | 74 | .. |
| 2. பால் கூட்டுறவுகளுக்கு மானியம் வழங்குதல்— | | | | |
| (அ) நிர்வாகம் மற்றும் தொழில் நுட்ப பணியாளர்கள் | 416 | 5,90 | 8,70 | 5,00 |
| (ஆ) தீவனப்பண்ணை பராமரிப்பு | 18 | 10 | | |
| 3. பால் சேகரிப்புக் குழுக்கள் அமைத்தல். | 7,10 | 23,37 | 12,84 | 19,66 |

| இனம். | 1982–83 ஆம் ஆண்டிற்கான கணக்குகள். | 1983-84 ஆம் ஆண்டின் வரவு-செலவு திட்ட மதிப்பீடு. | 1983-84 ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு. | 1984-85 ஆம் ஆண்டின் வரவு-செலவு திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | (ரூபாய் ஆயிரத்தில்) | |
| 4. நடமாடும் கால்நடை மருத்துவ நிலையங்கள் அமைத்தல் | 5,40 | 5,85 | 4,23 | 7,43 |
| 5, துறையின் நிர்வாகத் திறனை பலப்படுத்தும் திட்டம் | 1,50 | 5,09 | 4,86 | 5,74 |
| 5. ஆராய்வுப்பயணம் மற்றும் பயிற்சித் திட்டம் | .. | .. | .. | 1,00 |
| 7. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பால் பண்ணை விரிவாக்கம் மற்றும் பயிற்சித் திட்டம் | .. | .. | 1,50 | .. |
| 6. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கட்டிடங்கள் கட்ட பால் வழங்கு தொடக்க கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி உதவி | .. | .. | 3,00 | 7,50 |
| 9. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கால்நடைதீவன மேம்பாட்டுக்கு நிதி உதவி | .. | .. | 45 | 75 |
| மொத்தம் .. | 18.36 | 40.09 | 36,32 | 47,08 |



திட்ட ஒதுக்கீடு—கோரிக்கை எண் 57—பல்வகை மூலதனச் செலவு.

| இனம். | 1982–83 ஆம் ஆண்டின் கணக்குகள். | 1983-84 ஆம் ஆண்டின் வரவு–செலவு திட்ட மதிப்பீடு. | 1983-84 ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு. | 1984-85-ஆம் ஆண்டின் வரவு–செலவு திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | (ரூபாய் ஆயிரத்தில்) | |
| 1 பால் கூட்டுறவு சங்கங்களின் பங்கு மூலதனத்திற்கு நிதி உதவி முதலீடு | 38 | .. | 72 | .. |
| 2 மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு நிதி உதவி முதலீடு—நீலகிரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் | 27,50 | 5.00 | 5,50 | 10.00 |
| 3 பால்பண்ணை மற்றும் குளிரூட்டும் நிலையங்கள் அமைத்தல் 4 பட்டுக்கோட்டையில் குளிரூட்டும் நிலையம் அமைத்தல். | 33,16 | 9,00 | 67,76 | 8,00 |
| 5 மாதவரம் பால்பண்ணையில் உள்ள அனுகுசாலையை மாற்றி வடிவமைக்க. | .. | 8,00 | 8.00 | 5.00 |
| 6 தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்திற்கு நிதி உதவி முதலீடு. (அலுவலக கட்டிடம் கட்ட). | 7.00 | .. | .. | .. |
| மொத்தம் .. | 68.04 | 22,00 | 81,98 | 23,00 |

திட்ட ஒதுக்கீடு— கோரிக்கை எண் 58—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும்,

| இனம். | 1982-83 ஆம் ஆண்டிற்கான கணக்குகள். | 1983-84 ஆம் ஆண்டின் வரவு-செலவு திட்ட மதிப்பீடு, | 1983-84 ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு. | 1984-85ஆம் ஆண்டின் வரவு-செலவு திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் ஆயிரத்தில்.) | | |
| 1 பால் கூட்டுறவு சங்கங்களுக்கு பால் குவளைகள், சோதனைக் கருவிகள், குளிரூட்டும் சாதனங்கள், மற்றும் வாகனங்கள் வாங்குதல் ஆய்வுக்கூடம், மற்றும் கிடங்கு முதலியன கட்டுதல் போன்றவற்றிற்கு கடனுதவி. | 5,02 | 5,00 | 5,00 | 5,00 |
| 2 மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கடன் அளித்தல்—நீலகிரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம். | 27,50 | 7,50 | 7,45 | .. |
| 3 கோடைக்கானல் கூட்டுறவு பால் வழங்கும் ஒன்றியத்திற்கு கருவிகள் வாங்க நிதி ஒதுக்கீடு. | .. | 1,50 | 1,50 | .. |
| மொத்தம் .. | 32,52 | 14,00 | 13,95 | 5,00 |



**தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்:**

தமிழ்நாட்டில் பால்வளத்தை வருங்காலத்தில் மேலும் மேம்பாடு அடையச் செய்ய மூன்று அடுக்கு இணைப்பு அமைப்பாக கிராமப்புரத்தில் கூட்டுறவு உற்பத்தியாளர்கள் சங்கங்களாகவும், மாவட்ட அளவில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களாகவும், மாநில அளவில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையமாகவும் அமைய வேண்டும் என்ற தமிழக அரசின் கொள்கை அடிப்படையின் முடிவிற்கேற்ப தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் பணிகள் அனைத்தும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தால் மேற்கொள்ளப்பட்டு 1-2-81 முதல் இயங்கி வருகிறது.

பால் பெருக்குத் திட்டம் அமுலில் உள்ள எட்டு மாவட்டங்களில் இதுவரைக்கும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் அனைத்தும் அந்தந்த மாவட்டங்களில் உள்ள மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களுக்கு (முறையே 1981 ஆம் ஆண்டில் சேலம், பெரியார், கோயம்புத்தூர், நீலகிரி, 1982 ஆம் ஆண்டில் தருமபுரி, 1983 ஆம் ஆண்டில் சென்னை-செங்கற்பட்டு, தென்னாற்காடு மற்றும் மதுரை) மாற்றப்பட்டுள்ளன. மீதமுள்ள வட ஆற்காடு மாவட்டத்திற்கான மேற்படி பணிகளும் நாளடைவில் மாற்றப்படும்.

இணையத்தால் பால் கொள்முதல் செய்யப்பட்ட அளவு, பயனடைந்த விவசாய உறுப்பினர்களின் எண்ணிக்கை மற்றும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட தொகை ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| விவரங்கள். | 1982 | | 1983 | 1984 |
|---|---|---|---|---|
| | சென்னை பால் பண்ணைகள். | மதுரை பால் பண்ணை. | சென்னை பால் பண்ணைகள். | சென்னை பால் பண்ணைகள் (மதிப்பீடு) |
| பால் உற்பத்தி (இலட்சம் லிட்டரில்). | 7,39.64 | 4,00.56 | 9,00.00 | 100,000 |
| சராசரி தினசரி பால் உற்பத்தி (இலட்சம் லிட்டரில்). | 2.02 | 1.10 | 2.47 | 2.73 |
| பயனடைந்த விவசாய உறுப்பினர்களின் எண்ணிக்கை. | 3,87,160 | | 5,64,500 | 5,70,000 |

| விவரங்கள். | 1982 சென்னை பால் பண்ணைகள். | 1982 மதுரை பால் பண்ணை. | 1983 சென்னை பால் பண்ணைகள். | 1984 சென்னை பால் பண்ணைகள் (மதிப்பீடு). |
|---|---|---|---|---|
| விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட தொகை (இலட்சம் ரூபாயில்). | 18,66.09 | 951.74 | 2331.95 | 27,20.00 |

மதுரை மாவட்டத்தில் இணையத்தால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் அனைத்தும் 1-1-1983 முதல் அந்த மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்துடன் இணைக்கப்பட்ட மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் செய்யப்பட்ட பால் கொள்முதல் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் பெயர். (1) | 1982 (2) | 1983 (3) | 1984 (மதிப்பீடு). (4) |
|---|---|---|---|---|
| | | (இலட்சம் லிட்டரில்) | | |
| 1 | சென்னை–செங்கல்பட்டு | 84.28 | 103.44 | 127,62 |
| 2 | தென் ஆற்காடு | 83.98 | 117.50 | 160.62 |
| 3 | வட ஆற்காடு | 2,22.02 | 323.25 | 4,01.85 |
| 4 | தருமபுரி | 1,13.26 | 158.30 | 2,04.26 |
| 5 | சேலம் | 2,92.25 | 809.58 | 3,75.73 |
| 6 | பெரியார் | 1,77.25 | 269.45 | 3,40.41 |
| 7 | கோயம்புத்தூர் | 1,38.87 | 156.73 | 1,90.17 |
| 8 | நீலகிரி | 72.96 | 76.38 | 96.71 |
| 9 | மதுரை | 1,73.24 | 182.65 | 2,38.62 |
| | மொத்தம்.. | 13,58.11 | 16,97.28 | 21,36.29 |
| | சராசரி தினசரி கொள்முதல். | 3.72 | 4.55 | 5.84 |

4.5 விழுக்காடு கொழுப்புச் சத்தும், 8.5 விழுக்காடு இதர திண்மைச் சத்தும் கூடிய தரப்படுத்தப்பட்ட பால், மதுரை மற்றும் சென்னை பால் பண்ணைகளில் விற்பனை செய்யப்படுகிறது.

மாநகராட்சி போன்ற உள்ளாட்சி நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு வழங்கப்படுகிறது. விற்பனை செய்யப்பட்ட கால்நடை தீவன அளவின் விவரங்கள் பின்வருமாறு:—

| | 1982 | 1983 | 1984 |
|---|---|---|---|
| | | | (மதிப்பீடு) |
| கால்நடை தீவனம் (மெட்ரிக் டன்னில்) | 18,071 | 20,578 | 24,000 |

ரூபாய் பத்து இலட்சம் செலவில் குளிகை வடிவில் தீவனம் தயாரிக்கும் ஆலை (Pelletiser Plant) ஒன்று மாதவரத்தில் நிறுவப்பட்டுள்ளது.

ஈரோடில் ஒரு கால்நடைத் தீவன ஆலை பெரியார் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின் கீழ் இயங்கி வருகிறது. இந்த ஆலையில் தயாராகும் தீவனம் சேலம், பெரியார், கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களில் வழங்கப்படுகிறது.

பால்பெருக்குத் திட்டம்.

(அ) பால் பெருக்குத் திட்டம் I, 1981-ம் ஆண்டு மார்ச் 31ம் தேதியோடு முடிவு பெற்றது. இத்திட்டம் சுமார் ரூ. 8.48 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டிருக்கிறது.

1972 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் ஆரம்பித்த பால் பெருக்குத் திட்டம் Iன் கீழ், அம்பத்தூரில் நாளொன்றுக்கு 2 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட ஒரு பால்பண்ணை நிறுவப்பட்டுள்ளது. ஈரோட்டில் உற்பத் தியை சமப்படுத்தும் பால் பண்ணை (Feeder balancing dairy) ஒன்றும், சங்கராண்டான்பாளையத்திலும் மற்றும் சத்தியமங்கலத் திலும் 2 குளிர்பதன நிலையங்களும், நாளொன்றுக்கும் 10 டன் உற்பத்தி செய்யும் திறனுள்ள ஒரு கால்நடை தீவன ஆலையும் அமைக்கப்பட்டுள்ளன. வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள ஆம்பூரிலும் தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள மற்றும் சின்னசேலத்திலும் குளிர்பதன விழுப்புரம் பட்டுள்ளன. மதுரை பால் பண்ணையில் நிலையங்கள் நிறுவப் டன் உற்பத்தி திறனுள்ள பால் பொடி நாளொன்றுக்கு 10 ஆலை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது நீலகிரி உற்பத்தி செய்யும் உதகமண்டலத்தில் வெளி நாட்டிலிருந்து மாவட்டத்திலுள்ள பட்ட கால்நடைகளைக் கொண்டு ஒரு இறக்குமதி செய்யப் பண்ணை நிறுவப்பட்டுள்ளது. பால் பெருக்குத் நியுக்ளியஸ் ஜெர்ஷி கீழ் சேலத்தில் துவக்கப்பட்ட திட்டம் I-ன் பண்ணை பிறகு பால் பெருக்குத் உற்பத்தி சமப்படுத்தும் பால் மட்டு, 1983 ஆம் ஆண்டு முதல் திட்டம் II-க்கு மாற்றப் செயல்படுகிறது. வடஆற்காடு மாவட்டத்திலுள்ள திருவண்ணாமலையில் ஒரு குளிர்பதன





நிலையம் அமைக்கப்பட்டு செயல்படுகிறது. பால் பெருக்குத் திட்டம் I-ன் தொடர்ச்சியாகபால் பெருக்குத் திட்டம் II, சுமார் 42.87 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1982ம் ஆண்டு ஏப்ரல் முதல் செயல்பட்டு வருகிறது. பால் பெருக்குத் திட்டம் செயல்படும் ஒவ்வொரு மாவட்ட பால் உற்பத்தி யாளர்களை கூட்டுறவு ஒன்றியத்திற்கும் தெளிவான ஒன்றிய செயல்பாட்டுத் திட்டங்கள் இறுதியாக்கப்பட்டுள்ளன. சில புதிய இனங்களை சேர்ப்பதன் பொருட்டும், அதிகமான ஒதுக்கீட்டின் காரணமாகவும், இத்திட்டதின் மொத்த மதிப்பீடு ரூ. 60 கோடியை மிஞ்சும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஒன்பது மாவட்டங்களில் செயல்படும் இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன;

(அ) இத்திட்ட காலத்தின் முடிவில் 4,550 பால் உற்பத்தி யாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் கிராமப்புறங்களில் அமைக்கப் படவேண்டும் என்ற குறிக்கோளின்கீழ் 1983 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிய, 3,407 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன.

(ஆ) 1983 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிய பால் கொள் முதலுக்காக இத்திட்டத்தின் கீழ் 5,66,000 கறவை மாடுகள் கொண்டுவரப்பட்டன. பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் மொத்தம் 13 இலட்சம் கறவை மாடுகள் கொண்டுவரப்பட்டு அதில் 48 விழுக்காடு செயற்கை முறை கருத்தரித்தல் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படும்.

1983 ஆம் ஆண்டில் பால் கொள்முதல் நாளொன்றுக்கு சராசரி 4.65 இலட்சம் லிட்டராகும். இத்திட்டம் முடியும் தருணத்தில் நாளொன்றுக்கு பால் உற்பத்தி 34.8 இலட்சம் லிட்டர் இலக்கை அடையும்போது பால் கொள்முதல் நாள் ஒன்றுக்கு சுமார் 10.90 இலட்சம் லிட்டராக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(இ) தமிழ் நாட்டிலுள்ள எல்லா முக்கிய Class I நகரங் களிலும், இத்திட்டம் செயல்படுகின்ற Class II நகரங்களிலும் பால் விற்பனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஈ) மாநிலத்தில் இத்திட்டம் செயல்படுகின்ற முக்கிய நகர்புற பகுதிகளில் நாளொன்றுக்கு 12.00 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்வதற்காக, தற்போது நாளொன்றுக்கு 8.70 இலட்சம் லிட்டர் பாலை பதப்படுத்தக்கூடிய திறன், இத்திட்டம் முடியும் தருணத்தில் சுமார் 14.40 இலட்சம் லிட்டருக்கு உயர்த்தப்படும்.

(உ) மாநிலத்தில் இத்திட்டம் செயல்படும் 9 மாவட்டங் களை தவிர, (முறையே செங்கல்பட்டு, தென் ஆற்காடு, வட ஆற்காடு, தருமபுரி, சேலம், பெரியார், கோயம்புத்தூர், [illegible]

மற்றும் மதுரை) மேலும் 3 மாவட்டங்கள் (திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், புதுக்கோட்டை) பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் கொண்டு வருவதற்கான பிரேரணை இந்திய பால் பண்ணை வாரியத்திற்கு அனுப்பப்பட்டு இதற்கான இறுதி ஒப்புதல் எதிர் பார்க்கப்படுகிறது.

(ஊ) பால் பெருக்குத் திட்டம் II-ன் கீழ் முடிவான நிதி ஒதுக்கீடு ரூபாய் 4287 இலட்சம் தொகையில் இந்திய பால்பண்ணை வளர்ச்சிக் கழகம் 1983 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை அளித்துள்ள நிதி உதவி ரூ. 671.91 இலட்சமாகும். அதில் 31-12-83 முடிய உபயோகப்படுத்தப்பட்ட தொகை ரூ. 512.47 இலட்சமாகும். 1984 ஆம் ஆண்டில் பெரும் பகுதி தொகையான ரூ. 2500 இலட்சம் இயந்திரங்களுக்காகவும் மற்றும் கட்டுமான பணிகளை முடிப்பதற்காகவும் உபயோகப் படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

(எ) புதிய திட்டங்கள்:

1. ரூ 400 இலட்சம் மதிப்பீட்டில் மூன்றாவது புதிய பால் பண்ணை ஒன்று சென்னையில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. அம்பத்தூர், மதுரை, சேலம் மற்றும் ஈரோடு ஆகிய இடங்களிலுள்ள பால் பண்ணைகள் ரூ. 13 கோடி செலவில் விரிவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளன.

3. ரூ. 25 இலட்சம் மதிப்பீட்டில் ஐஸ்கிரீம் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று புதிதாக மாதவரத்தில் அமைக்கப்படும்.

4. நாளொன்றுக்கு ஒரு இலட்சம் லிட்டர் பாலை உற்பத்தி செய்யும் திறன் கொண்ட பால்பண்ணை ஒன்று கோயம்புத்தூரில் ரூ. 352 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

5. உறை விந்து மூலம் செயற்கை முறையில் இனவிருத்தி செய்ய தேவைப்படும் திரவ நைட்ரஜனை உற்பத்தி செய்வதற்காக, சேலத்தில் மணிக்கு 45 லிட்டர் உற்பத்தி செய்யக்கூடிய ஒரு திரவ நைட்ரஜன் ஆலை நிறுவப்படும்.

6. நாளொன்றுக்கு 100 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யும் திறனுள்ள கால்நடை தீவன உற்பத்தி ஆலை ஒன்று புதிதாக மதுரையில் அமைக்கப்படும்.

7. வட ஆற்காடு மாவட்டத்தில் அனக்காபூரிலும், செங்கற்பட்டு மாவட்டத்தில் திருவள்ளூரிலும் புதிய குளிர்பதன நிலையங்கள் நிறுவப்படும்.

8. தேனி, திண்டுக்கல், சண்முகாபுரம், சுல்தான்பேட்டை, திருவண்ணாமலை, ஆம்பூர், ஆத்தூர், சின்ன சேலம், கூடலூர் கோத்தகிரி மற்றும் விழுப்புரம் ஆகியஇடங்களிலுள்ள குளிரூட்டும் நிலையங்கள் விரிவாக்கப்படுகின்றன.





9. தமிழக அரசு, சூரிய வெப்ப ஒளியினால் நீர் சூடேற்றும் முறையினை பால்பண்ணைகளில் செயல் படுத்துவதற்காக ரூ. 28.60 இலட்சத்தை கீழ்கண்டவாறு அங்கீகரித்துள்ளது:—

(ரூபாய் இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 1. | மதுரை பால் பண்ணை | 3.85 |
| 2. | மாதவரம் பால் பண்ணை | 5.45 |
| 3. | ஈரோடு பால் பண்ணை | 6.82 |
| 4. | விழுப்புரம் பால் குளிரூட்டும் நிலையம் | 3.05 |
| 5. | ஆம்பூர் பால் குளிரூட்டும் நிலையம் | 3.26 |
| 6. | தருமபுரி பால் குளிரூட்டும் நிலையம் | 3.26 |
| 7. | சங்கராண்டான் பாளையம் பால் குளிரூட்டும் நிலையம் | 2.91 |
| | | 28.60 |

இத்திட்டத்திற்கு ஆகும் மொத்த செலவில் தமிழகஅரசு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்திற்கும் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களுக்கும் 80 விழுக்காடு மான்யமாக அளித்துள்ளது. மீதமுள்ள 20 விழுக்காடு மற்றும் கட்டுமான பணிகளுக்கு ஆகும் செலவை இவ்விணையமும் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களும் ஏற்றுக் கொள்ளும். தமிழக அரசு மேற்கண்ட திட்டத்திற்காக இதுவரை ரூ. 21 இலட்சம் அனுமதித்துள்ளது. இத்திட்டத்தின் ஆக்கப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

பால் கூட்டுறவுகளுக்கான தணிக்கை வாரியம்—

பால்பெருக்குத் திட்டம் II-ன் ஒப்பந்தத்திற்கேற்றவகையில், மாநிலத்திலுள்ள பல்வகை பால் கூட்டுறவுகளில் தொடர்ச்சியான மற்றும் உடன் நிகழ் தணிக்கைநடத்த,தணிக்கை வாரியமொன்று ஏற்படுத்த அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இந்தியத் தணிக்கைக் கணக்கு பணியில் முதுநிலை அலுவலர் ஒருவரை உறுப்பினர் செயலாளராகக் கொண்டு இத்தணிக்கை வாரியம் துவக்கப்பட்டு செயலாற்றி வருகிறது. மேற்படி வாரியத்தின் மூன்று மண்டல அலுவலகங்கள் சென்னை, ஈரோடு மற்றும் மதுரை ஆகிய இடங்களில் உள்ளன. ஆரம்ப பால் கூட்டுறவுகள் மற்றும் ஒன்றியங்களின் தணிக்கை இந்த வாரியத்தால் 1-10-83 முதல் மேற்கொள்ளப்பட்டு 1982-83 ஆம் ஆண்டிற்கான தணிக்கை நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது.

பாலின் விலை:—

விவசாயிகளுக்கு இலாபகரமான ஒரு விலையினை உறுதிப் படுத்த தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையம் 1983-ல் எருமை பாலின் கொள்முதல் விலையை ஒரு

கிலோகிராம் கொழுப்புச் சத்துக்கு ரூ. 35லிருந்து ரூ. 38 ஆக உயர்த்தியது; அதேபோன்று பசும்பாலின் கொள்முதல் விலையும் அதிகரிக்கப்பட்டது. மாநிலம் கடுமையான வறட்சியினால் பாதிக்கப்பட்டபோது விவசாயிகளின் இன்னல்களை களையும் பொருட்டு, இணையம் பாலின் கொள்முதல் விலையை ஒரு கிலோ கிராம் கொழுப்புச் சத்துக்கு ரூ. 40 ஆக உயர்த்தியது. மேலும் வறட்சி நிவாரணப் பணியாக இணையம் சலுகை விலையில் சிறப்புக் கால்நடை தீவனத்தை கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ. 1 வீதம் வழங்கவும் ஏற்பாடு செய்தது. எனினும் இதன் தொடர்பாக நுகர்வோரின் பால் விற்பனை விலை உயர்த்தப்படவில்லை.

பால் விற்பனை:—

சென்னை மாநகரில் 1983-ல் நாள் ஒன்றுக்கு சராசரியாக 3.5 இலட்சம் லிட்டர் பால் விநியோகிக்கப்பட்டது. இதனை 1984-ல் நாள் ஒன்றுக்கு 4 இலட்சம் லிட்டர் என்ற அளவிற்கு உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. 490 பால் சாவடிகள், 25 தானியங்கி விற்பனை இயந்திரங்கள் மற்றும் 11 Fibre Glass Reinforced Plastic தொட்டிகள் மூலமாக சென்னை மாநகரின் நுகர்வோர்கள் பால் பெறுகின்றனர். தானியங்கி விற்பனை இயந்திரங்களின் எண்ணிக்கை 3 ஆண்டுகளில் 100 ஆக அதிகரிக்கப்படும். அவற்றுள் 25 அடுத்த ஆண்டில் நிறுவப்படும். நுகர்வோரினை பால் விற்பனையில் ஈடுபடுத்தும் பொருட்டும், பால் விநியோகிக்கும் முறையினை செம்மைபடுத்தும் பொருட்டும் 31 பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அடுத்த ஆண்டில் மேலும் 19 சங்கங்கள் நிறுவப்படுவதுடன் தனியாரின் குளிர் பதன வடிகால்கள் மூலமாகவும் பால் விற்பனை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

முடிவுரை: —

1982-ன் நிலவரத்தை ஒப்பிடும்போது 1983 ஆம் ஆண்டில் இணையத்தின் பண்ணைகளின் பால் கொள்முதல் 22 விழுக்காடும், பால் விற்பனை 15 விழுக்காடும் மற்றும் உபபொருட்களின் விற்பனை 49 விழுக்காடும் உயர்ந்துள்ளது. 1984-ம் ஆண்டில் இணையத்தின் பால் பண்ணைகளில் பால் வரவு 11 விழுக்காடும், பால் விற்பனை 12 விழுக்காடும், மற்றும் உபபொருட்களின் விற்பனை 22 விழுக்காடும் உயருமென்று எதிர் பார்க்கப்படுகிறது. பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் உள்ள 9 மாவட்டங்களிலும் பால் சேகரிப்பு 1984-ம் ஆண்டு 26 விழுக்காடு உயரும்.



## இணைப்பு IV.

(401-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### தொழில் கொள்கையும் திட்டங்களும்.

சிறு தொழில்களையும், ஊரகத் தொழில்களையும் பெருமளவில் ஏற்படுத்தி மேம்படுத்துவதன் மூலம் வேலை வாய்ப்பை அதிக அளவில் உருவாக்குவதே, தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வரும் தொழில் கொள்கையின் அடிப்படை நோக்கமாகும். வேலை வாய்ப்பின்மையின் அளவையும் வறுமை கோட்டிற்கு கீழே வாழும் மக்களின் எண்ணிக்கையையும் குறுகிய காலத்தில் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துவதன் மூலம் குறைப்பது என்பதே தொழில் திட்டங்கள், முதலீடுகள் ஆகியவற்றின் நோக்கமாக இருக்க வேண்டும் என்பதில் அரசு அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டுள்ளது. இன்றியமையாத அளவிற்குத் தேவையுள்ள வையும் தொழில் வளர்ச்சியில் பின் தங்கியுள்ளவையுமான பகுதி களில் குடிசைத் தொழில், கிராமத் தொழில் அல்லது சிறு தொழில் (குறுந்தொழில், வீட்டுத் தொழில் உட்பட) என்றழைக்கப்படும் ஊரகத் தொழில்களை ஏற்படுத்தி, மேம்படுத்தி, வளர்ச்சி யடையச் செய்ய முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. புதிய இருபது அம்சத் திட்டத்தின்கீழ் வரையறுக்கப்பட்ட இலக்கினை அடைய முழு நம்பிக்கையுடன் சிறு தொழில்களை ஏற்படுத்தி வளர்ப்பதற்கு வங்கிகள் மூலம் நிதியுதவி அளிப்பதன் வாயிலாக நகர், கிராமப் பகுதிகளில் சுயவேலை வாய்ப்பினை ஏற்படுத்த அரசு தீவிரமாக முயற்சித்து வருகிறது.

அந்தந்த ஊர்களில் கிடைக்கும் நிதி வாயில்கள், மூலப் பொருட்கள், மனித சக்தி, ஆற்றல் ஆகியவற்றை அடிப்படை யாகக் கொண்டு கிராமப் பகுதிகளைத் தொழில் மயமாக்குதல் என்னும் அரசின் கொள்கைகளும் திட்டங்களும் தொழில் துறையின்கீழ் செயல்படும் பல்வேறு முகவரமைப்புகளால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சிறு, ஊரக தொழில்களை ஏற்படுத்துவதையே முக்கிய பணியாக இந்த முகவரமைப்புகள் கொண்டுள்ளன. இன்றியமையா அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. செயல்படாத தொழிற் பிரிவுகளை செயல்பட வைக்க உதவி அளிக்கப்படுகிறது. நிதியுதவி, நிருவாக உதவி, அங்காடி வசதி ஆகியவையும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. வளர்ச்சி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத்தொழில் துறைக்குத் தேவையான இடு பொருட்களை அளிக்க, தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம், இந்திய அரசின் சிறு தொழில் பணி நிறுவனம், நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் ஆகியவை போன்ற நிறுவனங்கள் பொறுப்பேற்றுள்ளன. இதனால் வேலை வாய்ப் பின்மை குறையும்.

இத்துறையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களில் தொழில் வணிக இயக்ககம், பட்டுப் புழு வளர்ப்பு இயக்ககம், தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம், தமிழ்நாடு கைத்திறப் பொருள் வளர்ச்சி

நிறுவனம் ஆகியவை அடங்கும். அரசின் மேற்கூறிய பல்வேறு திட்டங்கள் பற்றிய விவரங்கள் பின்வரும் அத்தியாயங்களில் விளக்கிக் கூறப்பட்டுள்ளன. அத்திட்டங்களின் முக்கிய கூறுகள் வருமாறு:

தொழில் வணிக இயக்ககம்.—பொதுவாக தொழில் வணிகத்தை மேம்படுத்துதல், குறிப்பாக சிறுதொழில்களை ஏற்படுத்துதல் ஆகியவை குறித்துத் திட்டமிட்டு, திட்டங்களைச் செயற்படுத்தும் பொறுப்பு தொழில் வணிக இயக்ககத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தொழில் வணிக இயக்ககம், சிறு தொழில்கள், தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றைப் பதிவு செய்கிறது. வெளி நாடுகளிலிருந்து எந்திரங்களையும், மூலப் பொருட்களையும் இறக்குமதி செய்வதற்கான இன்றியமை யாச் சான்றிதழ்களை வழங்குகிறது. சிறு தொழில்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்தல், பொருட்களை சோதனை செய்தல், ஆய்வு செய்தல் ஆகியவற்றிற்குரிய வசதி களைச் செய்து கொடுக்கிறது. அடிப்படை வசதிகளுடன் அமைக்கப்பட்ட தொழிற் பிரிவுகளுக்கு தேவையான குறிப்பிட்ட தொழிற்குரிய .தொழிற்பேட்டைகளை அமைப்பதையும் இந்த இயக்ககம் கவனிக்கிறது. மின்னணுவியல் போன்ற கருவி களை தயாரிப்பதற்குரிய தனி வகைத் தொழில்களுக் கான தொழிற்சாலைகளை அமைக்கும் பணியையும் இந்த இயக்ககம் கவனித்து வருகிறது. இந்த இயக்ககத்தில் உள்ள மையப் பிரிவு இம்மாநிலத்தில் உள்ள சிறுதொழில்களில் செய்யப் பட்டுள்ள முதலீடு, எந்த வகையான பொருள்களை உற்பத்தி செய்கின்றன என்பன பற்றிய புள்ளி விவரங்களை மாதிரி அடிப் படையில் தயாரிக்கிறது. இம்மாநிலத்தில் கயிற்றுத் தொழில் வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதை துரிதப்படுத்தும் பணியையும் இந்த இயக்ககம் மேற்கொண்டு வருகிறது. தொழில் வளர்ச்சி முறைபடுத்தல் சட்டத்தின் கீழ் உரிமங்கள் வழங்கப் படுவதற்காக விண்ணப்பங்களை மாநில அரசு மூலம் இந்திய அரசுக்கு அனுப்பி வைக்கவும், இந்த இயக்ககம் பரிந்துரைக்கிறது. ஊரகத் தொழில்களை மேம்படுத்தவும், சிறு தொழில் முனை வர்களுக்கு ஒருங்கிணைந்த உதவியை நல்கவும் தலையாய முகவரமைப்பாகச் செயல் படுமாறு மாவட்டத் தொழில் மையங்களை அமைத்தது, கடந்த 4 ஆண்டு காலங்களில் ஏற்பட்ட முக்கிய வளர்ச்சியாகும். சென்னை மாநகர், நீலகிரி ஆகியவற்றைத் தவிர தமிழ் நாட்டிலுள்ள மாவட்டங்கள் அனைத்திலும் மாவட்டத் தொழில் மையங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. நீலகிரி மாவட்டத்தின் தேவையை கோயம்புத்தூர் மாவட்டத் தொழில் மையமும், சென்னை மாநகரின் தேவையை இந்த இயக்ககமும் கவனித்து வருகின்றன.

பட்டுப்புழு வளர்த்தல்.—பட்டுப் புழு வளர்த்தல் என்பது, அதிக அளவிற்குத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக் கூடியதும், வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டதுமான ஊரகத் தொழிலாகும். இம்மாநிலத்தில் இத் தொழில் நன்முறையில் வளர்ச்சியடைய தொடர்ந்து உதவி புரிவது என்பதே அரசின் கொள்கையாகும். கடந்த நான்கு





ஆண்டுகளில் ஏற்படுத்தப்பட்ட பல்வேறு அடிப்படை வசதிகள், புதிய தொழில் முனைவர்களுக்குத் தாராளமாக நிதியுதவி செய்தது. தொழில் நுட்ப உதவி நல்கியது ஆகியவற்றால் 1979 ஏப்ரல் நிலவரப்படி 21,419 ஏக்கரில் முசுக்கொட்டைச் செடி பயிரிடப்பட்டிருந்ததற்கு மாறாக, 1984 ஜனவரி நிலவரப்படி 61,242 ஏக்கரில் முசுக்கொட்டைச் செடி பயிரிடப்பட்டது. இதனால் கச்சாப்பட்டு உற்பத்தி கணிசமான அளவிற்கு அதிகரித்தது. இத்துறைக்குத் தேவைப்படும் தொழில் நுட்பப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டத்தையும், பட்டுப் புழு வளர்ப்பு இயக்ககம் நடத்தி வருகிறது. கோயம்புத்தூர், வேளாண்மை பல்கலைக் கழகத்திலும், ஓசூர், துறை பயிற்சிப் பள்ளியிலும் பயிற்சியை முடித்த பின்னர் (இப்பயிற்சிக்கு உதவித் தொகை அளிக்கப்பெற்றது.) பயிற்சி பெற்ற பணியாளர்கள் தொழில் நுட்பப் பணியாளர்களாகத் துறையில் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

உடுமலைப் பேட்டையில் ஆண்டுக்கு இரு முறை முட்டையிடும் பட்டுப் புழுக்களை வளர்க்கும் பண்ணையை (Bi—Voltine Seed For ) அமைப்பதன் மூலம் பட்டுப் புழு வளர்ப்பு நடவடிக்கை களை கோயம்புத்தூர் மாவட்டத்தில் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. மானாவாரிப் பகுதிகளுக்கு வழங்குவதற்காக பதியங்களை உற்பத்தி செய்ய முசுக்கொட்டைச் செடி பண்ணைகளை ஏற்படுத்துவது 1984—85 ஆம் ஆண்டில் நிறைவேற்ற கருதப் பட்டுள்ள பிறிதொரு முக்கியமான நடவடிக்கையாகும்.

தமிழ்நாடு கைத்திறப் பொருள் வளர்ச்சி நிறுவனம்.—கைவினைஞர்களுக்குத் தொழில் நுட்ப, வளர்ச்சி உதவியை நல்குவதன்மூலம் சரக்குக் காட்சி விற்பனைக் கூடங்கள் வாயிலாக சரக்குகளை விற்பனை செய்ய உதவி புரிவதன் மூலம் இம்மாநிலத்தில் கைத்திறத் தொழில்களை ஏற்படுத்தி வளர்ச்சி யடையச் செய்ய செயலாக்கம் அளித்தல், புதிய முறையில் வழி காட்டுதல் என்பதே கைத்திறத் தொழில்களுக்காக நிறுவனம் ஒன்றைத் தனியாக அமைப்பதன் முக்கிய நோக்கமாகும். இந் நிறுவனம், திருப்பதியில் சரக்குக் காட்சி விற்பனைக் கிளை ஒன்றை ஏற்படுத்தும், கைவினைஞர்களுக்குப் பயிற்சி அளிப்பது என்பது இந்நிறுவனம் மேற்கொண்ட நடவடிக்கைகளில் முக்கிய மான ஒன்றாகும். வைரத்திற்கு பட்டை தீட்டும் தொழிலாற் பெருமளவில் வேலைவாய்ப்பு கிடைக்கப்பெறும். இத்தொழில் பம்பாய், சூரத் ஆகிய பகுதிகளிலே மிகவும் சிறப்பாக நடை பெற்று வருகிறது. மாணிக்கக் கற்களுக்குப் பட்டை தீட்டுதல், மெருகேற்றுதல் ஆகியவற்றில் பயிற்சி அளிப்பதற்காக, தமிழ்நாடு கைத்திறப் பொருள் வளர்ச்சி நிறுவனத்தோடு கூட்டாகச் சேர்ந்து பயிற்சி நிலையம் ஒன்றைத் திருச்சிராப் பள்ளியில் ஏற்படுத்த சூரத் வைர பட்டைத் தீட்டும் நிலையம் கருதியுள்ளது.

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம்.—தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் செயற்படுத்த தொடங்கிய பல்வேறு திட்டங்களின்படி சிறுதொழில்கள், குறுந்தொழில்கள்

ஆகியவற்றின் வளர்ச்சியைத் தீவிரப்படுத்த இந்நிறுவனம் கருது
கிறது. அத்திட்டங்கள் பற்றியவிவரங்கள் வருமாறு:—

1. வாடகைக் கொட்டகைகளை குத்தகை-விற்பனை
அடிப்படையில் மாற்றுதல்.

2. விற்பனை வரியைச் செலுத்துவதற்காக வட்டியில்லாக்
கடன் வழங்குதல்.

3. செயல்படாமலுள்ள தொழிற் பிரிவுகளுக்கு தொடக்க
அடிப்படை நிதியுதவி வழங்குதல்;

4. மத்திய முதலீட்டு உதவித் தொகை வழங்குதல்.

5. மாநில அரசு உதவித்தொகை வழங்குதல்.

6. இன்றியமையா மூலப்பொருட்களைத் கொள்முதல்
செய்து வழங்குதல்; மற்றும்

7. அங்காடி வசதிகளைச் செய்து கொடுத்தல்.

மேற்சொன்னவற்றோடு முதலமைச்சர் சத்துணவுத்
திட்டத்தின்கீழ் பற்பொடி வழங்குவதையும் தமிழ்நாடு சிறு
தொழில் வளர்ச்சி நிறுவனம் தொடர்ந்து நிறைவேற்றி
வருகிறது. +2 வகுப்புகள் உள்ள பள்ளிகளுக்குத் தேவைப்படும்
கல்விச் சாதனங்கள், கருவிகள் ஆகியவற்றையும், குழந்தை
நல நிலையங்களுக்குத் தேவைப்படும் கல்வி உபகரணங்களையும்,
இந்நிறுவனம் முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தின்கீழ்
தொடர்ந்து வழங்கி வருகிறது. அரசின் பல்வேறு துறைகளுக்குத்
தேவைப்படும் பொருட்களை வழங்குவது மட்டுமல்லாமல் தனிப்
பட்டோருக்கு கொடுக்கும் தேவை குறிப்பின்பேரில் பொருட்
களும் வழங்கப்படுகின்றன. இவ்வாறாக கீழ் நிலையிலிருந்து
வேலைவாய்ப்பை ஏற்படுத்துதல், வறுமையையும் வேலை
வாய்ப்பின்மையையும் போக்குதல் என்ற சமூக-பொருளாதாரக்
கொள்கை ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட தொழிலானது
தமிழ்நாட்டில் ஆக்க பூர்வமாகவும் படிப்படியாகவும் வளர்ச்சி
யடையச் செய்யப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம்.—நிலம், கட்டிடம்,
தளவாடங்கள், எந்திரங்கள் போன்ற நிலையான சொத்துக்களை
வாங்க தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் குறித்த காலக்
கடன் வழங்குவதோடு எந்திரங்கள், தளவாடங்களுக்குரிய
தொகையை காலந்தாழ்த்திச் செலுத்துவதற்குரிய உத்தர
வாதத்தையும், பங்கு மூலதனத் தொகையையும் வழங்குகிறது.
தொழிலால் பின்தங்கிய பகுதிகளிலும், கிராமப் பகுதிகளிலும்
பெருமளவில் வேலை வாய்ப்பை ஏற்படுத்தும் நோக்குடன்,
சிறு குறுந் தொழில்களுக்கு குறிப்பாக மேற்சொன்ன பகுதிகளில்
அமைக்கப்பட்டுள்ள தொழில்களுக்கு தனி முன்னுரிமையை
இந்நிறுவனம் அளித்து வருகிறது. குறைந்த வட்டிக்குக் கடன்
வழங்குதல், பிணையத்தின் பேரில் குறைந்த ஆதாயம், கடன்
தொகையைத் திருப்பச் செலுத்துவதற்குரிய கால அளவை
அதிகமாக்குதல் முதலியவை போன்ற சலுகைகளை தொழிலால்





பின்தங்கிய பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள சிறு தொழில் பிரிவு
களுக்கு உதவி அளிக்கப்படுகிறது. புள்ளி விவரங்களின்படி
பார்த்தால் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், 1949 முதல்
1978 வரையிலான 30 ஆண்டுக்கால அளவில் அனுமதிக்கப்பட்ட
மொத்தத் தொகையான 119 கோடி ரூபாயில், சிறு தொழில்
களுக்கு 34 கோடி ரூபாய் வழங்கியுள்ளது. இது 28.5 சதவிகித
மாகும். 1982-83 ஆம் ஆண்டில் அனுமதி வழங்கப்பட்ட
மொத்தத் தொகையான ரூ. 56 கோடியில், 49 கோடி ரூபாயைத்
தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், சிறுதொழில்களுக்கு
வழங்கியுள்ளது. இது 87 சதவிகிதமாகும். இது ஒரு சிறந்த
சாதனையேயாகும். சிறுதொழில் வளர்ச்சிக்காகத் தமிழ்நாடு
தொழில் முதலீட்டு நிறுவனம் வழங்கிவரும் நிதியுதவி வெகுவாக
அதிகரித்துள்ளது என்பதை மேற்சொன்ன விவரம் தெரிவிக்கிறது.
நடப்பு ஆண்டைப் பொறுத்தமட்டில் (31-12-1983 ஆம் நாள்
வரை) எல்லாவற்றுக்குமாக அனுமதி வழங்கப்பட்ட மொத்த
நிதியுதவித் தொகையான 35 கோடி ரூபாயில் 24.19 கோடி
ரூபாயை சிறு தொழிலுக்காக வழங்கியுள்ளது.

தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி) : கட்டுமானப்
பணிகள், கருவிகள் தோல்பொருட்கள் ஆகியவற்றைத்
தயாரித்தல், பொறியியல் பணிகளைக் கவனித்தல், மேசை
நாற்காலிகள் போன்றவற்றைத் தயாரித்தல், வார்ப்பட
பணிகள், கட்டமைப்புப் பணிகள், சிறப்பு வகைப் பணிகள்,
போன்ற பணிகளைக் கவனித்தல் என்ற வகையில் பல்வேறு
வேலைகளையும் பணிகளையும் டான்சி மேற்கொண்டு வருகிறது.
முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தை விரைந்து செயல் படுத்து
வதற்காக 523 இலட்சம் ரூபாயில் சமையல் பாத்திரங்கள்
முதலியவற்றை மிகக் குறுகிய காலத்தில் தயாரித்து வழங்கியதன்
மூலம் மேற்கூறிய திட்டத்தை நிறைவேற்றுவதில் டான்சி
நிறுவனம் பங்குபெற்றது என்பது பெருமைக்குரிய ஒன்றாகும்.

தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம்: தமிழ்
நாட்டில் தோல் தொழிலை பலவகையிலும் வளர்ச்சியடையச்
செய்வதற்குச் செயலாக்கம் அளிக்க, தமிழ்நாடு தோல்தொழில்
வளர்ச்சி நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. உயர் மதிப்புள்ள
பணிமுடிக்கப்பட்ட தோல் பொருட்கள் ஆகியவற்றை ஏற்றுமதி
செய்வதை ஊக்குவிப்பதே இதன் முக்கிய செயலாகும். காலணி
களையும், தோல் பொருட்களையும் தயாரிக்கும் சிறு
தயாரிப்பாளர்கள், சிறிய அளவில் தோல் பதனிடுவோர்
ஆகியோருக்கு உதவிபுரிய முக்கியத்துவம் அளிக்கப்படும்.

[1984 ஏப்ரல் 25

## தொழில் வணிக இயக்ககம்

மாநில அரசின் கொள்கைத் திட்டங்களைச் செயலாக்கு கின்ற முக்கிய அமைப்புகளில் ஒன்றாகத் திகழும் தொழில் வணிக இயக்ககம், தொழில்களின் முன்னேற்றப் போக்கினை துரிதப் படுத்துவதோடன்றி, அதன் பயனாக விளையும் நற்பயன் களை வளர்ச்சி குன்றிய பகுதிகளிலும் பரவலாகப் பரவச் செய்வதற்காகப் பல்வேறு நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. இந்த வளர்ச்சி ஊக்குவிப்பு இரண்டு வகைகளில் அமைகிறது. ஒரு தொழில் முனைவர் தொழிலைத் துவக்க அவராகவே முனைவது அல்லது துறையினால் நடத்தப்படும் ஊக்குவிப்புக் கருத்தரங்குகளின் விளைவாக தமது தொழில் நிலையத்தை அமைக்க முன் வந்தால், தொழில் நிலையத்தை விரைவில் துவக்குவதற்கு, அவருக்கு தேவையான அனுமதிகள் மற்றும் வங்கிகளிலிருந்து நிதியுதவி பெறுவது உள்ளிட்ட அனைத்து உதவிகளும் அவருக்கு அளிக்கப்படுகிறது. தனியார் ஒருவர், அவரது சொந்த முயற்சியில் உற்பத்தியை துவக்க முடியாத பொழுது கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராகச் சேருவதற்கு அவருக்கு உதவியளித்து, அரசினது செலவில் தொழில் நுட்பம், மேலாண்மை மற்றும் நிதியுதவி பெற்றுத் தருவதன் மூலம் உற்பத்தியைத் துவக்குவதற்கு வழி வகுத்துத் தரப்படுகிறது.

இத்துறை மேற்கொண்ட அபிவிருத்தி நடவடிக்கைகளின் விளைவாக, சிறு மற்றும் தொழிற் கூட்டுறவுத் துறைகளில் போற்றத்தக்க வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. 1978 ஆம் ஆண்டு மார்ச்சு இறுதியில் 18,789 ஆக இருந்த நிரந்தரப் பதிவு பெற்ற சிறு தொழில்களின் எண்ணிக்கையானது, 1983 ஆம் ஆண்டு டிசம்பர் இறுதியில் 48,667 ஆக உயர்ந்துள்ளது. தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை 1983 ஆம் ஆண்டு டிசம்பர் இறுதியில் 913 ஆக உயர்ந்துள்ளது; இது 1978 ஆம் ஆண்டு மார்ச்சு இறுதியில் 297 ஆக இருந்தது. இவற்றின் உற்பத்தியும், விற்பனையும் குறிப்பிடத்தக்க அளவுக்கு அதிகரித்துள்ளன. 1978 ஆம் ஆண்டில், இவற்றின் உற்பத்தி மற்றும் விற்பனை முறையே ரூ. 15.09 கோடி மற்றும் 17.62 கோடி ஆக இருந்தன; இவை 1983–84 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில், முறையே ரூ. 42 கோடி மற்றும் ரூ. 44 கோடி ஆக உயர்ந்துள்ளன. (இது 1983-ம் ஆண்டு செப்டம்பர் வரையாகும்). இந்த ஆண்டு விற்பனை சுமார் ரூ. 94 கோடியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த இயக்கத்தின் சில குறிப்பிட்ட தொழில் துறைகளில் நிகழ்ந்துள்ள முன்னேற்றத்தின் சிறப்பம்சங்கள் கீழே விவரிக்கப் பட்டுள்ளன.

(அ) மாவட்ட தொழில் மையங்கள்.

சமீப ஆண்டுகளில் இருந்ததைப் போலவே, மாநிலத்தில் சிறு மற்றும் ஊரகத் தொழில்களின் மேம்பாட்டிற்கான வளர்ச்சி நடவடிக்கைகளை மாவட்ட தொழில் மையங்கள் மேற்கொண்டு



1984 ஏப்ரல் 25]

வருகின்றன. படித்த வேலையற்ற இளைஞர்களுக்காக இந்தியப் பிரதமர் அவர்களின் சுய வேலை வாய்ப்புத் திட்டம் என்பது, இந்த ஆண்டு மாவட்ட தொழில் மையங்களால் மேற்கொள்ளப் பட்ட முக்கியமான வளர்ச்சிப் பணியாகும். இத் திட்டத்தின் கீழ், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து வேலையற்ற ஒவ்வொருவருக்கும் ரூ. 25,000 வரை நிதியுதவி பெற்றுத் தரப்படுகிறது. இத் திட்டத்தின் முக்கிய அம்சம் யாதெனில் கடன்கள் ஒப்புதலளிப்பதில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் நடை முறைகளைக் குறைக்கும் பொருட்டு முதல் நிலையிலேயே வங்கி யாளர்களை ஈடுபடுத்தியிருப்பதாகும்.

அனைத்து மாவட்டங்களிலும் திறனாய்வாளர் குழுக்கள் அமைக்கப்பட்டு, முறையாக அவற்றின் கூட்டங்கள் நடத்தப் பட்டு வருகின்றன. தேவையான பொழுது, தலைமை வங்கி மற்றும் இதர வங்கிகளின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளு கின்றனர். இத்திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுவதற்காக அலுவலக அமைப்பினைத் தீவிரப்படுத்தும் பொருட்டு, அரசின் தலைமைச் செயலரின் தலைமையின் கீழ் மண்டலக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. நிர்ணயிக்கப்பட்ட திருத்திய இலக்கு 24,000-க்கும் மேற்பட்ட தொழில் முனைவர்கள், மாவட்ட தொழில் மைய திறனாய்வாளர் குழுக்கள் 9—3—1984 வரை மொத்தம் 25,707 விண்ணப்பங்களை வங்கிகளுக்கு பரிந்துரைத் துள்ளன. சுயவேலை வாய்ப்புத் திட்டத்தில் இலக்கினை மிஞ்சுமென மாநில அரசு நம்புகிறது.

மாவட்ட தொழில் மையங்களின் முன்னேற்றத்தைக் காட்டும் இரு அட்டவணைகள் இணைக்கப்பட்டுள்ளன:

(ஆ) தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்.

(i) தீப்பெட்டித் தொழில்:

கையினால் தீப்பெட்டி உற்பத்தி செய்வதில் தமிழ்நாடு பெயர் பெற்றுள்ளது. தீக்குச்சிகள் உற்பத்தி செய்வதிலும், விற்பனை செய்வதிலும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. கிராம மகளிருக்கு பயனுள்ள வேலை யளிக்கும் வகையில், பெரும்பாலும் கிராமப் பகுதிகளில், சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் தொழிற் கூட்டுறவுப் பணிச் சங்கங்கள் மற்றும் தீப்பெட்டி பணியாளர்கள் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தீக்குச்சி குடிமனைத் தொழில் வைத்திருப்பவர்கள் மற்றும் தீக்குச்சிப் பணியாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் நலனுக்காக, அவர்களை உறுப்பினர் களாகச் சேர்த்துக் கொண்ட தீப்பெட்டி தொழிற் கூட்டுறவு பணிச் சங்கங்கள் துவக்கப்பட்டுள்ளன. இந்தப் பணிச் சங்கம், அதில் உறுப்பினராக உள்ள குடிமனைத் தொழில் நிலையங்களுக்கு அவற்றின் நலன் கருதி, மூலப் பொருள்களை வழங்குவதிலும், அவற்றிற்கு இலாபம் ஏற்படத்தக்க வகையில் நிறைவு செய்யப் பட்ட பொருள்களை விற்பனை செய்வதிலும் உதவியளிக்கின்றது.

[1984 ஏப்ரல் 25

உறுப்பினர் தீக்குச்சி நிலையங்களுக்கு, பங்குத் தொகை மதிப்பில் அதிகபட்சம் 75 சதவீதம் வரை மூலப் பொருள்களை கடனாக வழங்குகிறது. உறுப்பினர் நிலையங்களுக்குப் பதிலாக, இந்த தொழிற் கூட்டுறவுப் பணிச் சங்கமே சுங்க வரியைச் செலுத்துகிறது. நிறைவு செய்யப்பட்ட தீப்பெட்டிக் கட்டுகளைப் பணிச் சங்கங்களுக்கு உறுப்பினர் தீக்குச்சி நிலையங்கள் கொடுக்கின்றபொழுது, அக் கட்டுகளை விற்பனை செய்வதற்கு முன்பு, கட்டுகளின் மதிப்பில் 90 சதவீதம் வரை இந்நிலையங்கள் முன்பணமாகப் பெறுகின்றன. உறுப்பினர்— தீக்குச்சித் தொழில் நிலையங்கள் உற்பத்தி செய்கின்ற தீப்பெட்டிகளை விற்பனை செய்யும் பொறுப்பினைப் பணிச் சங்கங்கள் மேற்கொள்ளுகின்றன.

கடந்த மூன்றாண்டுகளில், சிறு தீக்குச்சி உற்பத்தியாளர் தொழிற் கூட்டுறவுப் பணிச் சங்கங்களின் செயலாக்க விவரங்கள் பின்வருமாறு:—

| (1) | 1981-82 (2) | 1982-83 (3) | 1983-84 (30-9-1983 வரை). (4) |
|---|---|---|---|
| 1. சங்கங்களின் எண்ணிக்கை | 103 | 107 | 107 |
| 2. தீப்பெட்டிக் கட்டுகள் கொள்முதல். | | | |
| (அ) கட்டுகளின் எண்ணிக்கை இலட்சத்தில் .. | 28.34 | 29.37 | 15.92 |
| (ஆ) மதிப்பு ரூபாய் கோடியில் .. | 14.42 | 15.27 | 8.87 |
| 3. விற்பனை.— | | | |
| (அ) கட்டுகளின் எண்ணிக்கை இலட்சத்தில் | 30.78 | 30.67 | 14.13 |
| (ஆ) மதிப்பு ரூபாய் கோடியில் | 19.26 | 17.69 | 8.70 |

(ii) தீப்பெட்டி பணியாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்.

30-9-1983-ல் தமிழ்நாட்டில், 446 தீக்குச்சிப் பணியாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. ஒவ்வொன்றும் சுமார் 20 பேருக்கு நேரடியாக வேலை வாய்ப்பை அளிக்கிறது. மகளிர், ஆதிதிராவிடர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர் போன்றவர்களின் தனிப்பட்ட நலனுக்



1984 ஏப்ரல் 25]

காகவே இந்தப் பணியாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. பின்வருகின்ற அட்டவணை, பல வகைப்பட்ட மக்களுக்காகத் துவக்கப்பட்ட சங்கங்களின் எண்ணிக்கையைத் தெரிவிக்கிறது:—

| | |
|---|---|
| மகளிர் .. .. .. .. | 279 |
| ஆதி திராவிடர் .. .. .. | 57 |
| உடல் ஊனமுற்றோர் .. .. | 1 |
| முன்னாள் இராணுவத்தினர் .. .. | 2 |
| மற்றவர்கள் .. .. .. | 107 |
| மொத்தம் .. | 446 |

மாவட்ட வாரியாக உள்ள தீக்குச்சிப்பணியாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் விவரங்கள் பின்வருமாறு:—

| | |
|---|---|
| மதுரை .. .. .. | 63 |
| கன்னியாகுமரி .. .. .. | 25 |
| சேலம் .. .. .. .. | 24 |
| தர்மபுரி .. .. .. | 52 |
| கோயமுத்தூர் .. .. .. | 26 |
| இராமநாதபுரம் .. .. .. | 110 |
| திருநெல்வேலி .. .. .. | 82 |
| புதுக்கோட்டை .. .. .. | 52 |
| செங்கற்பட்டு .. .. .. | 2 |
| வட ஆற்காடு .. .. .. | 9 |
| பெரியார் .. .. .. | 1 |
| மொத்தம் .. | 446 |

30-9-1983 வரை தீப்பெட்டித் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கொடுக்கப்பட்ட நிதியுதவி பின்வருமாறு :—

| | | ரூ. | |
|---|---|---|---|
| 1. | மாநில தொழில் நிதியுதவிச் சட்டத்தின் கீழ் பங்கு மூலதனக் கடன். | 83.40 | இலட்சம். |
| 2. | அரசினது பங்கு மூலதனம் .. | 53.75 | டிை |
| 3. | தமிழ்நாடு மாநில தொழிற் கூட்டுறவு வங்கி நிதி. | 2.85 | கோடி. |
| 4. | கதர் கிராமத் தொழில் வாரிய வட்டி உதவித் தொகை. | 78.90 | இலட்சம். |
| 5. | ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பயிற்சி | 16.82 | இலட்சம். |
| 6. | சின்னஞ்சிறு தொழில் திட்டத்தின் கீழ் தொழிற் கூடங்கள் கட்டுதல் (723 தொழிற் கூடங்கள்). | 188 | டிை |
| 7. | ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அடிப்படை வசதி. | 16.54 | டிை |

III. தீப்பெட்டி இணையம் :

சாத்தூரிலுள்ள தமிழ்நாடு மாநில தீக்குச்சி தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் இணையம், மூலப் பொருள்களை கொள்முதல் செய்து வழங்குவதோடு, தீக்குச்சி தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்வதற்கும் ஏற்பாடு செய்கிறது. சிறு தீக்குச்சி தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவி செய்யும் பொருட்டு, இந்த இணையம் ஒரு விற்பனைப் பிரிவை ஏற்படுத்தியுள்ளது. இந்த இணையம் 4 மரச் சிம்பு தொழிற்சாலைகளை அமைக்க உத்தேசித்துள்ளது. அவற்றுள், திருநெல்வேலி மாவட்டம் வைப்பார் மற்றும் கன்னியாகுமரி மாவட்டம் ஆரல்வாய்மொழி ஆகிய இடங்களிலுள்ள இரு தொழிற்சாலைகள் உற்பத்தி செய்யத் துவங்கியுள்ளன.

iV. குளோரேட் தொழிற்சாலை :

குன்றக்குடி பாரதி தொழிற் கூட்டுறவு குளோரேட் தொழிற் சாலை 20-12-1981 அன்று பதிவு செய்யப்பட்டது. ரூ. 8.77 இலட்சம் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்துடன் கூடிய 44 உறுப்பினர்கள் இச்சங்கத்தில் உள்ளனர். இத் தொழிற்சாலைக் கான செலவு ரூ. 37.00 இலட்சமாகும்.



இரண்டு மின்கலத்தைக் கொண்டு, 7-11-1983 அன்று சோதனை ஓட்டம் நடத்தப்பட்டது. உயர் அழுத்த மின் இணைப்பு 13-1-1984 அன்று பெறப்பட்டது. இந்த நிதியாண்டின் இறுதியில் இத் தொழிற்சாலை முறையான உற்பத்தியை மேற் கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மரச் சிம்புகள் தொழிற்சாலை, திருவில்லிப்புத்தூர் :

சிறப்பு உதவித் திட்டத்தின்கீழ், திருவில்லிப்புத்தூரில் மரச் சிம்புகள் தொழிற்சாலை ஒன்றை அமைக்க 18-10-1982 அன்று பதிவு செய்யப்பட்டது. இத் தொழிற்சாலை ஆதி திராவிடர் களுக்கென்றே துவக்கப்பட்டதாகும்.

அரசு, கீழ்க்கண்ட நிதியுதவிகளை வழங்கியுள்ளது :—

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| நிலம் மற்றும் கட்டிடத்திற்கு உதவித் தொகை .. | 1.500 |
| இயந்திரங்கள் கொள்முதல் செய்வதற்கு உதவித் தொகை .. | 0.650 |
| பணியாளர் உதவி .. .. .. | 0.120 |
| மொத்தம் .. | 2.270 |

தொழிற் கட்டிடம் கட்டுவதற்கு 26-10-1983 அன்று 70.5 சென்ட் நிலத்தை இத் தொழிற்சாலை வாங்கியுள்ளது. கட்டிடம் கட்டி மு டிக்கப்பட்டவுடன், தேவையான இயந்திரங்கள் வாங்கப் பட்டு, உற்பத்தி துவக்கப்படும்.

(ii) தேயிலைத் தொழில் :

நீலகிரி மாவட்டத்தில், 13 தேயிலைத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இவற்றில் 12 சங்கங்கள் ஏற்கனவே உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன. ஒரு தொழிற்சாலை கட்டப்பட்டு வருகிறது.

இந்தத் தேயிலைத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களில், 7,230 சிறு தேயிலைப் பயிரிடுவோர் உறுப்பினர்களாக உள்ளனர். அவர்களுக்கு 16,100 ஏக்கர் தேயிலைத் தோட்டம் சொந்தமாக உள்ளது. இச் சங்கங்கள் 46,000 பேருக்கு மேல் நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலையளிக்கின்றன. தற்பொழுது தமிழ் நாட்டில் உற்பத்தியாகும் மொத்த தேயிலையில் 9 சதவீதம் இந்தக் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளில் உற்பத்தி யாகின்றன.

[1984 ஏப்ரல் 25

1977-78 ஆம் ஆண்டிற்குப் பிறகு தேயிலையின் ஏல விற்பனை விலையில் நிகழ்ந்த விலைக் குறைவு மற்றும் உற்பத்திச் செலவு அதிகரிப்பு ஆகிய சிக்கல்களின் காரணமாக இந்தக் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு இடையூறு ஏற்பட்டது. எனினும், இந்தப் போக்கு இப்பொழுது தடுத்து நிறுத்தப்பட்டது. இந்த ஆண்டு தேயிலையின் ஏல விற்பனை விலையில் குறிப்பிடத் தக்க முன்னேற்றம் கண்டுள்ளது. இதன் விளைவாக, முந்தைய ஆண்டுகளில் ஏற்பட்ட இழப்புகளை இத் தொழிற்சாலைகள் சரிக் கட்ட துவங்கியுள்ளன.

சிறு தேயிலை பயிரிடுவோருக்கு நிவாரணம் அளிக்கும் பொருட்டு, குன்னூர் மற்றும் கோயம்புத்தூரிலுள்ள ஏல விற்பனை மையங்களில் விற்கப்படும் தேயிலைக்கு விற்பனை வரியை 5 சதவீதத்திலிருந்து 2½ சதவீதமாக மாநில அரசு குறைத்துள்ளது. இச் சலுகை, துவக்கத்தில் 9-11-1981 முதல் ஓராண்டுக்கு அளிக்கப்பட்டு வந்தது. தற்போது தொடர்ந்து அளிக்கப்படு கிறது.

கூடலூர் வட்டம் தவிர, மற்றப் பகுதிகளில் உற்பத்தியாகின்ற ''தயாரித்து முடிக்கப்பட்ட தேயிலைக்'' குரிய கலால் வரி ஒரு கிலோ கிராமுக்கு ரூ. 1.10 ஆக இருந்ததை, கிலோ கிராம் ஒன்றுக்கு 60 பைசாவாகவும், கூடலூர் வட்டத்தில் உற்பத்தி யாகின்ற தேயிலைக்கு, கிலோ கிராம் ஒன்றுக்கு 40 பைசா என்றிருந்ததை 36 பைசாவாகவும் இந்திய அரசு குறைத்துள்ளது.

''இன்கோ செர்வ்'' என்றழைக்கப்படுகின்ற நீலகிரி சிறு தேயிலை பயிரிடுவோர் தொழிற் கூட்டுறவுப் பணிச் சங்கம்தான் அனைத்து கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளுக்கும் மையச் சங்கமாக உள்ளது. கூட்டுறவுத் தேயிலைத் தொழிற் சாலைகளுக்குச் சேமிப்பு கிடங்கு வசதி அளிக்கும் பொருட்டு, குன்னூரில் ஒன்றும், கொச்சியில் ஒன்றும் ஆக இரண்டு சேமிப்பு கிடங்குகளை இச் சங்கம் கட்டியுள்ளது. தயாரிக்கப்பட்ட தேயிலைத் தூள் ஆகியவற்றை, 100 கிராம், 250 கிராம், 500 கிராம் கொண்ட பைகளில் விற்கும் பணியினையும், சிறிய அளவில் இச்சங்கம் மேற்கொண்டுள்ளது. ''இன்கோ'' தேயிலையின் விற்பனையை அதிகரிக்கும் பொருட்டு, கூட்டுறவுச் சிறப்பங்காடி கள் மற்றும் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ஆகியவைகளின் மூலம் விற்பதற்கு வேண்டிய தேயிலையை ''இன்கோ செர்வ்'' இடமிருந்து கொள்முதல் செய்ய வேண்டுமென, கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அறிவுறுத்தியுள்ளார்.



1984 ஏப்ரல் 25]

மலைப் பகுதி வளர்ச்சித் திட்டத்தின்கீழ், கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளுக்கும் ''இன்கோ செர்வ்'' என்ற மையச் சங்கத்திற்கும் தாராளமான முறையில் அளிக்கப்பட்ட கடனுதவிகள் பற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளது :—

| | | | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|
| 1980–81 | .. | .. | 13.98 |
| 1981–82 | .. | .. | 20.00 |
| 1982–83 | .. | .. | 15.00 |
| 1983–84 | .. | .. | 15.00 |

இந்த 12 கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளில், கூடலூரில் அமைந்துள்ள சாலிஸ்பரி கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலை 1983–84 ஆம் ஆண்டில் உற்பத்தியைத் துவக்கி யுள்ளது. மற்றொரு தொழிற்சாலை 1984–85 ஆம் ஆண்டில் உற்பத்தியைத் துவக்கும். தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் மற்றும் அரசின் நிதியுதவியுடன் இத்தொழிற்சாலை கட்டப்பட்டு வருகிறது.

முதன் முதலில் நிறுவப்பட்ட கூட்டுறவுத் தேயிலைத் தொழிற் சாலையான குந்தா கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலையை நவீனமாக்குவதற்காக ரூ. 11.00 இலட்சம் மதிப்பில் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இத் திட்டம் தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்தின் உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது 1984-85 ஆம் ஆண்டில் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

தொழிற் கூட்டுறவுத் தேயிலை தொழிற்சாலைகளின் தேவையைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக நியாயமான விலையில் பெட்டிகளை வழங்குவதற்கு ''தமிழ்நாடு பிளைவுட் வெனியர்ஸ் லிமிடெட்'' ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. கட்டுமானப் பணி விரைவில் துவங்கப்பட உள்ளது. இத்தொழிற் சாலை, 1984-85 ஆம் ஆண்டு இறுதியில் உற்பத்தியைத் துவங்கும்.

கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளின் தேயிலை உற்பத்தி, விற்பனை மற்றும் செலுத்தப்பட்ட வரி ஆகிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | உற்பத்தி. | விற்பனை. | கலால் வரி. | விற்பனை வரி. |
|---|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) | (5) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1982–83 | .. | 836.84 | 998.96 | 48.06 | 35.09 |
| 1983–84 (31-12-1983 வரை) | .. | 999.70 | 1090.92 | 36.64 | 28.70 |

[1984 ஏப்ரல் 25

(iii) சவ்வரிசி மற்றும் மாவுப் பொருள் :

தமிழ்நாட்டில், சுமார் 25,000 பேருக்கு சவ்வரிசித் தொழில் வேலையளிக்கிறது. மரவள்ளிக்கிழங்கு பயிராகின்ற 50,000 ஹெக்டேர் நிலத்தில், 28,000 ஹெக்டேர் நிலம் சேலம் மற்றும் தர்மபுரி மாவட்டங்களிலுள்ளது.

தமிழ்நாட்டில் உற்பத்தியாகின்ற சவ்வரிசி மற்றும் மாவுப் பொருள்களின் பெரும் பகுதி, வட இந்தியாவில் பயன்படுத்தப் படுகிறது. போதுமான நிதி வசதி இன்மையால், சவ்வரிசி மற்றும் மாவுப் பொருள் தயாரிப்பாளர்கள், அவர்கள் தயாரித்த பொருளை இருப்பு வைக்க இயலாத நிலையில் இருந்தனர். இதன் காரணமாக, அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள் களுக்கு நல்ல விலை பெற முடியவில்லை. இடைத் தரகர்களின் சுய நலம் காரணமாக, இப்பொருள் விற்பனையாகும் இடங்களில் நிலவி வந்த உயர்ந்த விலையின் பலனை இந்தத் தயாரிப்பாளர் கள் பெற முடியவில்லை.

மரவள்ளிக்கிழங்கு உற்பத்தியாளர்கள் அவர்களது பொருளுக்கு நல்ல விலை பெற வேண்டுமென்ற நோக்கத்துடன், 1981-82 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் சவ்வரிசி மற்றும் மாவுப் பொருள் தயாரிப்பாளர்களின் தொழிற் கூட்டுறவுப் பணிச் சங்கம் ஒன்று அமைக்கப்பட்டது. இது 1982-83 ஆம் ஆண்டில் வர்த்தகப் பணியை துவங்கியது. சவ்வரிசி மற்றும் மாவுப்பொருள் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ள 500 தொழில் நிலையங்களில் 455 தொழில் நிலையங்கள், இச்சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ளன. அவற்றின் உற்பத்திப் பொருள்கள் இச்சங்கத்தின் மூலமாக விற்பனை செய்யப்படுகின்றன. இச்சங்கம் ஏற்படுத்தப்பட்டதன் பயனாக, உற்பத்தியாளர்களின் வர்த்தகத் திறன் குறிப்பிடத்தக்க அளவுக்கு அதிகரித்துள்ளது. முன்பெல்லாம், உற்பத்தியாளர்கள், சவ்வரிசி மற்றும் மாவுப் பொருட்களை மூட்டை ஒன்று முறையே ரூ. 225-க்கும், ரூ. 160-க்கும் விற்று வந்தனர். ஆனால் இச் சங்கம் ஆரம்பிக்கப் பட்ட பிறகு, மூட்டை ஒன்றுக்கு முறையே ரூ. 450 முதல் ரூ. 520 வரையிலும், ரூ. 350 முதல் ரூ. 390 வரையிலும் விலை பெற்று வருகின்றனர். இதுபோலவே, விவசாயிகளும், அவர்கள் பயிரிடுகின்ற மரவள்ளிக் கிழங்குக்கு, மூட்டை ஒன்றுக்கு ரூ.72 வீதம் விலை பெறுகின்றனர்; ஆனால் இவர்களும் இதற்கு முன்பு, மூட்டை ஒன்றுக்கு ரூ. 22 மட்டுமே பெற்று வந்தனர். 1982-83 ஆம் ஆண்டில், உற்பத்தி செய்யப்பட்ட சவ்வரிசி மற்றும் மாவுப் பொருளின் மதிப்பு ரூ. 27.51 கோடியாக இருந்தது. இந்த ஆண்டு 31-12-1983 வரை மட்டும் ரூ. 28.96 கோடி பெறுமான முள்ள இப்பொருள்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இச் சங்கத்திற்கு அரசு ரூ. 10 இலட்சம் கடன் வழங்கியுள்ளது.

தர்மபுரியிலுள்ள சவ்வரிசி மற்றும் மாவுப் பொருள் தொழில் நிலையங்களுக்காக இதுபோன்ற ஒரு சங்கம், 1982-83 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இது, 16-12-82-லிருந்து விற்பனையைத் துவங்கியுள்ளது. 1-4-1983 முதல் 31-12-1983 முடிய, இச்சங்கம்



1984 ஏப்ரல் 25]

ரூ. 89.81 இலட்சம் மதிப்புள்ள பொருள்களை விற்பனை செய்துள்ளது. 36 தொழில் நிலையங்களை உறுப்பினர்களாகக் கொண்ட இச் சங்கத்திற்கு, அரசு ரூ. 5 இலட்சம் கடனாக வழங்கியுள்ளது.

(iv) கயிறுத் தொழில் :

பரவலாகவும், முனைப்பாகவும் தென்னை பயிரிடப்படும் தமிழக அரசின் விரிவாக்கத் திட்டத்தின் பயனாக, தமிழ்நாட்டில் தென்னை பயிராகும் நிலப்பரப்பு அதிகரித்துள்ளது. 1979 ஆம் ஆண்டில் 1.09 இலட்சம் ஏக்கர் நிலத்தில் தென்னை பயிரிடப் பட்டது. 1982 ஆம் ஆண்டில் இது 1.31 இலட்சம் ஹெக்டார் அளவுக்கு அதிகரித்துள்ளது. 1979 ஆம் ஆண்டில் 1,095 மில்லியன் தேங்காய் உற்பத்தியாயிற்று. 1982 ஆம் ஆண்டில் 1,244 மில்லியன் தேங்காய் அளவிற்கு உற்பத்தி உயர்ந்துள்ளது.

தேங்காய்களின் உற்பத்தி உயர்வு காரணமாக, கயிறு தொழிலுக்கு வேண்டிய தேங்காய் மட்டைகள் தாராளமாய்க் கிடைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. 1979 ஆம் ஆண்டு மேற் கொள்ளப்பட்ட ஆய்வின்படி, கிடைக்கக்கூடிய தேங்காய் அளவில் 43 சதவீத அளவுக்கு தேங்காய் மட்டைகள் தொழில் உபயோகத்திற்கு பயன்படுத்தப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. தேங்காய் நார், கிராமப் பகுதிகளில் கிடைக்கின்ற மிக மலிவான மூலப் பொருளாகும். கிராம மக்களுக்கு நல்ல வருமானம் தரக் கூடிய வேலையளிக்கவல்ல தொழிலாக இதனைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். இந்த வாய்ப்பினைக் கருத்தில் கொண்டுதான், நிதியுதவி மற்றும் இதர சலுகைகளை ஒப்புதலளிப்பதன் மூலம் இத்தொழில் வளர வேண்டுமென்பதற்காக, கடந்த சில ஆண்டு களில் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. பல்வேறு உதவித் திட்டங்களுக்காக ரூ. 68.26 இலட்சம் ஒப்புதலளிக்கப் பட்டுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் இத்தொழிலில் 1,200 பேருக்கு மேல் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

1981 ஆம் ஆண்டு தஞ்சாவூரில் நடந்த கருத்தரங்கில் கயிறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் நன்றாகச் செயல்பட, தொழில் வணிகத்துறை இயக்ககத்தின் நிர்வாக அமைப்பை வலுப்படுத்த வேண்டுமென கருத்து தெரிவிக்கப்பட்டது. கயிறு தொழிலில் பயிற்சி பெற்றவர்கள், இத்தொழிலில் நியமிக்கப்பட்டுள்ளனர். இன்னும் அதிகப் பேருக்கு பயிற்சி அளிக்க வேண்டுமென்பதற்காக, ரூ.50.90 இலட்சம் செலவில், 10-12-1983 அன்று கயிறு வளர்ச்சி மற்றும் பயிற்சி நிலையம் ஒன்று (செலவு, இந்திய அரசின் கயிறு வாரியத்தைச் சேர்ந்தது) தஞ்சாவூரில் ஏற்படுத்தப்பட்டது. துறையின் 17 பணியாளர்கள் இங்கு பயிற்சி பெற்று வருகின்றனர். இங்கு நிர்வாகம் மற்றும் தொழில் நுட்பங்களில் பயிற்சி அளிக்கும் வசதி அமைந்துள்ளது.

கோயமுத்தூர் மாவட்டத்தில் துணை நிலையம் ஒன்றையும் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மூன்றாவது நிலையம் அமைப்பதற்கும் விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[1984 ஏப்ரல் 25

தற்பொழுது, 57 கயிறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இச் சங்கங்கள் உற்பத்தி செய்யும் கயிறு பொருள்களின் அளவை அதிகரிக்க செய்யத்தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மாநிலத்தில், நார் பிரித்தெடுக்கும் தனியார் தொழில் நிலையங்கள் 309-ம், 13 தொழிற் கூட்டுறவு சங்கங்களும் உள்ளன. தற்பொழுது நார் பிரித்தெடுப்பதில் ஈடுபட்டுள்ள இத் தொழில் நிலையங்கள், நாரினை மட்டும் விற்பனை செய்து வருகின்றன. பல்வேறு வகையான கயிறு பொருள்களை உற்பத்தி செய்யும் பொருட்டு, உடனடியாக தஞ்சாவூரில் இரப்பர் கலந்த கயிறு பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று துவக்கப் படும். இதற்காக, துணை இயக்குநர் பதவி ஒன்றை அரசு ஏற்படுத்தியுள்ளது.

1984–85 ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில் மேலும் ஒரு இரப்பர் கலந்த கயிறு பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலையும், முறுக்குக் கயிறுத் தொழிற்சாலை ஒன்றும் அமைக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் கயிறு பாய்த் தொழில் துறையை மேம்படுத்தும் பொருட்டு, மதுரையில் கயிறு பாய் மற்றும் கயிறு பாய் தறிகள் உற்பத்திச் சங்கம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு, துவக்க நடவடிக்கைகள் முடிக்கப்பட்டுள்ளன.

விற்பனை நடவடிக்கைகளை வளர்ச்சி பெறச் செய்வதற்காக 1984–85 ஆம் ஆண்டில், மாநில கயிறு விற்பனைச் சங்கம் ஒன்றை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இச் சங்கம் தமிழ்நாட்டிற் குள்ளும், தமிழ்நாட்டுக்கு வெளியிலும் விற்பனை அமைப்புகளை நிறுவ ஏற்பாடு செய்யும்.

புதிய பொருள்களின் அபிவிருத்தி, பொருள்களைத் தரப் படுத்துவது, தக்க இயந்திர சாதனங்கள் உருவாக்குதல் ஆகிய காரியங்களுக்காக, கயிறு ஆராய்ச்சி நிலையம் ஒன்று தமிழ் நாட்டில் அமைப்பதற்கு வாய்ப்புகள் உள்ளனவா என்பது பற்றி ஆராயப்பட்டு வருகிறது.

(V) பாலிதீன்.—

மாநிலத்தில் 14 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இவற்றில் 10 சங்கங்கள், ஏற்கெனவே பல்வேறு வகையான பாலிதீன் பைகளைத் தயாரித்து விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ளன. 1982–83 ஆம் ஆண்டில், இச் சங்கங்கள் ரூ. 101.13 இலட்சம் மதிப்புள்ள பாலிதீன் பைகளை உற்பத்தி செய்துள்ளன. விற்பனையின் மதிப்பு ரூ. 119.92 இலட்சமாகும். செயல்பட்டு வருகின்ற இந்த 10 பணியாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் 411 பேருக்கு வேலையளிக்கின்றன; இவர்களில் 90 சதவீதம் மகளிராவர். எஞ்சிய 4 சங்கங்கள் (3 பாலிதீன் பைகள் சங்கம், 1 பாலிதீன் பின்னல் பைகள் தயாரிக்கும் சங்கம்) புதிய சங்கங்களாகும். நிறுவப்பட்டு வரும் இந்த 4 பாலிதீன் சங்கங்களும் 1984-85 ஆம் ஆண்டில் உற்பத்தியைத் துவக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



1984 ஏப்ரல் 25]

தோல் தொழில்.

தோல் தொழிலில் இந்தியா, உயர்ந்த இடத்தை வகிக்கிறது. உலகத்திலுள்ள கால்நடைகளின் எண்ணிக்கையில் 13 சதவீத கால் நடைகளை, இந்தியா பெற்றுள்ளது. நாட்டில் பெரு மளவில் வேலையளிப்பதில், தோல் தொழில் ஐந்தாவதாக உள்ளது.

இந்தியாவில் தோல் மற்றும் தோல் பொருள்கள் உற்பத்தியில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. இந்த மாநிலம், பதனிடப் பட்ட தோல்களைத் தயாரிப்பதில் பரம்பரையாக சிறந்து விளங்கி வருகிறது. 1982–83 ஆம் ஆண்டில், தோல் மற்றும் தோல் பொருள்களின் ஏற்றுமதியில் 55.22 சதவீதம், சென்னைத் துறைமுகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. செங்கற் பட்டு, வட ஆற்காடு, திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை மாவட்டங்களில், சுமார் 400 தோல் பதனிடும் தொழிற் சாலைகள் அமைந்துள்ளது.

அதிக அளவில் நிறைவு செய்யப்பட்ட தோல்களைத் தயாரிக்க வும், ஏற்றுமதியை அதிகரிக்கும் பொருட்டும், இந்திய அரசின் உதவியுடன் கீழ்க்கண்ட இடங்களில் கூட்டுறவுத் துறையில் தோல் நிறைவு செய்யும் பணிச் சங்கங்களை, தமிழ்நாடு அரசு அமைத்துள்ளது.

1. வாணியம்பாடி .. வட ஆற்காடு மாவட்டம்.
2. இராணிப்பேட்டை .. ,,
3. பேரணாம்பட்டு .. ,,
4. திண்டுக்கல் .. மதுரை மாவட்டம்.

வாணியம்பாடியிலுள்ள தோல் நிறைவு செய்யும் பணி சங்கம், 1978 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. இது வாணியம்பாடி மற்றும் அதன் சுற்றுப்புறங்களிலுள்ள 100க்கும் மேற்பட்ட தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்கு பணி வசதி அளிக்கிறது. இச் சங்கம், 1982–83 ஆம் ஆண்டில் செய்து முடித்த பணிக்காக, ரூ. 14.50 இலட்சம் பணிக் கட்டணம் பெற்று, ரூ. 1.27 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது.

இதர மூன்று சங்கங்களும் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு, அவற்றில் இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் உள்நாட்டு இயந்திரங்களை நிறுவிய பிறகு, வெகு விரைவில் பணிகளை மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நான்கு சங்கங்களுக்கும் அளிக்கப்பட்ட நிதியுதவி விவரங்கள் பின்வருமாறு :—

| வரிசை எண்ணும் சங்கத்தின் பெயரும். | தமிழ் நாடு அரசு. | | | மைய அரசின் உதவித் தொகை. | எஸ்டிசி மானியம். | கடன். | |
|---|---|---|---|---|---|---|---|
| | மானியம். | பங்கு மூலதனம். | பங்கு மூலதனக் கடன். | | | த.தொ. மு.க. T. C | த.மா. தொ. கூ. வ. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) | | | | |
| 1. வாணியம்பாடி தோல் நிறைவு செய்யும் பணிச் சங்கம். | 5.00 | 2.24 | .. | 8.12 | .. | 30.00 | .. |
| 2. இராணிப் பேட்டை தோல்நிறைவு செய்யும் பணிச்சங்கம். | 2.00 | 3.00 | 1.495 | 14.00 | 50.00 | 26.00 | .. |
| 3. பேரணாம்பட்டு சிறு தோல் பதனிடுபவர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கம். | 2.00 | 3.00 | .. | .. | 50.00 | .. | 40.00 |
| 4. திண்டுக்கல் தோல் நிறைவு செய்யும் தொழிற் கூட்டுறவுச் சங்கம். | 2.00 | 3.00 | — | 13.80 | 50.00 | .. | 25.00 |
| மொத்தம் .. | 11.00 | 11.24 | 1,495 | 35.92 | 150.00 | 56.00 | 65.00 |



தற்பொழுது, இச் சங்கங்களின் மூலம் 4,000 பேருக்கு மேல் நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலை பெறுகின்றனர். எஞ்சிய மூன்று சங்கங்கள் செயல்படத் துவங்குகின்ற பொழுது, அனைத்து தோல் நிறைவு செய்யும் சங்கங்களும் மாநிலத்தில் பொருளாதாரம் மற்றும் சமுதாயத்தில் பின் தங்கியுள்ள 15,000 பேருக்கு மேல் வேலையளிக்கும்.

**VII நிலக்கரி :**

சென்னையில் ஒரு தலைமைச் சங்கம் உள்ளிட்ட, ஏழு நிலக்கரி பணிச் சங்கங்கள் உள்ளன. தொழில் வணிக இயக்குநரால் வழங்கப்பட்ட சான்றிதழின் அடிப்படையில், இவை, நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து நிலக்கரியைக் கொள்முதல் செய்து, சங்க உறுப்பினர்களுக்கும், பங்கீடு அட்டை உடையவர்களுக்கும் இயக்குநரது சிபாரிசுகளின்படி பகிர்ந்தளிக்கிறது. 1982–83 ஆம் ஆண்டில், இச் சங்கங்கள் நிலக்கரி மற்றும் பழுப்பு நிலக்கரி ஆகியவற்றை ரூ. 234.65 இலட்சம் அளவுக்குக் கொள் முதல் செய்து ரூ. 373.05 இலட்சத்திற்கு விற்பனை செய்துள்ளது.

போதுமான இரயில் சரக்குப் பெட்டிகள் இல்லாததால் நிலக்கரி எடுத்து வருவதில் சிரமம் ஏற்பட்டது ; முன்னுரிமை முறை கையாளப்பட்டு வந்ததும் சிரமமாய் அமைந்தது ; இந்த காரணங்களினால் தமிழ் நாட்டில் பெறப்படுகின்ற நிலக்கரி தொழில் நுகர்வோருக்குப் போதுமானதாக இல்லை. இதனால் சிறு தொழில் நிலையங்கள் இன்னல்களுக்குள்ளாயின. தமிழ் நாட்டிலுள்ள சிறு தொழில் நிலையங்களுக்குப் போதுமானதாகவும், சீரான முறையிலும் நிலக்கரியை வழங்கும் பொருட்டு, சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் ஏற்கனவே உள்ள நிலக்கரி பணிச் சங்கங்களின் வளாகத்திற்குள் நான்கு நிலக்கரி கிடங்குகளை அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக, 1983–84 ஆம் ஆண்டிற்கு அரசு பங்கு மூலதனமாக ரூ. 32 இலட்சம் நிதியுதவி ஒதுக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**இ. இரசாயனப் பிரிவு —**

தொழில் வணிக இயக்ககத்தின் இரசாயனப் பிரிவு, தமிழ் நாட்டில் இரசாயனத் தொழில்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளைக் கவனித்து வருகிறது. இப்பிரிவு ஆற்றி வரும் செயல்களாவன :

(1) சோதனை வசதிகள் அளிப்பது ;

(2) முன்னோடித் திட்ட ஆய்வுகளுக்குரிய வசதிகளை அளிப்பது ;

(3) இரசாயனத் தொழிலில் தொழில் நுட்ப ஆலோசனை சாத்தியக்கூறு அறிக்கைகள் மற்றும் திட்ட தொகுப்புகளை அளிப்பது ;

(4) கிடைப்பதற்கரிய மூலப் பொருள்களை சிறு தொழில் நிலையங்களுக்குக் கிடைக்கச் செய்வதில் உதவியளிப்பது,

[1984 ஏப்ரல் 25

பொருள் தயாரித்தல், பொருள் அபிவிருத்தி மற்றும் பொருள் விற்பனை ஆகியவற்றில், தரக் கட்டுப்பாடு முக்கிய அங்கமாக உள்ளதால், இப்பிரிவு, கிண்டி, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் மூன்று இரசாயனப் பரிசோதனைக் கூடங்களை நடத்தி வருகிறது. இவை, இந்த மாவட்டங்களிலும் மற்றும் அவற்றைச் சுற்றிலுமுள்ள தொழில்களின் தேவையினைப் பூர்த்தி செய்கின்றன. நாட்டில் உப்பு உற்பத்தியில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தை வகிக்கிறது. கடல்படு இரசாயனப் பொருள்களின் அபிவிருத்திக்காக ஆய்வுகளை மேற்கொள்ளு வதற்கும், விஞ்ஞான ரீதியில் உப்புத் தொழில்களின் வளர்ச்சிக்கு உதவி செய்வதற்கும், தூத்துக்குடியில், மாநில உப்பு—கடல்படு இரசாயனப் பொருள் ஆராய்ச்சி நிலையம் ஒன்றை அரசு அமைத்துள்ளது.

சவ்வரிசி மற்றும் மாவுப் பொருள் தயாரிப்பதில் சேலம் மாவட்டம் நாட்டிலேயே பெருமைக்குரியதாய் விளங்குகிறது. இந்தப் பொருள்களுக்குத் தரக் கட்டுப்பாடு வசதிகளை அமைத்துத் தரும் பொருட்டு, சேலத்தில், சவ்வரிசி ஆய்வுக் கூடம் ஒன்றை இத்துறை அமைத்துள்ளது. இந்த மாவட்டத்தில் இத் தொழிலின் தரமான வளர்ச்சிக்கு இந்த ஆய்வுக் கூடம் உதவி வருகிறது. புரோட்டீன் மற்றும் வைட்டமின் சத்துக் களைக் கொண்டதாய் அமையவல்ல சவ்வரிசிப் பொருளைத் தயாரிக்கும் திட்டம் ஒன்றை இந்த சவ்வரிசி ஆய்வுக் கூடத்தில், இந்திய அரசு நிறைவேற்றியுள்ளது.

இரசாயனப் பிரிவிலுள்ள ஆய்வுக்கூடங்கள் அளித்து வரும் பரிசோதனை வசதிகளால் பயனடைந்த தொழிற்சாலைகளின் எண்ணிக்கை பின் வருமாறு :—

| ஆய்வுக்கூடத்தின் பெயர். | பயனடைந்த தொழிற் சாலைகளின் எண் ணிக்கை (1983-84—31-12-83 வரை) |
|---|---|
| (1) | (2) |
| இரசாயனப் பரிசோதனை மற்றும் பகுப் பாய்வுக் கூடம், கிண்டி. | 1,108 |
| மண்டல ஆய்வுக்கூடம், மதுரை | |
| மண்டல ஆய்வுக்கூடம், கோயம்புத்தூர் | 1,659 |
| சவ்வரிசி ஆய்வுக் கூடம், சேலம் | 414 |
| உப்பு—கடல்படு இரசாயனப் பொருள் | 147 |
| களுக்கான மாநில ஆராய்ச்சிக் கூடம், தூத்துக்குடி. | 23 |
| | 3,351 |



1984 ஏப்ரல் 25]

இந்த இயக்ககத்தின் இரசாயனப் பிரிவு, தகுதி வாய்ந்த சிறு தொழில் நிலையங்களுக்கு ''பாரபின் மெழுகு'' தீக்குச்சி மெழுகு, இறைச்சிக் கொழுப்பு போன்ற கிடைப்பதற்கரிதாய் உள்ள மூலப் பொருள்களைக் கொள்முதல் செய்வதில் உதவி யளிக்கிறது.

1982-83 மற்றும் 1983-84 ஆம் (31-12-1983) ஆண்டு களில் வழங்கப்பட்ட மூலப் பொருள் விவரங்கள் பின்வருமாறு:—

| | 1982-83 | 1983-84 31-12-83 வரை) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | மெட்ரிக் டன். | மெட்ரிக் டன். |
| பாரபின் மெழுகு | 4,299 | 5,283 |
| தீக்குச்சி மெழுகு | 2,580 | 2,060 |
| இறைச்சிக் கொழுப்பு | 450 | 92 |
| உலைக்கள எண்ணெய் | 1982 ஆம் ஆண்டில் இந்திய அரசு, உலைக் கள எண்ணெய் வழங் குவதில் இருந்த அனைத்து தடைகளை யும் நீக்கி விட்டபடி யால், 1982 ஆம் ஆண்டில் எவ்வித உரிமமும், மறு பதிவும் வழங்கப்படவில்லை. | |

மேற்கண்ட பொருள்களைத் தவிர, வெள்ளைச் சிமிட்டி, டிட்டேனியம் டை ஆக்ஸைடு, சூடம் முதலிய பொருள்களை, சிறு தொழில்கள் பெறும் பொருட்டு, அவற்றின் கோரிக்கைகளை இரசாயனப் பிரிவு பரிந்துரை செய்கிறது.

தொழிற்சாலைகளின் உபயோகத்திற்காக, உலைக்கள எண் ணெய், ''இண்டேன் எரிவாயு'' ஆகியவற்றைப் பெறுவதற்கும், தொழில் உபயோகத்திற்கு விரிய சாராய உரிமம் பெறு வதற்கும் தொழிற்சாலைகளிடமிருந்து வரும் விண்ணப்பங் களை சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு, இந்த இரசாயனப் பிரிவு பரிந்துரை செய்கிறது. பூச்சிக் கொல்லி மருந்துகள் தயாரிப்பதற்குத் தேவைப்படுகின்ற உள்நாட்டில் கிடைக்கக் கூடிய மூலப் பொருள்களையும், இறக்குமதி செய்யப்பட்ட மூலப் பொருள்களையும் சிறு தொழில் நிலையங்கள் பெறுவதற்கு வழி வகுக்கும் வகையில், அத்தகைய தொழில் நிலையங்களின்

உற்பத்தித் திட்டங்களுக்கு இப்பிரிவில் ஒப்புதல் அளிக்கிறது. இவ்வாறு உதவியளிக்கப்பட்ட சிறு தொழில் நிலையங்களின் எண்ணிக்கை பின்வருமாறு :—

| (1) | 1982–83. (2) | 1983–84. (31–12–83 வரை) (3) |
|---|---|---|
| 1. வீரிய சாராயம் .. .. | 34 | 14 |
| 2. ஒப்பளிக்கப்பட்ட உற்பத்தித் திட்டங்கள் | 35 | 14 |
| 3. உலைக்கள எண்ணெய் .. | 137 | 38 |
| 4. இண்டேன் வாயு .. | .. | 31 |

இரசாயனத் தொழில்களுக்கு ஒரு தகவல் களஞ்சியம் :

புள்ளி விவரங்கள் மற்றும் தொழில் நுட்ப ஆலோசனை வசதிகளை மாநிலத்தில் வலுப்படுத்தும் நோக்கத்துடன், அடிப்படை புள்ளி விவரங்களைத் தயாரிப்பதற்கும், மாநிலத்தில் சிறுதொழில் துறையில் இரசாயனம் அதன் மற்றும் சார்புத் தொழில்களை அமைப்பதில் ஆர்வமுள்ள சிறு தொழில் முனைவர்களுக்கு தொழில் நுட்ப ஆலோசனை அளிப்பதற்கும் ஒரு தகவல் களஞ்சியம் நிறுவப்பட்டுள்ளது. இத் தகவல் களஞ்சியத்திலிருந்து திட்டத் தொகுப்புகளைப் பெற்ற தொழில் முனைவர்களிடமிருந்து திட்டத்தின் செயலாக்க நிலையினைக் கண்டறிவதற்கும், அவர்களுக்கு அளிக்கப்பட்ட தொழில் நுட்ப ஆலோசனைகள் எந்த அளவுக்கு பயனளித்துள்ளது என்பதைக் கண்டறிவதற்கும், இத் தகவல் களஞ்சியம் தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுகிறது.

இத் தகவல் களஞ்சியம் துவக்கப்பட்ட 1975 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திலிருந்து 31-12-83 வரை, 7,255 இரசாயனப் பொருள்களைப் பற்றிய விவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. இவை பற்றிய மேலும் பல புதிய விவரங்களையும் தொடர்ந்து சேகரிக்கப்பட்டு வருகிறது. சேகரிக்கப்பட்டுள்ள புள்ளி விவரங்கள், இவ்வலுவலகத்திற்கும், இத்துறைக்கும் (மாவட்ட தொழில் மையங்கள், நிறுவனங்கள் மற்றும் அரசு அமைப்புகள்) இரசாயனத் தொழில் அபிவிருத்தி பற்றி முடிவெடுப்பதற்கு பயன்படுத்தப்படுகின்றன. 1975 ஆம் ஆண்டு டிசம்பரிலிருந்து, 690 திட்டத் தொகுப்புகள் தொழில் முனைவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. 1980 மற்றும் 1981 ஆம் ஆண்டுகளில் தகவல் சேகரிப்பு முறைகளும், அவற்றை பயன்படுத்தக் கூடிய முறைகளும் மேலும் சீர்படுத்தப்பட்டுள்ளன. இப் பிரிவு, வழங்கிய





தகவல்களைப் பெற்றவர்களிடமிருந்து. அத் தகவல்களினால் (1979 ஆம் ஆண்டு ஜுன் முதல் 31-12-83 வரை விளைந்த பயனைப் பாராட்டி 238 பாராட்டுக் கடிதங்கள் வந்துள்ளன. இத் தகவல் களஞ்சியம் வழங்கிய திட்டத் தொகுப்புகளைப் பெற்ற சுமார் 80 இரசாயனம் மற்றும் அதன் சார்பு தொழில் களில் தொழில் முனைவர்கள், பல்வேறு நிலைகளில் தொழிற் சாலைகளை நிறுவி வருகின்றனர்.

1983 ஆம் ஆண்டில் ஏற்பட்ட முன்னேற்றம் :

| | |
|---|---|
| 1. விவரங்கள் சேகரிக்கப்பட்ட இரசாயனப் பொருள்களின் எண்ணிக்கை (புதிய இனங்கள்). | 216 |
| 2. இரசாயனத் தொழில் திட்டத் தொகுப்புகள் தயாரித்தது. | 20 |
| 3. 1983 ஆம் ஆண்டில் தொழில் முனைவர்களுக்கு வழங்கப்பட்ட திட்டத் தொகுப்புகளின் எண்ணிக்கை. | 188 |
| 4. பதிலளிக்கப்பட்ட விசாரணைகளின் எண்ணிக்கை. | 413 |
| 5. வழங்கப்பட்ட தகவல்கள் பயனுள்ளவை என்று 1983 ஆம் ஆண்டில் பெறப்பட்ட பாராட்டுக் கடிதங்களின் எண்ணிக்கை. | 43 |

தமிழ்நாடு மாநில உப்பு மற்றும் அதன் சார்பு இரசாயனப் பொருள்கள் வாரியம :

மாநிலத்தில் உப்புத் தொழிலின் வளர்ச்சிக்காக, தொழில் வணிக இயக்குநரகத்தின் கட்டுப்பாட்டின் கீழுள்ள தமிழ்நாடு மாநில உப்பு மற்றும் அதன் சார்பு இரசாயனப் பொருள்கள் வாரியம், மைய மற்றும் மாநில அரசுகளுடன் தொடர்பு கொண்டு செயல்படுகிறது. உடல் நலம், குடிநீர், சமூக மையங்கள், பொழுது போக்கு வசதிகள், குழந்தைகளுக்கு கல்வி போன்ற அடிப்படை வசதிகளையும் உப்புத் தொழிலாளர்களுக்கு அளித்து வருகிறது. உப்புத் தொழிலுக்காக பல்வேறு திட்டங்கள், வட்டார ஆலோசனைக் குழு மற்றும் மைய உப்பு ஆலோசனைக் குழுவின் பரிசிலனைக்காக அனுப்பப்பட்டுள்ளன. மதிய உணவு திட்டத்திற்கு இலவசமாக சத்துள்ள உப்பு வழங்குவது போன்ற காரியங்களுக்கு, உப்பு ஆயத் தீர்வையிலிருந்து உதவி பெறுதல், உப்புத் தொழிலின் அபிவிருத்திக்கு புதிய பகுதிகள் மற்றும் ஏற்கனவே உள்ள பகுதிகளில் அடிப்படை வசதிகளைக் கண்டறிவது, உப்புப் பணித் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதற்கு உதவி, புயல் தடுப்புக் கூடாரங்கள் அமைப்பது போன்ற எல்லா நடவடிக்கைகளையும் இவ்வாரியம் எடுத்து வருகிறது. சமூக நலம் மற்றும் வளர்ச்சிப் பணிகளுக்காக, ரூ. 62 இலட்சம் செலவில் பல திட்டங்களை மைய மற்றும் வட்டார ஆலோசனைக் குழுக்கள் அளித்துள்ளன. இவை, 1983-84 மற்றும் 1984-85 ஆகிய ஆண்டுகளில் செயல்படுத்தப் படும்.

செங்கற்பட்டு, தென்னாற்காடு, இராமநாதபுரம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில், உப்பு உற்பத்தி செய்வதற்குத் தகுந்ததாயுள்ள சுமார் 20,000 ஏக்கர் புதிய நிலப் பகுதி, துவக்க ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. மண் பரிசோதனை, வரைபடம் தயாரித்தல், சாத்தியக் கூறு அறிக்கைகள் தயாரித்தல் போன்ற விவரமான ஆய்வுக்கு இப் பகுதிகளை உட்படுத்தப்படும். திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் இந்த ஆய்வு விரைவில் முடிக்கப் படும்.

1983–84 ஆம் ஆண்டில், உப்பு உற்பத்தி நன்றாக இருந்த போதிலும், அதிக அளவில் தொழில் தரமுடைய உப்பினை நுகருகின்ற "காஸ்டிக் சோடா" மற்றும் "சோடா ஆஷ்" தொழிற்சாலைகளுக்கு மின்சார வெட்டு ஏற்பட்டதால், உப்பு பயன்படுத்தப்படுவது வெகுவாகக் குறைந்துள்ளது. இந்த ஆண்டு நல்ல மழை பெய்துள்ளதால், இத் தொழிற்சாலைகள் 1984–85 ஆம் ஆண்டில் நல்ல உற்பத்தியைத் தரும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. உள்நாட்டில் தொழில் வகை உப்பு உபயோகம் குறைந்திருந்த போதிலும், கடந்த ஆண்டை விட ஏற்றுமதி குறிப்பிடத்தக்க அளவுக்கு அதிகரித்துள்ளது.

ஈ. மின்சாரம், மின்னணுப் பிரிவு :

நவீன வாழ்க்கையின் அனைத்து நிலைகளிலும் மின்னணு ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது என்பதால், மாநிலத்தில் மின்னணுத் தொழிலின் வளர்ச்சிக்கு எல்லா வகையிலும் ஊக்கமளிப்பதற்கு தொழில் வணிக இயக்ககம் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. இந்த முயற்சிகளின் முக்கிய நோக்கங்களாவன :—

1. குறைந்த மூலதனத்துடன் பெரும்பான்மையோருக்கு வேலை அளிப்பது.

2. மின்னணுத் துறையின் தொழில் நுட்பத் தகுதி பெற்ற ஆடவர் மற்றும் மகளிருக்குப் பயனுள்ள வகையில் வேலை வாய்ப்பினை ஏற்படுத்துவதன் மூலம் உள்ளூரில் உள்ள நபர்களின் அறிவுத் திறனைப் பயன்படுத்துவது, மற்றும்

3. நவீன தொழில் நுட்பவியலை மின்னணுத் தொழிலில் ஈடுபடுத்தி மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படச் செய்வது.

இந்த குறிக்கோள்களின் அடிப்படையில், தொழில் வணிக இயக்ககம் மின்னணுத் துறையில் ஒரு புதிய விழிப்புணர்வை உருவாக்குவதற்காக, அதன் மின்சார மற்றும் மின்னணுப் பிரிவின் மூலம் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. மின்னணுத் தொழில்களின் வளர்ச்சிக்கு இயக்ககம் அளித்துவரும் ஊக்கமும், ஆக்கமும், இதர வசதிகளும், சலுகைகளையும் பற்றி கீழே விவரிக்கப்பட்டுள்ளது:—

1. மின்சாரம், நீர், சாலைகள் போன்ற அடிப்படை வசதியமைந்த தொழிற்பேட்டைகளை அமைப்பது.





2. நவீன வசதிகள்கொண்ட பரிசோதனை நிலையங்களின் மூலம் எளிய கட்டணத்தில் பரிசோதனை மற்றும் தரக் கட்டுப்பாடு வசதிகளை அளிப்பது.

3. மின்மருத்துவக் கருவி செப்பனிடு நிலையங்கள் மற்றும் மின்னணு ஆய்வுக் கூடங்கள் மூலம், மின் மருத்துவச் சாதனங்களைச் செப்பனிடுதல்.

4. புதிய மின்சார மற்றும் மின்னணுத் தொழில்களைத் துவக்குவதற்கு தகவல் களஞ்சியம் மூலம் அடிப்படைத் தகவல்களையும் ஆலோசனைகளையும் அளித்து தொழில் முனைவர்களுக்கு வழி காட்டுவது.

அடிப்படை வசதிகள்:—

மின்சாரத் தொழில், மின்னணுத் தொழில் மற்றும் அவற்றின் சார்புத் தொழில்களுக்காகவே மாநிலத்தில் ஐந்து இடங்களில் தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன.

அடையாறிலுள்ள டாக்டர் விக்ரம் சாராபாய் மின்னணுத் தொழிற்பேட்டையில் தொழிற்கூடங்களுக்கான தேவை அதிகரித்துள்ளதால், சமீபத்தில் மேலும் 26 தொழிற் கூடங்களை இத்துறை கட்டியுள்ளது. ஆர்வமுள்ள தொழில் முனைவர்களுக்கு இந்தத் தொழிற் கூடங்கள் ஒதுக்கப்பட்டு வருகின்றன. இவை உடனடியாக, கூடுதலாக 300 பேருக்கு வேலையளிக்கும். இத் தொழிற்பேட்டையைத் தவிர, பெருங்குடியில் 106 ஏக்கர் நிலப்பரப்பில் செப்பனிட்ட மனைகள் தொழிற்பேட்டை ஒன்றையும் இத்துறை அமைத்துள்ளது. இங்கு ஏற்கெனவே 150 செப்பனிட்ட மனைகள் தொழிலதிபர்களுக்கு ஒதுக்கப்பட்டு தொழில் நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

செப்பனிட்ட மனைகளின் தேவை தற்போது அதிகரித்துள்ளபடியாலும் புதிய மின்னணுத் தொழில்களைத் துவக்குவதற்கு ஆர்வம் மிகுந்து காணப்படுவதாலும் பெருங்குடியில் ஏற்கெனவே உள்ள செப்பனிட்ட மனைகள் தொழிற்பேட்டைக்கருகில் மேலும் 150 ஏக்கர் நிலம் கையகப்படுத்தும் திட்டத்திற்கு அரசு ஒப்புதலளித்துள்ளது. இத்தொழிற்பேட்டை முழு வளர்ச்சி அடைகின்றபொழுது ஆடவருக்கும் மகளிருக்குமாக 5,000 பேருக்கு வேலையளிக்கக்கூடிய 250 தொழிற்சாலைகள் இங்கு தோன்றியிருக்கும்.

காக்களூர், ஓசூர், திருச்சி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள இதர ஐந்து தொழிற்பேட்டைகளில் சுமார் 70 தொழிற் கூடக் கட்டடங்களை அரசு உருவாக்கித் தந்துள்ளது. காக்களூரிலுள்ள தொழிற்பேட்டை 13 மின்சாரத் தொழில் நிலையங்களைக் கொண்டுள்ளது. மதுரையிலுள்ள தொழிற்பேட்டை 16 மின்சார மற்றும் மின்னணுத் தொழில் நிலையங்களைக் கொண்டுள்ளது. ஓசூரிலுள்ள தொழிற்பேட்டை 8 மின்சார மற்றும் மின்னணுத் தொழில் நிலையங்களைப் பெற்றுள்ளது. இவை யாவும் சுமார் 5,000 பேருக்கு வேலையளிக்கின்றன.

பரிசோதனை மற்றும் தரக்கட்டுப்பாடு வசதிகள்:

காக்களூரிலுள்ள மைய மின் ஆய்வுக்கூடம் மற்றும் அடையாறிலுள்ள மின்னணு பரிசோதனை மற்றும் வளர்ச்சி நிலையம், மாநிலத்தில் அமைந்துள்ள பெரும்பாலான மின்சார மற்றும் மின்னணுத் தொழில்களுக்கு பரிசோதனை வசதி மற்றும் பொருள் அபிவிருத்தி வசதிகளை அளித்து வருகின்றன. மின்னணுத் தொழில் வளர்ச்சிக்காக, ஏற்கெனவே நடைபெற்று வரும் தொழில்களுக்கும், புதிய தொழில் முனைவர்களுக்கும் ஆக்கப்பூர்வமான தகவல்கள் அனைத்தையும், மின்னணு தகவல் களஞ்சியம் அளித்து வருகிறது. 1983-84 ஆம் ஆண்டில் (31-12-1983 வரை) மொத்தம் 1,357 மாதிரிப் பொருள்கள் பரிசோதனையிடப்பட்டு, ரூ. 1.37 இலட்சம் பரிசோதனைக் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

வீட்டு உபயோக மின்சார சாதனங்கள் (தரக்கட்டுப்பாடு) விதிகள் 1981 செயலாக்கம்:

வீட்டு உபயோக மின்சாதனங்களின் தரத்தை நிலைநிறுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன், பொருள்களைத் தயாரிப்பதிலும் பல்வேறு வகை தயாரிப்புப் பொருள்களை விற்பதிலும் தரக் கட்டுப்பாட்டினைப் புகுத்தும் பொருட்டு இந்திய அரசு ஒரு சட்டம் இயற்றியது. தொழில் வணிக இயக்குநர், இந்த தரக் கட்டுப்பாட்டு ஆணையை செயல்படுத்த அதிகாரம் பெற்றுள்ளார். தரக்கட்டுப்பாட்டினை செயலாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இச்சட்டத்தின்கீழ், தயாரிப்பாளர்களையும், விற்பனையாளர்களையும் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

மின் மருத்துவ செப்பனிடும் நிலையங்கள்:

சென்னை, கோயம்புத்தூர், மதுரை மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களில் மின் மருத்துவச் செப்பனிடும் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந் நிலையங்கள், அரசு மருத்துவ மனைகளைச் சார்ந்த மின்னணு மருத்துவச் சாதனங்களைப் பழுது பார்த்துச் செப்பனிடும் பணியை மேற்கொள்ளுகின்றன.

இதர நடவடிக்கைகள்:—

தயாரிப்புத் திட்டங்களுக்கு ஒப்புதலளிப்பது:—

மின்னணுத் தொழில்களின் வளர்ச்சி உரிய வழிகளில் அமைதல் பொருட்டு, இந்தியாவில் துவக்கப்படவுள்ள எந்த புதிய மின்னணுத் தொழிலும் அதன் உற்பத்தித் திட்டத்திற்கு முன் ஒப்புதல் பெற வேண்டுமென இந்திய அரசு வரையறுத்துள்ளது. 80 இனங்களுக்கு (தயாரிப்பு பொருள்கள்) தொழில் வணிக இயக்குநரை தலைவராகக் கொண்ட மாநில அளவிலான தொழில்



நுட்பக் குழு, ஒப்புதலளிக்க அதிகாரம் பெற்றுள்ளது. இதர இனங்கள் பற்றிய உற்பத்தித் திட்டத்திற்கு தொழில் வணிக இயக்குநரின் பரிந்துரையின் பேரில், புது டெல்லியிலுள்ள வளர்ச்சி ஆணையாளர் (சிறு தொழில்கள்) ஒப்புதலளிக்கிறார். 1983-84 ஆம் ஆண்டில், 167 இனங்களுக்கு (தயாரிப்பு பொருள்களுக்கு) ஒப்புதலளிக்கப்பட்டது. இதில் மாநில அளவிலான தொழில் நுட்பக் குழு 81 இனங்களுக்கும் புது டெல்லியிலுள்ள வளர்ச்சி ஆணையாளர் (சிறு தொழில்கள்) 86 இனங்களுக்கும் ஒப்புதலளித்துள்ளனர்.

கோயம்புத்தூர் மற்றும் ஒசூரிலுள்ள செப்பனிட்ட மனைத் தொழிற்பேட்டைகளை விரிவாக்குவதற்கும், சேலம், ஈரோடு, திருநெல்வேலி, உதகமண்டலம் ஆகிய இடங்களில் புதிய தனித் தொழிற்பேட்டைகளை அமைப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

புதிய பொருள்களை உற்பத்தி செய்ய ஊக்குவிப்பதற்கும் நடுத்தர அளவிலான தொழில் நுட்பவியலில் திறமை படைத்த வர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காகவும், மண்டல அளவில் சர்க்யூட் டிசைன் ப்ரோடோ டைப் நிலையங்களை ஏற்படுத் தவும் இத்துறை உத்தேசிக்கிறது. உயர் தொழில் நுட்பவியல் படைத்த மின்னணுப் பொருள்கள் அதிகமாகத் தேவைப்படு வதால், அடிப்படை அமைப்புகளைக் கொண்ட மின் நுண்ணணு மைக்ரோ ப்ராசஸர் சாஃப்ட் வேர் மையங்களை அமைப்பதற்கு இத்துறை உத்தேசித்துள்ளது.

(உ) கிராமத் தொழில் திட்டப் பிரிவு:

(1) தொழில் நுட்பப் பயிற்சி நிலையம், கிண்டி:

கிண்டியிலுள்ள தொழில் நுட்பப் பயிற்சி நிலையம், பொறியியல் பட்டதாரிகளுக்கும், பொறியியல் தகுதிப் பட்டயம் பெற்றவர்களுக்கும், கருவிகள் மற்றும் வடிவமைப்பின் தேர்ந்த நிலையில், சிறப்புப் பயிற்சி அளித்து வருகிறது. இப் பயிற்சிக்கு 10 பேர் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். பொறியியல் பட்டதாரிகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 200 உதவித் தொகையும், தகுதிப் பட்டயம் பெற்றவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 125 உதவித் தொகையும் அளிக்கப்படுகிறது. இந்நிலையத்தில் கருவி-பொறியியல், மின் நுண்கருவியியல், குளிர்சாதனப் பொறியியல் ஆகிய மூன்று தகுதிப்பட்டய பாடமுறைகள் ஒவ்வொன்றிலும் 30 பேர் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர், இந்நிலையத்தில் சேருவதற்கு குறைந்த அடிப்படைத் தகுதி, பத்தாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இந்தப் பாடமுறைகள் மாநில தொழில் நுட்பக் கல்வி வாரியத்தால் அங்கீகரிக்கப் பட்டுள்ளன.

சென்னைப் பல்கலைக் கழகம், கிண்டியிலுள்ள சிப்பெட் ஆகியவற்றுடன் இத்துறை இணைந்து கூட்டு முறையில் இரப்பர் அறிவியலில் பட்டமேற்படிப்பு (எம்.எஸ்.ஸி.) துவக்கும் கோரிக்கை ஒன்று அரசினது பரிசீலனையில் உள்ளது.

(2) கருவிகள்—அச்சு வடிவமைப்பு பயிற்சி நிலையம், திண்டுக்கல்:

திண்டுக்கல்லில், பூட்டு தயாரிக்கும் தொழிற்சாலைக்கு
அருகில் 1962 ஆம் ஆண்டிலிருந்து இத்துறையின் கட்டுப்பாட்டின்
கீழ், இந்தக் கருவிகள் அச்சு வடிவமைப்பு பயிற்சி நிலையம்
செயல்பட்டு வருகிறது· 1-12-65 முற்பகல் தமிழ்நாடு சிறு
தொழில் நிறுவனம் அமைக்கப்பட்டது முதல், கருவிகள் அச்சு
வடிவமைப்பதில் குறிப்பாகபூட்டுக்கள் தயாரிப்பதில்சிறப்பு பயிற்சி
அளித்து வருவதற்காக இந்த பயிற்சி நிலையத்தை துறையுடன்
வைத்துக் கொள்ளப்பட்டது. மூன்றாண்டுகள் வெற்றிகரமாக
பயிற்சி முடித்த ஒவ்வொருவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படு
கின்றன. இங்கு, இதுவரை 291 பேர் பயிற்சி பெற்றுள்ளனர்.
திண்டுக்கல்லிலும் அதன் சுற்றுபுறங்களிலும் அவர்கள் இலாப
கரமான வேலை வாய்ப்பினைப் பெற்றுள்ளனர்.

திட்டம் சாரா அமைப்பின்கீழ், கிண்டியிலுள்ள தொழில்
நுட்பப் பயிற்சி நிலையத்தில் உள்ளதைப் போன்று இந்த நிலை
யத்திலும், மூன்றாண்டுக்கால, கருவிகள்—பொறியியலில் தகுதிப்
பட்டயம் பாடமுறை பயிற்சி திட்டம் 1982 ஆம் ஆண்டு
செப்டம்பர் முதல் துவக்கப்பட்டுள்ளது. 1983 ஆம் ஆண்டு
அக்டோபரில் இரண்டாவது தொகுதி மாணவர்கள் சேர்த்துக்
கொள்ளப்பட்டுள்ளனர்.

(3) தச்சு கொல்லுப் பட்டறை, அரக்கோணம்:

அரக்கோணத்திலும் அதனைச் சுற்றிலுமுள்ள பல்வேறு
ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் நகராட்சிகளுக்குத் தேவையான
தச்சுப் பொருள் மற்றும் இரும்பு அலமாரிகள் ஆகியவற்றை
இந்த நிலையம் தயாரித்து வருகிறது. பல்வேறு ஊராட்சி
ஒன்றியங்களுக்குத் தேவையான இரும்புக் கதவுகள் தயாரிக்கும்
பணியையும் இந்நிலையம் மேற்கொண்டுள்ளது. இன்னும்
நன்றாகச் செயல்படும் நிலையமாக இது அமையவேண்டுமென்
பதற்காக உற்பத்தியை உயர்த்துவதற்கான முயற்சிகள் மேற்
கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஊ) சிறு தொழில்களுக்கு தொழில் தொடர்பு உதவி:

அரசினரது பொருள் கொள்முதல் திட்டத்தில் பங்கு
பெறுவதற்காக, பொருள் வழங்கல்—விற்பனை தலைமை இயக்
குநரின் துணையுடன், 1972 ஆம் ஆண்டு இந்த இயக்ககத்தில்
தொழில் தொடர்புப் பிரிவு ஒன்றினை ஏற்படுத்தப்பட்டது.
இப்பிரிவு சமீபத்தில் தீவிர நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.
சிறு தொழில்கள் தானாக பதிவு பெற்றுக் கொள்ளுதல் மற்றும்
அரசினரது பொருள் கொள்முதலுக்குத் தக்கதான தொழில்
அமைப்புகளைக் கண்டறிதல் போன்ற பணிகளை இப் பிரிவு
செய்து வருகிறது. ஆனால் இப்பொழுது இதுமட்டுமல்லாமல்,
பொருள் கொள்முதல் காரியங்களில் சிறு தொழில்கள் முன்னுரிமை
ரீதியில் நடத்தப்பட வேண்டும் என்பதன் அடிப்படையில், சமீப
ஆண்டுகளில் அரசு வழங்கிய பல்வேறு ஆணைகளின்படி



அனுமதிக்கப்பட்டுள்ள சலுகைகள் அனைத்தும் சிறுதொழில்
நிலைங்களுக்குத் தவறாமல் கிடைக்கின்றனவா என்பதைக்
கண்காணிக்கும் வகையில் அரசினரது கொள்முதல் திட்டம்
அமலாக்கப்படுவதை, தொடர்ந்தாற்போல் நிர்வகித்து வரும்
பொறுப்பையும் இப்பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அர
சாணைகளிலுள்ள சலுகைகள் சிறு தொழில்களுக்குக் கிடைப்
பதில் புகார்கள் எவையேனும் சிறு தொழில் நிறுவனங்களிட
மிருந்து வந்தால், பொருள்களை வாங்கும் நிறுவனங்களோடு
உடனடித் தொடர்பு கொண்டு பிரச்சினைகள் தீர்க்கப்படுகின்றன.
கொள்முதல் செய்வதற்குரிய அநேக பொருள்கள் சிறுதொழில்
களிடம் அமைந்து கிடக்கின்றன என்பது பற்றி விளக்கும்
பொருட்டு மைய கொள்முதல் நிறுவனங்கள் மற்றும் மாவட்ட
சிறு தொழிலதிபர்கள் சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளைக்
கொண்ட கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. இத்தொழில்
தொடர்பு பிரிவு தற்பொழுது மேற்கொண்டு வருகின்ற பணி
களாவன:

1. சிறுதொழில் நிலையங்களை நவீன மயமாக்குவதற்கு
உதவுவது;

2. தயாரிக்கப்படும் 100 சதவீத பொருள்களையும் ஏற்றுமதி
செய்யும் நிலையங்களுக்கு உதவி;

3. இந்திய தர நிர்ணய நிறுவனத்தின் பல்வேறு பொருள்
நுட்பக் குழுக்களில் பங்கு கொள்வது;

(எ) ஆய்வு மற்றும் புள்ளி விவரம்;

அரசு அமைப்புக்கும் தனியார் தொழில் முனைவர்களுக்கும்
சிறு தொழில்களின் பல்வேறு கூறுகளைப் பற்றிய புள்ளி விவ
ரங்கள் தேவைப்படுகின்றன. சரியாக திட்டமிடுவதற்கும்,
அபிவிருத்தி திட்டங்களை வகுப்பதற்கும் ஒருங்கிணைந்த புள்ளி
விவரங்கள் அடங்கிய அடிப்படை அமைப்பு தேவைப்படுகிறது.
பல்வேறு உற்பத்தித் துறைகளில் ஏற்கனவே உள்ள உற்பத்தித்
திறன், பொருள்களுக்குரிய சந்தை வாய்ப்பு மற்றும் விலைகள்
பற்றிய அடிப்படைத் தகவல்கள் தனியார் தொழில் முனைவர்
களுக்குத் தேவைப்படுகின்றன.

1961 ஆம் ஆண்டு வரை, தமிழ்நாட்டில் சிறுதொழில்களைப்
பற்றிய அடிப்படைத் தகவல்கள் முறையாக சேகரிக்கப்பட
வில்லை. சிறு தொழில்களிடமிருந்து விவரங்கள் சேகரித்தல்
என்பது கட்டாயப்படுத்தப்படவில்லை. மூன்றாவது ஐந்தாண்டுத்
திட்டத்தின் துவக்கமான 1961 ஆம் ஆண்டில் சிறுதொழில்
பதிவு முறை அமுலாக்கப்பட்டது. சிறு தொழில்களிடமிருந்து
அடிப்படை விவரங்கள் சேகரிக்கும் பணி முதலில் அமுலாக்கப்
பட்டது. தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள சிறு தொழில்
களைப் பற்றிய விவரமான புள்ளி விவரங்களை சேகரிப்பதற்
காகவே, தொழில் வணிக இயக்ககத்தில் ஆய்வு மற்றும் புள்ளி

விவரப் பிரிவு ஏற்படுத்தப்பட்டது. கடந்த 22 ஆண்டுகளில், மாநிலத்தில் சிறு தொழில்களின் வளர்ச்சி போற்றத்தக்கதாக உள்ளது. 1961-ல் 3,000 சிறுதொழில் நிலையங்களே இருந்தன. இது 31-12-83-இல் 48,667 ஆக உயர்ந்துள்ளது. இவை சுமார் 5.50 இலட்சம் பேருக்கு வேலையளிக்கின்றன. தொழில் முனைவர்கள் தொழில் துவக்குவதை எளிதாக்கும் பொருட்டு. அனைத்திந்திய அடிப்படையில் சிறு தொழில் பதிவுமுறையை அரசு மாற்றி அமைத்துள்ளது. தொழில் முனைவர்கள் தொழில் நிலையங்களை அமைப்பதற்காக, எல்லா விதமான துவக்க நடவடிக்கைகளையும் எடுக்கும் பொருட்டு, 1983-84 ஆம் ஆண்டில் 31-12-83 முடிய தற்காலிக வகையின் கீழ், 29,725 தற்காலிக சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

இத்துறையின் புள்ளி விவரப் பிரிவு, கீழ்க்கண்ட செயல்களின் மூலமாக புள்ளி விவரத் தேவைகளை நிறைவேற்றி வருகிறது.

1. பதிவு விவரங்களைச் சேகரித்தல்;

2. ஆண்டு புள்ளி விவரங்களைச் சேகரித்தல்;

3. சிறு தொழில் துறையில், மாத அறிக்கைகள் சேகரித்து பொருள் உற்பத்தித் திறனைக் கண்டறிதல்;

4. சிறு தொழில் கணக்கெடுப்பு முன் ஆய்வு.

(1) சிறுதொழில்கள் பதிவு விவரங்கள் சேகரித்தல்.

சிறு தொழில் நிலையமாக பதிவு செய்வதன் மூலம் அரசு மற்றும் இதர நிறுவனங்களிடமிருந்து அனைத்து உதவிகளையும் பெற வழியேற்படுகிறது. சிறு தொழில் பதிவு அளிக்கப்பட்ட விண்ணப்பங்களின் நகல்களைப் களப் பணியாளர்களிடமிருந்து பெறப்படுகின்ற பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து சிறு தொழில் களின் விவரங்களும் சேகரிக்கப்பட்டு அவற்றை புள்ளி விவர வங்கியில் (கார்டக்ஸ்) பராமரிக்கப்படுகின்றன. கார்டக்ஸ் முறையிலுள்ள விவரங்களைக் கொண்டு சிறுதொழில் பேரேடுகள் வெளியிடப்பட்டுள்ளன. இதுவரை, இத்துறை 4 சிறுதொழில் பேரேடுகளை (Direc tories) வெளியிட்டுள்ளது. அவைபின்வருமாறு:

தமிழ்நாடு சிறு தொழில் பேரேடு

| | |
|---|---|
| I வது பதிப்பு .. .. .. | 1962 |
| II வது பதிப்பு .. .. .. | 1965 |
| II வது பதிப்பிற்கு துணை வெளியீடு .. | 1969 |
| வது பதிப்பு .. .. .. | 1981 |



1981, 82, 83 ஆம் ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட சிறு தொழில் நிலையங்களின் விவரங்கள் அடங்கிய அட்டவணை களைக் கொண்டு, III வது பதிப்பு திருத்தியமைக்கப்பட்டு வருகிறது.

மாநிலத்தில் சிறு தொழில்கள் அடைந்துள்ள வளர்ச்சி மற்றும் சிறு தொழில் துறையில் அமைந்து கிடக்கின்ற வளங்கள் பற்றி பொது மக்கள் அறிந்து கொள்வதற்கு இந்த சிறு தொழில் பேரேடுகள் மிக்க உதவியாக உள்ளன.

(2) வருடாந்திர உற்பத்தி பற்றிய புள்ளிவிவரங்கள் திரட்டுதல்.

பதிவு செய்யப்படுகின்றபொழுது தொழில் நிலையங்கள் அனைத்தும் ஒவ்வொரு நிதியாண்டு இறுதியிலும் குறிப்பிட்ட படிவத்தில், வருடாந்திர உற்பத்தி புள்ளி விவரங்களை இயக் ககத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். கட்டாயமற்ற முறை யில் இந்த புள்ளி விவரங்கள் சேகரிக்கப்படுவதால், இந்த விவரங்கள் அரசுக்கு அனுப்பப்படுவதில் அடங்கியுள்ள முக்கியத் துவத்தை சிறு தொழில் நிலையங்கள் புரிந்து கொள்ளவில்லை. எனினும், இந்த இடர்பாடுகளைப் போக்கி, அளிக்கவல்ல தகவல்களின் தரத்தை மேம்படுத்த அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(3) சிறுதொழில் துறையில் தொழிலியல் உற்பத்தித்திறன் பற்றி மாதாந்திர கணிப்பு.

சிறு தொழில் துறையில் மாதாந்திர அடிப்படையில் உற் பத்தித்திறன் கணக்கெடுக்கும் சிறப்பு வேலை, சனவரித் திங்களி லிருந்து மேற்கொள்ளப்பட்டுள்ளது. 10 சதவீத அளவுக்கு இந்த கணக்கெடுப்பு நடத்தி அதன் அடிப்படையில் உற்பத்தி அளவு மதிப்பிடப்படுகிறது. இப்பணி 1-1-84 இல் துவங்கி, ஓராண் டுக்குள் முடிவடையும். சென்னை அலுவலகங்களிலிருந்து அனுப் பப்பட்ட இரண்டு புள்ளி விவர ஆய்வாளர்கள் இது சம்பந் தப்பட்ட துவக்க வேலையினை கவனித்து வருகின்றனர்.

(4) கணக்கெடுப்பு-மாதிரிப் பொருள் ஆய்வு.

1974 ஆம் ஆண்டில், நடத்தப்பட்ட சிறுதொழில் கணக்கெடுப் பின் மூலம் சேகரிக்கப்பட்ட விவரங்களைப் புதுப்பிக்கும் பொருட்டு 1977 ஆம் ஆண்டில் சிறுதொழில் கணக்கெடுப்பு-மாதிரிப்பொருள் ஆய்வு திட்டம் ஒன்றை, அரசு கொண்டு வந்தது. இத்திட்டத்தின் இதர நோக்கங்களாவன:

(1) 20 சதவீத மாதிரி ஆய்வுகளின் பேரில் சிறு தொழில் களின் உள்ளபடியான வளர்ச்சியை கணிப்பது.

(2) சிறு தொழில் துறையில் நலிந்துள்ள தொழில் நிலை யங்களைப் பற்றிய ஆய்வு.

(3) மூலப்பொருள்கள் மற்றும் நிதி ஆகியவற்றின் தேவை யினை மதிப்பிடுதல்.

(4) தேசிய அளவில் முறையான ரீதியில் சிறுதொழில்களை வளர்ச்சியுறச் செய்வதற்காகத் திட்டமிடும் வகையில் சிறு தொழில் துறையிலுள்ள தொழில் நிலையங்களிடமிருந்து தொடர்ச்சியாக விவரங்கள் வந்தடைய வழிவகுப்பது.

கடந்த ஐந்தாண்டுகளில் எந்த அளவுக்கு சிறு தொழில்கள் வளர்ந்துள்ளன என்பது பின்வருமாறு:—

| | சிறு தொழில் நிலையங்களின் எண்ணிக்கை. |
|---|---|
| 31-12-1978 .. .. | 21,273 |
| 31-12-1979 .. .. | 34,320 |
| 31-12-1980 .. .. | 33,883 |
| 31-12-1981 .. .. | 40,830 |
| 31-12-1982 .. .. | 45,158 |
| 31-12-1983 .. .. | 48,667 |



அட்டவணை—I.

படித்து வேலையற்ற இளைஞர்களுக்கு சுய வேலை வாய்ப்பளிக்கும் திட்டம் 9—3—1984 முடிய முன்னேற்ற அறிக்கை.

| மாவட்ட தொழில் மையத்தின் பெயர். | பெறப்பட்ட மொத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை. | திறனாய்வுக் குழுவினால் வங்கிகளுக்கு பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை. | | வங்கிகளால் ஒப்புதலளிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை. | |
|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை. | தொகை (ரூபாய் இலட்சத்தில்). | எண்ணிக்கை. | தொகை (ரூபாய் இலட்சத்தில்). |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 செங்கல்பட்டு (இருப்பு) காஞ்சிபுரம் .. .. | 3,562 | 3,331 | 532·07 | 568 | 94.53 |
| 2 தர்மபுரி .. .. | 3,388 | 575 | 88.92 | 91 | 19.06 |
| 3 கன்னியாகுமரி (இருப்பு) நாகர்கோவில் .. .. | 5,210 | 1085 | 130.46 | 244 | 25.90 |
| 4 புதுக்கோட்டை .. .. | 3,944 | 721 | 83.60 | 267 | 32.20 |
| 5 இராமநாதபுரம் (இருப்பு) மதுரை .. .. | 11,401 | 1579 | 190.08 | 346 | 45.34 |

| (1) | | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|---|
| 6 சேலம் | .. .. | 27,050 | 2,921 | 433.86 | 1089 | 175.0 |
| 7 தென்னார்க்காடு கடலூர் | (இருப்பு) .. .. | 9,221 | 1,456 | 212.14 | 530 | 69.91 |
| 8 திருநெல்வேலி | .. .. | 9,783 | 1,053 | 141.65 | 660 | 96.58 |
| 9 கோயமுத்தூர் | .. .. | 30,545 | 3,717 | 625.85 | 820 | 144.59 |
| 10 மதுரை | .. .. | 18,485 | 8,198 | 262.90 | 951 | 129.28 |
| 11 வட ஆற்காடு வேலூர் | (இருப்பு) .. .. | 11,524 | 2,899 | 501.86 | 418 | 78.81 |
| 12 பெரியார் | (இருப்பு) ஈரோடு | 10,063 | 1,111 | 166.76 | 336 | 49.68 |
| 13 தஞ்சாவூர் | .. .. | 8,688 | 1,239 | 150.92 | 474 | 65.18 |
| 14 திருச்சிராப்பள்ளி | .. .. | 12,294 | 2,122 | 315.30 | 456 | 76.77 |
| மொத்தம் | .. | 1,65,158 | 25,707 | 3,836·37 | 7,250 | 1,102.83 |



## அட்டவணை—II.

மாவட்ட தொழில் மையங்களின் முன்னேற்றம் பற்றிய அறிக்கை 1—4—1983 முதல் 31—12—1983 முடிய.

| மாவட்ட தொழில் மையம். | | வழங்கப்பட்ட சிறு தொழில் சான்றிதழ்கள். நிரந்தர மானவை. | வழங்கப்பட்ட சிறு தொழில் சான்றிதழ்கள். தற்காலிக மானவை. | வேலை வாய்ப்பு. | உற்பத்தியைத் துவங்கிய கைவினைத் தொழில்கள் மற்றும் கைத்திறன் தொழில்கள். | வேலை வாய்ப்பு. |
|---|---|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 செங்கற்பட்டு | .. .. | 322 | 1,252 | 5,417 | 29 | 124 |
| 2 தர்மபுரி | .. .. | 64 | 549 | 725 | 144 | 432 |
| 3 கன்னியாகுமரி | .. .. | 61 | 376 | 1,782 | 194 | 329 |
| 4 புதுக்கோட்டை | .. .. | 76 | 431 | 971 | .. | .. |
| 5 இராமநாதபுரம் | .. .. | 172 | 839 | 2,182 | 200 | 1,376 |
| 6 சேலம் | .. .. | 353 | 1,164 | 4,440 | 378 | 1,650 |
| 7 தென்னார்க்காடு | .. .. | 123 | 482 | 1,488 | 477 | 954 |
| 8 திருநெல்வேலி | .. .. | 94 | 631 | 1,148 | 508 | 930 |

| (1) | | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|---|
| 9 | கோயமுத்தூர் .. .. | 590 | 2,033 | 7,009 | 538 | 1,434 |
| 10 | மதுரை .. .. | 125 | 1,306 | 1,437 | 291 | 751 |
| 11 | வட ஆற்காடு .. .. | 285 | 1,205 | 3,503 | 364 | 1,471 |
| 12 | பெரியார் .. .. | 198 | 691 | 2,377 | 122 | 408 |
| 13 | தஞ்சாவூர் .. .. | 140 | 401 | 1,680 | 189 | 511 |
| 14 | திருச்சிராப்பள்ளி .. .. | 212 | 1,152 | 2,544 | 372 | 744 |
| | மொத்தம் .. | 2,815 | 12,512 | 36,653 | 3,806 | 11,114 |



அட்டவணை—II— தொடர்ச்சி.

மாவட்ட தொழில் மையங்களின் முன்னேற்றம் பற்றிய அறிக்கை 1—4—1983 முதல் 31—12—1983 முடிய.

| மாவட்ட தொழில் மையம். | | வங்கிகளின் மூலம் நிதியுதவி. | | டி.ஐ.ஐ.சி., சிட்கோ என்.எஸ்.ஐ.சி., கதர் வாரியம் போன்ற இதர நிறுவனங்களின் மூலம் நிதியுதவி. | |
|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை. | தொகை. | எண்ணிக்கை. | தொகை. |
| (1) | | (7) | (8) | (9) | (10) |
| | | | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1 | செங்கற்பட்டு .. .. | 97 | 36.66 | 177 | 163.19 |
| 2 | தர்மபுரி .. .. | 8 | 11.50 | 40 | 12.18 |
| 3 | கன்னியாகுமரி .. .. | 82 | 6.95 | 56 | 13.17 |
| 4 | புதுக்கோட்டை .. .. | 11 | 30.83 | 29 | 7.45 |
| 5 | இராமநாதபுரம் .. .. | 18 | 35.15 | 123 | 49.23 |
| 6 | சேலம் .. .. | 45 | 17.94 | 59 | 49.00 |

| | (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|---|
| 7 | தென்னார்க்காடு .. | 19 | 12.29 | 347 | 37.46 |
| 8 | திருநெல்வேலி .. | 195 | 32.30 | 43 | 29.65 |
| 9 | கோயமுத்தூர் .. | 130 | 108.95 | 577 | 148.80 |
| 10 | மதுரை .. | 69 | 63.51 | 17 | 2.76 |
| 11 | வட ஆற்காடு .. | 111 | 39.64 | 388 | 250.44 |
| 12 | பெரியார் .. | 77 | 5.62 | 31 | 17.94 |
| 13 | தஞ்சாவூர் .. | 47 | 7.31 | 10 | 7.39 |
| 14 | திருச்சிராப்பள்ளி .. | 56 | 24.63 | 104 | 106.78 |
| | மொத்தம் .. | 965 | 433.28 | 2,000 | 895.44 |



### பட்டு வளர்ச்சித் துறை.

இம்மாநிலத்தில் பட்டுத் தொழில் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு 1979-ம் ஆண்டு தனியாக பட்டு வளர்ச்சி இயக்குநரகம் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இத்தொழில் கிராமப்புறப் பகுதிகளில் அதிக பட்ச வேலை வாய்ப்பு கொடுக்கக் கூடிய ஒரு தொழிலாகும். கடந்த நான்கு ஆண்டுகளாக அரசு எடுத்துக் கொண்ட, பெரும் முயற்சியின் பலனாக 1979 ஏப்ரல் மாதம் 21,419 ஏக்கர் பரப்பளவு என்ற நிலையிலிருந்து சனவரி 1984 முடிய 61,242 ஏக்கர் பரப்பளவில் முசுக்கொட்டை செடி சாகுபடிக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. அதற்கு தகுந்தாற்போல் கச்சாப்பட்டு உற்பத்தியும் அதிகரித்துள்ளது.

2. இருப்பினும், தேவைக்கேற்ற அளவு பட்டு உற்பத்தி அதிகரிக்கப்படவில்லை. நமது தேவைக்கு இன்னமும் கர்நாடக மாநிலத்தை எதிர்பார்க்க வேண்டியுள்ளது. ஏழாவது ஐந்தாண்டு திட்டக் கால முடிவில் பட்டு உற்பத்தியில் இம்மாநிலம் தன்னிறைவு அடையும் நிலை எதிர்பார்க்கப்படுகிறது. இதைக் கருத்தில் கொண்டு முசுக்கொட்டை செடி சாகுபடியின் பரப்பளவை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

3. 1984-85 ஆம் ஆண்டில் 5,000 ஏக்கர் பரப்பளவில் முசுக்கொட்டை செடி சாகுபடிக்கு கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளது. 3,000 சிறு மற்றும் நடுத்தர விவசாயிகளுக்கு மானிய விலையில் விதைக் குச்சிகள் வழங்கவும், புழு வளர்ப்பு சாதனங்கள் வாங்குவதற்கும், புழு மனை கட்டுவதற்கு மானியம் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. ஏற்கெனவே நடைமுறையில் உள்ள விவசாயிகளுக்கான பயிற்சித் திட்டம் தொடர்ந்து அமல் படுத்தப்படுகிறது. சுமார் 3,000 விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

4. தற்போது விதைக்குச்சிகள் பெரும்பாலும் எல்லா மாவட்டங்களிலும் ஆங்காங்கே கிடைக்கும் என எதிர்பார்ப்பதால் இந்த மானிய திட்டத்தில் மாற்றம் செய்யப்பட்டு எல்லா மாவட்டங்களிலும் புதிதாக முசுக்கொட்டைச் செடி பயிரிடும் விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 100 விதம் வளர்த் தொகை 1984-85 ஆம் ஆண்டு முதல் அளிக்கத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

5. 1984-85 ஆம் ஆண்டு முதல் விவசாயிகள் பயிற்சித் திட்டத்தில் ஒரு மாற்றம் செய்யப்பட்டு விவசாயிகள் பயிற்சி [illegible] 2 மாதமாக குறைக்கப்படுகிறது. அதேபோல பயிற்சி காலம் [illegible] ரூ. 150-லிருந்து ரூ. 180 ஆக உயர்த்தப்படுகிறது. [illegible] தொகை ரூ. [illegible] புழு வளர்ப்பு பண்ணை [illegible] முடிந்த [illegible] தேவைக்கேற்றவாறு [illegible] போது [illegible] வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு [illegible] அளவில் வழங்க

ரூ. 400 மதிப்புள்ள உபகரணங்களை பயிற்சியில் சேரும்
ஒவ்வொரு விவசாயிக்கும் இலவசமாக வழங்க திட்டமிடப்
பட்டுள்ளது.

6. இத்துறைக்கு தேவைப்படும் தொழில் நுட்ப அலுவலர்
களை பெறுவதற்கான பயிற்சி முறை தொடர்ந்து கோவை
தமிழ்நாடு விவசாயப் பல்கலைக் கழகத்திலும், ஒசூர் அரசு பட்டுத்
துறை பயிற்சிப் பள்ளியிலும் அமுல்படுத்தப்படவிருக்கிறது.
1984-85-ம் ஆண்டில் 40 பட்டதாரிகளுக்கும் 100 பட்டதாரி
அல்லாத நபர்களுக்கும் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.
40 பட்டதாரிகள் கோவை, தமிழ்நாடு விவசாயப் பல்கலைக்
கழகத்தில் 11 மாத கால பயிற்சி அளிக்கப்படும். பயிற்சி
காலத்தில் ரூ. 150 பயிற்சி உதவித் தொகை அளிக்கப்படும்.
இதே போல், ஒசூர் பட்டுத்துறை பயிற்சிப் பள்ளியில் 100
பட்டதாரி அல்லாத மாணவர்களுக்கு 6 மாத கால பயிற்சி
அளிக்கப்படும். பயிற்சி காலத்தில் ரூ. 150 பயிற்சி உதவித்
தொகையாக வழங்கப்படுகிறது. பயிற்சி முடித்த பட்டதாரி
கள் இத்துறையில் வேலை காலி ஏற்படுகின்ற காலத்தில்
உதவி ஆய்வாளர்களாகவும், பட்டதாரி அல்லாத பயிற்சியாளர்
கள் பட்டு விளக்குநர்களாகவும் நியமிக்கப்படுவார்கள்.

கோவை மாவட்டத்தில் பட்டு வளர்ச்சி மேலும் அபிவிருத்தி
செய்யும் பொருட்டு ஒரு இரு சுழற்சி விதைப் பண்ணை ரூ. 15.06
இலட்சம் முதலீட்டில் உடுமலைப்பேட்டையில் ஆரம்பிக்க திட்ட
மிடப்பட்டுள்ளது. மற்றும் மானாவரி நிலங்களில், முசுக்
கொட்டைச் செடி பயிரிடுவதற்கு வசதியாக, வேரூன்றிய முசுக்
கொட்டை செடி உற்பத்தி செய்து, விவசாயிகளுக்கு வழங்க
திட்டமிடப்பட்டுள்ளது. 6-வது திட்ட கால முதல் மூன்று
ஆண்டுகளில் வித்தகங்களை அபிவிருத்தி செய்ய அனுமதிக்கப்
பட்ட கட்டிடப் பணிகள் யாவும் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன.
எனவே 1984-85 ஆம் ஆண்டு முதல் முழு அளவில் வித்தகங்கள்
முட்டை உற்பத்தி பெருக வாய்ப்புள்ளது. 1984-85 ஆம்
ஆண்டு இறுதியில் முட்டைத் தொகுதிகள் உற்பத்தி தற்போது
உள்ள 180 இலட்ச அளவிலிருந்து 200 இலட்சம் ஆக உயர்த்த
திட்டமிடப்பட்டுள்ளது. கூடுதலாக சுமார் 25,000 நபர்களுக்கு
வேலை வாய்ப்பு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
மாநிலத் திட்டப் பணிகளுடன், மலைவாழ் மக்கள் மேம்பாட்டுப்
பணித் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்,
மற்றும் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டங்
களின் மூலமும் பட்டுத் தொழில் வளர்ச்சிக்கான திட்டங்கள்
செயலாக்கப்பட்டு வருகின்றன. பட்டு வளர்ச்சித் தொழில் ஒரு
கிராமப்புற முன்னேற்ற தொழிலாக செயல்பட்டு வருவதால்,
தொழில் முன்னேற்றத்திற்கு தொடர்ந்து உதவி அளிப்பது
அரசின் கொள்கையாகும். 1984-85 ஆம் ஆண்டுக்கு இத்துறைக்கு
ரூ. 267.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



தமிழ்நாடு கைத்திறப் பொருள் வளர்ச்சி நிறுவனம்.

தமிழ்நாடு கைத்திறப் பொருள் வளர்ச்சி நிறுவனம்
1973-ல் நிறுவப்பட்டது. கைவினைஞர்களுக்கு தொழில்நுட்ப
உதவி, தொழில் வளர்ச்சிக்கான உதவிகள் அளிப்பதன் மூலமும்
அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை நிலையங்
கள் மூலம் விற்பனை செய்வதன் மூலமும் இம்மாநிலத்தில்
கைவினைப் பொருட்கள் தொழில் வளர்ச்சியில் தனியானதோர்
எழுச்சியை உருவாக்கி மேம்பட்டு வளர்ச்சி அடைவதை முக்கிய
நோக்கமாகக் கொண்டு இந்த நிறுவனம் தனியாக அமைக்கப்
பட்டது.

இந்நிறுவனம் முக்கியமாக கைவினை கலைஞர்களுக்கு விற்
பனை உதவி அளிக்க தமிழ்நாட்டிலும் இதர மாநிலங்களில் உள்ள
விற்பனை நிலையங்கள் வாயிலாக தொடர்ந்து பாடுபட்டுக்
கொண்டு வருகின்றது. இதைத்தவிர, இந்நிறுவனம் இந்தியாவி
லுள்ள எல்லா முக்கியமான நகரங்களிலும் பொருட் காட்சிகள்
நடத்துவதோடு இல்லாமல் தமிழ்நாட்டு கைத்திறன் திறமையை
பறைசாற்றுவதற்காக அரசு மற்றும் இதர தனியார் நிறுவனங்கள்
நடத்தும் வர்த்தகப் பொருட்காட்சிகளிலும் கலந்துகொள்கிறது.
இப்பொருட்காட்சிகள் வியாபார ரீதியில் வெற்றிகரமாகவும்,
தமிழ்நாட்டின் கைவினைஞர்களின் திறமையை பறைசாற்ற
ஒரு வாயிலாகவும் விளங்கின. 1983-84 ஆம் ஆண்டில் நமது
நாட்டில் இதுவரை 19 பொருட்காட்சிகள் அமைக்கப்பெற்றன.
பம்பாய், பங்களூர் மற்றும் திருவனந்தபுரத்தில் நடத்திய இந்த
பொருட்காட்சிகள் மூலம் தமிழ்நாட்டில் கைவினைப் பொருட்கள்
முதன் முறையாக மேற்கண்ட நகரங்களில் அறிமுகப் படுத்தப்
பட்டது. இந்நிறுவனம் தமிழ்நாட்டிலுள்ள விற்பனை நிலையங்
கள் மூலமாக 10 பொருட் காட்சிகளையும் நடத்தியது. இதைத்
தவிர, தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு இடங்களில் அரசு
மற்றும் உள்ளாட்சிகள் நடத்திய பொருட்காட்சிகளிலும் பங்கு
பெற்றது.

1983-84-ல் இந்நிறுவனம் திருப்பதியில் ஒரு விற்பனை நிலை
யத்தை துவக்குவதற்கு கைவினைப் பொருட்கள் வளர்ச்சி ஆணை
யரிடம் இருந்து நிதியுதவி பெற்றுள்ளது. அவ்விற்பனை நிலை
யம் விரைவில் செயல்பட உள்ளது. சென்னை மற்றும் மதுரை
விற்பனை நிலையங்களை புதுப்பிக்க 50 சதவிகித நிதியுதவி
பெறப்பட்டுள்ளது. அந்த வேலைகள் விரைவில் துவங்க உள்ளன.

கைவினைப் பொருட்கள் தொழிலில் பொதுவாக தேக்க நிலை
இருந்தும் கூட, தமிழ்நாடு கைத்திறப் பொருட்கள் வளர்ச்சி
நிறுவனம் மேலே குறிப்பிட்ட முயற்சிகளின் காரணமாக
கைவினைப் பொருட்கள் விற்பனை மட்டும் ஒரு நிலையிலேயே
இருந்து வருகின்றது. கைவினைப் பொருட்கள் அல்லாத மற்றப்
பொருட்களை வியாபாரம் செய்யலாகாது என்ற அரசின்

கொள்கையை தீவிரமாக கடைபிடித்து வந்துள்ளதை கவனத்தில்
கொண்டு பார்க்கையில் இந்த வளர்ச்சியின் அளவு பாராட்டுக்குரி
யது. 1982-83-ல் விற்பனை ரூ. 231 இலட்சத்தை எட்டியுள்ளது.
இதில் புடவை விற்பனை மூலம் கிடைத்த ரூ. 25.00 இலட்சமும்
சேர்ந்துள்ளது. 1983–84–ல் இதுவரை வாணிபத் தொகை ரூபாய்
183.00 இலட்சங்கள் எட்டியுள்ளது. 1983–84 மற்றும் 1984–85
ஆண்டின் விற்பனை முறையே ரூ. 210.00 இலட்சம் மற்றும்
ரூ. 225.00 இலட்சம் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
இந்நிறுவனம் 1979–80 ஆம் ஆண்டிலிருந்து இலாபம் பெற்றுவர
ஆரம்பித்துள்ளது, இந்நிறுவனம் 1982–83-ல் சுமார் ரூ. 5.00
இலட்சம் இலாபம் ஈட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இலாபம்
ஈட்டுகின்ற இந்த நிலை வருகின்ற ஆண்டுகளிலும் தொடர்ந்து
நீடிக்கும் என்றும் எதிர்பார்க்கின்ற அதே சமயத்தில் அந்த
இலாபமானது நிர்வாக மற்றும் விற்பனைச் செலவினங்களில்
ஏற்பட்டுள்ள ஏற்றத்தினால் குறைவாக இருக்கும் என்று எதிர்
பார்க்கப்படுகிறது.

இந் நிறுவனம் கைவினைஞர்கள் உற்பத்தி செய்யும் பொருட்
களை நேரடியாக கொள்முதல் செய்து விற்பதைத் தவிர, தன்
சொந்த உற்பத்தி நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் கை
வினைப் பொருட்களையும் விற்பனை செய்துவருகிறது. 1982-83ல்
உற்பத்தி ரூ. 70.00 இலட்சமாக இருந்தது. 1983–84-ல்
ரூ. 72.00 இலட்சமாக இருக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படு
கிறது. இந்நிறுவனம் 1984–85–ல் வியாபார நிலவரத்தைப்
பொறுத்து உற்பத்தியின் அளவை ரூ. 75.00 இலட்சமாக உயர்த்த
எண்ணியுள்ளது. இந்த உற்பத்தி முயற்சியின் விளை
வாக சுமார் 250 கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்
கின்றது,

அரசுத் துறை திட்டங்கள் மூலமும் ஊரக கைவினைத் திட்
டங்கள், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டங்கள் மற்றும்
இதர திட்டங்கள் மூலமும் கைவினைஞர்களுக்கு பயிற்சி அளித்து
வருவது இந் நிறுவனத்தின் குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளில்
ஒன்றாகும். இந்நிறுவனம் 1982-83 வரையில் 1,113 நபர்
களுக்கு பல்வேறு கைவினைப் பொருள்களில் பயிற்சி அளித்
துள்ளது. 1983.84-ல் 188 நபர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.
நல்ல வேலை வாய்ப்புள்ள வைரக் கற்கள் வெட்டும் தொழில்
தற்போது பம்பாய் மற்றும் சூரத் பகுதிகளில் மட்டுமே
மிகுதியாக உள்ளது. தமிழ்நாட்டில் திருச்சியை சுற்றியுள்ள
பகுதிகளில் செயற்கைக் கற்கள் வெட்டும் தொழிலாளர்கள் பலர்
உள்ளனர். வைரம் வெட்டுதல் மற்றும் பட்டை தீட்டுதலில்,
இந்த அரசு உதவியுடன் திருச்சிராப்பள்ளியில் ஒரு பயிற்சி
நிலையத்தை துவக்க சூரத்திலுள்ள இந்திய வைர நிறுவனம்
உத்தேசித்துள்ளது. இது அரசின் பரிசிலனையில் உள்ளது.

இந் நிறுவனம் விற்பனை மற்றும் உற்பத்தியை அதிகரிக்க
பல நிறுவனங்களுடனும் தனி நபர்களுடனும் தொடர்புகொண்டு
பலவழிகளை ஆராய்ந்த வருகிறது. திருமலை—திருப்பதி





கோவிலில் ரூ. 4.00 இலட்ச மதிப்பிற்கு கல்யாண மண்டபத்தில்
பித்தளை கைப்பிடிகள் செய்ய உத்திரவு பெற்று அவ்வேலையை
செவ்வனே செய்து முடித்தது ஒரு பெருமைக்குரிய செயலாகும்.
திருமலை—திருப்பதி தேவஸ்தானத்திடமிருந்து மேலும் பல
வேலைகளுக்கான வாய்ப்புகளை இந் நிறுவனம் எதிர்பார்க்
கிறது. இதே போல் வடபழனி ஆண்டவர் திருக்கோவிலை
செப்பனிடுகின்ற திருப்பணியில தமிழ்நாடு கைத்திறன் பொருள்
வளர்ச்சி நிறுவனம் பங்குகொண்டு அருள்மிகு வடபழனி
ஆண்டவர் தேவஸ்தானத்திற்கு மரக்கதவுகள் தயார் செய்து
தர ஒத்துழைக்க உள்ளது. இந் நிறுவனம் செய்து முடித்த
பணிகளை எல்லோரும் பாராட்டுகிறார்கள்.

### தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம்.

சிட்கோ என்றழைக்கப்படும் தமிழ்நாடு சிறுதொழில்
வளர்ச்சி நிறுவனம் ஒரு தனியார் நிறுவனமாக 1970 ஆம்
ஆண்டு நிறுவப்பட்டு பின்னர் 1971 ஆம் ஆண்டு பொது நிறு
வனமாக மாற்றி அமைக்கப்பட்டது. இந்நிறுவனத்தின் முக்கிய
குறிக்கோள் தமிழகத்தில் சிறு தொழில்கள் மற்றும் சின்னஞ்
சிறு தொழில்களின் வளர்ச்சியை மேம்படுத்துவதும் அதைத்
துரிதப்படுத்துவதுமாகும்.

தமிழ்நாட்டிலுள்ள சிறுதொழில் நிறுவனங்களுக்கு அதன்
வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் உதவி செய்வதை சாத்திய
மாக்குவதற்கு தன்னை அர்ப்பணித்துக் கொண்ட அரசாங்கத்தின்
ஒரே நிறுவனமாக 'சிட்கோ' தனது 13 வருட சேவையை
பூர்த்தி செய்துள்ளது. கடந்த ஆண்டுகளில் 'சிட்கோ'விற்கு
இடப்பட்ட பணிகளாகிய தொழில் ஆரம்பிக்க அடிப்படை
வசதி செய்து கொடுத்தல். இன்றியமையாத மூலப் பொருட்
களை கொள்முதல் செய்து விநியோகித்தல், சிறு தொழில்
களுக்கு ஊக்க உதவி கொடுக்கும் திட்டங்கள், விற்பனை உதவி
செய்து கொடுத்தல் ஆகியவற்றாலும், மற்றும் அதன் செயல்கள்
பலவற்றாலும் பரந்து விளங்குகிறது. இதன் தலைமை அலு
வலகம் சென்னையில் உள்ளது. ஏறத்தாழ ஒவ்வொரு மாவட்
டத்திலும் இதன் கிளை அலுவலகங்கள் உள்ளன. மாநிலத்தில்
பல்வேறு பகுதிகளில் உள்ள 48 தொழிற்பேட்டைகளை இது
நிர்வகித்து வருகிறது.

சிட்கோவின் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ. 10.00 கோடி
யாகும். இதன் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 5.60 கோடி
யாகும்.

[1984 ஏப்ரல் 25

கீழே கொடுக்கப்பட்டுள்ள திட்டங்கள் சிட்கோவால்
1983-84-ல் நிறைவேற்றப்பட்டு வருகின்றன:—

1. தொழிற்பேட்டைகளில் அடிப்படை வசதிகள் செய்து
கொடுத்தல் இதில் அடங்குபவைகள்: தொழிற் கூடங்கள் மற்றும்
மேம்படுத்தப்பட்ட மனைகள் மற்றும் தொழில் துறையில்
பின்தங்கிய பல பகுதிகளில் சின்னஞ்சிறு தொழிற்கூடங்கள்
கட்டிக் கொடுப்பது ஆகியவைகளாகும்.

2. சிறுதொழில் பிரிவுகளின் உற்பத்தி பொருள்களுக்கு
விற்பனை வசதி செய்து கொடுத்தல்.

3. முக்கிய மூலப் பொருட்கள் கிடைக்க வகை செய்தல்.

4. மத்திய மாநில முதலீட்டு மானியம் அனுமதித்தல்.

5. வட்டி இல்லாத விற்பனை வரி கடன் அளித்தல்.

6. குறைந்த அழுத்த மின்சார கட்டண உதவி மானியம்
அனுமதித்தல்.

7. சின்னஞ்சிறு தொழில்களுக்கு விளிம்புத் தொகை
உதவி அனுமதித்தல்.

8. நலிவுற்ற சிறுதொழில் நிறுவனங்களுக்கு விளிம்புத்
தொகை அளித்தல்.

சிறுதொழில் நிறுவனங்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து
கொடுத்தல்.

1982-83 வரை, பல்வேறு தொழிற்பேட்டைகளிலும் 1,162
தொழிற்கூடங்களும், 1,732 சின்னஞ்சிறு தொழிற் கூடங்களும்
கட்டப்பட்டன.

மருந்துவகை தொழில்களுக்கு பிரத்தியேமாக 1983-84-ல்
ரூ. 370 இலட்ச மதிப்பீட்டில் ஆலத்தூரில் ஒரு தொழிற்
பேட்டையை ஆரம்பித்து முதல் படியாக முதல் பகுதியை
(1st Phase) கட்டி முடிக்கும் பணி, வளர்ச்சி அடைந்து
வருகிறது,

மேலும் 1983–84-ல் 145 தொழிற் கூடங்களுடன் முந்தைய
திட்டங்களையும் நிறைவேற்ற திட்டம் தீட்டியுள்ளது. இந்த
ஆண்டு (1983–84) 134 தொழிற் கூடங்கள் கட்டி முடிக்கப்
படும் என எதிர்பார்க்கப்படுகிறது. திட்டமிட்டபடி மொத்த
145 தொழிற்கூடங்களும் (ஆலத்தூரில் உள்ள மருந்து வகை
தொழிற்பேட்டையில் 11 தொழிற்கூடங்களைச் சேர்த்து)
கட்டி முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.



1984 ஏப்ரல் 25]

மேற்சொன்ன 145 தொழிற்கூடங்களுடன் 41 சின்னஞ்சிறு
தொழிற்கூடங்களும் 1983-84—ல் கட்டிமுடிக்கப்படும்.

1984–85-ல் 'சிட்கோ' 212 புதிய தொழிற் கூடங்களை கட்டி
முடிக்க திட்டமிட்டுள்ளது. அதில் ஆலத்தூரில் உள்ள 12 கூடங்
களும் அடங்கும். (இரண்டாவது பகுதியில் உள்ளவை) மற்றும்
கும்மிடிப்பூண்டி, ஆலத்தூர், கப்பலூர், இராணிப்பேட்டை,
அம்பத்தூர், திருப்பூர், குறிச்சி, மாத்தூர், சேலம், ராசிபுரம்,
ஓசூர், வாலாஜாபேட்டை ஆகிய இடங்களில் 130 சின்னஞ்சிறு
தொழிற்கூடங்கள் கட்டப்படவிருக்கின்றன.

பல தொழிற்பேட்டைகளில் உள்ள சிறுதொழில் நிறுவனங்
களுக்கு இதுவரை 983 மேம்படுத்தப்பட்ட மனைகள் (Deve-
loped plots) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மேம்படுத்தப்
பட்ட மனைகளுக்கு எங்கெங்கு தேவையுள்ளதோ அங்கு கிடைக்
கக்கூடிய மனைகளை மேம்படுத்தப்பட்ட மனைகளாக ஒதுக்
கீடு செய்ய 1984-85-ல் திட்டமிடப்பட்டுள்ளது.

வாடகைத் தொழிற்கூடங்களை தவணை முறையில் அளிக்கும்
திட்டத்தின் கீழ் 33 அரசு தொழிற்பேட்டைகளில் உள்ள 700
தொழிற்கூட உபயோகிப்பவர்களுக்கு இசைவு தெரிவிக்கப்
பட்டுள்ளது.

சிறு தொழில் பிரிவுகளின் உற்பத்தி பொருட்களுக்கு
விற்பனை வசதி செய்து தருதல்.

சிறுதொழில் பிரிவுகளின் உற்பத்தி பொருட்களுக்கு விற்பனை
வசதி செய்து தரும் திட்டம் 1978–79-ல் ஆரம்பிக்கப்பட்டது.
பல்வேறு அரசுத் துறைகளுக்கு உற்பத்திப் பொருட்
களை விநியோகிக்கும் பணியைத் தவிர +2 பள்ளிகளுக்கு
தேவையான கருவிகள், கல்வி ஆய்வு சாதனங்களை சிட்கோ
தொடர்ந்து விநியோகித்து வருகிறது. முதலமைச்சரின் மதிய
சத்துணவுத் திட்டத்தின் கீழ் குழந்தைகள் நல மையங்களுக்குத்
தேவையான கல்வி அறிவு சாதனங்களை சிட்கோ விநியோகித்து
வருகிறது. மேலும் பொது இயக்குநர் விநியோகம் மற்றும்
பட்டுவாடா துறைக்கு (D.G.S.D.) பொருட்களை விநியோகிக்
கும் பணியில் சிட்கோ முன்னேற்றம் அடைந்துள்ளது.
முதலமைச்சரின் மதிய சத்துணவுத் திட்டத்தின் கீழ் பல்
பொடி விநியோகிக்கும் பணியை 'சிட்கோ' தொடர்ந்து செய்து
வருகிறது,

சிட்கோவின் இடைவிடாத தொடர்ந்த முயற்சியினால்
பொது இயக்குநர் விநியோகம் மற்றும் பட்டுவாடா துறைக்கு
கீழே குறிப்பிடப்பட்டுள்ள 9 வகைப் பொருள்களுக்கு தனியான
ஒப்பந்தப்புள்ளி (Adhoc Tenders) கிடைக்கப்பெற்று சிட்கோ
விநியோகித்து வருகிறது. இதைத் தவிர கீழே குறிப்பிட்ட
ஏழு வகைப் பொருட்களுக்கு ஆண்டு விலை ஒப்பந்தங்களையும்
பெற்று வெற்றிகரமாக விநியோகித்து வருகிறது.

[1984 ஏப்ரல் 25

தனியான ஒப்பந்தப்புள்ளி மூலம் விநியோகிக்கப்பட்ட உற்பத்தி பொருட்கள்:—

1 தாழ்ப்பாள் மற்றும் திருகுமறை.

2 கடாவு ஆணி.

3 பயனற்ற பருத்தி நூல்.

4 பருத்தி உடைகள்.

5 நைலான் உறைகள்.

6 நீரில் பழுதுபடா மேலுறை காகிதம்.

7 கைக்காகிதம்.

8 புரும் கொகோ.

9 காயங்கள் கட்டும் துணி.

கிடைத்துள்ள விலை ஒப்பந்தங்கள்:—

1 மின்கடத்தா நாடாக்கள்.

2 நுரை மெத்தை.

3 நீள் சோப்புக்கள்.

4 காப்பு தீப்பெட்டி,

5 அம்மோனியா அச்சு எந்திரம்.

6 ஜீ:ஐ. ஆமைப்பூட்டு.

7 காகிதக்கோவை அறைகலன்.

1983-84-க்கான திட்டங்களும், 1984-85-க்கான கருத்தில் கொண்டுள்ள இலக்கும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| (1) | 1983-84-க்கான திட்டங்கள். (2) | 1984-85-க்கான கருத்தில் கொண்டுள்ள இலக்கு. (3) (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|---|
| 1 கிடைக்கப்பெற்ற உத்தரவுகளின் மதிப்பு. | 575 | 850 |
| 2 நிறைவேற்றப்பட்ட உத்தரவுகளின் மதிப்பு. | 600 | 757 |



1984 ஏப்ரல் 25]

இயக்குநர், பொதுநலம் மற்றும் காப்பு மருந்து, சென்னை வறட்சி நிவாரணப் பணியின் கீழ் விநியோகிப்பதற்கு பல்வேறு பொருட்களை கோரினார். இவைகள் தமிழ்நாட்டிலுள்ள 412 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு விநியோகிக்கப்பட்டன. இவைகளின் மதிப்பு ரூ. 8,500 இலட்சமாகும். மூன்று மாத கால அளவில் இவைகள் விரைவாக விநியோகிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

மத்திய மாநில முதலீட்டு மானியம் அனுமதித்தல்.—

15% முதலீட்டு மானிய திட்டம் சிறுதொழில் நிறுவனங்களுக்கு 33 வட்டங்களில் மத்திய முதலீட்டுத் மானயத் திட்டமும் 24 வட்டங்களில் மாநில முதலீட்டு மானியத் திட்டமும் தொடர்ந்து நடைபெற்றுவருகிறது.

திருத்தப்பெற்ற மத்திய முதலீட்டு மானிய திட்டம் 92 வட்டங்களில் மாநில முதலீட்டு மானியத் திட்டம் 34 வட்டங்களிலும் (நிலையூர் கிராமம் உட்பட) தற்போது அமுல்படுத்தப்பட்டு வருகின்றன. 22 வட்டங்கள் இந்த இரண்டு திட்டங்களிலும் அடங்கி உள்ளன.

மேலும் மேலே குறிப்பிட்ட இரண்டு திட்டங்களிலும் அடங்கியுள்ள பகுதிகள் தவிர மற்ற பகுதிகளில் ஆரம்பிக்கப்படும் தேர்ந்து எடுக்கப்பட்ட தொழில்களுக்கு (மின்னணு, மருந்து மற்றும் மோட்டார் வாகன துணைத் தொழில்கள்) மாநில அரசு ஒரு சிறப்பு மானியத்தை அளித்து வருகிறது.

1983-84-க்கான திட்டங்களும் 1984-85-க்கான கருத்தில் கொண்டுள்ள இலக்கும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | திட்டங்கள் 1983-84 | | கருத்தில் கொண்டுள்ள இலக்கு 1984-85. | |
|---|---|---|---|---|
| | எண்கள் | ரூபாய் இலட்சத்தில். | எண்கள் | ரூபாய் இலட்சத்தில். |
| 1 மத்திய முதலீட்டு மானியம். | 650 | 240.00 | 700 | 300.00 |
| 2 மாநில முதலீட்டு மானியம். | .. | 20.00 | .. | 50.00 |

முக்கிய மூலப் பொருட்கள் விநியோகம்.—

[illegible] தொழில் நிறுவனங்களுக்கு அரிதான மூலப்பொருட்களை [illegible] பணியை டேன்கோ மேற்கொண்டுள்ளது. இரும்பு மற்றும் எஃகு, [illegible] தீப்பெட்டி, மெழுகு, பேரபின் மெழுகு,

பொட்டாசியம் குளோரேட், மாமிச கொழுப்பு, துத்தநாகம். ஈயம் மற்றும் பலவற்றை இந்நிறுவனம் விநியோகித்து வருகிறது. கல்கரி, மெழுகு மற்றும் குளோரேட் போன்றவைகள் இந்நிறுவனத்தின் விற்பனைத் திட்டத்தில் பெரும் பங்கு வகிக்கின்றன.

1983-84—ல் தொடர்ந்து பற்றாக்குறை நிலையில் இருந்த மெழுகு மற்றும் பொட்டாசியம் குளோரேட் போன்ற பொருள்களை நேரத்திற்கு விநியோகிக்க ஏற்பாடு செய்தது மட்டுமல்லாமல் அவைகள் சீராக அதிக அளவில் கிடைப்பதற்கும் சிட்கோ ஏற்பாடு செய்தது.

1984-85-ல் கூட சிறு தொழில் நிறுவனங்களுக்கு அரிதாக கிடைக்கும் மூலப் பொருட்களை தொடர்ந்து விநியோகிக்கும் திட்டத்தை சிட்கோ மேற்கொண்டுள்ளது. 1984-85-ல் இதன் விற்பனை 1983-84—ல் எதிர்பார்க்கப்படும் ரூ. 16 கோடிக்கு பதிலாக ரூ. 20 கோடி என எதிர்பார்க்கப்படுகிறது.

சிறு தொழில்களின் முன்னேற்றத்திற்கான ஊக்க திட்டங்கள்.—

மத்திய மாநில முதலீட்டு மானிய திட்டங்கள் தவிர வட்டியில்லா விற்பனை வரிக்கடன், குறைந்த அழுத்த மின் உதவி மானியம், நலிவுற்ற தொழில்களுக்கு முன் வரம்புத் தொகை உதவி போன்ற பல திட்டங்களை சிட்கோ தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது.

இலாப நிலை:

சிட்கோ இலாபத்தில் இயங்கி வருகிறது. 1982-83-ல் இந்நிறுவனம் ரூ. 25.95 இலட்சம் இலாபத்தை ஈட்டியுள்ளது. இந்நிலை வரும் காலங்களில் தொடர்ந்து நிகழும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம்.

1. தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் மாநில அளவில் நிதியுதவி அளிக்கும் நிறுவனங்களில் முதல் நிறுவனமாக தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு நிறுவனச் சட்டத்தின் படி 1949-ம் ஆண்டு நிறுவப்பட்டது. மத்திய வங்கியும் இந்திய தொழில் வளர்ச்சி வங்கியும் அவ்வப்போது கலந்தாலோசித்தப் பின்னர் இந்திய அரசால் வெளியிடப்பட்ட அறிக்கைகளின் வாயிலாக 1951 ஆம் ஆண்டு மாநில நிதியுதவி நிறுவன சட்டத்தின் சில முக்கியமான விதித்துறை ள் தமிழ்நாடு தொழி முதலீட்டு கழக நிறுவனத்திற்குப் பொருந்தும்படியாக செய்யப்பட்டிருக்கின்றன.



இந்நிறுவனம் நிலம், கட்டிடம், தளவாடங்கள், இயந்திரங்கள் போன்ற நிலையான சொத்துக்களை வாங்குவதற்காகத் தொழில் நிறுவனங்களுக்கு நீண்டகால, நடுத்தரகால கடனுதவிகளை வழங்குவதுடன் இயந்திரங்களை வாங்குவதற்காகத் தொழில் நிறுவனங்கள செய்து கொள்ளும் ஒப்பந்தங்களுக்கு காலம் தாழ்த்தி தொகையினை திருப்பிச் செலுத்துவதற்கான உத்திரவாதமும் மேல் உத்திரவாதமும் அளிக்கிறது. மேலும் தொழில் நிறுவனங்கள் வெளியிடும் பங்குகள், கடனீட்டு உறுதிப் பத்திரங்கள் ஆகியவற்றை வாங்குவதும் அவற்றிற்கு உத்திரவாதம் அளிப்பதும் இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும்.

தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளிலுள்ள தொழில் நிறுவனங்களுக்கு, அதிலும் குறிப்பாக கிராமப் பகுதியிலுள்ள தொழில் நிறுவனங்களுக்கு பெரும் அளவில் உதவி புரியும் நோக்கத்துடன் குறைந்த வட்டி, கடனைத் திருப்பித் தர நீண்டகால கெடு, அடிப்படை நிதி உதவி முதலிய பல சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன.

சிறு தொழில்கள் குறுந் தொழில் துறைகளில் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதை ஊக்குவிப்பதற்கும் பெருமளவில் வேலை வாய்ப்பினை உருவாக்குவதற்கும் இந்நிறுவனம் சிறப்புத் திட்டங்களை தீட்டியுள்ளது. குறைந்த வட்டி வீதம், கடனை திரும்ப செலுத்த துவங்குவதற்கு நீண்டகால அவகாசம், கடனைத் திரும்பச் செலுத்த நீண்டகால கெடு, குறைந்த பிணைத் தொகை போன்ற தாராளமான எளிய நிபந்தனைகளில் இந்நிறுவனம் கடனுதவி அளிக்கிறது.

2. நிதி வாயில்கள்:—

தமிழ்நாடு அரசு, இந்திய அரசு, இந்திய தொழில் வளர்ச்சி வங்கி அளிக்கும் பங்கு மூலதனங்கள், இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் மறு நிதியுதவி கடனீட்டு உறுதிப்பத்திரங்கள், வைப்புத் தொகைகள் முதலியன இந்நிறுவனத்தின் நிதி வாயில்களாகும். 1983-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் உள்ளவாறு இந்நிறுவனத்தின் நிதிவாயில்களின் விவரம் பின்வருமாறு:—

| | (ரூபாய் கோடியில்.) |
|---|---|
| பங்கு மூலதனம் .. .. .. | 28.49 |
| கடன் பத்திரங்கள் .. .. .. | 39.31 |
| இந்திய தொழில் வளர்ச்சி வங்கியிடமிருந்து மறுநிதியுதவி. | 84.06 |
| | 151.86 |

[1984 ஏப்ரல் 2

3. செயல் முறைகளின் மேம்பாடுகள்:—

தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், கடந்த 1949-இருந்து 1978 வரையான 30 ஆண்டு காலத்தில் அளித்த உதவியினைக் காட்டிலும் 1978-83 வரையான காலகட்டத்தில் சிறு தொழில், குறுந்தொழில் நிறுவனங்களில் போற்றத்தக்க. முன்னேற்றத்தை அடைந்துள்ளதனைகீழ்க்காணும்விவரம் தெளிவுபடுத்துகிறது:—

(ரூபாய் கோடியில்.)

| காலம். | மொத்தம் அனுமதிக்கப்பட்ட தொகை. | சிறு தொழில்களுக்கு அனுமதிக்கப்பட்ட தொகை. | அனுமதிக்கப்பட்ட தொகையில் சிறு தொழில்களுக்கு அனுமதிக்கப்பட்ட உதவித் தொகையின் சதவீதம். | வழங்கப்பட்டது. |
|---|---|---|---|---|
| 1949–78 | 118.77 | 33.85 | 28.5 | 74.51 |
| 1978–79 .. | 12.06 | 5.80 | 48 | 9.05 |
| 1979–80 .. | 17.19 | 8.86 | 52 | 10.67 |
| 1980–81 .. | 36.90 | 22.68 | 61 | 22.59 |
| 1981–82 .. | 52.13 | 44.44 | 85 | 35.07 |
| 1982–83 .. | 55.87 | 48.59 | 87 | 39.56 |
| | 174.15 | 130.37 | 74.8 | 116.94 |

முக்கிய செயல்பாடுகளும், சாதனைகளும் (1983-84).—

(அ) தொழில் முன்னவர்களின் தேவைகள் மாவட்ட அளவிலேயே நிறைவு செய்யப்பட வேண்டி, மண்டல, கிளை அலுவலர்களுக்கு அதிகாரங்கள் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளன. இதன்படி 1980-81 ஆம் ஆண்டு மாவட்ட அளவிலான கிளை அலுவலர்கள் ரூ. 25,000 வரை கடனுதவி அளிக்க அனுமதிக்கப்பட்டிருந்த அதிகாரம், 1982-83 ஆம் ஆண்டு சுமார் ஒரு இலட்சம் ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதைத் தவிர, ஆவணங்கள் வைத்து வருதல், ரூபாய் ஐந்து இலட்சம் வரை கடன் தொகைகளை அளித்தல் முதலிய பணிகள் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளன.



1984 ஏப்ரல் 25]

மேலும் 1983-84 ஆம் ஆண்டு 4 மண்டல அலுவலங்கள் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி ஆகிய இடங்களில் துவங்கப்பட்டு கடனுதவித் தொகை ரூபாய் ஒரு லட்சத்திலிருந்து ரூபாய் 2.5 இலட்சம் வரை அளிக்க அதிகாரம பிரித்து அளிக்கப்பட்டுள்ளது, இதைத் தவிர, ஆவணங்கள் வைத்து வருதல், மற்றும் கடன் தொகைகளை அளித்தல் சுமார் ரூபாய் 7.5 இலட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்திற்கென மானாமதுரையில் ஒரு கிளை அலுவலகம் திறக்கவும் அரசு அண்மையில் ஒப்புதல் அளித்துள்ளது. இதன்மூலம் சிறுதொழில் நிறுவனங்கள் கடனுதவியினை எளிதில் பெறவும், மாவட்ட அளவிலேயே துரிதமாக கடனுதவி பெறவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

(ஆ) தொழில் முனைவோருக்கு ஆலோசனை அளிக்கும் பிரிவு சென்னையிலுள்ள தலைமையகத்தில் துவக்கப்பட்டுள்ளது. இதன் வாயிலாகப் பல்வேறு தொழில் துறைகளுக்கு அளிக்கப்படும் உதவித் தொகைகள், ஊக்குவிப்புத் தொகைகள், மானியங்கள், மற்றும் பல்வேறு வகைப்பட்ட உதவிகள், சலுகைகள் முதலியவற்றை அறிய வாய்ப்பு எற்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் தொழில் முனைவோர் குறிப்பாக சிறு தொழில் முனைவோர், தொழில் துவங்குவதற்குரிய ஊக்கத்தையும் உற்சாகத்தையும் பெற்று வருகிறார்கள் என்பது வெள்ளிடைமலை.

(இ) மத்திய, மாநில அரசுகள் தகுதி வாய்ந்த தொழில் வினைஞர்களுக்கு மானியம் அளிக்கின்றன. இத்தொகையினை தொழில் முனைவோர் மேற்கூறிய அரசுகள் ஒப்புதல் அளித்த பிறகே பெற இயலும். ஒப்புதல் அளிக்க காலதாமதம் ஏற்படின் இடைக் கால கடன் அளிக்கப்பட்டு அதற்கான வட்டித் தொகையினையும் செலுத்த வேண்டி இருந்துள்ளது. இதன் காரணமாக தொழில் முனைவோர் பெருந்துன்பத்திற்கு ஆளாக வேண்டியுள்ளது. இந்நிறுவனம் தொழில் முனைவோரின் இத்தகைய துன்பத்தினை நீக்க வேண்டிய தன்னுடைய சொந்த தொகையிலிருந்து நேரடியாக ஒரு பகுதித் தொகையை இடைக்கால கடனாக அளிக்கின்றது. இந்த இடைக்காலக் கடன் தொகைக்கான வட்டி வீதம், மற்றும் இதர செலவுகளை இந்நிறுவனமே மேற்கொள்ளுகிறது. இதனால் தொழில் முனைவோர் குறிப்பாக சிறு தொழில், குறுந்தொழில் முனைவோருக்கும் நேரமும், பணமும், விரையமாகாமல் தடுக்கப்பட்டுள்ளதால் தங்களுடைய முழு கவனத்தையும் தொழில் வளர்ச்சியில் செலுத்த முடிகிறது.

(ஈ) முதலாவதாகத் தொழில் துவங்கும் தொழில் முனைப்பாளர், தொழில் நுணுக்க வல்லுநர்கள் தொழில் நுணுக்க இயல் பட்டம்/சான்றிதழ்கள் பெற்றோர் பல்வேறு தொழில் இயல்புகளில் முன் அனுபவம் திறன் கொண்டவர்கள் தாங்களாகவே தொழில் நிலையங்களை அமைக்க ஊக்குவிப்பதற்காக சுலபக் கடன் திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இச்சுலபக் கடன்

தொகையைப் பெறுவதற்கு தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதியிலுள்ளவர்களுக்கு 15 சதவீதமும் ஏனைய பகுதியிலுள்ள வர்களுக்கு 10 சதவீதமுமாக கொடுத்து வந்த நிலை மாறி தற் போது அனைவரும் இச்சலுகையினைப் பெற வழி வகை செய்யப் பட்டுள்ளது.

4. வேலை வாய்ப்புத் திட்டம்;

இந்நிறுவனத்தால் உதவிப்பெற்ற தொழில் நிறுவனங்கள் மூலம் வேலை வாய்ப்பு பெற்றோர்களின் எண்ணிக்கை பின் வருமாறு:—

| வருடம். | எண்ணிக்கை. |
|---|---|
| 1978—79 .. .. .. .. .. | 13,670 |
| 1979—80 .. .. .. .. .. | 19,626 |
| 1980—81 .. .. .. .. .. | 42,000 |
| 1981—82 .. .. .. .. .. | 52,000 |
| 1982—83 .. .. .. .. .. | 37,000 |

5. பல்வேறு திட்டங்களின்கீழ் அளிக்கப்பட்ட உதவித் தொகை பின்வருமாறு:—

(ரூபாய் கோடியில்.)

| | |
|---|---|
| சிறு தொழில்கள் .. .. .. .. | 24.19 |
| நடுத்தரத் தொழில்கள் .. .. .. | 3.66 |
| தொழில் நுட்ப வல்லுநர்கள் .. .. | 0.58 |
| போக்குவரத்து உரிமையாளர்கள் .. .. | 5.14 |
| மின் உற்பத்திப் பொறிகள் | 0.76 |
| பதிவு பெற்ற மருத்துவர்கள் .. .. | 0.07 |
| சின்னஞ்சிறிய மற்றும் கூட்டுக் கடனுதவி .. | 0.15 |

6. முன்னேறத் துடிக்கும் தொழில் முனைவர்களுக்கு நிறைவேற்றக் கூடிய திட்டங்களை செயலாக்கும் பொருட்டு இந்நிறுவனம் விரைவாக உதவி அளிப்பதில் தொடர்ந்து முயன்று வருகிறது.





## தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்.

தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (டான்சி) தொழில் வணிகத் துறையின் கீழ் இயங்கி வந்த சிறு தொழில் பிரிவுகளை 1-12-1965 முதல் தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டது. பொருளாதார முறையில் தனித்தியங்கக்கூடிய வகையில் அவற்றை இயங்கச் செய்வதே இதன் நோக்கமாகும்.

2. 31-3-1983 ஆம் நாளன்றுள்ளபடி, இந்நிறுவனத்தின் மூலதனம் மற்றும் கடன் குறித்த விவரங்கள் வருமாறு:—

(ரூ. கோடியில்.)

| | |
|---|---|
| 1. அனுமதிக்கப்பட்ட மூலதனம் .. | 10.00 |
| 2. செலுத்தப்பட்ட மூலதனம் .. .. | 7.81 |
| 3. அரசிடம் பெற்ற கடன்கள் .. .. | 8.77 |

தற்போது இந்நிறுவனத்தில் உற்பத்தித் தொழில் பிரிவுகள் 56 உள்ளன. இவைகள் பின்வரும் வகையைச்சாரும்:—

(1) கட்டுமான பட்டறைகள்.

(2) தளவாட அறைகள்—இணைந்த பிரிவுகள்.

(3) பொறியியல் தொழில் பட்டறைகள்.

(4) கட்டுமானப்பணிகள்.

(5) வார்ப்படத் தொழில் பிரிவுகள்.

(6) தச்சுத் தொழில் பிரிவுகள்.

(7) தோல் பொருள் தயாரிப்புப் பிரிவுகள்.

(8) சிறப்பு வகையிலான பல்வகைத் தொழில் பிரிவுகள்.

டான்சி நிறுவனத்தின் பெரும்பாலான பிரிவுகள் அரசுத்துறை களிடமிருந்தும், மற்றும் இரயில்வே, மின்சார வாரியங்கள், தபால் தந்தித் துறை, தமிழ்நாடு குடிநீர் வழங்கல்—வடிகால் வாரியம், இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் போன்ற அரசுத் துறை நிறுவனங்களும், தனியார் நிறுவனங்களும் கேட்கின்ற பணிகளை நிறைவேற்றி வருகின்றன.

3. 1965—66 ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தின் தொழில் பிரிவு களின் உற்பத்தி மதிப்பு ரூ. 389 இலட்சம் ஆகும். இந்த உற் பத்தியின் மதிப்பு 1982—83 ஆம் ஆண்டில் ரூ. 2,216 இலட்சமாக உயர்ந்தது. 1982—83 ஆம் ஆண்டில் இந்நிறுவனத்திற்கு 176.32 இலட்சம் இழப்பு ஏற்பட்டது. இதற்கு முக்கிய காரணம்

இந்நிறுவனத்தின் மூன்று பெரிய தொழில் பிரிவுகளான மேட்டு
கட்டுமானம் மற்றும் மூலாம் பூசும் பிரிவு. அம்பத்தூரிலுள்ள
கட்டுமானப்பிரிவு, விண்ணமங்கலத்திலுள்ள தோல் பதனிடும்
தொழிற்பிரிவு ஆகியவைகளில் போதிய வழங்கல் ஆணை
கிடைக்காமையால் ஏற்பட்ட ரூ. 183.46 இலட்சம் இழப்பே
காரணமாகும்.

4. இத்தொழிற் பிரிவுகளின் செயல்பாடுகள் குறித்த சில
முக்கிய விவரங்கள் வருமாறு:—

தளவாட அறைகள் இணைந்த பிரிவுகள்:

அம்பத்தூரிலுள்ள டான்சி ஆழ்கிணறு நீரேற்று குழாய் தயா
ரிப்புப் பிரிவு மற்றும் நுருச்சியிலுள்ள டான்சி கருவிகள் மற்றும்
பொறியியல் பிரிவு ஆகிய இரண்டும் "இந்தியா-மார்க் II"
என்ற ஆழ்கிணறு நீரேற்றுக் குழாய்கள் உற்பத்தியை மேற்
கொண்டன. 1983 ஆம் ஆண்டில் வறட்சி காரணமாக தமிழ்
நாட்டில் ஏற்பட்ட தண்ணீர் பற்றாக் குறையை போக்கவும், நகர்
புறம் மற்றும் கிராமப் புறங்களில் ஏற்பட்ட குடிநீர் தட்டுப்
பாட்டை நீக்கி தண்ணீர் வழங்குவதற்கும் அரசு மேற்கொண்ட
மிகப் பெரிய திட்டத்திற்காக இக்குழாய்கள் தமிழ்நாடு குடிநீர்
வழங்கல் மற்றும் வடிகால் வாரியம், சென்னை பெருநகர் குடிநீர்
வழங்கல் மற்றும் வடிகால் வாரியம் மற்றும் யூனிசெப் நிறுவனம்
ஆகியவற்றிற்கு வழங்கப்பட்டன. கிண்டியிலுள்ள டான்சி கருவி
கள் உற்பத்தி பிரிவு, பாதுகாப்புத் துறைக்கு ரூ. 7 இலட்சம்
மதிப்புடைய மின்னரி இழைகளை (ப்யூஸ்) தயாரித்து
தந்துள்ளது. மேலும் இத் தொழிற்சாலையானது ரூ. 10
இலட்சம் மதிப்புள்ள 5,100 குழந்தைகள் எடைக் கணிப்புத்
தராசுகளை தமிழக அரசின் சமூக நலத்துறைக்கு வழங்கியுள்ளது.
இத்தொழிற்சாலையினால் வழங்கப்பட்ட தராசுகள் நல்ல
தரமுடையவை என யூனிசெப் நிறுவனம் மற்றும் அமரிக்க
வல்லுனர்களின் பாராட்டைப் பெற்றுள்ளது. மேலும் இவை
களுக்கு அதிக அளவு வழங்கல் ஆணைகள் எதிர்பார்க்கப்படு
கின்றன. இராணிப்பேட்டையிலுள்ள டான்சி இயந்திரக் கருவிகள்
பிரிவு இவ்வாண்டில் 105 மின் விசை இரும்பு அறுவை இயந்திரங்
களை உற்பத்தி செய்துள்ளது. சிறு தொழிற்சாலைகளுக்குத்
தேவையான டி6, டி10 மற்றும் டி13 போன்ற சிறிய பெஞ்சுத்
துளைக் கருவிகளின் உற்பத்தி இத்தொழிற்சாலையில் மேற்
கொள்ளப்படுகிறது. இத்தொழிற்சாலையானது 7 இரும்பு
அறுவை இயந்திரங்களையும், ஒரு துளையிடும் இயந்திரத்தையும்,
ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளுக்கு ஏற்றுமதி செய்துள்ளது. மேலும்
14 இயந்திரங்கள் ஏற்றுமதி செய்யப்பட உள்ளன.

தோல் தொழில் தயாரிப்பு பிரிவு:

விண்ணமங்கலத்திலுள்ள டான்சி தோல் பதனிடும் தொழிற்
சாலை, 1983–84 ஆம் ஆண்டில் பதப்படுத்தப்பட்ட தோல்
விற்பனைக்கான ஆணைகளை இத்தாலி, கனடா, இங்கிலாந்து
போன்ற நாடுகளிலிருந்து பெற்றுள்ளது,





பொறியியல் தொழில் பட்டறைகள்.

இத்தொழிற்சாலைகள், ஊராட்சி ஒன்றிய பள்ளி கட்டிடத்
திற்கான கட்டுமானங்கள் மற்றும் கிடங்குகள், தொழிற்கூடங்கள்
ஆகியவற்றிற்கான கட்டுமானங்கள். மின் வாரியத்திற்குத் தேவை
யான மின்சார தடத்திற்கான சில தளவாடப் பொருட்களையும்,
உள்ளாட்சி நிறுவனங்களுக்குத் தேவையான குப்பை வண்டிகள்,
தள்ளு வண்டிகள், குப்பைத் தொட்டிகள் மற்றும் தமிழ்நாடு
குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம், சென்னைப்
பெருநகர் வளர்ச்சிக்குழுமம் ஆகியவற்றிற்கு தேவையான
தண்ணீர் தொட்டிகளையும் தொடர்ந்து உற்பத்தி செய்து
வருகின்றன. முதலமைச்சரின் மதிய சத்துணவு திட்ட மையங்
களுக்கு (500 பள்ளிகளுக்கு) ரூ. 65 இலட்சம் மதிப்புள்ள
இரும்பு கட்டுமானங்கள் புனையப்பட்டு வழங்கப்பட்டன.
தஞ்சை மற்றும் திருச்சி மாவட்டங்களில் உள்ள ஊராட்சி
ஒன்றியங்களுக்கு, ஆறுகளையும் கால்வாய்களையும் கடப்பதற்
காக ரூ. 25 இலட்சம் மதிப்பில் நடைபாலங்கள், வண்டிப்
பாலங்கள் புனையப்பட்டு வழங்கப்பட்டன. மேலும் சமூக
நலத்துறை மற்றும் வனத்துறைக்கு ரூ. 4.5 இலட்சத்திற்கு
மூன்று சக்கர சைக்கிள் வண்டிகள் மற்றும் இரண்டு சக்கர
மிதி வண்டிகள் உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்பட்டன.
இந்திய பிரதமரின் 20 அம்சத் திட்டத்தின் கீழ் காலணித் தொழி
லாளர்களுக்காக ரூ. 3.5 இலட்சம் மதிப்பிற்கு சிறு பெட்டிக்
கடைகள் செய்யப்பட்டு கதர் மற்றும் கிராமத் தொழில்
வாரியத்திற்கு வழங்கப்பட்டன.

தச்சுத் தொழில் பிரிவுகள்.

இப்பிரிவுகள் முக்கியமாக அரசுத் துறை மற்றும் அரசு சார்பு
நிறுவனங்களுக்கு தேவைப்படும் பல தரப்பட்ட சிறப்பு வகை
மரச் சாமான்களை உற்பத்திசெய்வதில் தொடர்ந்து ஈடுபட்டன.

வார்ப்படத் தொழில் பிரிவுகள்.

இப்பிரிவுகள் தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால்
வாரியத்திற்கு இரும்பு வார்ப்படக் குழாய்களை உற்பத்தி செய்து
வழங்குவதில் ஈடுபட்டன. தூக்கிச் செல்லக் கூடிய அபிவிருத்தி
செய்யப்பட்ட விசைச் செக்கு ஒன்றின் மாதிரியை உருவாக்கி,
அதற்கு பம்பாயிலுள்ள கதர் மற்றும் கிராமத்தொழில் ஆணையத்
தின் ஒப்புதலைப் பெற்றுள்ளது. இவ்விசைச் செக்குகளை விநி
யோகிப்பதற்கான வழங்கல் ஆணைகள் பல்வேறு மாநிலங்களின்
கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியங்களின் மூலமாக
டான்சிக்கு வழங்கப்படுகின்றன. இதற்கென டான்சி முதல்
தொகுப்பாக 300 விசைச் செக்குகளை தயாரித்து வழங்கியுள்ளது.
மேலும் 300 எண்ணிக்கைக்கான வழங்கல் ஆணைகள் பெறப்
பட்டுள்ளன. அண்டை மாநிலங்களான கர்நாடகம் மற்றும்
ஆந்திர மாநிலங்களிலிருந்து வழங்கல் ஆணைகளைப் பெறுவதற்
கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இரும்பு பொருட்கள் புனைவு பிரிவுகள்:

வேலூரிலுள்ள தொழிற் பிரிவு, ஸ்ரீ ஹரிகோட்டாவிலுள்ள விண்வெளி ஆராய்ச்சி நிலையத்திற்கு ஏவுகணைகளை செலுத்துவதற்கு தேவைப்படும் '' பானல் போர்டுகளையும் '' மற்றும் சில உறுப்புகளையும் தயாரித்து வழங்கியது. நிறுவனங்களின் உபயோகத்திற்காக தீப்பிடிக்காத மற்றும் திருடர்களால் உடைக்க முடியாத எஃகு பாதுகாப்பு பெட்டகங்கள் இப்பிரிவில் உருவாக்கப்பட்டன. வாய்க்கால் மற்றும் அணைக்கட்டு வேலைகளுக்குத் தேவையான சிமெண்டு கலவையினால் ஆன சிமெண்டு பலகைகளை தயாரிப்பதற்காக, எளிதில் எடுத்துச் செல்லக்கூடிய மேசை வைப்ரேட்டர் உருவாக்கப்பட்டுள்ளது. 5 குதிரைத் திறன் கொண்ட டீசல் இயந்திரத்தால் இது இயக்கப்படுகிறது. இது சிமெண்டு கலவையிலான பலகைகளை தயாரிக்கும் வேலைகளுக்கு மிகவும் பயனுள்ளதாக பொதுப்பணித் துறையால் கருதப்படுகிறது.

பல்வகை சிறப்புத் தொழில் பிரிவுகள்.

1982–83 ஆம் ஆண்டில் உதகமண்டலத்திலுள்ள கைக்கடியார இணைப்புத் தொழிற்சாலை, 2,62,32. எச்.எம்.டி. கைக்கடியாரங்களை தயாரித்துள்ளது.

முதலமைச்சரின் மத்திய சத்துணவுத் திட்டத்தில் பங்கேற்று உதவி புரிவதில் டான்சி பெருமிதம் கொள்கிறது. இத்திட்டத்தை விரைவாக செயல்படுத்துவதற்காக, குறிப்பிட்ட காலத்திற்குள் ரூ. 523 இலட்சத்திற்கான சமையல் பாத்திரங்களை டான்சி வழங்கியுள்ளது.

தமிழ்நாடு மொப்பெட்ஸ் நிறுவனம்.

தமிழ்நாடு மொப்பெட்ஸ் நிறுவனம் டான்சியின் கிளைநிறுவனமாக 19–8–1977 முதல் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனம், ''மொப்பெட்'' வண்டிகளை ''மயூரம்'' என்ற வணிகப் பெயரில் தயாரித்து வந்தது. ''மொபெட்'' வண்டிகளின் விற்பனை குறைந்து வருவதை கருத்தில் கொண்டு, 1–7–1981 முதல் இந் நிறுவனம் மொபெட் வாகனங்களை தயாரிப்பதை நிறுத்தி வைத்து மூன்று தனிப் பிரிவுகளை, அதாவது இயந்திரப்பட்டறை, தளவாட அறை இணைப்பு, மற்றும் உருக்கு உலோகப் பணிகள் ஆகிய மூன்று பிரிவுகளை அமைத்து, வெளியார் கொடுக்கும் பணிகளை ஏற்று நிறைவேற்றி வருகிறது. மறைமலை நகரில் ''மொபெட்'' தயாரிக்கும் திட்டத்தை ஒரு தனி நிறுவனமாக அமைப்பதற்கும், தயாரிக்கப்படுகின்ற ''மொபெட்'' வண்டிகளின் எண்ணிக்கையை 20,000 வரையில் உயர்த்துவதற்குமான செயற்குறிப்பு பரிசீலிக்கப்பட்டது. இதில் அதிகளவு முதலீடு செய்யவேண்டிய அவசியத்தைக் கருத்தில்கொண்டும், நிலையான விற்பனை இல்லாததாலும், இந்தியா முழுவதிலும் விற்பனை பணி வசதிகளை ஏற்படுத்துவதில் உள்ள இடையூறுகளினாலும் இத்திட்டத்தை தொடர்ந்து நடத்த இயலாது என்று முடிவு



செய்யப்பட்டது. இந்நிறுவனத்திற்கு தொடர்ந்து ஏற்பட்டு வரும் இழப்பைக் கருத்தில் கொண்டு அரசு இதன் வருங்கால செயல்பாடு குறித்து தீவிரமாக பரிசீலித்து வருகிறது.

தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம்.

தமிழ்நாட்டில் தோல் தொழிலை பல வகைகளிலும் வளர்ச்சியுறச் செய்யும் நோக்குடன் தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம் ரூ. 10 கோடி அனுமதிக்கப்பட்ட மூலதனத்துடன் அமைக்கப்பட்டது. அதிக அளவில் பதப்படுத்தப்பட்ட தோல் மற்றும் தோல்பொருட்களை ஏற்றுமதி செய்ய ஊக்கமளித்தலும், குறிப்பாக சிறிய அளவில் தோல் பதனிடுவோர் மற்றும் காலணி தோல் பொருட்களை உற்பத்தி செய்வோருக்கு உதவுவதும் இந் நிறுவனத்தின் முக்கிய நோக்கங்களாகும். இந்த நிறுவனம் 1983 ஆம் ஆண்டு ஜூன் திங்களிலிருந்து இயங்கி வருகிறது.

தமிழ்நாட்டில் தோல் தொழில் குறித்து விரிவான ஆய்வு செய்து ஓர் அறிக்கை அளிக்கவும் மற்றும் டால்கோ நிறுவனம் மேற்கொள்ளக்கூடிய திட்டங்களை வகைப்படுத்தித் தெரிவிக்கவும் ஒரு வல்லுநர் குழு அரசால் அமைக்கப்பட்டது. இக்குழுவின் அறிக்கை விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிறுவனம் முதற்கட்டமாக தோல் பதனிடும் தொழிற் சாலைகளுக்கு உதவும் வகையில் பொது வசதி மையங்களை அமைக்க உத்தேசித்துள்ளது. மேலும் தோல் பொருட்கள் மற்றும் காலணிகள் ஆகியவற்றிற்கான பொது வசதி மையங்கள், மூலப்பொருட்களுக்கான வங்கி மற்றும் வடிவமைப்பு மையம் அமைக்க திட்டமிட்டுள்ளது. சிறு தொழில் தோல் முனைவோர் கள் மற்றும் கைவினைஞர்களால் தயாரிக்கப்படும். காலணி மற்றும் தோல் பொருட்களின் விற்பனைக்கு வகை செய்து தரப்படும். இந்நிறுவனம் கைவினைஞர்களின் ஒருங்கிணைந்த மேம்பாடு திட்டத்தின் கீழ், நான்கு அல்லது ஐந்து சங்கங்களை நிறுவி காலணி மற்றும் தோல் பொருள்கள் உற்பத்தி செய்யவும், அவைகளுக்கு சந்தை வசதிகளை ஏற்படுத்தித் தரவும் திட்டமிட்டுள்ளது.

மேற்கூறிய திட்டங்களை செயல்படுத்த இந்நிவனம் 1984–85 ஆம் நிதியாண்டுக்கு ரூ. 350 இலட்சம் மூலதனச் செலவில் திட்டங்களைத் தீட்டியுள்ளது.

13626
சென்னை-600 008.